ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருமழிசைப்பிரான் திருவாய்மலர்ந்தருளிய

நான்முகன் திருவந்தாதி.

பெருமாள்கோயில்

பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

அருளிய

"திவ்யார்த்த தீபிகை" யென்னும்

உரையுடன்,

சென்னை M. R. கோவிந்தஸாமி நாயுடுவால்,

மாடல் அச்சுக்கூடத்தில்,

அச்சிடுவிக்கப்பட்டது.

சுக்கில ௵

1929.

ஸ்ரீமத். உ. வே. (காஞ்சீபுரம்) பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமிகள் அருளிச்செய்த க்ரந்தங்கள்.


	ரூ.	அ.
திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி விரிவுரை ...	3	0
திருப்பாவையின் விரிவுரை ...	1	4
ஷ காலிகோ பைண்ட் ...	1	0
நாச்சியார் திருமொழி விரிவுரை ...	1	8
ஷ காலிகோ பைண்ட் ...	1	12
பெருமாள் திருமொழி விரிவுரை ...	1	4
ஷ காலிகோ பைண்ட் ...	1	8
திருச்சந்த விருத்தத்தின் ஷ ...	1	10
திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு—இவற்றின் விரிவுரை ...	1	0
ஷ காலிகோ பைண்ட் ...	1	4
பெரிய திருமொழி விரிவுரை 1,2 பத்துக்கள் ...	3	0
ஷ 3, 4, 5 பத்துக்கள் ...	3	8
முதல் திருவந்தாதி விரிவுரை ...	1	8
இரண்டாந்திருவந்தாதி விரிவுரை ...	1	4
மூன்றாந்திருவந்தாதி விரிவுரை ...	1	4
திருவெழுகூற்றிருக்கையும், திருமடல்களும் விரிவுரை ...	2	4
திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ஷ ...	2	0
இராமாநுச நூற்றந்தாதி ஷ ...	0	12
கூரத்தாழ்வான் வைபவம் ...	0	4
ஸ்ரீவசநபூஷணஸாரம் (மூலத்துடன் கூடியது.) ...	1	0
ஷ காலிகோ பைண்ட் ...	1	4
முகுந்தமாலையின் தெளிவுரை ...	0	6
ஆளவந்தார் ஸ்தோத்ரத்தின் தெளிவுரை ...	0	12
ஷ காலிகோ பைண்ட் ...	1	0
ஸுதர்சநசதகம் மிகத்தெளிவானதமிழுரை ...	1	0
சேஷாவதாரச் சிறப்பு ...	0	3
நமஸ்காரதத்துவம் ...	0	2
ஸ்தோத்ரவ்யாக்யான சோதநம் ...	0	3
ப்ரணவாதிகாரதத்துவம் ...	0	4
வாத்ஸல்யார்த்த விவரணம் ...	0	2
விதவாவபந வித்வம்ஸநம் ...	0	4
உபந்யாஸரத்நமாலா (க்ரந்த லிபி) ஸம்ஸ்க்ருத பாஷை ...	0	6
பாதுகாஸஹஸ்ராவதார தத்துவம் ஷ ஷ ...	0	4
வேதாந்த்யநஸர்வஸ்வம் ஷ ஷ ...	0	12

தெலுங்குலிபிப் பிரசுரங்கள்.

வரதராஜஸ்தவம் ஸ்ரீஸ்தவம் மணிப்ரவாள வியாக்கியானம் ...	1	8
அதிமாநுஷஸ்தவம் ஷ ...	0	12
திருப்பல்லாண்டு விரிவுரை ...	0	4
ஆசார்ய ஹ்ருதய மூலம் ...	0	3
ரஹஸ்ய மூலம் ...	0	6

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பொதுத் தனியன்கள்.

(நம்பெருமாள் அருளிச்செய்தது.)

𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇𑌶𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌧𑍀𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑍍 ।
𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑌣𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌰𑌮𑍍𑌯𑌜𑌾𑌮𑌾𑌤𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍 ॥

[ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்.
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.]

(ஆழ்வான் அருளிச்செய்தவை.)

𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂 + 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌮𑍍 ॥
𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌚𑍍𑌯𑍁𑌤 + 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑍍𑌯 𑌚𑌰𑌣𑍌 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

[லக்ஷ்மீநாதஸமாரம்பாம் + வந்தே குருபரம்பராம்.
யோ நித்யமச்யுத + ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.]

(ஆளவந்தார் அருளிச்செய்தது.)

𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾 𑌯𑍁𑌵𑌤𑌯𑌃 + 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑌿 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌾 ॥

[மாதா பிதா யுவதய: + ப்ரணமாமி மூர்த்நா.]

(ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்தது.)

𑌭𑍂𑌤𑌂 𑌸𑌰𑌶𑍍𑌚 + 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌮𑍁𑌨𑌿𑌂 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 ॥

[பூதம் ஸரச்ச + ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.]

ஸ்ரீ



§ திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்.

நான்முகன் திருவந்தாதி.

இது மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களுள் நான்காமவரான திருமழிசைப்பிரான் திருவாய்மலர்ந்தருளியதும் நாலாயிரப் பிரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமாக ஸ்ரீமந்நாதமுநிகளால் வகுக்கப்பட்ட இயற்பாவில் நான்காவது பிரபந்தமுமாகும். இப்பிரபந்தம் "நான்முகனை" என்று தொடங்கப் பெற்றதனால் முதற்குறிப்பென்னு மிலக்கணவகையால் நான்முகன் திருவந்தாதியென்று இதற்குத் திருநாமமிட்டு வழங்கலாயினர் முன்னோர்: 'அமலனாதிபிரான்' 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்பன போல. கீழ்க்கழிந்த முதலாழ்வார்களின் திருவந்தாதிகள் மூன்றுக்கும் பின்னர் இத்திருவந்தாதி திருவவதரித்தமைபற்றி இதனை 'நாலாந் திருவந்தாதி' என்றும் 'நான்காந் திருவந்தாதி' என்றும் வழங்கலாமென்பர் சிலர்; நான்முகன் திருவந்தாதியென வழங்குதலே ஸம்ப்ரதாயமென்றுணர்க.

---

§ இவ்வாழ்வாரது சரித்திர வரலாறுகள் முதலாயிரத்தைச் சேர்ந்த திருச்சந்த விருத்தத்தின் உரைத் தொடக்கத்தில் காணத்தக்கன.

பொய்கை பூதம் பேயாழ்வார்களென்னும் முதலாழ்வார்கள் மூவரும் எம்பெருமானது நிர்ஹேதுக கடாக்ஷ விசேஷத்தினாற் பெற்ற பக்திப்பெருங்காதலினால் அவன் படிகளை முற்றுங்கண்டு அநுபவித்து அவ்வநுபவ பரீவாஹரூபமான நடை விளங்கு தமிழ் மாலைகளாலே ஸ்ரீமந் நாராயணனே பரதெய்வமென்று நிஷ்கர்ஷித் தருளினர் மூன்று திருவந்தாதிகளிலும். அவர்கட்கு அடுத்த ஆழ்வாராகிய இத்திருமழிசைப்பிரானும் எம்பெருமானுடைய அநுக்ரஹவிசேஷத்தாலே மயர்வற மதிநலம்பெற்று அவனுடைய திவ்யாத்மஸ்வரூபத்தையும் ஸ்வரூபத்தைப்பற்றின திருக்கல்யாண குணங்களையும் திவ்யமங்கள விக்ரஹத்தையும் அதனை இடைவிடாது அநுபவிக்கும் பாக்கியம் வாய்ந்த பிராட்டிமார்களையும், அவர்களுமவனுமான சேர்த்தியிலே கிஞ்சித்கரிக்கும் ஸூரிகளையும் கைங்கரியத்திற்கு ஏகாந்தமான பரமபதத்தையும் லீலாவிபூதி போகத்தையும் உள்ளபடி ஸாக்ஷாத்கரித்து அநுபவித்துக் கொண்டு மார்க்கண்டேயாதிகளைப்போலே நெடுங்காலம் இந்த ஸம்ஸார மண்டலத்திலே காலஞ்சென்றது மறியாதே எழுந்தருளியிருந்து நாட்டில் சேதநர் பலரும் ரஜஸ்தமோ குணங்கட்கு வசப்பட்டும் வசநாபாஸங்களைக் கொண்டும் தேவதாந்தரங்களை வழிபடு தெய்வமாகக்கொண்டு வைதிக மார்க்கத்தினின்று நழுவிக் குத்ருஷ்டி மார்க்கத்தைப்பேணி மேன்மேலும் ஸம்ஸாரத்தையே வளரச்செய்துகொண்டு அநர்த்தப்படுகிறபடியைக் கண்டு, பிறர்படு மநர்த்தம் பொறுக்கமாட்டாத பரம க்ருபையினால் தேவதாந்தர பரத்துவத்தை நிராகரித்து ஸ்ரீமந்நாராயண பாரம்யத்தை ஸ்தாபித்து அனைவரும் பகவத்ப்ரவணராம்படி திருத்தியருளுகிறார். இப்பிரபந்தத்தால்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நான்முகன் திருவந்தாதி தனியன் உரை

[சீராமப்பிள்ளை யருளிச்செய்த தனியன்.]

(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

நாராயணன் படைத்தான் நான்முகனை, நான்முகனுக்
கேரார் சிவன்பிறந்தா னென்னுஞ்சொல்—சீரார்
மொழிசெப்பி வாழலாம் நெஞ்சமே !, மொய்பூ
மழிசைப் பரனடியே வாழ்த்து.

பதவுரை.

நெஞ்சமே	மனமே !,
நாராயணன் நான்முகனை படைத்தான்	"நாராயணன் பிரமனை ஸ்ருஷ்டித்தான்,
நான்முகனுக்கு	அந்தப் பிரமனுக்கு
ஏர் ஆர் சிவன் பிறந்தான்	சீர்மைமிக்க சிவன் (புத்திரனைப்) பிறந்தான்"
என்னும் சொல்	என்று தெரிவிக்கின்ற பாசுரத்தை முதலிலே உடைத்தான
சீர் ஆர் மொழி	(நான்முகன் திருவந்தாதி யென்கிற) திவ்ய ப்ரபந்தத்தை
செப்பி	அநுஸந்தித்து
வாழலாம்	நாம் உஜ்ஜீவிக்கலாட
மொய் பூ மழிசை	செறிந்த பூக்கள் நிரம்பிய திருமழிசையில் திருவவதரித்தருளின
பரன்	பக்திஸார முனிவனுடைய
அடியே	திருவடிகளையே
வாழ்த்து	வாழ்த்திக் கொண்டிரு.

* * *—நாம் உஜ்ஜீவிக்க வேண்டுமாகில் நான்முகன் திருவந்தாதியை அநுஸந்தித்தே ஆக வேண்டும்; அதாவது—அதனைக் கண்ட பாடம் செய்தல் வேண்டும்; அது செய்யவேண்டில் அப்பிரபந்தத்தைத் திருவாய்மலர்ந்தருளிய திருமழிசைப்பிரானது திருவருள் இன்றியமையாததலால் அவ்வருள் பெறுதற்காக அவ்வாழ்வாருடைய திருவடித் தாமரைகளைப் போற்றவேண்டும் என்கிறது இதில்.

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருமழிசைப்பிரான் திருவாய்மலர்ந்தருளிய

நான்முகன் திருவந்தாதி.

[பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் இயற்றிய திவ்யார்த்த தீபிகையுடன் கூடியது.]

நான்முகனை நாராயணன் படைத்தான் * நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான் *-யான்முகமாய்
அந்தாதி மேலிட்டு அறிவித்தேன் ஆழ்பொருளை *
சிந்தாமல் கொண்மினீர் தேர்ந்து. (க)

பதவுரை.

நாராயணன்	பரமபுருஷனானவன்	யான்	அடியேன்
நான்முகனை	பிரமனை	முகம் ஆய்	முக்கியமாக
படைத்தான்	ஸ்ருஷ்டித்தான் ;	அந்தாதி மேல் இட்டு	இத்திருவந்தாதி மூலமாக
நான்முகனும்	அந்தப் பிரமனும்	அறிவித்தேன்	உங்கட்கு அறிவிக்கத்தொடங்குகின்றேன் ;
தான்	தானே	நீர்	நீங்கள்
முகம் ஆய்	முக்கியனாயிருந்து	தேர்ந்து	ஆராய்ந்து
சங்கரனை	சிவனை	சிந்தாமல் கொள்மின்	(இவ்வர்த்தத்தைக்) குறையற நெஞ்சில் தேக்கிக் கொள்ளுங்கள்.
படைத்தான்	ஸ்ருஷ்டித்தான் ;		
ஆழ்பொருளை	(ஆகவே, முழுமுதற் கடவுள் ஸ்ரீமந் நாராயணனே யென்கிற) ஆழ்ந்த அர்த்தத்தை		

* *—இவ்வாழ்வாருடைய காலத்தில் தேவதாந்தர பரத்துவம் கொள்ளும் மதாந்தரஸ்தர்கள் மலிந்திருந்ததனால் அவர்களைத் திருத்தி வழிப்படுத்த வேண்டுவது அவசியமாயமைந்தது ;

ஆகவே, தொடங்கும்போதே ஸ்ரீமந்நாராயண பரத்வத்தை அழுத்தமாகப் பேசுகின்றார்; இப்பிரபந்தம் தலைக்கட்டுமிடத்தும் "இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்குந் தெய்வம், இனியறிந்தேனெம் பெருமா னுன்னை" என்று தலைக்கட்டுவராதலாலும், இடையிலும் பலபல பாசுரங்களினால் தேவதாந்தரங்களின் அபூர்த்தியையும் பரமபுருஷனுடைய பூர்த்தியையுமே பேசுவராதலாலும் இப்பிரபந்தம் பெரும்பாலும் பரதத்வஸ்தாபநத்தில் நோக்குடைத்தாயிருக்கும்.

நாராயணன் நான்முகனைப் படைத்தான் = காரியப் பொருள்கள் யாவும் பெயருமுருவமும் பகுத்தறிய வொண்ணாதபடி தன் பக்கலிலே லயமடைந்து தானொருவனுமே காரணபூதனாய்க்கொண்டு உளனாய்நின்ற நாராயணன் "வஹுஸ்யாம்" என்கிற தன் ஸங்கல்பத்தாலே ஸமஷ்டிபதார்த்தங்களை ஸ்ருஷ்டித்து, நான்முகக் கடவுளைக்கொண்டு வ்யஷ்டிபதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்கவேண்டி, 1. "உய்யவுலகு படைக்கவேண்டி உந்தியில் தோற்றினாய் நான்முகனை" என்கிறபடியே தனது திருநாபிக் கமலத்தில் நான்முகனைப் படைத்தருளினன் என்கை.

பிரமன் ஸ்ருஷ்டிகள் செய்வது வேதங்களைக்கொண்டேயாதலாலும், அந்த வேதங்கள் நால்வகைப்பட்டிருத்தலாலும், அந்நால்வகை வேதங்களையும் உச்சரிப்பதற்காகவே பிரமன் நான்கு முகங்களை யுடையவனாகப் படைக்கப்பட்டனனாதலாலும், இங்குப் "பிரமனை" என்னாது 'நான்முகனை' என்றார்.

நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான் = ஸ்ரீமந்நாராயணனால் பிறப்பிக்கப்பட்ட அந்த நான்முகன் தானே தலைவனாய் நின்று ஸம்ஹாரக் கடவுளாகிய சங்கரனைப் படைத்தான். புத்திரன் விநயமற்று வழிகெட நடந்தால் அவனைத் தந்தை விலங்கிட்டு வைப்பது வழக்கம்; அதுபோல, எம்பெருமானை ஆராதித்து உய்வு பெறுதற்கென்றே படைக்கப்பட்ட இவ்வுலகம் வழிகெடநடந்து அநர்த்தத்தை விளைத்துக்கொள்ளுமாகில் விலங்கிட்டு வைப்பதுபோன்ற கரணகளேபரவிநாசம் செய்து தீரவேண்டுவதொன்றாதலால் அதற்காகச் சங்கரனைப் படைத்தனனென்க.

1. பெரியாழ்வார் திருமொழி 4-10-5.

சங்கரன் என்றசொல் (‘ஶம் கரோதீதி ஶங்கர:’ என்னும் ஸம்ஸ்க்ருத வ்யுத்பத்தியால்) நன்மை செய்பவன் எனப் பொருள்படும்; மேன்மேலும் கேடுகளை விளைத்துக்கொள்ள வொண்ணாதபடி கரணகளேபரங்களை ஒடுத்துவைப்பதாகிற ஸம்ஹாரம் நன்மையேயாதலால் இதுதோன்ற இங்கு ‘உருத்திரனை’ என்னாது ‘சங்கரனை’ என்றார்.

ஆகவிப்படி ஸ்ரீமந்நாராயணனொருவனே உத்பாதகன் [உண்டாக்குபவன்] என்றும், ப்ரஹ்மருத்ராதிகள் உத்பாத்யர்களே [உண்டாக்கப்படுபவர்கள்] என்றும் உண்மைப் பொருளுணர்ந்தால் ஸர்வசேஷியான ஸ்ரீமந்நாராயணனைத் தவிர்த்துப் பிறிதொன்றையும் பரதெய்வமாகக் கொண்டாட வழியில்லை; ஆயினும் இவ்வுலகத்தவர் இவ்வுண்மைப் பொருளுணரப் பெறாமையாலே நசித்துப் போகிறார்கள்; இதனை நாம் கல்வெட்டும் செப்புவெட்டும் போலே பிரபந்தப்படுத்திப் பகர்வோமாயின் பலரும் தெளியலாகுமென்று திருவுள்ளம்பற்றி, ‘இவ்வாழ்பொருளைத் திருவந்தாதிப் பிரபந்த முகத்தால் உங்கட்கு அறிவிக்கின்றேன்; ஸம்ஸாரத்தின் பொல்லாங்கையும் நான் சொல்லுகிற அர்த்தத்தின் அருமை பெருமைகளையும் ஆராய்ந்து, இவை நெஞ்சில்நின்றும் நழுவி மங்கிப் போகாதபடியாக உள்ளத்தே தேக்கிக்கொள்ளுங்கள்’ என்று தடைதட்டி யுணர்த்துகிறார் பின்னடிகளில்.

இவ்வாழ்வார் ஆழ்பொருளை அறிவிக்கத் தொடங்கும்போதே “அறிவித்தேனாழ்பொருளை” என்று இறந்தகாலத்தாற் கூறினது—தம்மைக்கொண்டு அறிவிக்க விரும்பிய எம்பெருமான் ஸத்யஸங்கல்பனாகையாலும், எம்பெருமானுடைய பரத்துவத்தைப்பற்றிப் பாசுரங்கள் பேசித் தலைக்கட்டியே தீரும்படியான தம் உறுதியினாலும் இப்பிரபந்தம் தலைக்கட்டியாய்விட்டதாக நினைத்தென்க. இதனைத் தமிழர், தெளிவினால் எதிர்காலம் இறந்த காலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதி என்பர்.

இப்பாட்டின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான அவதாரிகையிலே—“ப்ரஹ்மாதிகள் ஸம்ஸாரத்தை ப்ரவர்த்திப்பிக்க ப்ரதாநரானாற்போலே தந்நிவ்ருத்திக்கு ப்ரதாநனானேன் நானென்கிறார்” என்றருளிச்செய்துள்ள ஸ்ரீ ஸூக்தியின் சீர்மை வாசா

மகோசரம்: இதன் கருத்தாவது—நாராயணன் நான்முகனைப் படைத்துவைத்தான்; அந்த நான்முகனும் மற்றுள்ள ஸ்ருஷ்டிகளைப் பண்ணிப் போருன்; ஆக அவ்விருவரும் இப்படி ஸம்ஸாரத்தை வளரச்செய்து வைத்தார்களேயன்றி அடியறுக்கப் பார்த்தாரல்லர்; நான் அங்ஙனன்றியே உங்களுடைய ஸம்ஸாரம் வேரறும்படியாக ஆழ்பொருள்களை யறிவிக்க முற்படுகின்றேன் காண்மின் என்று ஆழ்வாரருளிச் செய்வதாக. ... ... (க)

தேருங்கால் தேவன் ஒருவனே யென்றுரைப்பர் *
ஆரு மறியா ரவன்பெருமை *—ஓரும்
பொருள்முடிவு மித்தனையே எத்தவஞ் செய்தார்க்கும் *
அருள்முடிவ தாழியான் பால். (உ)

தேருங்கால்	'ஆராயுமிடத்து,	ஓரும் பொருள் முடிவும் இத்தனையே	(வேதவேதாங்கங்களில்) ஆராயப்படும் பொருளின் நிர்ணயமும் இவ்வளவேயாம்;
தேவன் ஒருவனே என்று	பரதெய்வமாக வுள்ளவன் ஸ்ரீமந் நாராயணனொருவனே' என்று		
உரைப்பர்	(வியாஸர் முதலிய மஹர்ஷிகள்) சொல்லுவர்;	எத்தவம் செய்தார்க்கும்	எப்படிப்பட்ட ஸாதநாநுஷ்டாநங்களைப் பண்ணினவர்கட்கும்
அவன் பெருமை	அந்த ஸ்ரீமந் நாராயணனுடைய பெருமையை	முடிவது	முடிவில் பலனையளிப்பது
ஆரும் அறியார்	ஒருவரும் அறியமாட்டார்;	ஆழியான் பால் அருள்	எம்பெருமானிடத்து உண்டாகும் கிருபையேயாம்.

* * *—கீழ்ப்பாட்டில், ஸ்ரீமந்நாராயணனையும் நான்முகனையும் சங்கரனையும் பிரஸ்தாவித்தார்; மற்றும் பல தெய்வங்களும் உலகில் வழங்கப்பட்டு வருகின்றன: இங்ஙனே பலபல தெய்வங்களிருந்தாலும், முழுமுதற்கடவுள் ஸ்ரீமந்நாராயணனொருவனே யாவன்; மற்ற தெய்வங்களெல்லாம் "ஸம்ஹாரந்ருந்ரா தேவதா:" என்ற சுருதியின்படி அப்பரம புருஷனுக்கு அங்க பூதங்களேயன்றி வேறில்லை—என்னுமர்த்தத்தை வெளியிடுகின்றாரிதில்.

"தத்வம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபிஸ்ஸர்வதோமுகை:

ஜெவ:। தக்ஷெகோ ஒஹாயொ ஹரிர்-நாராயணஃஸ்ரூதஃ—
தத்வம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபிஸ் ஸர்வதோமுகை:—தத்வ
மேகோ மஹாயோகீ ஹரிர் நாராயணஸ் ஸ்ம்ருத:" என்ற பிர
மாணத்தைத் திருவுள்ளம்பற்றித் "தேருங்கால் தேவனொருவனே
யென்றுரைப்பர்" என்கிறார். "ஹிரண்யகர்ப்ப: ஸமவர்த்ததாக்ரே
பூதஸ்ய ஜாத: பதிரேக ஆஸீத்" என்ற வேதவாக்கியத்
தைக்கொண்டு 'பிரமனே முழுமுதற்கடவுள்' என்று சிலரும்,
"ஏகோ ருத்ரோ ந த்விதீயாய தஸ்து:" என்ற வேதவாக்கியத்தைக்
கொண்டு சிவனே பரதேவதையென்று சிலரும்—ஆகவிப்படி பலர்
பல தெய்வங்களைப் பேணினாலும் அவையெல்லாம் பூர்வபக்ஷ
கோடியிலே நின்று ஸ்ரீமந்நாராயண னொருவனே ஸித்தாந்த
கோடியிலே நிற்பன் என்றவாறு.

அவன் பெருமை ஆருமறியார்=பரத்வம், ஸௌலப்யம், ஸௌ
சீல்யம், வாத்ஸல்யம், ஸ்வாமித்வம் முதலிய கல்யாண குணங்களி
னால் அப்பெருமானுக்குள்ள பெருமையை அளவிட்டு அறிய
வல்லார் ஆருமில்லை. ஸர்வஜ்ஞனான அந்த எம்பெருமான் தானும்
அறியகில்லான் என்றபடி. 1. "தாம் தம் பெருமையறியார்"
என்ற திருமங்கையாழ்வார் பாசுரம் உணர்க.

இப்படிப்பட்ட எம்பெருமானை யடைவதற்கு, கருமம்
ஞானம் பக்தி முதலிய உபாயங்கள் சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்
டிருந்தாலும் அப்பெருமானுடைய திருவருளின்றி எந்த ஸாதனா
நுஷ்டானமும் கார்யகர மல்லாமையாலே அவனது நிர்ஹேதுக
க்ருபையைக் கொண்டே அவன் பெறத்தகுந்தவன் என்கிற ஸகல
சாஸ்த்ர ஸாரப்பொருளைப் பின்னடிகளில் வெளியிடுகிறார். பக
வானைப் பெறுகைக்கு உபாயமாக எப்படிப்பட்ட தபஸ்ஸை
அநுஷ்டித்தாலும் அது ஸாக்ஷாத்தாகப் பலன் பெறுவிக்க மாட்
டாது; அப்பகவானுடைய திருவருளே பலனளிக்கவல்லது என்ற
வாறு. எந்த சாஸ்த்ரத்தை அவிழ்த்துப் பார்த்தாலும் ஸாரார்த்
தம் இதுவே விளங்குமென்கிறார் ஒரும் பொருள்முடிவு மித்தனையே
என்பதனால். கூரத்தாழ்வா னருளிய வரதராஜஸ்தவத்தில்—

1. பெரியதிருமொழி 5-2-1.

“ஸ்வகோத்கர்ஷேண ஸ்வைச்வர்யேண ஸ்வவேதாந்த ஸஹஸ்ரதி ந ஸாம் ஸ்யயி ஸக்தோ தாயவா। கரீம! தேஷாம் ஸவி தாவகீ ஜயா தயாகவக்ரோத்தவதா ஸ ஸர்வம் ஸமர்த்த.” என்ற ச்லோகத்திலும் இவ்வர்த்தம் வெளியிடப்பட்டதென்க.

ஆக இப்பாட்டால்—ஸ்ரீமந்நாராயணனே பெருமையிற்சிறந்த பரதேவதை; அவனுடைய நிர்ஹேதுக க்ருபையினாலேயே அவன் ப்ராப்யன் என்கிற இரண்டு அர்த்தவிசேஷங்கள் வெளியிடப்பட்டன வாயின. .... (௨)

பாலிற் கிடந்ததுவும் பண்டரங்கம் மேயதுவும் *
ஆலில் துயின்றதுவு மாரறிவார்? *—ஞாலத்
தொருபொருளை வானவர்தம் மெய்ப்பொருளை * அப்பி
லருபொருளை யானறிந்த வாறு.

	(எம்பெருமான்)
பாலில்	திருப்பாற்கடலில்
கிடந்ததுவும்	சயனித்தருளு மழகையும்
அரங்கம்	திருவரங்கம் பெரிய கோயிலில்
மேயதுவும்	பொருந்தி வாழ்வதையும்
பண்டு	முன்பொருகால்
ஆலில்	ஆலந்தளிரில்
துயின்றதுவும்	பள்ளிகொண்ட விதத்தையும்
ஆர் அறிவார்	யார் அறியவல்லார்?
ஞாலத்து ஒரு பொருளை	இப்பூமியில் வந்தவதரித்த விலக்ஷண புருஷனையும்
வானவர்தம் மெய் பொருளை	நித்யஸூரிகளுக்குப் பிரத்யக்ஷமாக அநுபவிக்கத் தகுந்த வஸ்துவாயும்
அப்பில் அரு பொருளை	(ஸகலத்துக்கும் காரணமாக முதலில் ஸ்ருஷ்டிக்கப்பட்ட) ஜலதத்வத்தினுள் கண்வளரும் அரும்பொருளாயுமிருக்கின்ற எம்பெருமானை
யான் அறிந்த ஆறு	அடியேன் அறிந்த விதம் என்னே!

* * *—கீழ்ப்பாட்டில் “ஆருமறியாரவன் பெருமை” என்றதை விவரிக்கிறாரிதில். அப்பெருமான் திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட விதத்தையும் திருவரங்கத்தில் வந்து சேர்ந்த விதத்தை

யும் ஆலந்தளிரில் பள்ளிகொண்ட விதத்தையும் ஆர் அறிவார்? என்கிற விதற்குக் கருத்து யாதெனில்; * தன் தாளுந் தோளும் முடிகளும் சமனிலாத பல பரப்பித் திருப்பாற்கடலில் சயனித்தருளுமழகிலே நான் ஈடுபட்டிருக்கும் வண்ணமாக ஈடுபட்டிருப்பார் ஆருமில்லை; "பாலாழி நீகிடக்கும் பண்பை யாம் கேட்டேயும் காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்றாற்போலே அக்கிடையில் வ்யாமோஹித் திருப்பவன் நானொருவனே; திருவரங்கம் பெரிய கோயிலில் உபய காவேரீ மத்யத்தில் "என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்னும்படியே பரம போக்யமாகவும் அத்யந்த ஸுலபமாகவும் ஸந்நிதிபண்ணி ஸேவை ஸாதித்தருளுந் திறத்தில் ஈடுபட்டு "இஃது என்ன போக்யதை !, இஃது என்ன ஸௌலப்யம்" என்று அக்குணங்களை வாய்வெருவுகின்றவன் நானொருவனே; உலகங்களைப் பிரளயவெள்ளம் கொள்ளாதபடி திருவயிற்றிலே வைத்து நோக்கி ஒரு சிற்றாலந்தளிரின் மேல் திருக்கண்வளர்ந்தருளின அகடிதகடநா ஸாமர்த்தியத்தைப் பாராட்டிப் பேசுவார் ஆரேனுமுண்டோ? அந்த சக்தி விசேஷத்தை மெச்சுகிறவன் நானொருவனே—என்பதாம்.

ஞாலத்து ஒருபொருளை=கார்யரூபமான ஸகலப்ரபஞ்சங்களுக்கும் "**ஏகமேவாத்விதீயம்**" என்கிறபடியே துணையற்ற காரணவஸ்துவாயிருப்பவன் என்று முரைக்கலாம்.

வானவர்தம் மெய்ப்பொருளை—தனது திருமேனியை நித்ய ஸூரிகளுக்குப் பூர்ணாநுபவம் பண்ணக் கொடுத்தருள்பவனென்றவாறு. அப்பிலருபொருளை=வடமொழியில் 'அப்' என்பது ஜல வாசகம். '**அம்பு**' என்னும் வடசொல் தமிழில் 'அப்பு' என்றாயிற்றென்றதுமுண்டு. 1. "**அப ஏவ ஸஸர்ஜாதௌ**" என்றும் 2. "நன்மைப்புனல்பண்ணி" என்றும் சொல்லுகிறபடியே முதன் முதலில் ஜலதத்துவத்தை ஸ்ருஷ்டித்து அதிலேகண்வளர்ந்து ஒப்பற்ற காரணப்பொருளாயிருப்பவன் என்கை. ஆக இப்படிப்பட்ட எம்பெருமானை அவனது நிர்ஹேதுக கிருபையினால் நான் அறிந்த விதம் ஆச்சரியம்! என்று தலைக்கட்டினவாறு. அன்றியே, யானறிந்தவாறு—யானறிந்த வண்ணமாக, ஆர் அறிவார்—, என்று கீழோடே கூட்டி ஏகவாக்கியமாக யோஜிக்கவுமாம். .... (௩)

---

1. மநுஸ்மிருதி 1—8. 2. திருவாய்மொழி 7—5—4.

ஆறு சடைக்கரந்தான் அண்டர்கோன் தன்னோடும் *
கூறுடைய னென்பதுவும் கொள்கைத்தே *—வேறொருவ
ரில்லாமை நின்றானை எம்மானை * எப்பொருட்கும்
சொல்லானைச் சொன்னேன் தொகுத்து.

ஆறு	கங்காநதியை
சடை	தனது ஜடா மண்டலத்திலே
கரந்தான்	மறையச்செய்து தாங்கிக்கொண்டிருக்கின்ற ருத்ரன்
அண்டர் கோன் தன்னோடும்	தேவாதிதேவனான ஸர்வேச்வரனோடு
கூறு உடையன் என்பதுவும்	ஸாம்யமுடையவன் என்று (பாமரர்) சொல்லுஞ் சொல்
கொள்கைத்தே	அங்கீகரிக்கத் தகுந்ததோ? (அல்ல;)
வேறு ஒருவர் இல்லாமை நின்றானை	வேறொரு தெய்வமும் தனக்கு ஒப்பாக இல்லாமல் வீறுபெற்றிருப்பவனும்
எப்பொருட்கும் சொல்லானை	எந்தப்பொருளைச் சொல்லுகிற சப்தமும் தனக்கு வாசகமாம்படி (ஸர்வ சப்தவாச்யனாய்) உள்ளவனுமான
எம்மானை	எம்பெருமானை
தொகுத்து சொன்னேன்	சுருங்கப் பேசினேனித்தனை.

* * *—'ருத்ரனும் ஸ்ரீமந்நாராயணனைப் போலவே பரதேவதை' என்று சிலர் மயங்கிக்கிடக்கிறார்களே, இப்படியும் ஒரு ப்ரமம் இருக்குமோ? தேவாதி தேவனான எம்பெருமான் எங்கே? அவனுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தை சிரஸாவஹித்துத் தூய்மை பெற்ற சிவன் எங்கே? இவ்விருவரையும் ஸமமாகச் சில அவிவேகிகள் சொன்னால் இதனை அறிவுடையார் அங்கீகரிக்கக் கூடுமோ வென்கிறார் முன்னடிகளில்.

கங்கை சிவனுடைய சடையில் மறைந்திருப்பதுபற்றி அவனுக்கு ஆறுசடைக் கரந்தான் என்று பெயரிடப்பட்டது. கரத்தல்—மறைத்தல். சிவனுக்குப்பல பெயர்களிருக்க இங்கு இந்தப் பெயரையிட்டுச் சொன்னது—கருத்துடன் கூடியது; எந்த ஸ்ரீமந்நாராயணனுடைய ஸ்ரீபாததீர்த்தத்தை ருத்ரன் சிரஸாவஹித்துப் புனிதனாயினனோ, அந்த ருத்ரனை ஸமனாகச் சொல்வது பொருந்தாதென்

பதைக் காட்டினபடி. "கஸ்ய வாஜொஉகெந ஸஶிவஃ ஸுஶி ரொயரெதந?" என்ற ஸ்தோத்ரரத்ந ஸ்ரீஸூக்தியும் நோக்கத் தக்கது.

அண்டர்கோன்='அண்டர்' என்று தேவர்க்கும் இடையர்க்கும் பெயர்; தேவாதிதேவன் என்றாவது கோபால க்ருஷ்ணன் என்றாவது பொருள் கொள்ளலாம். கூறு உடையன்=ஈச்வரத்வத்தில் பங்கு உடையவன் என்றபடி. கொள்கைத்தே?—கொள்ளுந் தன்மையுடையதோ? அங்கீகரிக்கத் தகாதது என்கை.

இப்படி அத்விதீய ஸர்வேச்வரனை அப்பரமபுருஷனை வாய் கொண்டு பேசுவது ஒருவர்க்கும் இயலாதாயினும் 'அவனொருவனே பரதெய்வம்' என்கிற இவ்வர்த்தத்தை நான் சுருங்கச் சொன்னேனென்கிறார் பின்னடிகளில். 1. "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகதஃ ப்ரபவஃ ப்ரளயஸ்ததா। மத்தஃ பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய = அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகதஃ ப்ரபவஃ ப்ரளயஸ்ததா—மத்தஃ பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய." [அர்ஜுநா! எனக்கு மேற்பட்டதத்துவம் எதுவுமில்லை] என்ற பகவத்வசநத்தையுட் கொண்டு 'வேறொருவரில்லாமை நின்றானை' என்றார். எப்பொருட்கும் சொல்லானை=வேதாந்திகள் 'அபர்யவஸாநவ்ருத்தி' என்று சொல்லுவதொன்றுண்டு; அதாவது—உலகத்தில் பிரயோகிக்கப்படும் ஸகல சப்தங்களும் ஸர்வாந்தர்யாமித்வேந ஸர்வசரீரியாயிருக்கின்ற பரமாத்மாவரையில் வாசகங்களாகும் என்பது; அந்த சக்தியாலே எப்பொருளுக்கு வாசகமான சொல்லும் எம்பெருமானைத் தொட்டுத் தீருமாதலால் 'எப்பொருட்கும் சொல்லானை' என்கிறார். ... ... (௪)

தோகுத்த வரத்தனைத் தோலாதான் மார்வம் *
வகிர்த்த வளையுகிர்த்தோள் மாலே! *—உகத்தில்
ஒருநான்று நீயுயர்த்தி உள்வாங்கி நீயே *
அருநான்கு மானா யறி. (௫)

---

1. பகவத்கீதா 7—7.

தொகுத்த வரத்தன் ஆய்	(தவஞ்செய்து) ஸம்பாதிக்கப்பட்ட வரங்களையுடையனாய்	உள் வாங்கி	(உலகங்களையெல்லாம்) உபஸம்ஹரித்து உள்ளேயிட்டு வைத்து
தோலாதான்	ஒருவரிடத்திலும் தோல்வியடையாதவனாயிருந்த இரணியனுடைய	ஒரு நான்று	(மீண்டும் ஸ்ருஷ்டி காலமாகிற) ஒரு ஸமயத்தில்
மார்வம்	மார்பை	உயர்த்தி	(அவ்வுலகங்களையெல்லாம்) வெளியிட்டு வளரச்செய்து
வகிர்த்த	இருபிளவாகப் பிளந்தொழித்த	நீயே	இப்படிப்பட்ட நீயே
வளை உகிர்	வளைந்த நகங்களைக் கொண்ட	நான்கும்	(தேவ மநுஷ்ய திர்யக் ஸ்தாவர ரூபங்களான) நால்வகைப் பொருள்களிலும்
தோள்	திருக்கைகளையுடைய	அரு ஆனாய்	அந்தராத்மாவானாய்
மாலே	ஸர்வேச்வரனே!,	அறி	இதனை அறிவாயாக.
நீ	நீ,		
உகத்தில்	பிரளயகாலத்தில்		

* * *—கீழ்ப்பாட்டில் "வேறொருவரில்லாமை நின்றானை" என்றும் "எப்பொருட்கும் சொல்லானை" என்றும் சொன்னதை விவரிக்கிறது இப்பாட்டு. அனைத்துலகும் அனைத்துயிரும் அமைத்தளித்துத் துடைப்பது நீ நினைத்த விளையாட்டு; கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையும் ஒரு தனி நாயகம் நீ; ஆகவே உனக்குச்சொல்லும் ஏற்றமெல்லாம் பொருந்தும் பிரானே! என்றாராயிற்று.

தொகுத்தவரத்தனாய்த் தோலாதான்—தேவர் மனிதர் முதலிய எவ்வுயிர்களாலும் பகலிலும் இரவிலும் வானத்திலும் பூமியிலும் வீட்டின் அகத்திலும் புறத்திலும் அஸ்த்ர சாஸ்த்ரங்களொன்றினாலும் ஈரமுள்ளதனாலும் ஈரமில்லாததினாலும் தனக்கு மரணமுண்டாகாதபடி இரணியன் பல வரங்கள் பெற்று ஆங்காங்கு வெற்றியே பெற்றுவந்தானென்க. ப்ரஹ்மஸ்ருஷ்டிக்கு உட்பட்ட எந்த பிராணியினாலும் சாகாதபடி அவன் பெற்ற வரம் பழுதுபடாமைக்காக நரங்கலந்த சிங்கமாய் ப்ரஹ்மஸ்ருஷ்டியினுட்படா

மல் தன்னைத்தானே தோற்றுவித்துக்கொண்டு தோன்றினனென்பதும்,—அஸ்த்ர சஸ்த்ரங்களொன்றினாலும் சாகாதபடியும் ஈரமுள்ளதனாலும் ஈரமில்லாததினாலும் இறவாதபடியும் பெற்றவரம் வீண்போகாமே நகங்களினால் கிண்டு கொன்றனனென்பதும், பகலிலும் இரவிலும் சாகாதபடி பெற்ற வரம் பொய்படாதபடி அப்பகலிரவுகளின் ஸந்தியாகிய மாலைப்பொழுதிலே கொன்றனனென்பதும், பூமியிலும் வானத்திலும் சாகாதபடி பெற்ற வரம் மெய்யாம்படி தன் மடிமீது வைத்துக் கொன்றனனென்பதும், வீட்டின் அகத்திலும் புறத்திலும் இறவாதிருக்கும்படி பெற்றவரத்திற்கு விரோதமின்றி வாசற்படிமீது வைத்துக்கொண்டு கொன்றனனென்பதும் இவைபோல்வன பல விசேஷங்கள் இங்கு அருமையாக நோக்கத்தக்க விஷயங்களாம். "சுராசுரர் முனிவர் நரர் கையில் பாரில் சுடர்வானில் பகலிரவில் உள்புறம்பில், பெருபடையில் தான் சாகா விரண்யன் றன்னைப் பிரகலாதன் தர்க்கித்துண்டென்ற தூணில், நரஹரியாய்ப் பொழுதுபுகுநேரந்தன்னில் நாடியுதித்துயர் வாசற்படி மீதேறி, இரணியனைத் தொடைமிசைவைத் துகிரினாலே இருபிளவாக்கினை யரியே எம்பிரானே!" என்றார் பின்னோரும்.

உகத்தில்—யுகாந்த காலத்தில் என்றபடி. ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்கு நீயே கடவனாயிருக்கின்றாய் என்பது பின்னடிகளிற் சொல்லப்படுகின்றது. 'உயர்த்தி' என்பதனால் ஸ்ருஷ்டி கர்த்ருத்வமும், 'உள்வாங்கி' என்பதனால் ஸம்ஹார கர்த்ருத்வமும், 'நான்கும் அரு ஆனாய்' என்பதனால் ஸ்திதிகர்த்ருத்வமும் கூறப்பட்டனவாயின. 'அரூபி' என்னும் வடசொல் 'அரு' என்று கிடக்கிறது. 1. இராமடமூட்டுவாரைப்போலே உள்ளே பதிகிடந்து ஸத்தையே பிடித்து நோக்கிக்கொண்டு போரும்" என்கிறபடியே, தேவ மநுஷ்ய திர்யக் ஸ்தாவர ரூபங்களான நால் வகைப் பொருள்களிலும் பதிந்திருந்து அவற்றின் ஸத்தைக்கு நிர்வாஹகனாயிருக்கின்றாய் என்றவாறு. .... (௫)

அறியார் சமண ரயர்த்தார் பவுத்தர் *
சிறியார் சிவப்பட்டார் செப்பில் *—வெறியாய
மாயவனை மாலவனை மாதவனை யேத்தாதார் *
ஈனவரே யாதலா லின்று. (௬)

1. முமுக்ஷுப்படி–திருமந்த்ரப்ரகரணம்.

3

சமணர்	ஜைநர்கள்	மாயவனை	ஆச்சரியமான குண சேஷ்டிதங்களை யுடையவனும்
அறியார்	உண்மையை அறிய மாட்டார்கள் ;		
பவுத்தர்	பௌத்தர்கள்	மால் அவனை	(அடியார் திறத்தில் வியாமோஹமுள்ளவனும்
அயர்த்தார்	பிரமித்தார்கள் ;		
சிவப்பட்டார்	சைவமதஸ்தர்கள்	மாதவனை	திருமகள் கொழுநனுமான எம்பெருமானை
சிறியார்	மிகவும் நீசராகி யொழிந்தனர் ;		
செப்பில்	(இவர்களுடைய தன்மையைக் கூசச்) சொல்லப் புகுந்தால்,	ஏத்தாதார்	(இவர்கள்) துதிக்க மாட்டாதவர்களா யிராநின்றார்கள்
		ஆதலால்	ஆகையினாலே
		இன்று	இப்போது
வெறி ஆய	பரிமளமே வடி வெடுத்தது போன்றுள்ளவனும்	ஈனவரே	(இவர்கள்) நீசர்களே யாவர்.

* * *—இப்படிப்பட்ட பரம்பொருளை எல்லாரும் பணிந்து உய்வுபெறலாமாயிருக்க, பலபல பாவிகள் விவேகமற்று விமுகரா யொழிகின்றனரேயென்று திருவுள்ளம் நொந்து பேசும் பாசுரம் இது. "தர்க்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ்சடை யோன் சொல்கற்ற சோம்பரும்" என்கிறபடியே உள்ள மதாந்த ரஸ்தர்கள் பாழே போனார்களே ! என்று வயிறெரிகிறார்.

சமணர் அறியார்—"ஸ்யாதஸ்தி, ஸ்யாந்நாஸ்தி" இத்யாதியான ஸப்தபங்கியை அங்கீகரித்துக்கொண்டு ஸமஸ்த ஜகத்தும் ஸத்து மாய் அஸத்துமாய் ஏகமுமாய் அநேகமுமாய்க்கொண்டு அநே காந்தமாயிருக்குமென்று ஒன்றோடொன்று பொருந்தாமல் தோற் றினதைச் சொல்லுகிற ஜைநர் அவிவேகிகளா யொழிந்தனர்.

பவுத்தர் அயர்த்தார்—ஜ்ஞாதா, ஜ்ஞேயம் என்கிற பதார்த் தங்களெல்லாம் க்ஷணிகமென்றும் ஸ்திரமாயிருப்பதொரு ஆத்மா இல்லையென்றும், க்ஷணிகஜ்ஞாநஸந்ததியே ஆத்மாவென்றும் பேய்க்கத்துக் கத்துகிற பௌத்தர்கள் பிரமாணகதியை மறந் தொழிந்தனர்.

சிவப்பட்டார் சிறியார்—படைக்கப்படும் பொருள்களில் ஒருவ

னாய் அநீச்வரனான ருத்ரனைப் பரதெய்வமாக உபாஸிக்கிற சைவ மத நிஷ்டர்கள் நீசராகி யொழிந்தனர்.

இப்படி தனித்தனியே பிரித்துச் சொல்லுவானேன்? இவர்க ளெல்லாரும் திருமாலை ஏத்தமாட்டாத பாவிகளாதலால் அனைவருமே நீசர் என்று கொள்ளவேணு மென்கிறார் பின்னடிகளில். 1. "ஆன்விடையேழன்றடர்த்தாற்கு ஆளானாரல்லாதார், மானிடவரல்லரென்று என் மனத்தே வைத்தேனே" என்பதே மாஞானிகளின் ஸித்தாந்தமாதலால் ஸ்ரீமந்நாராயணனிடத்தில் விமுகரா யொழிந்தவர்களெல்லாரும் மண்ணின்பாரமே என்றாராயிற்று.

வெறியாய=வெறியாவது பரிமளம்; எம்பெருமானை உபநிஷத்தில் "ஸர்வ க³ந்த⁴ஃ—ஸர்வகந்தஃ" என்று சொல்லியிருப்பதனால் பரிமளமே வடிவெடுத்தவ னென்கிறது. .... (சு)

இன்றாக நாளையேயாக * இனிச்சிறிது
நின்றாக நின்னருளென் பாலதே—* நன்றாக
நானுன்னை யன்றியிலேன் கண்டாய் * நாரணனே!
நீயென்னை யன்றி யிலை. (எ)

நாரணனே	நாராயணனே!,	நன்று ஆக	நிச்சயமாக
இன்று ஆக	இன்றைக்காகவுமாம்;	நான் உன்னை அன்றி இலேன் கண்டாய்	நான் உன்னை யொழியப் புகலில்லாதவன் காண்;
நாளையே ஆக	நாளைக்காகவுமாம்;	நீ	நீயும்
இனி சிறிது நின்று ஆக	இன்னம் சிறிது காலம் கழித்தாகவுமாம் (என்றைக்கானாலும்)	என்னை அன்றி இலை	என்னையொழிய வேறொரு ரக்ஷ்யனை உடையையல்லைகாண்.
நின் அருள்	உன்னுடைய கிருபை		
என் பாலதே	என்னையே விஷயமாக வுடையதாகும்;		

* * *—'ஆழ்வீர்! மதாந்தரஸ்தர்களை யெல்லாம் ஈனவரே யென்று இழித்துச் சொன்னீர்; உமக்குண்டான ஏற்றம் யாது?' என்று எம்பெருமான் கேட்க; என்னுடைய ஏற்றம் உனக்குத் தெரியாதோ பிரானே!; 'உன்னையொழிய எனக்குச் செல்லாது,

1. பெரியதிருமொழி 11-7-9.

என்னையொழிய உனக்குச் செல்லாது' என்னும்படியான உறவை யுணர்ந்து ஸர்வகாலமும் உன்னுடைய திருவருளுக்குப் பரிபூர்ண பாத்ரமாயிருக்கப்பெற்ற வென்னுடைய ஏற்றம் அறியாயோ? என்கிறார் போலும்.

பெருமானே! உன்னுடைய திருவருள் என்மேல் ஏறிப் பாய வேண்டியதேயன்றி வேறொருவரையும் விஷயமாக வுடையதன்று; உன்னுடைய அருளுக்கு நானே இலக்கு; என்னுடைய வேண்டு கோளுக்கு உன்னருளே இலக்கு. இன்றைக்கோ நாளைக்கோ, அன்றி இன்னமும் சிலகாலம் கடந்தபின்போ என்றைக்காவது உன்னருள் என்மேல் ஏறிப்பாய்ந்தே தீரக்கடவது என்கிற அத்ய வஸாயம் எனக்குத் திடமாகவுள்ளது.

இங்ஙனே நான் சொல்லுவதற்கு யாதுகாரணமென்கிறாயோ? சொல்லுகேன் கேளாய், நான் உன்னையன்றியிலேன் நீ யென்னை யன்றி யிலை—'நம்முடைய அருளை யாரிடத்து உபயோகிக்கலாம்!' என்று நீ தயநீயரைத் தேடியிராநின்றாய்; 'நமக்கு எம்பெருமான் அருள் புரிவனோ?' என்று நான் உன் தயையைத் தேடியிராநின்றேன்; உன்னையொழிய எனக்குப் புகலில்லை, என்னையொழிய உனக்குப் புகலில்லை. ஆகவே, நின்னருள் என்பாலதே. "𑌤𑌦𑌹𑌂 𑌤𑍍𑌵𑌦𑍃𑌤𑍇 𑌨 𑌨𑌾𑌥𑌵𑌾𑌨𑍍 𑌮𑌦𑍃𑌤𑍇 𑌤𑍍𑌵𑌂 𑌦𑌯𑌨𑍀𑌯𑌵𑌾𑌨𑍍𑌨 𑌚 𑌵𑌿𑌧𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌮𑍇𑌤𑌦𑌨𑍍𑌵𑌯𑌂 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌪𑌾𑌲𑌯 𑌮𑌾 𑌸𑍍𑌮 𑌜𑍀𑌹𑌪𑌃." என்ற ஸ்தோத்ர ரத்ந ச்லோகம் இவ்விடத்திற்குச் சார்பாக அநுஸந்திக்க வுரியது. "நிகரின்றி நின்றவென்னீசதைக்கு நின்னருளின்கணன்றிப் புக லொன்றுமில்லை அருட்குமஃதே புகல்" என்ற அமுதனார் பாசுரமும் காண்க.

பின்னடிகட்கு வேறொரு வகையாகவும் பொருள் கொள்ள லாம்; நாராயணனே! உன்னை நிரூபிக்கவேண்டில் என்னையிட்டு நிரூபிக்கவேண்டும்; என்னை நிரூபிக்கவேண்டில் உன்னையிட்டு நிரூபிக்கவேண்டும்; (அதாவது) 'நாராயணன்' என்றால் நாரங்களுக்கு அயநம் என்றபடி; நாரபதார்த்தங்களில் தாம் சேர்ந்தவராகை யாலே தம்மையிட்டு நாராயணனை நிரூபிக்க வேண்டியதாகிறது. தம்மை நிரூபிக்கவேண்டுமானால் பகவச் சேஷத்வத்தையிட்டே அடியானென்று நிரூபிக்கவேண்டியிருப்பதால் நாராயணனையிட்டுத்

தம்மை நிரூபிக்க வேண்டியதாகிறது. சேஷசேஷிகளுடைய நிரூபணம் பரஸ்பர ஸாபேக்ஷமாகவே யிருக்குமன்றோ. ஆகவே, சேஷியான உன்னையொழிய எனக்கு ஸத்தையில்லை; சேஷபூதனான என்னையொழிய உனக்கு ஸத்தையில்லை என்றதாயிற்று என்று கொள்ளலாம். .... (எ)

இலைதுணை மற்றேன் னெஞ்சே ஈசனைவென்ற *
சிலைகொண்ட செங்கண்மால் சேரா—* குலைகொண்ட
ஈரைந் தலையா னிலங்கையை யீடழித்த *
கூரம்ப னல்லால் குறை. (அ)

என் நெஞ்சே	எனது மனமே!,	குலை கொண்ட ஈரைந் தலையான்	கொத்துப்போலே நெருங்கிக் கிடந்த பத்துத்தலைகளை யுடையவனான இராவணனுடைய
ஈசனை வென்ற	ருத்ரனை ஜயித்த	இலங்கையை	லங்காபுரியை
சிலை கொண்ட	வில்லை (பரசுராமனிடத்தில் நின்றும்) வாங்கிக் கொண்ட	ஈடு அழித்த	சீர்கெடுத்த
செம் கண் மால்	புண்டரீகாக்ஷனாகிய தன்னை	கூர் அம்பன் அல்லால்	கூர்மைதங்கிய அம்புகளை யுடையனான இராமபிரானைத் தவிர்த்து
சேரா	பணிந்து உய்வு பெற மாட்டா தொழிந்த	குறை	விரும்பத்தகுந்த
		மற்று துணை	வேறொரு துணைவன்
		இலை	நமக்கு இல்லை.

* * *—விரோதி நிரஸநமே இயற்கையாகவுள்ள எம்பெருமானைத் தவிர்த்து வேறொருவரும் துணையாகவல்லாரில்லையென்று தம் திருவுள்ளத்துக்கு உபதேசிக்கிறாரிதில்.

ஈசனைவென்ற சிலைகொண்ட செங்கண்மால்=ஒரு ஸமயத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணு ருத்ரனை ஒரு சிலையால் வென்றான்; அந்த வில் பரசுராமனிடத்தில் வந்து சேர்ந்திருந்தது; அதனை ஸ்ரீராமாவதாரத்தில் மிதிலையில்நின்று மீண்டெழுந்தருளும் போது அப்பரசுராமனிடத்திற் கொண்டான்: (இவ்வரலாற்றை விரித்துரைப்போம்.) முன்னொருகாலத்தில் தேவசில்பியான விச்வகர்மாவினால் நிருமிக்கப்பட்ட சிறந்த இரண்டு விற்களுள் ஒன்றைச் சிவபிரா

னும் மற்றொன்றைத் திருமாலும் எடுத்துக்கொண்டார்கள். பின்பு ஒரு காலத்தில் அவ்விற்களுள் சிறந்தது இன்னதென்பதை அறிய விரும்பிய தேவர்களின் வேண்டுகோளால் பிரமன் அரனுக்கும் அரிக்கும் போரை மூட்டிவிட, அங்ஙனமே அவர்கள் அவ்விற்களைக்கொண்டு போர்புரிகையில் சிவபிரானது வில் சிறிது முறிபட்டது; அவ்வாறு இற்றவில்லைச் சிவபிரான் ஜநககுலத்துத் தேவராதனென்னும் அரசனிடம் கொடுத்திட, அது வம்சபரம்பரையாய் ஜநகமஹாராஜனளவும் வந்தது; இது நிற்க: இறாத வலிய வில்லை விஷ்ணு ரிசிகமுனிவனிடம் கொடுத்துச்செல்ல, அது அவன் குமாரனான ஜமதக்நியினிடத்தும் அவன் குமாரனான பரசுராமனிடத்தும் பரம்பரையாய் வந்தது. முற்கூறிய சிவதநுஸ்ஸை ஸீதைக்குக் கந்யாசுல்கமாக ஜநகன் வைத்திருந்தான்; இராமபிரான் அந்தவில்லை முறித்துத் தன் பேராற்றலை விளங்கச்செய்து பிராட்டியை மணந்துகொண்டு மிதிலாபுரியினின்றும் புறப்பட்டு அயோத்திக்கு வரும்போது வழியிடையே செருக்கிவந்த பரசுராமனது கையிலிருந்த விஷ்ணுதநுஸ்ஸைவாங்கி எளிதில்வளைத்து நாணேற்றிக் கணைதொடுத்து 'இவ்வம்புக்கு இலக்குஎன்?' என்று வினவ, பரசுராமன் அதற்கு இலக்காகத் தனது தபோபலம் முழுவதையுங் கொடுக்க, அவன் க்ஷத்ரிய வம்சத்தை நக் கருவறுத்தவனாயிருந்தாலும் வேதவித்தும் தவவிரதம் பூண்டவனுமாயிருத்தல் பற்றி அவனைக் கொல்லாமல் அவனது தவத்தைக்கவர்ந்த மாத்திரத்தோடு ஸ்ரீராமன் விட்டருளினன் என்ற வரலாறுகள் இதிஹாஸப்ரஸித்தம். ஆகவே, இப்பாட்டில் "ஈசனைவென்ற சிலை" என்றது பரசுராமன் கையிலிருந்த விஷ்ணுதநுஸ்ஸை. அதனைக் கொண்ட செங்கண்மால்—ஸ்ரீராமபிரான். அப்படிப்பட்ட தன்னை யடிபணிந்து வாழமாட்டாத இராவணனைக் குடும்பத்தோடு கொன்றொழித்த எம்பெருமானைத் தவிர்த்து நமக்குத் துணையாகவல்லார் ஆருமில்லை என்றவாறு.

'ஈசனைவென்ற' என்ற அடைமொழியைச் சிலைக்கு ஆக்காமல் செங்கண்மாலுக்கு ஆக்கி, பாணாஸுரயுத்தம் முதலியவற்றில் ருத்ரனை ஜயித்த செங்கண்மால் என்னவுமாம்.

இப்பாட்டில் "கூரம்பனல்லால்" என்றவிடத்துப் பெரிய

வாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில்—"எம்பெருமானார் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தவர்கள் அசேதநமான க்ரியா கலாபத்தினுடைய கூர்மையை விச்வஸித்திருப்பார்கள்; இவர்கள் சக்ரவர்த்தித்திருமகன் அம்பின் கூர்மையைத் தஞ்சமாக நினைத்திருப்பார்கள்" என்று அச்சுப்பிரதிகளிற் காணப்படும் வாக்கியம் பிழை. ஓலை ஸ்ரீ கோசங்களை ஆராய்ந்ததில் "எம்பெருமானார் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தவர்கள் அசேதநமான க்ரியா கலாபத்தினுடைய கூர்மையை விச்வஸித்திரார்கள்; சக்ரவர்த்தித் திருமகன் அம்பின் கூர்மையையே யாயிற்றுத் தஞ்சமாக நினைத்திருப்பது." என்று காண்கிறது. இதுவே பொருத்தமுடைத்து. ஸ்ரீ வைஷ்ணவர்கள் பேற்றுக்கு எம்பெருமான் கைபார்த்திருக்கு மத்தனையொழிய மூக்கைப்பிடித்தல் முதலிய ஸாதநாநுஷ்டாநங்களினால் பேறுபெற நினையார்களென்கை. ... ... (அ)

குறைகொண்டு நான்முகன் குண்டிகைநீர்ப் பெய்து *
மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி—* கறைகொண்ட
கண்டத்தான் சென்னிமேலேறக் கழுவினான் *
அண்டத்தான் சேவடியை யாங்கு (கூ)

நான்முகன்	பிரமதேவன்	ஆங்கு	(எம்பெருமான் உலகளந்தருளின) அக்காலத்தில்
குறை கொண்டு	கைச்யாநுஸந்தானம் செய்துகொண்டு	அண்டத்தான் சே அடியை	அந்த ஸர்வேச்வரனுடைய திருவடிகளை
குண்டிகை நீர்	கமண்டல தீர்த்தத்தை	கறை கொண்ட கண்டத்தான் சென்னி மேல் ஏற	விஷகண்டனான ருத்ரனுடைய தலையில் (ஸ்ரீபாத தீர்த்தம்) விழும்படியாக
பெய்து	வார்த்து	கழுவினான்	விளக்கினான்.
மறை கொண்ட	வேதங்களிலுள்ள		
மந்திரத்தால்	புருஷஸூக்தம் முதலிய மந்த்ரங்களினால்		
வாழ்த்தி	மங்களாசாஸநம் பண்ணி		

* * *—கீழ்ப்பாட்டில் "இலங்கையையீடழித்த கூரம்பனல்லால்—இலைதுணைமற்று" என்றார். அப்படி சொல்லலாமோ? பிர

மன் சிவன் முதலானவர்களையும் துணையாகப்பற்றுகிறவர்கள் இவ்வுலகில் பலருண்டே! என்ன; அவர்களும் தங்கள் வெறுமையை முன்னிட்டு ஸ்ரீமந் நாராயணனையே ஆச்ரயித்து அபிமதம் பெற்றூர்கள் காண்மின் என்று சொல்லவேண்டி, உலகளந்தகாலத்துத் திருவடி விளக்கின இதிஹாஸத்தை யெடுத்துரைக்கிறூர் இப்பாட்டில்.

உலகளந்த பெருமானுடைய திருவடியைப் பிரமன் தனது கைக்கமண்டல தீர்த்தத்தினுல் விளக்கினுன்; அது கங்கையாகப் பெருக அதனை சிரஸாவஹித்துப் பரிசுத்தியடைந்தது காரணமாகச் சிவனென்று பேர்பெற்றூனொருவன்; இனி, துணையாகுந்தெய்வம் இன்னதென்பதை நீங்களே அறிந்துகொள்மின் என்றவாறு.

குறைகொண்டு—“நீசனேன் நிறையொன்றுமிலேன்” என்னுமாபோலே தன்னுடைய குறையை—நைச்சியத்தை அநுஸந்தித்துக்கொண்டு என்றபடி. குண்டிகை—வடசொல் விகாரம். அமரர்க்கு அமுதமளிக்கக் கடல்கடைந்த காலத்து அக்கடலினின்று தோன்றின காலகூடவிஷத்தைச் சிவபிரான் உட்கொண்டு கழுத்தளவிலே அடக்கிக் கொண்டதுபற்றிக் கறைகொண்ட கண்டத்தான் என்று பெயர் பெற்றனன். .... (௯)

ஆங்கார வார மதுகேட்டு * அழலுமிழும்
பூங்கா ரரவணையான் பொன்மேனி—* யாங்காண
வல்லமே யல்லமே? மாமலரான் வார்சடையான் *
வல்லரே யல்லரே வாழ்த்து.

(௧௦)

ஆங்கு	பரமபதத்திலே	பூ கார் அரவு அணையான்	அழகிய சீற்றத்தையுடைய திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய எம்பெருமானது
ஆரவாரம் அது கேட்டு	(நித்ய முக்தர்களுடைய) ஸாமகான கோஷத்தைக் கேட்டு (அஸுரர்கள் இங்கும் வந்து ஆரவாரம் செய்வதாக ப்ரமித்து)	பொன் மேனி	அழகிய திருமேனியை
அழல் உமிழும்	விஷாக்நியைக் கக்குகின்ற	யாம்	(அநந்யபக்தரான) நாம்

காண — ஸேவிப்பதற்கு
வல்லம் அல்லமே — ஸாமர்த்திய முடையோ மல்லோமோ ?
(நாம் ஸமர்த்தரேயாவோம் ;)
மா மலரான் — சிறந்த பூவிற் பிறந்த பிரமனும்
வார் சடையான் — நீண்ட ஜடையை யுடையருத்ரனும்
வாழ்த்த — (எம்பெருமானை) வாழ்த்துவதில்
வல்லர் அல்லரே — அஸமர்த்தர்களே.

* * *—இப்பாட்டை இரண்டுவகையாக நிர்வஹிப்பதுண்டு:- ஆங்கு என்றது 'பரமபதத்திலே' என்றபடி. அவ்விடத்தில் ஆரவாரமாவது—"ஏதத் ஸாம காயந்நாஸ்தே. ஹாவு ஹாவு ஹாவு. அஹமந்நமஹமந்நமஹமந்நம்." என்று உபநிஷத்திற் கூறியுள்ளபடியே நித்யமுக்தர்கள் பெருமிடறுசெய்து ஸாமகாநம் பண்ணுவர்களே அந்த ஆரவாரம். அது திருவனந்தாழ்வானுடைய செவியிற் பட்டவாறே 'இது ஸாமகோஷம்' என்பதை மறந்து அஸுரராக்ஷஸர்கள் தீங்கிழைக்க இவ்விபூதியிலும்வந்து கூச்சலிடுகின்றார்கள் போலும் என்று ப்ரேமமடியாகக் கலங்கி, அவர்கள் எம்பெருமானருகில் கிட்டமுடியாதபடி விஷாக்நியை வாந்தி செய்துகொண்டே யிருக்கிறானாம். 1. "ஸ்நேஹாதஸ்தாநரக்ஷாவ்யஸநிபிரபயம் ஶார்ங்கசக்ராஸி ஜ்யோத்ஸ்நாநகே காணர்வம் ஸ்ரீஸஹவதிபவனோராஹார்யஸ்தநந்தம்" என்று பட்டர் அருளிச் செய்தபடியே பரிவின் மிகுதியினால் அச்சத்திற்கு நிலமல்லாத ஸ்தாநத்திலும் அஞ்சிக் காப்பிடுகின்ற திருவனந்தாழ்வான்மீது சயனித்தருளாநின்ற திவ்யமங்கள விக்ரஹத்தை நாம் ஸேவிக்க முடியாதோ? "தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்" என்கிறபடியே அவனுடைய நிர்ஹேதுக விஷயீகாரம்பெற்ற நமக்கு அப்பரமனுடைய திருமேனி ஸேவை எளிதேயாம் ; பின்னை யார்க்கு அரிதென்னில் ; இறுமாப்புக் கொண்டிருக்கின்ற தேவதாந்தரங்கட்கே அஃது அரிது.

அன்றியே, கீழ்ப்பாட்டில் உலகளந்த வ்ருத்தாந்தம் அர்த்தாத் ப்ரஸ்துதமாகையாலே ஆங்கு என்றது 'அவ்வவதார ஸமயத்திலே' என்றபடியாய், ஆரவாரமது கேட்டு—"திசை வாழியெழ"

1. ஸ்ரீ குணரத்நகோசம்.

என்கிறபடியே திசைகள்தோறு முண்டான மங்களாசாஸந கோலாஹலத்தைக் கேட்டுத் திருவனந்தாழ்வான் தானும் தன்னாலான ரக்ஷையிடவேண்டி அழலை உமிழ்ந்தபடியைச் சொல்லிற்றாகவும் நிர்வஹிப்பதுண்டு. ஆகவே முதலடியில் மாத்திரம் இரண்டு வகையான யோஜநாபேதம். .... (௪௰)

வாழ்த்துகவாய் காண்ககண் கேட்கசெவி * மகுடம்
தாழ்த்தி வணங்குமின்கள் தண்மலரால் *— சூழ்த்த
துழாய்மன்னு நீண்முடியென் தொல்லைமால் தன்னை *
வழாவண்கை கூப்பி மதித்து. (௪௧)

சூழ்த்த	நிறையச் சாத்திக் கொள்ளப்பட்ட
துழாய்	திருத்துழாய்மாலை
மன்னு	பொருந்தியிருக்கப் பெற்ற
நீள் முடி	நீண்ட திருவபிஷேகத்தை யுடையனும்
என் தொல்லைமால் தன்னை	என்னிடத்தில் நெடுநாளாக வ்யாமோஹமுடையவனுமான ஸர்வேச்வரனை
வழா	ஒரு நொடிப் பொழுதும் விடாமல்
வண்கை கூப்பி மதித்து	அழகிய கைகளைக் கூப்பி த்யானம் பண்ணி

மகுடம் தாழ்த்தி	தலையை வணக்கி
தண் மலரால்	குளிர்ந்த புஷ்பங்களைக்கொண்டு
வணங்குமின்கள்	ஆச்ரயியுங்கள்;
வாய்	(உங்களுடைய) வாய்
வாழ்த்துக	(அவனைத்) துதிக்கட்டும்;
கண்	கண்கள்
காண்க	(அவனையே) ஸேவிக்கட்டும்;
செவி	காதுகள்
கேட்க	(அவனது சரிதங்களையே) கேட்கட்டும்.

* * *—செவி வாய் கண் முதலிய உறுப்புகள்யாவும் பகவத் விஷயத்தில் உபயோகப்படுவதற்கென்றே படைக்கப்பட்டனவாதலால் அவற்றை அவ்விஷயத்திலேயே உபயோகப்படுத்துங்கோள் என்று பரோபதேசம் பண்ணும் பாசுரம் இது. உங்களுடைய வாயை அவனுக்குப் பல்லாண்டு பாடுவதில் ஊன்றவையுங்கள்; கண்களை அவனுடைய திவ்யமங்கள விக்ரஹஸேவையில் ஊன்றவையுங்

கள்; செவிகளை அவனுடைய புண்ய கீர்த்திகளைக் கேட்பதில் ஊன்ற வையுங்கள்: தலையை அவனது திருவடிகளில் வணக்குங்கள்; கைகளை அஞ்ஜலி செய்வதிலும் புஷ்பம் முதலிய உபகரணங்களைக் கொண்டு ஸமர்ப்பிப்பதிலும் உபயோகப்படுத்துங்கள்: அவன் எப்படிப்பட்டவனென்றால், 'எல்லாரையும் ரக்ஷிக்கக்கடவேன்' என்று முடி கவித்துத் தனிமாலை யிட்டிருக்குமவன்; என்போல்வாரிடத்தில் நெடுங்காலமாகவே வ்யாமோஹம்வைத்து ஆட்படுத்திக் கொள்ள அவஸரம் பார்த்திருக்குமவன். இப்படிப்பட்ட எம்பெருமான் விஷயத்திலே உங்களுடைய ஸகல கரணங்களையும் உபயோகப்படுத்தி உய்வுபெறுங்கோள்—என்றாராயிற்று.

மகுடம்—தலைக்கும் கிரீடத்திற்கும் பெயர். ... (கக)

மதித்தாய்போய் நான்கின் மதியார்போய் வீழ *
மதித்தாய் மதிகோள் விடுத்தாய்! *—மதித்தாய்
மடுக்கிடந்த மாமுதலை கோள்விடுப்பான் * ஆழி
விடற்கிரண்டும் போயிரண்டின் வீடு. (கஉ)

மதியார்	உன்னைச் சிந்தியாதவர்கள்
நான்கில்	நால்வகைப்பட்ட யோனிகளில்
போய் போய் வீழ	சென்று சென்று பலகாலும் விழும்படியாக
மதித்தாய்	ஸங்கல்பித்தாய்;
மதி	சந்திரனுடைய
கோள்	துன்பத்தை
விடுத்தாய்	போக்கியருளினாய்;
மடு	ஒரு மடுவிலே
கிடந்த	(சாபத்தினால்) வந்து சேர்ந்திருந்த
மா முதலை	பெரிய முதலையினுடையதான
கோள்	(கஜேந்திராழ்வானது) துயரத்தை

விடுப்பான்	நீக்குவதற்காக
ஆழி	திருவாழியை
விடற்கு	(அந்த முதலையின் மேல்) பிரயோகிப்பதற்கு
மதித்தாய்	நினைத்தருளினாய்;
இரண்டும்	முதலையும் கஜேந்திராழ்வானுமாகிற இரண்டும்
போய்	ஒன்றையொன்று விட்டுப்போய்
இரண்டின்	அவ்விரண்டு ஜந்துக்களுக்கும்
வீடு	சாபமோக்ஷமும் மோக்ஷஸாம்ராஜ்யமும் உண்டாம்படி
மதித்தாய்	ஸங்கல்பித்தாய்.

* * *—ஆழ்வார்களுடைய போதுபோக்குப் பலவகைப்பட்டிருக்குமே; ஸம்ஸாரிகளை நோக்கிச் சில பாசுரங்கள் கூறுவர்; தம் திருவுள்ளத்தையே நோக்கிச் சில பாசுரங்கள் கூறுவர்; எம்பெருமானை நோக்கிச் சில பாசுரங்கள் கூறுவர்; இப்புடையிலே, எம்பெருமான்றன்னை நோக்கிக் கூறும் பாசுரம் இது.

மதித்தாய்போய் நான்கின் மதியார் போய் வீழ=இதற்கு இரண்டு வகையான யோஜனைகள் உண்டு; மதியார்—உன்னைச் சிந்தித்து அடிபணியாதவர்கள், நான்கில் போய்வீழ—(வீடு பெறுமல்) சதுர்வித யோநிகளிலும் மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து நசிக்கும்படியாக, மதித்தாய்—, என்பது ஒரு யோஜனை. அன்றியே; நான்கின்—நான்கு வேதங்களைக்கொண்டு, மதியார்—உன்னைச் சிந்திக்க மாட்டாதவர்கள், போய்வீழ—(ஆஸுர யோநிகளில்) விழுந்து ஒழியும்படியாக, மதித்தாய்—, என்பது மற்றொருயோஜனை.

மதிகோள் விடுத்தாய்—சந்திரனுக்கு நேர்ந்திருந்த க்ஷய ரோகத்தைப் போக்கினாய்.

இரண்டும்போய் இரண்டின்வீடு மதித்தாய்—முதலையும் சாபங்கொண்டிருந்தது; கஜேந்திரனும் சாபங்கொண்டிருந்தான்; எங்ஙனேயென்னில்; மஹாவிஷ்ணுபக்தனான இந்த்ரத்யும்நனென்னும் அரசன் வழக்கப்படி ஒருநாள் ஏகாக்ரசித்தனாய் விஷ்ணு பூஜை செய்துகொண்டிருந்தபோது அகஸ்த்ய மஹாமுனிவன் அவனிடம் எழுந்தருள, அப்பொழுது அவ்வரசன் தன் கருத்து முழுவதையும் திருமாலைப் பூஜிப்பதில் செலுத்தி யிருந்ததனால் அம்முனிவனது வருகையை அறியாதவனாய் அவனுக்கு உபசாரமொன்றும்செய்யாதிருக்க, அம்முனிவன் இப்படி நம்மை அரசன் அலக்ஷியஞ் செய்தானென்று மாறுகக்கருதிக் கோபித்து 'நீ யானைபோலச் செருக்குற்றிருந்ததனால் யானையாகக் கடவை' என்று சபித்தான். (அங்ஙனமே அவன் ஒரு காட்டில் யானையாகத் தோன்றினனாயினும் முன்செய்த விஷ்ணுபக்தியின் மஹிமையினால் அப்பொழுதும் விடாமல் நாடோறும் ஆயிரந் தாமரை மலர்களைக்கொண்டு திருமாலை அர்ச்சித்துப் பூஜித்துவருகையில், ஒரு நாள் பெரியதொரு தாமரைத் தடாகத்தில் அர்ச்சனைக்காகப் பூப்

பறிப்பதற்குப்போய் இறங்கி முதலையின்வாயில் அகப்பட்டுக் கொண்டது.)

முன்பொருகால், தேவலன் என்னும் முனிவன் ஒரு நீர்நிலையில்நின்று தவஞ்செய்துகொண்டிருந்தபோது ஹூஹூ என்னுங் கந்தர்வன் அம்முனிவனது காலைப்பற்றி யிழுத்தான், அதனால் கோபங்கொண்ட அம்முனிவன் 'நீ ஜலஜந்துபோல் மறைந்து வந்து அபசாரப்பட்டதனால் முதலையாகக் கடவை' என்று சபித்தான். முதலைக்கு சாபமோக்ஷம் உண்டாயிற்று; கஜேந்திரனுக்கு சாபமோக்ஷமும் ஸாக்ஷாந்மோக்ஷமும் உண்டாயின. .... (௧௨)

வீடாக்கும் பெற்றி யறியாது * மெய்வருத்திக்
கூடாக்கி நின்றுண்டு கொண்டுழல்வீர்! *—வீடாக்கும்
மெய்ப்பொருள்தான் வேத முதற்பொருள்தான் * விண்ணவர்க்கு
நற்பொருள்தான் நாரா யணன். (௧௩)

வீடு ஆக்கும் பெற்றி அறியாது	மோக்ஷத்தைப் பெறுவிக்கும் வழியைத் தெரிந்து கொள்ளாமல்
மெய்	சரீரத்தை
வருத்தி	(உபவாஸாதிகளாலே) க்லேசப்படுத்தி
கூடு ஆக்கி	எலும்பேமிகுந்த கூடாக அஸாரமாக்கி
நின்று	இப்படி நெடுங்காலம் தவம்புரிந்தும்
உண்டு கொண்டு	(தேஹம் தரிக்க வேண்டுமளவு ஸ்வல்பமாக) புஜித்தும்
உழல்வீர்	திரிகின்றவர்களே!,
வீடு ஆக்கும்	மோக்ஷத்தைத் தரக்கூடிய
மெய் பொருள்தான்	மெய்யானஉபாயமாயிருப்பவனும்
வேதம் முதல் பொருள்தான்	வேதங்களினால் முழுமுதற்கடவுளாகப் பிரதிபாதிக்கப் படுபவனும்
விண்ணவர்க்கு	நித்யஸூரிகளுக்கு
நல் பொருள்தான்	போக்யமான வஸ்துவாயிருப்பவனும்
நாராயணன்	ஸ்ரீமந் நாராயணனேயாவன்.

* * *—வேதாந்தங்களில் "யஜ்ஞேந தாநேந தபஸா அநாசகேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி" (ப்ருஹதாரண்யகம்.) என்று சொல்லப்பட்டுள்ளது; (அதாவது—பிராமணர்கள் யாகஞ் செய்தும் தானஞ் செய்தும் தவம் புரிந்தும் பட்டினி கிடந்தும்

பேறுபெறப் பார்க்கிறார்கள்—என்று ஓதப்பட்டுள்ளது.] சரீரத்தை வருத்தப்படுத்திச் செய்யவேண்டியவையாயும், அப்படி செய்தாலும் ' அது தப்பிற்று, இது தப்பிற்று' என்று சொல்லிப் பெரும் பாலும் பலனை இழக்க வேண்டியவையாயுமுள்ள அக்கருமங்களில் கைவைத்து அநர்த்தப்பட்டுப் போவதிற்காட்டிலும், ஸ்ரீமந்நாராயணனையே ஸாக்ஷாத்தாக எளிதில் வழிபட்டு வாழ்ந்துபோகலாமே என்னுங் கருத்துடன் அருளிச்செய்யும் பாசுரம் இது.

அருந்தவம் புரிந்து கஷ்டப்படுகின்றவர்களை விளிக்கிறார் முன்னடிகளால். அந்தோ! மோக்ஷமடையவேண்டியவழி எளிதாயிருக்கச் செய்தேயும் அந்த மார்க்கத்தைத் தெரிந்துகொள்ளாமல் அபாயங்கள்மிக்க கொடுவழியில் செல்லுகின்றீர்களே! என்கிற இரக்கந்தோன்ற " வீடாக்கும் பெற்றி அறியாது " என்கிறார். பெற்றி —உபாயம். கூடு ஆக்கி—பறவைகளின் கூடு கொம்புகளாலும் சுள்ளிகளாலுமே அடர்ந்திருப்பதுபோல, உடம்பை எலும்பு தவிர வேறொன்றுமில்லையாம்படி உலர்த்தி என்றவாறு. உண்டு—1. காயோடு நீடு கனியுண்டு வீடு கடுங்கால் நுகர்ந்து " என்றும், 2. " வீழ்கனியுமூழிலையும் என்னுமிவையே நுகர்ந்துடலம் தாம் வருந்தி " என்றும் சொல்லுகிறபடியே தேஹம் தரித்திருக்குமளவு மிதபோஜநம் பண்ணுகிறபடியைச் சொல்லுகிறது.

பின்னடிகளில் எம்பெருமானுடைய தன்மையையெடுத்துரைத்தது—காயக்லேசரூபமான கருமங்களை விட்டொழித்து 'ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே' என்றிருங்கள் என்றவாறு. " காயிலைதின்றுங் கானிலுறைந்துங் கதி தேடித், தீயிடை நின்றும் பூவலம் வந்துந் திரிவீர்காள், தாயினுமன்பன் பூமகள் நண்பன் தடநாகப், பாயன்முகுந்தன் கோயிலரங்கம் பணிவீரே." என்ற திருவரங்கக் கலம்பகச் செய்யுள் காண்க. ... ... (கரு)

நாராயண னென்னை யாளி * நரகத்துச்
சேராமல் காக்கும் திருமால் தன் *—பேரான
பேசப்பெறுத பிணச்சமயர் பேசக் கேட்டு *
ஆசைப்பட் டாழ்வார் பலர். (கசு)

1. பெரிய திருமொழி 3-2-2. 2 பெரிய திருமடல்.

நாராயணன்	நாராயணனென்னுந் திருநாமமுடையவனும்
என்னை ஆளி	(விசேஷித்து) அடியேனை ஆட்கொள்பவனும்
நரகத்து சேராமல் காக்கும்	(அடியார்களை) நரகம்போகவொட்டாமல் காத்தருள்பவனுமான
திருமால் தன்	திருமாலினது
பேர் ஆன	திருநாமங்களாயுள்ளவற்றை
பேச பெறாத	ஸங்கீர்த்தநம் பண்ணும் பாக்கியமற்றவர்களான

பிணம்	ஜீவச்சவமென்னலாம்படியுள்ள
சமயர்	பாஹ்யகுத்ருஷ்டி மதஸ்தர்கள்
பேச	(அபார்த்தங்களைப்) பிதற்ற
கேட்டு	அவற்றைக் கேட்டு
பலர்	பலபேர்கள்
ஆசைப்பட்டு	தாங்களும் அப்படியே பாஹ்யகுத்ருஷ்டிகளாயொழிய விரும்பி
ஆழ்வார்	அதோகதியையடைந்தொழிவர்.

* * *—இவ்வுலகில் தேவதாந்தர பக்தர்களும் உபாயாந்தர நிஷ்டர்களுமே மலிந்து கிடக்கிறார்களே! என்று வயிறெரிந்து பேசுகிறார். ஸகல லோகஸம்ரக்ஷகனாய் நரகநாசனான ஸ்ரீமந்நாராயணனுடைய திருநாமங்களை ஸங்கீர்த்தநம்பண்ணி வாழலாமாயிருக்க, அப்படி வாழ்வதற்குப் பாக்கியமற்றவர்களாய் ‘ஜீவச்சவங்கள்’ என்று இகழ்வதற்குத் தகுந்தவர்களாயுள்ள மதாந்தரஸ்தர்கள் தேவதாந்தரங்களுக்குச் சிறப்பாகவும் உபாயாந்தரங்களுக்குப் புகழ்ச்சியாகவும் எதையாவது வாய்வந்தபடி பிதற்றிக்கொண்டிருக்கின்றனர்; பல பாவிகள் அப்பிதற்றல்களைக்கேட்டு ‘நாமும் இவர்களைப்போலவே தேவதாந்தர பக்தர்களாயும் உபாயாந்தர நிஷ்டர்களாயும் இருக்கலாமே’ என்று அவர்களுடைய நிலைமையிலே ஆசைகொண்டு இவ்வழியாலே அதோகதியை அடைந்தொழிகின்றதே இவ்வுலகம்!; நல்ல பேச்சுப் பேசினால் செவிமடுத்துக் கேட்கெப்பார் ஆருமில்லையே; ஆத்மநாசத்தை விளைக்கவல்ல பேச்சுக்களே பொலிவுபெறுகின்றனவே! என்று பரிதபித்துப் பேசினாராயிற்று. ... ... (௧௭)

பலதேவ ரேத்தப் படிகடந்தான் பாதம் *
மலரேற விட்டிறைஞ்சி வாழ்த்த—வலராகில் *
மாற்கண்டன் கண்ட வகையே வருங்கண்டீர் *
நீற்கண்டன் கண்ட நிலை. (௧௫)

பல தேவர்	பல தேவர்கள்
ஏத்த	துதிக்கும்படியாக
படி	பூமியை
கடந்தான்	அளந்தவனான ஸர்வேச்வரனுடைய
பாதம்	திருவடிகளிலே
மலர்	புஷ்பங்களை
ஏற இட்டு	ஸமர்ப்பித்து
இறைஞ்சி	வணங்கி

வாழ்த்த வலர் ஆகில்	மங்களாசாஸநம் பண்ண வல்லவர்களானால்,
நீற்கண்டன் கண்ட நிலை	நீலகண்டனாகிய ருத்ரனிடத்தில் காணத்தக்க நிலைமை
மாற்கண்டன் கண்ட வகையே	மார்க்கண்டேயன் ப்ரத்யக்ஷமாகக் கண்டவிதமாகவே
வரும் கண்டீர்	ஸித்திக்குங்கிடீர்.

* * *—ம்ருகண்டு மஹர்ஷியின் புத்திரனான மார்க்கண்டேயன் குமாரப்பருவத்தில் வீதியில் விளையாடா நிற்கையில் அவ்விளையாட்டைக் கண்டுகொண்டு மாதா பிதாக்களும் மகிழ்ந்திருக்கும் போது ‘இப்பிள்ளைக்கு மரணகாலம் குறுகிவிட்டது’ என்று அசரீரி வாக்கியம் ஒன்று திடீரென்று செவியில் விழப்பெற்ற அத்தாய்தந்தையர் மிகவும் பரிதாபங்கொண்டு நிற்க, அதைக்கண்ட மார்க்கண்டேயன் ‘நீங்கள் சிறிதும் வருந்த வேண்டா; ம்ருத்யுவை நானே பரிஹரித்துக் கொள்ளக்கடவேன்’ என்று சொல்லி அன்று முதலாகப் பரமசிவனை யடிபணிந்து அவனையே முழுமுதற்கடவுளாகப் பிரதிபத்திபண்ணி உபாஸித்து வருகையில், சிவபிரான் “இவனோ நம்மை ரக்ஷகனாக நினைத்து நம்மைத் தொழுதுகொண்டு நம் கை பார்த்திருக்கின்றான்; ஸ்ரீமந் நாராயணனே ஸர்வரக்ஷகன் என்கிற பரமார்த்தம் இவனுக்குத் தெரியவில்லை போலும்; அதனை இவனுக்கு நாம் தெரிவிப்பது நன்று; தெரிவியா தொழிந்தோமாகில் அநியாயமாய் இவன் மோசம் போய்விடுவான்; ம்ருத்யுவைத் தப்பவேணுமென்று நம்மை வழிபடுகின்ற இவனுக்கு நாமே ஒரு புகலிடம் காட்டிக்

கொடுத்தோமாக வேணும்" என்றெண்ணி 'மார்க்கண்டேயா! என்னை நீ ரக்ஷகனாக நினைத்துத் தொழுகின்றாய், நானும் நீயும் ஸ்ரீமந்நாராயணனுடைய ரக்ஷ்யவர்க்கத்தில் சேர்ந்தவர்களேயன்றி உனக்கு நான் ரக்ஷகனாகப் ப்ராப்தனல்லேன்; ஸர்வரக்ஷகன் அந்த ஸ்ரீமந்நாராயணனொருவனே; ஆனபின்பு அவனையே அடிபணிந்து நீ அபிமதம் பெறக்கடவாய்' என்று சொல்லி அவனை எம்பெருமான் திருவடிகளிலே கொண்டு நிறுத்தி 'இவனை அநுக்ரஹித்தருளவேணும்' என்று பிரார்த்தித்து, பகவத்கிருபையாலே நீண்ட ஆயுளைப்பெறுவித்தான் பரமசிவன்—என்பது மார்க்கண்டேயனுடைய வரலாற்றின் சுருக்கம். 1. "புக்கடிமையினால் தன்னைக் கண்ட மார்க்கண்டேயனவனை, நக்கபிரானும் அன்றுய்யக்கொண்டது நாராயணனருளே" என்றும் 2. "மார்க்கண்டேயனும் கரியே" என்றும், 3. "கண்டுந்தெளிந்துங் கற்றார் கண்ணற்கா ளன்றி யாவரோ, வண்டுண் மலர்த்தொங்கல் மார்க்கண்டேயனுக்கு வாழுநாள், இண்டைச்சடைமுடி யீசனுடன்கொண்டு உசாச்செல்லக், கொண்டங்குத் தன்னொடுங் கொண்டுடன் சென்றதுணர்ந்துமே" என்றும் திருவாய்மொழியில் நம்மாழ்வாரும், 4. "மன்னு நான் மறை மாமுனி பெற்றமைந்தனை மதியாத வெங்கூற்றந் தன்னை யஞ்சி, நின்சரணெனச் சரணாய்த் தகவில் காலனையுக முனிந் தொழியாப், பின்னையென்றும் நின்திருவடி பிரியாவண்ண மெண்ணிய பேரருள்" என்று பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வாரும் அருளிச்செய்தவை காண்க.

சில புராணங்களில் மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது பரமசிவனே மார்க்கண்டேயனுக்கு அபயமளித்ததாகக் காணப்படினும் மஹாபாரதத்தில் ஆரண்யபர்வத்தில் நூற்றுத் தொண்ணூற்றிரண்டா மத்யாயத்தில் மார்க்கண்டேயன் தானே தருமபுத்திரரை நோக்கிச் சொல்லுமளவில் ஸ்ரீமந்நாராயணனுடைய வார்த்தைகளை அநுவதிக்குமிடத்து "பிதாமஹோऽஸ்மி லோகஸ்ய ஶாயீ ச ஶரணாகத:" என்றுள்ள ச்லோகத்தினால் இவன் ஸ்ரீமந்நாராயணனைச் சரணம் புகுந்தவனென்பது நன்கு விளங்கும்.

---

1. திருவாய்மொழி 4—10—8. 2. திருவாய்மொழி 5—2—7.
3. திருவாய்மொழி 7—5—7. 4. பெரியதிருமொழி 5—8—6.

ஸ்ரீபாகவதத்திலும் பன்னிரண்டாம் ஸ்கந்தத்தில் எட்டாமத்யாயத்தில்—“[illegible] ஹ்ருஷீகேஶம் [illegible]” (கக) என்றது காண்க.

மார்க்கண்டேயனுடைய வரலாறு இப்படிப்பட்டதென்று தெரிந்தபின் இனி இப்பாசுரத்தின் கருத்தை ஆராய்மின் ;—‘உலகளந்த பெருமானுடைய திருவடிகளில் புஷ்பங்களைப் பணிமாறிப் பல்லாண்டுபாட வல்லரானால் நீற்கண்டன் கண்டநிலை மார்க்கண்டன் கண்ட வகையே அறிந்கண்டீர்’ என்றால் இதற்குக் கருத்தியாதெனில் ; கேண்மின் : மார்க்கண்டேயன் பரமசிவனிடத்தில் (ஸ்ரீவைகுண்ட ப்ராப்தியாகிற) மோக்ஷத்தை விரும்பிப் பணிந்தானல்லன் ; வாழ்நாளையே விரும்பிப்பணிந்தான் ; அந்தப் பலனையும் அளிக்க யோக்யதையற்றவனாய் அந்த ருத்ரன் ஸ்ரீமந்நாராயணன் பக்கலில் அவனை ஆச்ரயிப்பித்து அப்பெருமான் மூலமாக ரக்ஷணம் செய்வித்தான் ; ஆகவே, ‘தேவதாந்தரங்கள் பரம்பரயா ஒருகால் ரக்ஷகங்களாகுமேயன்றி ஸாக்ஷாத்தாக ரக்ஷகங்களாகமாட்டா ; ஸ்ரீமந்நாராயணனொருவனே ஸாக்ஷாத் ரக்ஷகனாவான்’ என்று மார்க்கண்டேயன் கைகண்டறிந்த பரமார்த்தம் தேறினதாகும் என்கை. நேராக எம்பெருமானையே நீங்கள் ஆராதிக்கும் பக்ஷத்தில் மார்க்கண்டேயன் ச்ரமப்பட்டுத் தெரிந்துகொண்ட விஷயம் உங்களுக்கு முந்துற முன்னம் எளிதில் தெரிந்துவிட்டதாகத் தேறும் என்றவாறு. நீற்கண்டனாகிய சிவனிடத்துக் காணக்கூடிய நிலைமை [அதாவது—இவன் ஒன்றுக்கும் உதவாதவன் என்று தெரிந்துகொள்ளக்கூடிய ஸ்திதி], அதை மார்க்கண்டேயன் பண்டு தெரிந்துகொண்டான்; நீங்களும் அதை இப்போது தெரிந்து கொண்டீர்களென்னலாம்—ஸாக்ஷாத்தாக நீங்கள் எம்பெருமானையே ஆராதிப்பீர்களாகில், என விரிக்க.

இப்பாட்டின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் “மார்க்கண்டேயன் மஹாதேவனை மோக்ஷார்த்தமாகச் சென்று ஆச்ரயிக்க, மோக்ஷப்ரதன் ஈச்வரனேயென்று காட்டுமிதுவே உள்ளதென்று ருத்ரன் காட்டக்கண்டு இதுவே இவனுக்குள்ளதென்று மார்க்கண்டேயன் கண்டவகையே ஸித்திக்கும் : அவ்யவஹிதமாக ஸர்வேச்வரன் திருவடிகளை ஆச்ரயிக்க வல்லவராகில்

மார்க்கண்டேயன் கண்டவகையே லிக்கிக்கும்," என்றிருக்கும் ஸ்ரீஸூக்திகளில் உள்ள மோக்ஷ சப்தம் பரமபதாநுபவரூபமான மோக்ஷத்தைக் குறிப்பதன்று; "ஜராமரண மோக்ஷாய" என்று ஒரு தேசவிசேஷத்தைக் குறிக்கொண்டு கீதையிற் சொன்ன கட்டளையிலே, இந்த தேசத்திலேயே ம்ருத்யு இல்லாமையாகிற மோக்ஷத்தைச் சொல்லுகிறதென்று கொள்க. மார்க்கண்டேயன் தான் சிரஞ்ஜீவியா யிருக்கவேணுமென்று உபாஸித்தவனாக இதிஹாஸபுராணங்களிற் கூறப்படுகிறானேயன்றி, பரமபுருஷார்த்த ரூபமான மோக்ஷத்தை விரும்பினனாகக் கூறப்பட்டிலன். பெரிய திருமொழியில் (5—8—6.) "மன்னு நான்மறை மாமுனி பெற்ற மைந்தனை.........பின்னையென்றும் நின் திருவடி பிரியாவண்ணம் எண்ணிய பேரருள்" என்றவிடத்து வியாக்கியானத்திலும் இது ஸ்பஷ்டம். அந்த வியாக்கியானமருளிய பெரியவாச்சான் பிள்ளை தாமே இவ்விடத்தில் "மார்க்கண்டேயன் மஹாதேவனை மோக்ஷார்த்தமாகச் சென்று ஆச்ரயிக்க" என்றது ருத்ரனைப் பற்றின பரிஹாஸோக்தியாக வடுக்கும். "இவன் ஒரு மஹா தேவனும்; இவனிடத்தில் ஒரு பெரிய மோக்ஷத்தை விரும்பி ஒருவன் வந்து பணிந்தானும்; அப்பப்ப! இந்த மோக்ஷம் நம்மாலாகாது என்று வேற்றுவாசல் காட்டினானும்" என்று பரிஹஸித்துச் சொன்னவாறு.

நீற்கண்டன்—'நீலம்' என்ற வடசொல் 'நீல்' என்று சிதைந்து நீற்கண்டனென்றாயிற்று. "நீலார் கண்டத்தம்மான்" என்ற திருவாய்மொழி காண்க. அன்றியே, "நீர்க்கண்டன்" என இடையின ரகரப்பாடங்கொள்ளில், விஷஜலத்தைக் கழுத்திலே கொண்டவனென்றதாகும். மார்க்கண்டன்—'மார்க்கண்டேயன்' என்ற வடசொற் சிதைவு.

இப்பாட்டின் பின்னடிகட்கு மற்றும் பலவகையாகக் கருத்துக்கூற இடமுண்டு. வல்லார்வாய்க் கேட்டுணர்க. (கரு)

நிலைமன்னு மென்னெஞ்ச மந்நான்று * தேவர்
தலைமன்னர் தாமே மாற்றாக *—பலமன்னர்
போர்மாள வெங்கதிரோன் மாயப்பொழில் மறைய *
தேராழியால் மறைத்தாரால். (கசா)

அந்நான்று	பாரதயுத்தம் நடந்த அக்காலத்து	மாய	(அகாலத்தில்) அஸ்தமிக்கும்படி யாகவும்
தேவர் தலை மன்னர் தாமே	தேவாதிதேவனான தானே	பொழில் மறைய	பூமண்டலம் முழுதும் இருள் மூடும்படியாகவும்
மாற்று ஆக	எதிரியாயிருந்து கொண்டு	தேர் ஆழியால்	சக்கராயுதத்தினால்
பல மன்னர்	பல அரசர்கள்	மறைத்தாரால்	(ஸூர்யனை) மறைத்த பெருமானாலே
போர்	யுத்தக்களத்தில்		
மாள	மடிந்து போம்படியாகவும்	என் நெஞ்சம்	எனது (சஞ்சலமான) மனமானது
வெம் கதிரோன்	ஸூர்யன்	நிலை மன்னும்	சலிப்பற்று நிலை நிற்கப் பெற்றது.

* * *—அலைபாய்ந்து கொண்டிருந்த என்மனமானது எம்பெருமான் ஆச்ரிதர்க்காக உழைக்குந் தன்மைகளைக் கேட்டறிந்தவாறே 'இப்படிப்பட்ட எம்பெருமானுக்கு அடிமைப் பட்டவர்களாக நாம் அமைந்துவிட்டோமான பின்பு இனி நமக்கு யாது கவலை?' என்று தேறி நிலைபெற்று விட்டதென்கிறார். "அந்நான்று....தேராழியால் மறைத்தாரால் என்னெஞ்சம் நிலைமன்னும்" என்று அந்வயம்.

"தேவர் தலைமன்னர்" என்றது எம்பெருமானை; "ராஜாதி ராஜஸ்ஸர்வேஷாம்" என்றும் "அயர்வறுமமரர்களதிபதி" என்றும் சொல்லுகிறபடியே.

தாமே மாற்றாக—துர்யோதநாதிகளை எம்பெருமான் பாண்டவர்களின் சத்துருக்களென்று நினைத்திலன்; தன்னுடைய சத்துருக்களென்றே நினைத்தான்; இது எங்ஙனே தெரிகின்றதென்னில்; தூது எழுந்தருளினபோது விதுரர் திருமாளிகையிலே அமுது செய்துபோக, அஃதறிந்த துர்யோதனன் "பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந। கிமர்த்தம் புண்டரீகாக்ஷ! புக்தம் வ்ருஷலபோஜநம்?" [பீஷ்மாசார்யரையும் த்ரோணாசார்யரையும் என்னையும் விட்டுப் பள்ளிச்சோற்றை ஏன் உண்டாய்?]

என்று கண்ணபிரானைக் கேட்க, அதற்கு உத்தரமருளிச் செய்வது காண்மின்:—"த்விஷதந்நம் ந போக்தவ்யம் த்விஷந்தம் நைவ போஜயேத்। பாண்டவாந் த்விஷஸே ராஜந்! மம ப்ராணா ஹி பாண்டவா:" [சத்ருவின் சோற்றையும் உண்ணலாகாது, சத்ருவுக்குச் சோறும் இடலாகாது; எனது உயிர்நிலையாகிய பாண்டவர்களை நீ த்வேஷிப்பதனால் எனக்கு சத்ருவே; ஆனதுபற்றியே உன்னிடம் நான் உண்ணவரவில்லை] என்றான். ஆகவே, ஆச்ரிதர்களுடைய பகைவர்களைத் தன்னுடைய பகைவர்களாகவே கொள்ளும் எம்பெருமானுடைய அபிஸந்தியை அறிந்து இங்கு "தாமேமாற்றாக" என்றருளிச் செய்தாரென்க. * மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் மற்றும் பலர் குலைய நூற்றுவரும் பட்டழியப் பார்த்தன் சிலைவளையத் திண்டேர்மேல் முன்னின்றதுபற்றிப் "பலமன்னர் போர் மாள" என்றருளிச் செய்யப்பட்டது

வெங்கதிரோன்மாயப் பொழில்மறையத் தேராழியால் மறைத்த வரலாறு வருமாறு:—அர்ஜுநன் பதின்மூன்றாநாட் போரில் தன் மகனை அபிமந்யுவைக் கொன்ற ஜயத்ரதனை மறுநாள் ஸூர்யன் அஸ்தமிப்பதற்கு முன்னே கொல்வதாகப் பல பிரதிஜ்ஞைகள் செய்ய, அது நிறைவேறக் கூடாதென்று அந்த ஜயத்ரதனை எதிரிகளால் உட்புக முடியாதபடியாக வ்யூஹத்திலே நிறுத்திக் காப்பாற்றிக் கொண்டிருந்த ராஜாக்கள் முன்னே, ஸ்ரீக்ருஷ்ணன் பகல் நாழிகை முப்பதும் சென்றதாகத் தோற்றும்படி, நினைவறிந்து காரியஞ்செய்யும் தனது சக்ராயுதத்தைக் கொண்டு ஸூர்யனை மறைக்க, 'ஆதித்யன் அஸ்தமித்தான், இனிமேக்குப் பிராணபயமில்லை; அர்ஜுநன் பிரதிஜ்ஞை செய்திருக்கிறபடியே அக்நி ப்ரவேசம் செய்யப்போவதைக் கண்டு களிப்போம்' என்றெண்ணி ஜயத்ரதன் வெளிப்பட்டு நின்றளவிலே கண்ணபிரான் ஸுதர்சநாழ்வானை மீட்டுக்கொள்ள, ஸூர்யன் இன்னும் அஸ்தமிக்கவில்லையென்று உணர்ந்துகொண்ட அர்ஜுநன் உடனே தனது அம்பைக் கொண்டு அந்த ஜயத்ரதனைத் தலையறுத்துவிட்டனன் என்பதாம்.

கோடிஸூர்ய ப்ரகாசமான திருவாழியைக் கொண்டு ஸூர்யனை மறைத்தல் எங்ஙனம் கூடுமெனின்; ஸூர்யனுடைய ஒளி கண்ணாலே காணலாம்படி அளவுபட்டிருத்தலால் இருட்டைப்

போக்கும்; அப்படியல்லாமல் திருச்சக்கரத்தினொளி நேராகக் கண் கொண்டு பார்க்கமுடியாதபடி அளவுபடாத மிக்க பேரொளியைக் கொண்டுள்ளதனால் பளபளத்துக் கண்களை இருளப் பண்ணு மெனச் சமாதானங் கூறுவர் பெரியோர்; மற்றுஞ் சில வகையான ஸமாதானங்களும் கூறுவாருளர். .... (கசு)

ஆல நிழற்கீ ழறநெறியை * நால்வர்க்கு
மேலையுகத் துரைத்தான் மெய்த்தவத்தோன் *—ஞால
மளந்தானை யாழிக் கிடந்தானை * ஆல்மேல்
வளர்ந்தானைத் தான்வணங்கு மாறு. (கஎ)

மெய் தவத்தோன் — மெய்யான தவநெறியையுடையவனான ருத்ரன்,
ஞாலம் அளந்தானை — உலகளந்தவனும்
ஆழி கிடந்தானை — க்ஷீராப்திசாயியும்
ஆல் மேல் வளர்ந்தானை — ஆலிலை மேல் வளர்ந்தவனுமான பெருமானை
தான் வணங்கும் ஆறு — தான் வழிபடும் மார்க்கமாகிய
அறம் நெறியை — நல்வழியை
மேலை யுகத்து — முன்யுகத்திலே
ஆல நிழல் கீழ் — ஓராலமரத்தின் நிழலிலே
நால்வர்க்கு — நான்கு மஹர்ஷிகளுக்கு
உரைத்தான் — உபதேசித்தான்.

* * *—எம்பெருமானுடைய பரத்துவம் இன்று நான் சொல்லவேணுமோ? ஸர்வஜ்ஞனான சிவபிரான் தானே ஸ்வசிஷ்யர்களுக்கு உபதேசித்த விஷயமன்றோ விது என்கிறார். சிவன் ஒரு காலத்திலே அகஸ்தியர் புலஸ்தியர் தக்ஷர் மார்க்கண்டேயர் என்கிற நான்கு முனிவர்களைச் சிஷ்யர்களாக அமைத்துக்கொண்டு ஒரு ஆலமரத்தின் அடியிலே ஸ்ரீமந்நாராயண தத்வோபதேசம் செய்தானென்று நூல்கள் கூறும். "ஆலமர நீழல் அறம்நால்வர்க் கன்றுரைத்த ஆலமமர் கண்டத்தரன்" என்ற பொய்கையாழ்வார் பாசுரமுங் காண்க.

தாமஸப்ரக்ருதியாய் அஹங்காரிகளில் தலைவனான ருத்ரன் எம்பெருமானுடைய உண்மைநிலையைத் தான் எங்ஙனே அறிந்தான்? அறிந்தாலும் பிறர்க்கு அதை உபதேசிக்கும்படியான

ஒற்றுதப பரிபாகத்தை எங்ஙனே பெற்றான்? என்று கேள்வி கேட்பார்க்கு ஸமாதாநமாகும்படி "மெய்த்தவத்தோன்" என்ற பெயரால் ருத்ரனைக் குறிப்பிடுகின்றார். எம்பெருமானைப் பற்றின தத்துவவுணர்ச்சி தனக்கு ஸித்திக்கவேணுமென்று மெய்யே தவம் புரிந்து அத்தவப்பயனாக பகவத் தத்வஜ்ஞாநம் பெற்றவன் என்றபடி. அவன் நால்வர்க்கு உரைத்த அர்த்தம் யாதெனில், [தான் வணங்குமாறு.] 'நானும் தலைசாய்க்கப் பெற்ற திருவடித் தாமரைகளையுடையவன் காண்மின் ஸ்ரீமந்நாராயணன்; அவன் உலகங்களையெல்லாம் தன் திருவடிக்கீழ் அகப்படுத்திக் கொண்டவன்; திருப்பாற்கடலிலே உறங்குவான்போல் யோகுசெய்து கொண்டிருந்து ஆர்த்தரக்ஷணம் செய்தருள்பவன்; பிரளய வெள்ளத்திலே நானு முட்பட ஸகல பதார்த்தங்களும் அழிந்துபோவதா யிருக்கையில் எல்லாவற்றையும் வாரிவிழுங்கி ஆலந்தளிரிலே திருக்கண்வளர்ந்த அற்புத சக்திவாய்ந்தவன்' என்று உபதேசிப்பனும் என்பது பின்னடிகளில் தேறுங்கருத்து. ... . (கஎ)

மாறாய தானவனை வள்ளுகிரால் * மார்விரண்டு
கூறாகக் கீறிய கோளரியை *—வேறாக
ஏத்தி யிருப்பாரை வெல்லுமே * மற்றவரைச்
சாத்தி யிருப்பார் தவம். (கஅ)

மாறு ஆய	எதிரிட்டு நின்ற
தானவனை	ஹிரண்யாஸுரனுடைய
மார்வு	மார்வை
வள் உகிரால்	கூர்மையான நகங்களினால்
இரண்டு கூறு ஆக கீறிய	இருபிளவாகப் பிளந்த
கோள் அரியை	பெருமிடுக்கனான நரசிங்க மூர்த்தியை

வேறு ஆக	விலக்ஷணமாக
ஏத்தி இருப்பாரை	துதித்து பகவத் விஷயத்தில் ஆழ்ந்திருக்குமவர்களை,
மற்று அவரை சாத்தி இருப்பார் தவம் வெல்லுமே	அந்த ஸ்ரீவைஷ்ணவர்களை ஆச்ரயித்திருக்கும் சரமாதிகாரிகளின் நிஷ்டை வென்று விடும்.

* * *—எம்பெருமானிடத்தில் நிஷ்டை யுடையராயிருப்பதிற்காட்டிலும் பாகவதர்கள் பக்கலில் நிஷ்டை யுடையரா யிருப்

பதே சிறந்தது என்று ஸகலசாஸ்த்ர ஸாரப்பொருள் ஒன்றுண்டு; அதனை வெளியிடும் பாசுரம் இது. கருமங்களுக்கிணங்க ஸம்ஸாரியாக்கவும் அருளுக்கிணங்க ஸம்ஸார நிவ்ருத்தியைப் பண்ணித் திருவடிகளிலே சேர்த்துக் கொள்ளவும் வல்ல ஸ்வதந்த்ரனுன ஈச்வரனைப் பற்றுகை ஸம்ஸாரபந்தத்திற்கும் மோக்ஷப்ராப்திக்கும் பொதுவாயிருக்கும். அங்ஙனன்றியே பாகவதரைப் பற்றுகை ஸம்ஸாரபந்தத்திற்கு ஒருகாலும் ஹேதுவாகாதே மோக்ஷப்ராப்திக்கே உறுப்பா யிருக்குமென்பது "സിദ്ധിര്ഭവതി വാ നേതി സംശയോഽച്യുതസേവിനാം। ന സംശയോഽസ്തി തദ്ഭക്തപരിചര്യാരതാത്മനാം" [எம்பெருமானைப் பற்றினவர்களுக்குப் பேற்றில் ஸந்தேஹமுண்டு; பாகவதர்களைப் பற்றினவர்கள் ஸந்தேஹப் படாமல் மார்வில் கைவைத்து உறங்கலாம்] இத்யாதி ப்ரமாண ஸித்தம். சத்ருக்நாழ்வான், ஸ்ரீமதுரகவிகள், வடுகநம்பி போல்வார் இவ்வர்த்தத்திற்கு உதாஹரண பூதர்கள்.

"மாறுயதானவனை" என்று தொடங்கி "ஏத்தியிருப்பாரை" என்கிறவரையில் பகவத் பக்தர்களைச் சொன்னபடி. தனக்கு உயிர்நிலையான ப்ரஹ்லாதாழ்வானுக்குப் பகைவனுன இரணியனைத் தன் பகைவனுகப் பாவித்து அவனது மார்பைக் கூர்மையான நகங்களாலே இருபிளவாகப் பிளந்த நரசிங்கமூர்த்தியை "அந்தியம்போதி லரியுருவாகி யரியையழித்தவனைப் பந்தனை தீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதும்" என்றுகொண்டு வாழ்த்தியிருக்கும் பகவத் பக்தர்களை,—மற்றவரைச் சாத்தி யிருப்பார் தவம் வெல்லும்=பகவத் பக்தர்களின் நிஷ்டையை பாகவத பக்தர்களின் நிஷ்டை தோற்கடித்துவிடும். எனவே, பகவத்பக்தியிற் காட்டிலும் பாகவத பக்தியே சிறந்தது என்றதாயிற்று. இங்கு விரித்துரைக்க வேண்டுமவற்றை யெல்லாம் ஸ்ரீவசநபூஷண ஸாரத்தில் சரமப்ரகரணத்திற் பரக்கச் சொன்னோம்; அங்கே கண்டு கொள்க.

இப்பாட்டின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான அவதாரிகையில் "பகவானையே பஜிக்குமதிலும் ததீயரைப் புருஷகாரமாகக்கொண்டு பற்றுகை சீரியதென்கிறார்" என்ற (அச்சுப்பிரதிகளிற்காணும்) வாக்கியம் பிழையுடையது; "புருஷகாரமாகக்

கொண்டு" என்கிற வாக்கியம் ஏட்டுப்பிரதிகளில் காண்பரிது; சேரவும் மாட்டாது. "பகவானையே பஜிக்குமதிலும் ததீயரைப் பற்றுகை சீரியதென்கிறார்" என்னுமளவே உள்ளது. 'ததீயரைப் புருஷகாரமாகப் பற்றுதல் சிறந்தது' என்கிற அர்த்தமன்று இப் பாட்டுக்கு விஷயம்; 'ததீயரை உத்தேச்யராகப் பற்றுதல் சிறந் தது' என்னுமர்த்தமே இப்பாட்டுக்குச் சீவன். ... (கஅ)

தவம்செய்து நான்முகனால் பெற்ற வரத்தை *
அவம்செய்த வாழியா யன்றே *—உவந்தெம்மைக்
காப்பாய்நீ காப்பதனை யாவாய்நீ * வைகுந்த
மீப்பாயு மெவ்வுயிர்க்கும் நீ. (க௯)

தவம் செய்து	தபஸ்ஸை அநுஷ்டித்து	உவந்து	திருவுள்ளமுகந்து
நான்முகனால்	பிரமனிடத்து	காப்பாய் நீ அன்றே	காத்தருள்பவன் நீயேயன்றோ;
பெற்ற	(ஹிரண்யன் முதலானவர்கள்) பெற்றுக் கொண்ட	காப்பதனை ஆவாய் நீ அன்றே	காக்க வேணுமென்கிற ஸங்கல்பமுடையவனும் நீயன்றோ;
வரத்தை	வரங்களை	எவ் உயிர்க்கும்	(உன்னை ஆச்ரயித்த) ஸகலாத்மாக்களுக்கும்
அவம் செய்த	பழுதாக்கின	வைகுந்தம்	பரமபதத்தை
ஆழியாய்	திருவாழிக் கையனான பெருமானே!	ஈப்பாயும்	அளிப்பவனும்
எம்மை	அடியோங்களை	நீ அன்றே	நீயன்றோ.

* * *—இரணியன் முதலிய ஆஸுரப்ரக்ருதிகள் பிரமன் முதலிய தேவர்களைக் குறித்து ஸ்வல்பம் ஸ்தோத்ரம் பண்ணிவிட்டால் தலைகால் தெரியாமல் உவந்து எல்லையில்லாதபடி வரங்களை அளித்துவிட்டுப் பிறகு தங்களுக்கே நேரும் அநர்த்தங்களைப் பரிஹரித்துக் கொள்ளமாட்டாமல் கண்ணீர் விழவிட்டுக் கையைப் பிசைந்துகொண்டு நிற்பர்கள் அந்த ப்ரஹ்மாதி தேவர்கள். அன்னவர்களது ஆபத்தை அகற்றியருள்வான் எம்பெருமான்—என்பதை முன்னடிகளில் அருளிச்செய்து, இப்படிப்பட்ட நீயே

6

எனக்கு எல்லாவபேக்ஷிதங்களையும் தலைக்கட்டித் தந்தருளவேணு மென்கிறார் பின்னடிகளில்.

"தவஞ்செய்து நான்முகனால் பெற்றவரத்தை" என்றவிடத்து 'இன்னார் பெற்றவரம்' என்பது சொல்லப் படவில்லையாயினும், இரணியன் முதலானோர் பெற்றவரம் எனக்கொள்க. அவர்கள் பெற்றவரத்தை அவம் செய்கையாவது—நல்ல உபாயங்களினால் அவ்வஸுரர்களைக் களைந்தொழித்தல். வரங்கொடுத்த தாங்களே குடியிருப்பை யிழந்து வருந்தினவளவிலே வரம்பெற்றவர்களையுங் கொன்று வரமளித்தவர்களையும் காத்தருள்பவனன்றோ ஸ்ரீமந்நாராயணன். இதற்கு ஸாமக்ரி திருவாழியாழ்வானென்க. (கக)

நீயே யுலகெல்லாம் நின்னருளே நிற்பனவும் *
நீயே தவத்தேவ தேவனும் *—நீயே
எரிசுடரும் மால்வரையு மெண்டிசையும் * அண்டத்
திரிசுடரு மாய விவை. (உ௦)

உலகு எல்லாம் நீயே	உலகங்கட்கெல்லாம் நிர்வாஹகன் நீயே ;	எரி சுடரும்	ஜ்வலிக்கின்ற அக்நியும்
நிற்பனவும்	உலகங்கள் ஸத்தைபெற்று நிற்பதும்	மால் வரையும்	பெரியகுலபர்வதங்களும்
நின் அருளே	உனது கிருபையினாலேயாம் ;	எண் திசையும்	எட்டுத்திசைகளிலுமுள்ள ஸகல பதார்த்தங்களும்
தவம் தேவர் தேவனும் நீயே	தவத்தினால் தேவர்களான பிரமன் முதலியோர்க்குத் தலைவனும்நீயே ;	அண்டத்து	ஆகாசத்திலுள்ள
		இரு சுடரும்	சந்த்ர ஸூர்யர்களும்
		ஆய இவை	ஆகிய இவையெல்லாம்
		நீயே	நீயேகாண்.

* * *—ஸகலமும் எம்பெருமானாகவே யிருக்கும்படியை யருளிச் செய்கிறாரிதில். 'உலகெல்லாம் நீயே' என்றது—உலகமெல்லாம் உன்னுடைய ஆளுகையில் அடங்கியுள்ளது என்றபடி. நிற்பனவும் நின்னருளே—அவ்வப்பொருள்கள் அழியாதே ஸத்தை பெற்றிருப்பதும் நித்யமாயிருப்பதும் உன்னருளாலே. தவத் தேவ தேவனும் நீயே—எவ்வளவோ தவங்கள் செய்து ப்ரஜாபதி யென்

றும் பசுபதியென்றும் பேர்பெற்றிருக்கும் தேவர்கட்கும் தேவன் நீ; * யாம் கடவுளென்றிருக்கு மெவ்வுலகிற் கடவுளர்க்கும் ஆங் கடவுள் நீ என்றவாறு. ... ... (௨௦)

இவையா பிலவாய் திறந் தெரிகான்ற *
இவையா வெரிவட்டக் கண்கள் × — இவையா
வெரிபொங்கிக் காட்டு மிமையோர் பெருமான் *
அரிபொங்கிக் காட்டு மழகு. (௨௧)

திறந்து	விரிந்து
எரி கான்ற	நெருப்பை உமிழ்ந்த
பிலம் வாய்	பாழி போன்ற பெரியவாய்
இவையா	இதுவோ!;
எரி வட்டம்	கொள்ளிவட்டம் போலே உருண்டு சிவந்து ஜ்வலிக்கிற
கண்கள்	திருக்கண்கள்
இவையா	இவையோ!;
எரி	அக்நிபோலே

பொங்கி	கிளர்ந்து
காட்டும்	தோன்றின திருமேனியை யுடையனாய்
இமையோர் பெருமான்	நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனான ஸர்வேச்வரன்
அரி	நரசிங்கமூர்த்தியாய்
பொங்கி	கிளர்ந்து
காட்டும்	காட்டின
அழகு	அழகு
இவையா	என்ன விலக்ஷணம்!.

* * * — நரஸிம்ஹாவதாரம் என்றைக்கோ நடந்ததாயினும் பாவநாப்ரகர்ஷத்தாலே அது ப்ரத்யக்ஷம்போல் தோற்றுமே ஆழ்வார்க்கு; அப்படியே தோற்ற, ஆச்ரிதர்களுக்கு விரோதம் செய்பவர்மேல் எம்பெருமானுக்கு உண்டாகும் சீற்றம் என்ன அற்புதமானது! என்று அநுஸந்தித்து, 'எம்பெருமானுடைய தெளிவைக் காட்டிலும் சீற்றமே பக்தர்கட்குச் சரணம்' என்னுமர்த்தம் விளங்கும்படியாகப் பேசுகிற பாசுரம் இது.

திறந்து எரிகான்ற பிலவாய் இவையா! — தூணில் நின்றும் தோன்றினவாறே இரணியன் மேலுண்டான அளவுகடந்த சீற்றத்தினால் திருவாயானது விரிந்து அழலை உமிழ்ந்ததே, அதனைப்பேசுகிறார்; நெருப்பைக் கக்கின திருவாய் இதுதானோ என்கிறார். 'கான்ற' என்ற பெயரெச்சத்தில், கால் — வினைப்பகுதி. காலுதல் — வீசுதல்.

எரிவட்டக்கண்கள் இவையா—1. "தூயாய் சுடர் மாமதி போல் உயிர்க்கெல்லாம், தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்ணா!" என்னும்படி திருக்கண்கள் குளிர்ந்திருப்பது அன்பர்களைக்காணும் போது; அன்பர்க்குத் துன்பம் செய்யுமவர்களைக் காணும்போது கொள்ளிவட்டம்போலே உருண்டு சிவந்து ஜ்வலிக்குமே; அப்படி ஜ்வலித்த திருக்கண்களோ இவை!; இத்திருக்கண்களில் இன்றைக்கும் சீற்றம் மாறவில்லையே யென்கிறார்போலும்.

ஆக முன்னடிகளால், திருவாயும் திருக்கண்களுமாகிற அவயவங்களுக்கு உண்டான விக்ருதியைப் பேசினார். இனி பின்னடிகளால், அவயவியான நரஸிம்ஹமூர்த்தியின் கிளர்ச்சியைப் பேசுகிறார். எரிபோங்கிக் காட்டு மிமையோர்பெருமான்—'எரிபொங்கிக்காட்டும்' என்பதைப் பெருமானுக்கு விசேஷணமாக்கிப் பதவுரை வரையப்பட்டது: அன்றியே, இமையோர்க்கு விசேஷணமாக்கியும் உரைக்கலாம். ஹோமகாலத்திலே வைதிகர் கொடுத்த ஹவிஸ்ஸை அக்நியானது ஸ்வீகரித்துக்கொண்டு பெரிய கிளர்த்தியோடே போய் ஸமர்ப்பிக்கும்படி யிருக்கிற இந்திரன் முதலிய தேவர்களுக்கு நிர்வாஹகன் என்று பொருளாகும். (எரி—அக்நி தேவதையானது, போங்கி—கிளர்ந்து, காட்டும்—ஹவிஸ்ஸைக் கொண்டு கொடுக்கப் பெறுகின்ற, இமையோர் என்கை.)

நரஸிம்ஹமூர்த்தி இவ்வளவு பயங்கரமான வடிவு பெற்றிருந்தாலும் இது சத்துருக்களுக்குப் பயங்கரமேயன்றி அன்பர்கட்குப் பரம போக்யமேயாதலால் "அரிபொங்கிக் காட்டும் அழகு" என்று அழகிலே முடிக்கப்பட்டதென்க. ... . (உக)

அழகியான் தானே யரியுருவன் தானே *
பழகியான் தாளே பணிமின் *—குழவியாய்த்
தானே ழுலகுக்கும் தன்மைக்கும் தன்மையனே *
மீனா யுயிரளிக்கும் வித்து. (உஉ)

தான் ஏழ் உலகுக்கும் வித்து	தானே ஏழுலகங்களுக்கும் உபாதாந காரணமாய்	தன்மைக்கும்	(ரூபம் ரஸம் கந்தம் முதலிய) குணங்களுக்கும்

1. பெரியதிருமொழி 7—1—9.

தன்மையன்	ஆச்ரயபூதனாய்
குழவி ஆய்	(ப்ரளயகாலத்தில்) சிறுகுழந்தையாய்க் கொண்டும்
மீன் ஆய்	(பின்பொருகால்) மத்ஸ்யரூபியாய்க் கொண்டும்
உயிர் அளிக்கும்	ஆத்மாக்களை ரக்ஷிக்கின்றவனை
தானே	எம்பெருமான் தானே
அரி உருவன்	நரஸிம்ஹவுருக் கொண்டவன் ;
தானே அழகியான்	அழகுக்கு எல்லை நிலமாயிருப்பவனும் அவன்றானே ;
பழகியான்	புராணபுருஷனாகிய அப்பெருமானுடைய
தானே	திருவடிகளையே
பணிமின்	ஆச்ரயியுங்கோள்.

* * *—தானே காரணமாய்க்கொண்டு அடியிலே உலகங்களைப் படைத்து, படைக்கப்பட்ட உலகங்களைப் பாதுகாக்க அவாந்தர ப்ரளயத்தில் ஆலிலைத் துயின்ற அருங்குழந்தையாயும் மந்வந்தர ப்ரளயத்தில் மத்ஸ்யரூபியாயும் தோன்றி ரக்ஷித்து, ப்ரஹ்லாதனை ரக்ஷிக்கைக்காகத் தூணிலே நரஸிம்ஹமாய்த் தோன்றி இரணியனைக் கிழித்துப்போட்டு, இப்படி எல்லா அவஸ்தைகளிலும் ஸகலாத்மாக்களையும் அநாதிகாலமாக ரக்ஷித்துக்கொண்டு வருகிற ஸர்வேச்வரனுடைய திருவடிகளை நீங்கள் ஆச்ரயியுங்கள் என்று பரோபதேசம் பண்ணுகிறார்.

கீழ்ப்பாட்டில் நரஸிம்ஹாவதாரத்தை அநுபவித்தாராதலால் அத்திருக்கோலத்தின் அழகையே மீண்டும் வாய்வெருவுகின்றார் ‘அழகியான் தானே அரியுருவன் தானே’ என்று.

நம்முடைய புத்திக்கு எட்டாத அநாதிகாலந் தொடங்கிப் பலவகைகளால் ரக்ஷணம் செய்துகொண்டு வருதல் பற்றி எம்பெருமானுக்குப் ‘பழகியான்’ என்று திருநாமமிட்டனர்.

தன்மைக்கும் தன்மையன்=ஒரு த்ரவ்யத்தைப் பற்றியிருக்கும் குணத்திற்குத் ‘தன்மை’ என்று பெயர்; அக்குணத்திற்கு ஆச்ரயமான குணிக்குத் தன்மையன் என்று பெயர். புஷ்பம் என்கிற த்ரவ்யத்திற்கு மணம் குணமாயிருக்கின்றது; அந்த மணத்திற்குப் புஷ்பம் ஆச்ரயமாகையாலே புஷ்பம் குணியெனப்படும். இப்படியே எங்குங் கண்டுகொள்க. இங்கு “தன்மைக்கும் தன்மையன்” என்றது—நிலம் நீர் தீ கால் முதலிய பூதங்களின் குணங்

களாகிய மணம் சுவை முதலியவற்றுக்கெல்லாம் தானே ஆச்ரயமாயிருப்பவனென்கை. 1. "நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்" என்கிறபடியே பஞ்சபூதாதிகளும் தானேயாயிருப்பவன் என்றவாறு. இவ்விடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில் "தன் பக்கலிலே வைக்கும்" என்று ஒரு வாக்கியம் காண்கிறது: அதனால் "தன் வைக்குந்தன்மையனே" என்றும் பாடமிருந்ததாகத் தெரிகின்றது. எழுலகுக்கும் தான் வித்தாய், (அவ்வுலகங்களை) தன்—தன்னுள்ளே, வைக்குந்தன்மையனாய்—(பிரளயத்திலழியாதபடி) அடக்கிவைக்கும் குணமுடையவனாய் என்றபடி. .... (உஉ)

வித்துமிட வேண்டுங் கொலோ விடையடர்த்த *
பத்தி யுழவன் பழம்புனத்து *—மொய்த்தெழுந்த
கார்மேக மன்ன கருமால் திருமேனி *
நீர்வானம் காட்டும் நிகழ்ந்து. (உ௩)

விடை அடர்த்த — (நப்பின்னைப் பிராட்டிக்காக) ரிஷபங்களை வலியடக்கினவனும்

பத்தி உழவன் — (தன்விஷயத்தில் சேதநர்கட்கு) பக்தியுண்டாவதற்குத் தானே முயற்சி செய்பவனுமான எம்பெருமானுடைய

பழம் புனத்து — (ஸம்ஸாரமென்கிற) அநாதியான க்ஷேத்ரத்திலே

வித்தும் இட வேண்டும் கொலோ — (ஸ்வப்ரயத்நமாகிற) விதையை நாம் விதைக்க வேண்டுமோ? [வேண்டா;

(நம் முயற்சியின்றியே தானே பகவத்விஷயத்தில் ருசி விளைந்தால் திருநாட்டுக்குச் செல்லுமளவும் நாம் எப்படி தரித்திருப்பதென்றால்;)

மொய்த்து எழுந்த — திரண்டு கிளர்ந்த

கார் மேகம் அன்ன — காளமேகம்போன்ற

கரு மால் — கரிய திருமாலினது

திரு மேனி — திருமேனியை

நீர் வானம் — நீர்கொண்டெழுந்த மேகமானது

நிகழ்ந்து — எதிரேநின்று

காட்டும் — காண்பிக்கும்: [போலிகண்டு நாம் தரித்திருக்கலாமென்றபடி.]

1. திருவாய்மொழி ௬—9—1.

* * *—நாம் அறிந்த நிலைமையிலும் அறியாத நிலைமையிலும் எம்பெருமான் தானே நம்முடைய உஜ்ஜீவநத்திற்கு க்ருஷிபண்ணுமவனாயிருக்க, நாமும் ஸாதநாநுஷ்டாநம் பண்ணவேணுமோ, வேண்டா என்கிறார்.

ஸ்ரீவைகுண்டத்திலே எம்பெருமான் நித்யர்களோடும் முக்தர்களோடுங் கூடிப் பரிபூர்ணாநுபவம் பெறாநிற்கச் செய்தேயும் அதனால் அப்பெருமான் சிறிதும் மகிழாது, பல பிள்ளைகளைப் பெற்ற ஒரு தகப்பனார், தனது ஒருமகன் மாத்திரம் தேசாந்தரத்திலிருக்க மற்ற எல்லாப் புத்திரர்களோடுங் கூடி வாழாநின்றாலும் அதனால் மகிழ்ச்சியடையாமல் தேசாந்தரத்திலுள்ள புத்திரனது பிரிவையே நினைத்துப் பரிதபிக்குமாபோலே எம்பெருமானும் ஸம்ஸாரிகளான அஸ்மதாதிகளின் பிரிவையே நினைத்துப் பரிதாபமுற்று நம்மோடே கலந்து பரிமாறுவதற்காகக் கரணகளேபரங்களை நமக்குத் தந்தருளி அவற்றைக்கொண்டு நாம் காரியஞ் செய்யும்படியான சக்தி விசேஷங்களையும் நமக்குக் கொடுத்து, மிகவும் அஹங்காரிகளான நம்மெதிரில் தான் ப்ரத்யக்ஷமாகவந்து நின்றால் நாம் பொறாமைகொண்டு ஆணையிட்டாகிலும் தன்னைத் தூரத்திவிடுவோமென்றெண்ணி ஒருவர் கண்ணுக்குந் தோற்றாதபடி, உறங்குகிற குழந்தையைத் தாயானவள் முதுகிலே அணைத்துக்கொண்டு கிடக்குமாபோலே எம்பெருமானுந் தானறிந்த ஸம்பந்தமே காரணமாக நம்மை விடமாட்டாமல் அந்தர்யாமியாயிருந்து தொடர்ந்துகொண்டு நம்மை யொருகாலும் கைவிடாமல் ஸத்தையை நோக்கிக்கொண்டு நமக்குத் துணையாய்ப் போருமளவில், நாம் கெட்ட காரியங்களிலே கை வைத்தோமாகில் நம்மைத் திருப்ப மாட்டாமல் அநுமதிபண்ணி உதாஸீநரைப்போலேயிருந்து திருப்புகைக்கு இடம் பார்த்துக்கொண்டேயிருந்து, நாம் செய்கிற தீமைகளிலே ஏதேனுமொரு தீமையாவது § நன்மையென்று பேரிடக்கூடியதாயிருக்குமோவென்று பார்த்துவந்து,

§ விஷயப்ரவணனாய் வேசிகளைப் பின்தொடர்ந்து அடிக்கடி கோவில்களிலே நுழைந்து புறப்படுகை, வயலில் பட்டிமேய்ந்த பசுவை அடிப்பதாகத் துரத்திக்கொண்டு போம்போது அது ஒரு கோவிலை ப்ரதக்ஷிணம் பண்ணிக்கொண்டு ஓடுகிறவளவிலே அதைவிடமாட்டாத ஆக்ரஹத்தாலே தானும் அக்கோவிலை வலஞ்செய்கை; (சிசுபாலாதிகளைப்போலே) நிந்தை செய்வதற்காகத் திருநாமங்களைச் சொல்லுகை முதலியன.

அப்படிப்பட்ட நிலைகளைக் கண்டுபிடித்து 'என் ஊரைச் சொன்னாய், என் பேரைச் சொன்னாய், என்னடியாரை ரக்ஷித்தாய், அவர்கள் விடாயைத் தீர்த்தாய், அவர்களுக்கு ஒதுங்க நிழலைக் கொடுத்தாய்' என்றிப்படி சில ஸுக்ருதங்களை ஏறிட்டு மடிமாங்காயிட்டு யாத்ருச்சிகம், ப்ராஸங்கிகம், ஆநுஷங்கிகம் என்கிற ஸுக்ருத விசேஷங்களைத் தானே கல்பித்தும் அப்படி கல்பித்தவற்றை ஒன்றை அநேகமாக்கியும் நடத்திக்கொண்டு போருவன்—என்பது சாஸ்த்ரமுகத்தால் நாம் கண்டறிந்த விஷயம்.

யாத்ருச்சிகம், ப்ராஸங்கிகம், ஆநுஷங்கிகம் எனப்படுகிற ஸுக்ருதங்கள் எவையென்னில் ;—அவ்வூர் இவ்வூர் என்று நாம் பல ஊர்களையும் வம்புக்காகச் சொல்லுமளவிலே 'குருவிமலை, பரங்கிமலை, திருவேங்கடமலை' என்று வாயில் வந்துவிட்டால் இவ்வளவே பற்றாசாக 'என் ஊரைச் சொன்னான்' என்று எம்பெருமான் எழுதிக்கொள்வன் ; அவன் இவன் என்று பல பேர்களையும் சொல்லிக்கொண்டு வருமடைவிலே சில பகவந்நாமங்களும் கலந்து வந்துவிட்டால் 'என் பேரைச் சொன்னான்' என்று கணக்கிடுவன்; சில பாகவதர்கள் காட்டிலே வழிபோகா நிற்கையில் அவர்களை ஹிம்ஸித்துக் கொள்ளையடிக்கவேணுமென்று சில கள்ளர் முயன்றிருக்குமளவிலே, ஏதோ தன் காரியமாக வழிபோகிற ஒரு சேவகன் அவர்கள்பின்னே தென்பட, அவனை அந்த பாகவதர்களின் ரக்ஷணத்திற்காக வந்தவனாக நினைத்து அக்கள்ளர் அஞ்சி அப்பால் போய்விட அதுவே பற்றாசாக அந்த சேவகனை 'என்னடியாரை நோக்கினவன் இவன்' என்று எழுதிக்கொள்வன் ; ஒருவன் வேனிற் காலத்திலே தன் வயல் தீய்ந்து போகாநிற்கையில் நீருள்ள விடத்தில் நின்றும் வயலிலே பாய நெடுந்தூரத்திலே ஏற்றமிட்டு இறையாநிற்க, பாலை நிலத்தில் நடந்து விடாய்த்து இளைத்துவருகிற சில பாகவதர்கள் அவனறியாமல் அந்த நீரிலே இளைப்பாறிப் போனால் அதுகாரணமாக 'என்னடியாருடைய விடாயைத் தீர்த்தானிவன்' என்று கணக்கிடுவன். ஒருவன் தனக்குச் சூது சதுரங்க மாடுவதற்கும் காற்று வேண்டினபோது வந்து உலாவுகைக்கும் புறந்திண்ணை கட்டிவைக்க, மழையிலோ வெய்யிலிலோ வருந்தின சில பாகவதர்கள் அத்திண்ணையிலேவந்து ஒதுங்கியிருந்துபோக,

அதுகொண்டு 'என்னடியார்க்கு ஒதுங்க நிழலைக் கொடுத்தான்' என்று கணக்கிடுவன்; இப்படியாக நாமறியாமல் எம்பெருமானே ஏறிடும் ஸுக்ருதங்களே யாத்ருச்சிகம், ப்ராஸங்கிகம், ஆநுஷங்கிகம் எனப்படும்.

இப்படி அஜ்ஞாத ஸுக்ருதங்களையாகிலும் ஹேதுவாகக் கொண்டு எம்பெருமான் கடாக்ஷிப்பனாகில் அந்த கடாக்ஷம் ஸஹேதுகமாகாதோவென்னில், ஆகாது; இந்த யாத்ருச்சிகம் முதலிய ஸுக்ருதங்களுமுட்பட நமக்குண்டாம்படி ஆதியிலே கரணகளேபரங்களைக் கொடுத்து ஸ்ருஷ்டித்தவன் எம்பெருமானாகையாலே, கடாக்ஷஹேதுவாகச் சொன்ன அஜ்ஞாதஸுக்ருதங்களும் அவனுடைய க்ருஷிபலமேயாம்.

[ஸ்ருஷ்டிப்பது சேதநருடைய கருமங்களுக்குத் தகுதியாகவன்றோவென்னில், ஸ்ருஷ்டிப்பது கருமத்தைக் கடாக்ஷித்தேயாகிலும் அவரவர்களுடைய கருமபரிபாகத்துக்குத் தகுந்தபடி வெவ்வேறு காலங்களிலே ஸ்ருஷ்டிக்கவேண்டியிருக்க, ஏககாலத்திலே ஸ்ருஷ்டித்தது அநுக்ரஹ காரியமென்பர்.]

அசித்தோடு வாசியற்றுக் கிடக்கிற நிலைமையிலே உஜ்ஜீவநத்துக்குக் கருவியான கரணகளேபரங்களைப் பேரருளாலே அவன் தந்தபடியை அநுஸந்தித்தால், நம் உஜ்ஜீவனத்தில் அவன் செய்தபடி பார்த்துக்கொண்டிருப்பது தவிர நாம் ஒரு முயற்சியும் பண்ணவேண்டாதபடியா யிருக்கும். புதிசாகத் தரிசுதிருத்தினதல்லாமல் பழையதாக உழுவது நடுவது விளைவதாய்க்கொண்டு போருகிற ஒரு க்ஷேத்ரத்திலே உழவனானவன் அதுக்கென்று ஒரு க்ருஷியும் பண்ணாதிருந்தாலும் உதிர்ந்ததானியமே முளைத்து விளைந்து தலைக்கட்டுமாபோலே, அஜ்ஞாத ஸுக்ருதங்கள் நம்மிடத்திலே தன்னடையே விளையும்படியாகவன்றோ பத்தியுழவனென்று சொல்லப்படுகிற ஈச்வரன் அநாதிஸம்ஸாரத்தை ஸ்ருஷ்டித்துத் திருத்தி நடத்திப் போருவது.

இப்படிப்பட்ட பத்தியுழவன் பழம்புனத்தில் நாமும் வித்து இடவேண்டுமோ?-நாமும் உபாயாநுஷ்டாநம் பண்ணவேணுமோ? எம்பெருமானுடைய ப்ரவ்ருத்திக்கு விரோதியான நம்முடைய ப்ர

வ்ருத்தியை நாம் நிறுத்திக்கொள்வதன்றோ நமக்கு நன்மை என்றவாறு.

விடையடர்த்த வரலாறு:—கும்பனென்னும் இடையர் தலைவனது மகளும், நீளாதேவியின் அம்சமாகப் பிறந்ததனால் நீளா என்ற பெயரால் வழங்கப்பட்டு வருபவளுமான நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக அவள் தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி யார்க்கும் அடங்காத அஸுராவேசம் பெற்ற ஏழெருதுகளையும் கண்ணபிரான் ஏழு திருவுருக்கொண்டு சென்று வலியடக்கி அப்பிராட்டியை மணஞ்செய்து கொண்டான் என்பதாம்.

ஆழ்வார் எம்பெருமானுக்குப் பத்தியுழவன் என்று திருநாமமிட்ட அழகை என்சொல்வோம்!. தன் விஷயத்தில் நமக்கு பக்தியுண்டாவதற்குத் தானே க்ருஷி பண்ணுகிறான் எம்பெருமான். அந்த க்ருஷியாவது ஸ்ருஷ்டியவதாராதிகள் என்க.

இனி முன்னடிகட்கும் பின்னடிகட்கும் ஸங்கதி [சேர்த்தி] யாதென்னில்,—பத்தியுழவன் பழம்புனத்தில் நாம் வித்து இடவேண்டாவாகில் அப்படியே ஆகுக; எம்பெருமானே க்ருஷி பண்ணட்டும்; அந்த க்ருஷி பலித்து நாம் பரமபதஞ்சென்று நித்யாநுபவம் பண்ணுவதென்பது விரைவில் நடைபெறக் கூடியதன்றே; சிறிது காலவிளம்பமாகுமே; அதுவரையில் நமக்குப் போதுபோக்கு யாதென்ன, 1. "பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற, காவி மலரென்றுங் காண்டோறும்—பாவியேன் மெல்லாவி மெய் மிகவே பூரிக்கும், அவ்வவையெல்லாம் பிரானுருவேயென்று" என்றும் 2. "மேகங்களோ வுரையீர், திருமால் திருமேனியொக்கும் யோகங்கள் உங்களுக்கெவ்வாறு பெற்றீர்?" என்றும், 3. "ஒக்குமம்மானுருவமென்று உள்ளங்குழைந்து நாளும், தொக்கமேகப் பல்குழாங்கள் காணுந்தோறும்" என்றும் சொல்லுகிறபடியே போலிகண்டு போதுபோக்க ஸாமக்ரி உண்டு என்கிறார்.

"ருசி பிறந்தபின்பு ப்ராப்தியளவும் நாம் தரிக்கைக்கு அவன் திருமேனிக்குப் போலியுண்டென்கை" என்ற வியாக்கியான ஸ்ரீஸூக்தியும் நோக்கத்தக்கது.

---

1. பெரிய திருவந்தாதி. 2. திருவிருத்தம். 3. திருவாய்மொழி 8—5.

இப்பாட்டின் முதலடியின் மூன்று சீர்களாகிய “வித்துமிட வேண்டுங்கொல்லோ” என்றவளவு திருக்குறளில் எடுத்தாளப்பட்டுள்ளது ; விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தில் “வித்துமிட வேண்டுங்கொல்லோ விருந்தோம்பி, மிச்சின் மிசைவான் புனம்” (5) என்றகுறள் காண்க. .... (௨௩)

நிகழ்ந்தாய் பால்பொன் பசுப்புக் கார்வண்ணம் நான்கும் *
இகழ்ந்தா யிருவரையும் வீய * —புகழ்ந்தாய்
சினப்போர்ச் சுவேதனைச் சேனாபதியாய் *
மனப்போர் முடிக்கும் வகை. (௨௪)

பால் பொன் பசுப்பு கார் நான்கு வண்ணமும்	வெண்மை சிவப்பு பசுமை கறுப்பு ஆகிற நான்கு வர்ணங்களையு முடையனாய்க் கொண்டு
நிகழ்ந்தாய்	(நான்கு யுகங்களிலும்) அவதரித்தாய் ;
இருவரையும்	மதுகைடபர்களாகிற இரண்டு அசுரர்கள்
வீய	தொலையும்படி
இகழ்ந்தாய்	வெறுத்தாய் ;
சேனாபதி ஆய்	அர்ஜுநனுடைய ஸேனைக்கு ரக்ஷகனாய்க் கொண்டு
மனம்	(த்ரௌபதியின் கூந்தலை முடிப்பிக்க வேணுமென்று) மநோரதங் கொண்டிருந்தபடியே
போர்	பாரதயுத்தம்
முடிக்கும் வகை	தலைக்கட்டும்படி
சினம் போர் சுவேதனை	சீறிக்கொண்டு யுத்தத்தில் இழியும் ஆண்புலியான அர்ஜுநனை
புகழ்ந்தாய்	கொண்டாடினாய்.

* * *—க்ருதம் முதலிய யுகங்களிலே சேதநர் தமது ஸத்வம் முதலிய குணங்கட்குத் தகுதியாக வெண்மை முதலிய வர்ணங்களை விரும்புகையாலே அவ்வக் காலங்களிலே அந்தந்த நிறங்களைப் பரிக்ரஹித்து முகங்காட்டுகிறபடியை முதலடியிற் பேசுகிறார். கிருதயுகத்திலுள்ளவர்கள் ஸத்வகுணம் நிறைந்தவர்களாய் சுத்தமான நிறத்தை உகக்குமவர்களாகையாலே அவர்கட்

காக எம்பெருமான் பால்போன்ற நிறத்தைக் கொள்வன்; த்ரேதா யுகத்திலே சிவந்த திருநிறத்தைக் கொள்வன்; த்வாபரயுகத்தில் பசுமை நிறத்தைக் கொள்வன்; கலியுகத்தில் எந்த நிறத்தைக் கொண்டாலும் ஈடுபடுவாரில்லாமையாலே இயற்கையான நீல நிறத்தைக் கொள்வன் என்க. இவ்வாழ்வார் திருச்சந்த விருத்தத்திலும் "பாலினீர்மை செம்பொனீர்மை பாசியின் பசும்புறம், போலுநீர்மை பொற்புடைத்தடத்துவண்டு விண்டுலாம், நீலநீர்மையென்றிவை நிறைந்த காலநான்குமாம்" என்றருளிச் செய்த பாசுரம் காண்க.

இருவரையும் வீய இகழ்ந்தாய்—மதுகைடபரென்னும் இரண்டு அஸுரர்களையும் ஒழித்தாய் என்கை. அன்றியே; 1. "கொல்லா மாக்கோல் கொலைசெய்து பாரதப்போர், எல்லாச்சேனையு மிருநிலத்து அவித்த வெந்தாய்" என்கிறபடியே கௌரவர் பாண்டவர் ஆகிற இருவகுப்பினுமுள்ள சேனைகளையும் தொலைத்தமையைச் சொல்லுகிறதாகவுங் கொள்வர். பாண்டவ பக்ஷத்திலும் ஸேனைகளைத் தொலைத்ததுண்டோவென்று கேட்பர் சிலர்; 1. "கொல்லாமாக்கோல்" என்ற பாசுரத்தின் வியாக்கியானத்திலே— "பாரதஸமரத்திலே துர்வர்க்கமடையத் திரண்டதிறே உபய ஸேனையிலும்; இங்கே நாலைந்துபேரும் அங்கே ஒன்றிரண்டு பேருமொழிய முடித்துப் போகட்டாயிற்று." என்றருளிச் செய்யப்பட்டுள்ளது காண்க. பஞ்ச பாண்டவர்களையும் அச்வத்தாம, க்ருபாசார்ய, க்ருதவர்மாக்களையும் தவிர்த்து மற்றெல்லாவற்றையும் தொலைத்து மண்ணின்பாரம் நீக்கினனென்க.

"உற்றாரையெல்லா முடன்கொன் றரசாளப் பெற்றாலும் வேண்டேன் பெருஞ்செல்வம்" என்று சொல்லிப் போரொழிந்த அர்ஜுநனுக்குக் கீதையை உபதேசித்து அவனைப் போர்புரிய உடன்படுத்தினனாதலால் புகழ்ந்தாய் சினப்போர்ச்சுவேதனை எனப்பட்டது. சுவேதன்—ச்வேதவாஹநன் என்றபடி. வெள்ளைக் குதிரைபூண்ட தேரை வாஹனமாகவுடையவன் என்கை. வெள்ளைப் புரவிக்குரக்கு வெல்கொடித் தேர்மிசை முன்பு நின்று" என்ற பெரியாழ்வார் திருமொழி காண்க. .... (உச)

1. திருவாய்மொழி 3—2—3.

வகையால் மதியாது மண்கொண்டாய் * மற்றும்
வகையால் வருவதொன் றுண்டே *—வகையால்
வயிரம் குழைத்துண்ணும் மாவலி தானென்னும்
வயிர வழக்கொழித்தாய் மற்று. (உரு)

மதியாது	உன் மேன்மையைச் சிறிதும் நினையாமல்	தான் என்னும்	தனக்குமேற்பட்ட பலிஷ்டர் ஆருமில்லையென்று அஹங்காரங் கொண்டிருப்பவனுமான
வகையால்	நல்ல உபாயங்களாலே	மாவலி	மஹாபலியினுடைய
மண் கொண்டாய்	(மாவலியிடத்தில் இரந்து) பூமியை ஸ்வாதீனப் படுத்திக் கொண்டாய்;	வயிரம் வழக்கு	சத்ருத்வமுறையை
மற்றும்	அதற்குமேலும்,	ஒழித்தாய்	போக்கினாய்;
வயிரம்	வயிரமாகிற ரத்னத்தை	வகையால்	இப்படிப்பட்ட உனது காரியங்களினால்
வகையால்	ஔஷதாதி உபாயங்களாலே	வருவது ஒன்று உண்டே	உனக்கு லபித்திப்பதொருபலன் உண்டோ? (எல்லாம் ஆச்ரிதர்க்காகச் செய்கிறாயித்தனை.)
குழைத்து	இளகச்செய்து		
உண்ணும்	உண்பவனும்		
	(அதனால்)		

* * *—எம்பெருமான் செய்தருளுங் காரியங்களெல்லாம் அடியார்களுடைய பிரயோஜனத்திற்காகவேயன்றி ஸ்வப்ரயோஜனத்திற்காக ஒரு காரியமும் செய்வதில்லை யென்பதை வெளியிடும் பாசுரம் இது.

மதியாது வகையால் மண்கொண்டாய்=‘உபயவிபூதிநாதனாயிருக்கிற நாம் யாசகனாகப் போகலாமோ’ என்று தன் மேன்மையைச் சிறிதும் பாராமல் ‘ஆச்ரிதனான இந்திரனுக்குக் காரியம் தலைக்கட்டுமளவே வேண்டியது’ என்று அதனையே பார்த்து யாசகனாய்ச் செல்லுகையாகிற உபாயத்தினால் பூமியையெல்லாம் ஸ்வாதீநப்படுத்திக் கொண்டாய்.

இரண்டாமடியை முடிவில் அந்வயித்துக் கொள்க.

[வகையால் வயிரங்குழைத்துண்ணும் இத்யாதி.] நவரத்னங்களுள் ஒன்றான வஜ்ரத்தை இளகுவித்து உண்பர்களாம் உடல் புஷ்டியடைவதற்காக: மாவலியும் அப்படியே உண்டு ஊன்மல்கி மோடு பருத்திருந்தானும்; அப்படிப்பட்ட அவனுடைய அஹங்கார ப்ரயுக்தமான வயிரவழக்கைப் போக்கினாய். ஈற்றடியிலுள்ள 'வயிரம்' என்ற சொல் 'வைரம்' என்ற வடசொல் விகாரம்.

மற்றும் வகையால் வருவதொன்றுண்டே ?–இவற்றால்உனக்கு வரும் ப்ரயோஜனம் ஏதேனுமுண்டோ ? ஒன்றுமில்லை; பார்த்தமாகச் செய்தாயித்தனை. .... (௨௫)

மற்றுத் தொழுவா ரொருவரையும் யானின்மை *
கற்றைச் சடையான் கரிக்கண்டாய் *—எற்றைக்கும்
கண்டுகொள் கண்டாய் கடல்வண்ணா * யானுன்னைக்
கண்டுகொள்கிற்கு மாறு. (௨௬)

கடல் வண்ணா	கடல்போன்ற திருநிறமுடைய பெருமானே !,	கரி கண்டாய்	ஸாக்ஷிகாண் ;
யான் தொழுவார் மற்று ஒருவரையும் இன்மை	அடியேனால் ஆச்ரயிக்கப்படும் தெய்வம் (நீதவிர) வேறு எதுவு மில்லையென்னும் விஷயத்தில்	யான்	இப்படி அநந்ய பக்தனான அடியேன்
		உன்னை	உன்னை
		எற்றைக்கும்	எந்நாளும்
கற்றை சடையான்	சேர்த்துக்கட்டின ஜடையையுடையனான ருத்ரன்	கண்டு கொள்கிற்கும் ஆறு	ஸேவித்துக் கொண்டேயிருக்க வல்லேனாம்படி
		கண்டுகொள்	கடாக்ஷித்தருள வேணும்.

* * *—ஆழ்வார், தம்முடைய அநந்யபக்தத்வமாகிற நிஷ்டையை விண்ணப்பஞ்செய்து 'அடியேனுக்கு இந்த நிலைமை நீடித்திருக்கும்படி கிருபைசெய்தருளவேணும்' என்கிறார். உலகில் மனிசரெல்லாரும் பெரும்பாலும் தேவதாந்தரங்களையே தொழுது அழிந்துபோகின்றனர்; அப்படி அடியேன் தேவதாந்தரபஜனம் பண்ணுமவனல்லேன்; எம்பெருமானே! உன்னைத்தவிர்த்து வேறு எந்த தெய்வத்தையும் நான் ஆச்ரயணீய தேவதையாகக் கொள்வ

தில்லை; இவ்விஷயத்திற்கு யார் ஸாக்ஷியென்னில்; கற்றைச்சடையான் கரி—ஜடாதரனான சிவபிரானே ஸாக்ஷியாவன்: இதன் கருத்து யாதெனில், 1. "பெண்ணுலாஞ் சடையினானும் பிரமனு முன்னைக்காண்பான், எண்ணிலா ஊழியூழி தவஞ்செய்தார்" என்கிறபடியே—ஈச்வரத்வப்ரமத்திற்கு விஷயபூதனான சிவபிரான் தானும் ஸாதநாநுஷ்டாந நிஷ்டனாயிருக்கும்படிக்கு அறிகுறியாகச் சடைபுனைந்துகொண்டு உன்னை உபாஸியாநிற்க, நான் உன்னையொழிய வேறொரு க்ஷுத்ரதேவதையைப் பணிவேனோ வென்கை.

இவ்வாழ்வார் திருமழிசையில் யோகநிலையில் நின்று திருமகள் கொழுநனை த்யானித்துக்கொண்டிருக்கையில், ஒருநாள் ஆகாச மார்க்கத்தில் எருதின்மீது ஏறிக்கொண்டு பார்வதீ பரமேச்வரர் செல்லுகையில், பார்வதியானவள் இவரது தவவொழுக்கத்தைக் கண்டு கொண்டாடித் தன் கணவனை நோக்கி 'இவன் ஆரோ?' என வினவ, 'இம்மஹாநுபாவன் நம்மைவிட்டு நாராயணனுக்கு அடிமைப்பட்டவன்' என்று ருத்ரன் சொன்னவளவிலே அம்பிகை, 'இப்பெரியவனுக்கு நாமும் தரிசனம் தந்து ஏதேனும் வரமளித்துப்போவோம்' என்றுகூற, அவளது விருப்பத்தின்படிசெய்ய ஸம்மதித்துச் சிவபிரான் இவரெதிரேவந்து தோன்றினன்; இவர் அச்சிவனைப்பார்த்தும் பாராதவர்போல உபேக்ஷித்து ஒரு கந்தைத்துணியைத் தைத்துக்கொண்டு கார்யாந்தர பரராய் விமுகராயிருக்க, அதுகண்ட சங்கரன் 'உனக்கு அருள்செய்ய வந்த நம்மை நீ அநாதரஞ்செய்தல் தகுதியோ?' என்ன, ஆழ்வார் 'உன்னால் ஆகவேண்டியது எனக்கு ஒன்றுமில்லை; ஆதலின் நான் உதாஸீநனாயிருந்தேன்' என்றார். பின்பும் பரமசிவன் 'நம் வரவு வீண்போவதன்று; உனக்கு அபீஷ்டமான வரம்வேண்டிப் பெற்றுப்போவாய்' என்று நிர்ப்பந்திக்க, அநந்தரம் ஆழ்வார் 'பரமபதம் அருளவல்லீராயின் அருள்வீர்' என வேண்டினார். அதற்கு அக்கடவுள் 'அது நம்மால் தரத்தக்கதன்று; அது தருதற்கு உரியதேவன் ஸ்ரீமந்நாராயணனே; ஆதலின் வேறுவரம் வேண்டுதி' என்ன, ஆழ்வார் புன்முறுவல் செய்து 'அம்முக்தியைப் பெறும்

1. திருமாலை. 44.

பொருட்டுப் பலகாலம் இவ்வுலகில் உயிர்த்திருந்து பெருந்தவம் புரிதற்கு உபயோகமாக நீண்ட ஆயுளையேனும் அடியேற்கு அளித் தருள்' என்று பிரார்த்தித்தார். அதுகேட்டுக் கைலாஸபதி 'அது கருமாநுஸாரமாக நடப்பதேயன்றி வளர்த்தத்தக்கதன்று; வேறு வேண்டியவைகளை விளம்புவாய்' என்னலும், திருமழிசைப்பிரான் குறுமுறுவலோடு இகழ்ச்சியாய் 'இவ்வூசியின் பின்னே நூல் வரும்படி வரம் தந்தருளீர்' என்று விநோதமாகச்சொல்ல, அப்பரி ஹாஸவார்த்தை செவிப்பட்டவுடனே கடுஞ்சினங்கொண்ட நெற்றிக்கண்ணான் 'இச்செருக்குடையானை இப்பொழுதே அநங் கனைப்போலாக்கிவிடுகிறேன்' என்று தனது நெற்றியிலுள்ள நெருப்புக் கண்ணைத்திறந்துவிட்டார்; அதில் நின்றும் புகையும் பொறியுமாகக் கிளர்ந்தெழுந்த காலாக்நியைக்கண்டு திருமழிசைப் பிரான் சிறிதும் கலங்காமல் 'இந்திரன்போல உடம்பு முழுதும் கண்காட்டினாலும் அஞ்சுவேனல்லேன்' என்று சொல்லித் தமது வலத்திருவடியின் பெருவிரலிலுள்ளதொரு கண்ணைத்திறந்துவிட, அதில் நின்றும் ஒரு பெருந்தீ எழுந்து ஊழித்தீயினும் பன்மடங்கு மேலிட்டு அவ்வனலை அடக்கத்தொடங்கிற்று. அவ்வளவில் அரன் அக்கடுநெருப்பை அவிக்கும்படி தனது சடையிலுள்ள பல மேகங்களை ஏவிவிட, அவையும் அங்ஙனமே கல்பாந்த காலத் திற்போலச் சோனைமழை பொழிந்து பெருவெள்ளங்கோக்கவும் ஆழ்வார் சிறிதும் சலியாமல் பகவத்பத்தியிலே ஊன்றியிருந்தார்; அதுகண்டு முக்கண்மூர்த்தி மிக வியந்து இவர்க்கு 'பக்திஸாரர்' என்று திருநாமஞ்சாத்தி இவரது வைபவத்தைக் கொண்டாடித் தன்னிடத்திற்குத் திரும்பிப்போயினன் என்ற வரலாறு இவ்விடத் தில் ஸ்மரிக்கத்தக்கது. இவ்வளவையும் திருவுள்ளம்பற்றியே ஆழ்வார் இங்கு "கற்றைச்சடையான் கரிக்கண்டாய்" என்கிறார் என்று கொள்ளலாம். கரி—ஸாக்ஷி; நேரில் கண்ணால் பார்த்தவன் என்கை.

இவ்வாழ்வார் "சாக்கியங்கற்றோம் சமண்கற்றோம் சங்கரனா ராக்கிய ஆகமநூ லாராய்ந்தோம்" என்றபடியே பல மதங்களி னுள்ளும் புகுந்து அந்தந்த மதஸ்தராகவே இருந்தவராதலால், இப்படி பலமதங்களிலும் புகுந்து அவையெல்லாம் அஸார

மென்று விட்டொழிந்து ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு வந்து சேர்ந்ததுபோல, இந்த ஸத்ஸம்ப்ரதாயத்தையும் விட்டு வேறொரு தீயமதத்தில் போய்ச் சேரும்படியான தௌர்ப்பாக்கியம் இவ்விருள் தருமாஞாலத்தின் காரியமாக நமக்கு நேர்ந்துவிடுமோ என்னவோ! என்று அஞ்சி, இந்த நிஷ்டையே நிலைத்திருக்குமாறு கடாக்ஷித்தருளவேணுமென்று பின்னடிகளால் எம்பெருமான் றன்னையே பிரார்த்தித்தாராயிற்று. .... (உசு)

மாறன் புகுந்த மடநெஞ்சம் * மற்றதுவும்
பேறாகக் கொள்வனோ பேதைகாள் *—நீறாடி
தான்காண மாட்டாத தாரகல சேவடியை *
யான்காண வல்லேற் கிது. (உஎ)

பேதைகாள்	மூடர்களே!,	காண மாட்டாத	ஸேவிக்க முடியாததும்
மால்	எம்பெருமான்		
தான் புகுந்த	தானேமேல்விழுந்து வந்து புகுந்திருக்கப்பெற்ற	தார்	புஷ்பங்களினால் அர்ச்சிக்கப் பட்டதும்
மட நெஞ்சம்	(எனது) விதேயமான நெஞ்சிலே	அகலம்	போக்யதையில் அளவிறந்ததுமான
மற்றதுவும்	வேறொன்றை	சே அடியை	திருவடியை
பேறு ஆக	புருஷார்த்தமாக		
கொள்வனோ	நான் கொள்வனோ? [கொள்ள மாட்டேன்;]	யான் காண வல்லேற்கு	ஸேவிக்கும்படியான பாக்கியம் பெற்ற எனக்கு
நீறாடி தான்	நீறு பூசின உடம்பையுடையனான ருத்ரனும்	இது	இப்படிப்பட்ட அத்யவஸாயமுண்டாயிற்று.

* * *—தம்முடைய அத்யவஸாயத்தையும் அதன் அடியையும் அருளிச்செய்கிறார். உலகத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொன்றைப் புருஷார்த்தமாகப் பேணுவர்; ஐச்வர்யத்தை நச்சுவர் சிலர்; ஸ்வர்க்கலோக போகங்களை அபேக்ஷிப்பர் சிலர்; கைவல்யத்தைக் காதலிப்பர் சிலர். இப்படி ஒவ்வொருவர்க்கு ஒவ்வொன்று பேறாக இருக்கும்; எனக்கோவென்னில்; இவையொன்றும் விருப்பமல்ல.

எம்பெருமான்றனை 'இவ்வாழ்வாருடைய நெஞ்சகம் நமக்கு இருப்பிடமாகக்கிடைக்குமா!' என்று காதலித்துத் தன்பேறாக வந்து சேரப்பெற்ற எனது நெஞ்சில் அப்பெருமானுடைய திவ்ய வாஸஸ்தானமொன்று தவிர மற்றொன்றும் புருஷார்த்தமாகக் கருதப்பட மாட்டாது, என்று தமது அத்யவஸாயத்தை முன்னடிகளிற் கூறினர். இப்படிப்பட்ட அத்யவஸாயம் தமக்கு உண்டான படியைப் பேசுகிறார் பின்னடிகளில்: சீருடிதான் இத்யாதியால். 1. "பெண்ணுலாஞ்சடையினானும் பிரமனும் முன்னைக்காண்பான், எண்ணிலாவூழியூழி தவஞ்செய்தார் வெள்கிநிற்ப" என்கிறபடியே சடையன்தானும் நெடுங்காலம் தவம்புரிந்தும் எந்தத் திருவடிகளை ஸேவிக்கப்பெற்றிலனோ அந்தத் திருவடிகள் எனக்கு ஸ்வயமாகவே வந்து ஸேவைஸாதிக்கப்பெற்றதனால் 'இத்திருவடி தவிர வேறொன்றும் நமக்கு ப்ராப்யமல்ல' என்கிற இந்த அத்யவஸாயம் உண்டாயிற்று என்றவாறு.

"காணவல்ல எனக்கு" எனப்பிரயோகிக்கவேண்டுமிடத்து "யான்காண வல்லேற்கு" எனப் பிரயோகிக்கப்பட்டது. (௨௭)

இதுவிலங்கை யீடழியக் கட்டிய சேது *
இதுவிலங்கு வாலியை வீழ்த்தது *—இதுவிலங்கை
தானொடுங்க வில்நுடங்கத் தண்டா ரிராவணனை *
ஊனொடுங்க வெய்தா னுகப்பு. (௨௮)

இலங்கை	லங்காபுரியானது
ஈடு அழிய	சீர்குலையும் படியாக
கட்டிய	(வானர சேனையைத் துணைகொண்டு) கட்டின
சேது	திருவணை
இது	இதுகாண்மின்;
விலங்கு	திர்யக்யோநியிற் பிறந்தவனான
வாலியை	வாலியை
வீழ்த்தது	முடித்தது

இது	இப்போது நடந்த செயல்காண்மின்;
இலங்கை தான்	லங்காபுரியானது
ஒடுங்க	அழியும்படியாகவும்
வில் நுடங்க	சார்ங்கவில் வளையும் படியாகவும்,
தண் தார் இராவணனை ஊன் ஒடுங்க	(அலங்காரமாகக்) குளிர்ந்த பூமாலை யணிந்து கொண்டிருந்த இராவணனுடைய உடல் ஒழியும்படியாகவும்

1. திருமாலை. 44.

எய்தான்	அம்புகளைச் செலுத்தின இராமபிரானுடைய	உகப்பு	லீலையான வியாபாரம்
		இது	இது காண்மின்.

* * *—இராமபிரானுடைய சில வீரச்செயல்களைப்பேசி யநுபவிக்கிறார்.

இலங்கை ஈடழியக்கட்டிய சேது இது—விபீஷணாழ்வான் இராமபிரான் பக்கல் வந்து சேர்ந்து உய்ந்தபின் பெருமாளைப் பார்த்து 'ஸ்வாமிந்! இந்த நம்முடைய ஸேனைகள் கடலைக்கடந்து அப்பாற் செல்லவேண்டுமாதலால் அதற்காகக் கடலரசனை நீர் சரணம்புகவேணும்' என்ன, இராமபிரான் 'கடலைக்கடக்க உபாயம் சொல்லவேண்டும்' என்று கடலரசனாகிய வருணனைப் பிரார்த்தித்துத் தர்ப்பசயனத்தில் படுத்து மூன்றுநாளளவும் ப்ராயோபவேசமாகக்கிடக்க, ஸமுத்ரராஜன் அப்பெருமானது மஹிமையைக்கருதாமல் உபேக்ஷையாயிருந்துவிடவே ஸ்ரீராமன் அதுகண்டு கோபங்கொண்டு 'அனைவரும் நடந்தே செல்லும்படி கடலை வற்றச்செய்வேன்' என்று ஆக்நேயாஸ்த்ரத்தைத் தொடுக்கத்தொடங்கிய வளவிலே வருணன் அஞ்சி நடுங்கி ஓடிவந்து இராமபிரானைச் சரணமடைந்து கடல்வடிவமான தன்மேல் அணை கட்டுதற்கு உடன்பட்டு, நளன் கையினால் நீரில்போட்ட கற்களும் மிதக்குமென்று அவனுக்கு அவன் தகப்பனார் வரமளித்திருக்கிறாராகையால் அவனைக்கொண்டு ஸேதுகட்டவேணுமென்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டான்; இராகவனும் அப்படியே மற்ற வானரங்கள் சுற்றுமுள்ள மலைகளைப்பிடுங்கிக்கொண்டு வந்து நளன் கையில் கொடுக்கச்செய்து நளன் கையினால் அம்மலைகளை நீரில் போகடுவித்து ஸேதுகட்டுவித்தான்—என்பது திருவணைகட்டின வரலாறு. இது என்றைக்கோ நிகழ்ந்ததாயினும் மயர்வற மதிநல மருளப்பெற்ற இவ்வாழ்வாரது அகக்கண்ணுக்கு ஸ்பஷ்டமாகத் தோற்றி விளங்குதலால் "கட்டிய சேது இது" என்று கண்முன்னே கண்டதுபோலப் பேசுகிறார்.

இது விலங்கு வாலியை வீழ்த்தது—ஸுக்ரீவன் இராமபிரானோடு ஸ்நேஹஞ்செய்துகொண்டு அவனது நியமனத்தினால் கிஷ்கிந்தைக்குச்சென்று வீரநாதஞ்செய்ய, அதைக்கேட்டு வாலி பொறுக்கமாட்டாதவனாய் வெளிக்கிளம்பிவந்து ஸுக்ரீவனோடு யுத்தஞ்செய்யத்தொடங்க, அப்போது இராமன் அவ்விருவரில்

இன்னான் ஸுக்ரீவன் இன்னான் வாலியென்று வாசி கண்டறியாமையால் அம்பு எய்யாதொழியவே, ஸுக்ரீவன் வாலியிடத்துப் பராஜயப்பட்டு வேதனை பொறுக்கமாட்டாமல் ரிச்யமூகபர்வதத்துக்கே மீண்டு ஓடிவந்து சேர, இராமன் அம்பு எய்யாத காரணங் கூறி 'இப்போது உனக்கு ஓர் அடையாளமிடுகிறேன்; மறுபடியும் வாலியை யுத்தத்துக்கு அழை' என்று சொல்லி அவன் கழுத்தில் ஒரு பூமாலையைச்சுற்றிக் கிஷ்கிந்தைக்குப் போகவிட, ஸுக்ரீவன் சென்று முன்போலவே வீரநாதஞ்செய்ய, அதைக்கேட்டு வாலி போருக்குப்புறப்பட, அப்போது அவன் மனைவியாகிய தாரை 'ஓ பிராணநாதா! சற்று முன்பு அடிபட்டு ஓடினவன் திரும்பி இப்போதே சண்டைக்கு அழைக்கின்றமையால் இது வெறுமனன்று; ஏதோ ஒரு பெருத்த ஸஹாயத்தை அண்டைகொண்டு வந்திருக்கவேணும்; நீ இப்போது திடீரென்று போர்க்குப் புறப்படுவது தகுதியன்று' என்று சொல்லித் தடுத்தவளவிலும் அவள் வார்த்தையைச் செவியிலும் கொள்ளாமல் சடக்கெனப் புறப்பட்டுவந்து ஸுக்ரீவனுடன் பிணங்கினான்; அந்த வாலி ஸுக்ரீவரிருவரும் ஒருவர்க்கொருவர் கீழே தள்ளுவது மேலே பாய்வது கட்டிக்கொண்டு நெருக்குவது கடிப்பது குத்துவது அடிப்பதாய் வலிதான யுத்தஞ்செய்யுங்காலத்தில் இராகவன் ஒருமரத்தடியில் மறைந்திருந்து வாலியைப் பாணத்தினாலடித்தார்; அந்த பாணத்தினால் வாலி மார்பு பிளந்து கீழே விழுந்துவிட்டான்; இதைத் தாரை கேள்விப்பட்டு அங்கதனென்னும் புத்திரனுடன் கூட ஓடிவந்து வாலியைத் தழுவிக்கொண்டு பலவாறு புலம்பி, பிறகு எதிரில்நின்ற இராமனைப்பார்த்து அவருடைய மஹாபுருஷலக்ஷணங்களைக்கண்டு இவர் ஸாக்ஷாத் பரமாத்மாவென்று நிச்சயித்துத் துதித்தனள். இராமனும் வாலியோடு வாதாடிப் பல ஸமாதானங்கள் சொல்லக்கேட்டு நன்மதிபெற்றுக் கைகூப்பி இராகவனைத்தொழுது 'ஸுக்ரீவனைப்போல் அங்கதனையும் நோக்கிக்கொள்ளவேணும்' என்று பிரார்த்தித்துவிட்டு ப்ராணனையும் விட்டான்—என்ற வரலாறு அறிக. ஆச்ரிதனான ஸுக்ரீவனிடத்தில் பக்ஷபாதத்தால் எம்பெருமான் செய்தருளின காரியம் இப்போதுதான் நடந்ததுபோல் ஆழ்வார்க்குத் தோற்றிற்றென்க.

"வீழ்த்ததுவும்" என்று சிலர்க்குப் பாடமாம்; அப்பாடத்தில் வெண்டளைபிறழும்.

திருவணைகட்டினதும் வாலியைவதைத்ததும் இராவணனைக் கொன்றதும் எம்பிரான் அவலீலையாகச்செய்த செயல்கள் என்ற தாயிற்று இப்பாட்டால். ... . (உஅ)

உகப்புருவன் தானே யொளியுருவன் தானே *
மகப்புருவன் தானே மதிக்கில் *—மிகப்புருவம்
ஒன்றுக்கொன் றோசனையான் வீழ * ஒருகணையால்
அன்றிக்கொண் டெய்தா னவன். (உகூ)

மிக	மிகவும்	மதிக்கில்	சிந்தித்தால்
புருவம் ஒன்றுக் கொன்று ஓசனையான்	ஒரு புருவத்துக்கு ஒரு புருவம் காத வழி நீளமிருக்கப் பெற்ற கும்பகரணன்	உகப்பு உருவன் தானே	மநோஹரமான திருமேனியை யுடையவன் அவனே ;
வீழ	ஒழியும்படியாக	ஒளி உருவன் தானே	தேஜோமயமான திருமேனியை யுடையவனும் அவனே,
அன்றிக் கொண்டு	சீறிக்கொண்டு		
ஒரு கணையால்	ஒரு பாணத்தினல்	மகப்பு உருவன் தானே	மிகவும் ஆச்சரிய மான வடிவை யுடையவனும் அவனே.
எய்தானவன்	அடித்து முடித்தவ ஞன இராம பிரானை		

* * *—எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தின் வைலக்ஷண்யத்தைப்பேசி அநுபவிக்கிறார். உகப்புருவன்தானே—கண்டவர்களெல்லாரும் உகக்கும்படியான திருவுருவத்தையுடையவன் என்கை. “தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமலமன்ன தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கை கண்டாரு மஃதே” (கம்பராமாயணம்.) என்றது காண்க. அன்றியே, நம்மைப்போல் கருமங்காரணமாக சரீரங்களைப் பரிக்ரஹிக்கை யன்றியே “இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:” என்கிறபடியே தானே திருவுள்ளமுகந்து பரிக்ரஹித்துக் கொள்ளப்பட்ட வடிவை யுடையவன் என்றுமாம்.

ஒளியுருவன் தானே—1. “குழுமித்தேவர் குழாங்கள் கை தொழச் சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோருரு” என்கிற

படியே தேஜஸ்புஞ்ஜமே வடிவெடுத்த தென்னலாம்படியான உருவையுடையவன்.

மகப்புருவன்.—'𑌮𑌹𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌂' [மஹாத்புதம்] என்ற வட சொல் 'மகப்பு' எனச்சிதைந்தது; மிகவும் அற்புதமான உருவத்தை யுடையவன் என்றபடி. இப்படிப்பட்டவன் யாவனென்னில், இராமபிரானென்கிறது பின்னடிகளால். கும்பகர்ணனுடைய புருவங்களின் இடைவெளி ஒரு காதவழி யுள்ளதுபற்றி 'புருவமொன்றுக்கொன்றோசனையான்' என்று அவனுக்குப் பெயரிடப் பட்டது. 'யோஜந' என்னும் வடசொல் ஓசனை எனத் திரிந்தது. ... ... (௫௯)

அவனென்னை யாளி யரங்கத்து * அரங்கில்
அவனென்னை யெய்தாமல் காப்பான் *—அவனென்ன
துள்ளத்து நின்று னிருந்தான் கிடக்குமே *
வேள்ளத் தரவணையின் மேல். (௬௦)

என்னை ஆளி	என்னை ஆட்கொண்டருள்பவனான
அரங்கத்து அவன்	ஸ்ரீரங்கநாதன்
என்னை	என்னை
அரங்கில்	ஸம்ஸாரமாகிற நாடகசாலையில்
எய்தாமல்	பிரவேசிக்கவொட்டாமல்
காப்பான்	காத்தருள்வன்;
அவன்	அப்பெருமான்
என்னது	என்னுடைய

உள்ளத்து	நெஞ்சிலே
நின்றான் இருந்தான்	நிற்பதும் இருப்பதும்செய்கிறான்;
(ஆனபின்பு இனி)	
அவன்	அப்பெருமான்
வெள்ளத்து	திருப்பாற்கடலில்
அரவு அணையின் மேல்	சேஷ சயனத்திலே
கிடக்குமே	பொருந்துவனோ?
[பொருந்தமாட்டான்.]	

* * *—இப்படிப்பட்ட எம்பெருமான் திருப்பாற்கடல் முதலிய ஸ்தானங்களை விட்டிட்டு என்னெஞ்சிலேயே நிற்பதுமிருப்பதுமாகா நின்றான் என்கிறார். திருவரங்கம் பெரியகோயிலில் * குடதிசை முடியைவைத்துக் குணதிசை பாதம்நீட்டி வடதிசை பின்பு காட்டித் தென்திசையிலங்கை நோக்கித் துயில்கொள்ளு மழகைக்காட்டி என்னை ஆட்படுத்திக்கொண்ட பெருமான் இனி

தான் ஸம்ஸாரமாகிய நாடகசாலையிற் புகாவண்ணம் என்னைக் காத்தருள்வான்; அவ்வளவேயன்றி என்னுடைய ஹ்ருதயத்தையே தனக்குப் பரமப்ராப்யமான ஸ்தலமாகத் திருவுள்ளம்பற்றி, நிற்பதும் வீற்றிருப்பதுமெல்லாம் இங்கேயாயிராநின்றான்; இனி அவனுக்குத் திருப்பாற்கடலில் திருவரவணையில்தானும் படுக்கை பொருந்துமோ? பொருந்தாது—என்றாயிற்று.

அரங்கில்—'ரங்கம்' என்னும் வடசொல் கூத்தாடுமிடம் என்னும் பொருளது; அதுவே தமிழில் 'அரங்கு' எனத் திரிந்தது. நாடகசாலையில் ஒவ்வொருவனே பலபல வேஷங்களைப் பூண்டுகொண்டு வருதல்போல இந்த ஸம்ஸாரத்தில் ஒவ்வொரு ஆத்மாவும் பலபல தேஹங்களைப் பரிக்ரஹித்துக்கொண்டு அனேக யோனிகளில் பிறப்பதுபற்றி ஸம்ஸாரத்தை நாடகசாலையாகச் சொல்வது நன்கு பொருந்தும். 1. பிறவிமா மாயக்கூத்து" என்றார் நம்மாழ்வாரும். .... (௬௦)

மேல் நான்முக னரனையிட்ட விடுசாபம் *
தான் நாரணனொழித்தான் தாரகையுள் *—வானோர்
பெருமானை யேத்தாத பேய்காள் * பிறக்கும்
கருமாயம் பேசில் கதை. (௬௧)

மேல்	முன்பொருகால்	ஏத்தாத	வாய்கொண்டு வாழ்த்தமாட்டாத
நான்முகன்	பிரமன்	பேய்காள்	அறிவு கேடர்களே!,
அரனை	ருத்ரனைக்குறித்து	பிறக்கும் கரு	பிறப்பதற்கு அடியான கர்ப்பஸ்தானத்தில் (நீங்கள் அநுபவிக்கக்கூடிய)
இட்ட	கொடுத்த	மாயம்	ஆச்சரியமான துக்கங்களை
விடுசாபம்	சாபத்தை	பேசில்	சொல்லப்புகுந்தால்
தாரகையுள்	இந்நிலவுலகத்தில் (உள்ளாரெல்லாரு மறிய)	கதை	ஒரு மஹாபாரதம் போலே பரந்திருக்கும்.
நாரணன்தான்	எம்பெருமானே		
ஒழித்தான்	போக்கியருளினன்; (அப்படிப்பட்ட)		
வானோர் பெருமானை	நித்யஸூரி நாதனான ஸ்ரீமந் நாராயணனை		

1. திருவாய்மொழி 8—4—11.

* * *—எம்பெருமானுடைய பெருமை நாடு நகரமும் நன்கறிந்ததாயிருந்தும் அவனை ஏத்தமாட்டாத பாவிகள் எவ்வளவோ கஷ்டங்களை அநுபவிக்க உரியவர்கள் என்கிறார்.

ஒரு காலத்திலே பரமசிவன் தன்னைப்போலவே பிரமனும் ஐந்து தலையுடையனாயிருப்பது பலரும் பார்த்து மயங்குதற்கு இடமாயிருக்கின்றதென்று கருதி அவனது சிரமொன்றைக்கிள்ளி யெடுத்துவிட, அக்கபாலம் அப்படியே சிவன் கையில் ஒட்டிக் கொள்ளுதலும், அவன் 'இதற்கு என் செய்வது?' என்று கவலைப்பட, தேவர்களும் முனிவர்களும் "இப்பாவந் தொலையப் பிச்சை யெடுக்கவேண்டும்; என்றைக்குக் கபாலம் நிறையுமோ அன்றைக்கே இது கையைவிட்டு அகலும்" என்று உரைக்க, சிவபிரான் பலகாலம் பல தலங்களிலுஞ்சென்று பிச்சையேற்றுக் கொண்டே வருந்தித் திரிந்தும் அக்கபாலம் நிறையாது நீங்காதாக பின்பு ஒருநாள் பதரிகாச்ரமத்தை யடைந்து அங்கு எழுந்தருளியுள்ள நாராயணமூர்த்தியை வணங்கி இரந்தபோது அப்பெருமான் 'அக்ஷயம்' என்று பிக்ஷையிட, உடனே அது நிறைந்து கையைவிட்டு அகன்றது—என்பதே நான்முகனரனையிட்ட விடு சாபம் நாரணனொழித்த வரலாறு. குரு பாதகத்தைப் போக்கிச் சிவனையும் உய்யக்கொள்ளவல்ல பரதேவதை ஸ்ரீமந்நாராயணன் என்பதை அறிகின்றிலவே இப்பேய்கள் என்று வருந்துகிறார்.

பிறக்குங் கருமாயம் பேசில் கதை=எம்பெருமானுடைய பெருமையறிந்து அவனை ஏத்தினீர்களாகில் உஜ்ஜீவித்துப் போவீர்கள்; இல்லையேல், மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து கர்ப்பப்பைகளில் நீங்கள் படநேரும் துன்பங்கள் மஹாபாரதம்போலே பெரிய கதைப்புத்தகமாக எழுதிவைக்கத் தக்கதாகும் என்றவாறு.

முதலடியில், விடுசாபம் என்றது முழுச்சொல்; 'விடு' என்பதற்குத் தனியே பொருளில்லை; அதை ஒரு உபஸர்க்கம்போலக் கொள்க. சாபம்—அநுபவித்தே தீரவேண்டிய பாவம். தாரகையுள்=வடமொழியில் "धरा धरित्री धरणिः" என்று பூமிக்குப் பெயர்களிருப்பதுபோல் 'धारका' என்றும் ஒரு பெயர் இருக்கத் தகும். 'தாரணியுள்' என்றும் பாடமுண்டென்ப. 'धरणी' என்பதன் நீட்டல். .... (௩௧)

கதைப்பொருள்தான் கண்ணன் திருவயிற்றி னுள்ள *
உதைப்பளவு போதுபோக் கின்றி *—வதைப்பொருள்தான்
வாய்ந்த குணத்துப் படாத தடைமினோ *
ஆய்ந்த குணத்தா னடி. (௩௨)

கதை பொருள்தான்	(உலகத்தில்) வியவஹாரிக்கப்படுகின்ற பொருள்கள் யாவும்	வாய்ந்த குணத்து	திருக்கல்யாண குணங்களில்
		படாதது	ஈடுபடாத வஸ்து
உதைப்பு அளவு போது போக்கு இன்றி	ஒரு நிமிஷகாலமும் ஓயாமல் [எப்போதும்]	வதை பொருள்தான்	அபதார்த்தமே யாகும் ;
			(ஆகையாலே)
கண்ணன்	எம்பெருமானுடைய	ஆய்ந்த குணத்தான்	சிறந்த திருக்குணங்களை யுடையவனான அப்பெருமானுடைய
திரு வயிற்றின் உள்ள	ஸங்கல்பத்தில் ஸத்தை பெற்றிருக்கின்றன ;		
	(அப்படிப்பட்ட	அடி	திருவடிகளை
	எம்பெருமானுடைய)	அடைமின்	ஆச்ரயியுங்கோள்.

* * *—தன்னுடைய ஸங்கல்ப மாத்ரத்தினால் ஸகல பதார்த்தங்களுக்கும் ஸத்தையை விளைக்கின்ற எம்பெருமானுடைய குணங்களில் ஈடுபட மாட்டாதவர்கள் அஸத்துக்களாவர்; அங்ஙனாகாமே நீங்கள் அக் குணநிதியின் திருவடிகளைச் சார்ந்து வாழ்மின் என்று சிலரைநோக்கி உபதேசிக்கும் பாசுரம் இது.

கதைப்பொருள்தான் கண்ணன் திருவயிற்றினுள்ள = 'கதா' என்னும் வடசொல்லுக்கு 'வாயாற் சொல்லுதல்' என்று பொருள். நம்மால் வ்யவஹாரிக்கப்படுகின்ற பதார்த்தங்களெல்லாம் எம்பெருமானுடைய ஸங்கல்பாதீநங்கள் என்கை.

உள்ள—உள்ளன என்றபடி.

முதலடிக்கு வேறு வகையாகவும் பொருள் கொள்வர்.

உதைப்பளவு போதுபோக்கின்றி = கண்ணிமைப்பதும் கைநொடிப்பதும் உதைப்பு; ஒரு சிடிகை போடுகிற மாத்திரமான காலம் என்கை. அவ்வளவு காலமும் இடைவிடாமல்—ஸர்வ காலத்திலும் என்றவாறு. அன்றியே, மேலே 'அடைமினோ'

என்ற வினைமுற்ருேடே இவ்விரண்டாமடியைக் கூட்டியுரைக்கவுமாம்; ஒரு நிமிஷ காலமும் தாமதியாமல் விரைந்தடி சேர்மினே என்றபடி.

வாய்ந்த குணத்துப் படாதது வதைப்போருள்தான் = நாம் அநுபவிப்பதற்குப் பாங்கான பகவத் குணங்களிலே ஈடுபடாதவர்கள் “ஸ ஏகதா பவதி த்ரிதா பவதி [illegible]” என்கிற உபநிஷத்தின்படியே அபதார்த்தங்களாவர்கள் என்கை. “குணத்துப் படாதவர்” என்னுமல் ‘படாதது’ என்றது பகவத் குணங்களிலே ஈடுபடாதவர்களிடத்தில் தமக்குள்ள வெறுப்பினுல். அவிவேகிகளை நோக்கிக் ‘குட்டிச்சுவரே!’ என்பதுபோல. வதை—வசை ககரசகரப்போலி.

நீங்களும் அஸத்தாக ஆய்விடாமல் ஆய்ந்த குணத்தானடியை அடைமின் என்று தலைக்கட்டினராயிற்று. .... (௩௨)

அடிச்சகடம் சாடி யரவாட்டி * யானை
பிடித்தொசித்துப் பேய்முலை நஞ்சுண்டு *—வடிப்பவள
வாய்ப்பின்னை தோளிக்கா வல்லேற் றெருத்திறுத்து *
கோப்பின்னு மானுன் குறிப்பு. (௩௩)

	(எம்பெருமான்)	ஒசித்து	கொம்பை முறித்தொழித்தும்
குறிப்பு	(அடியாரைக் காத்தருள வேணுமென்கிற) திருவுள்ளத்தினுல்	பேய்	பூதனையென்னும் பேய்ச்சியினுடைய
அடி	திருவடியாலே	முலை	முலையில் தடவியிருந்த
சகடம்	சகடாஸுரனை		
சாடி	ஒழித்தும்	நஞ்சு	விஷத்தை
அரவு	காளியநாகத்தை		
ஆட்டி	வாலைப்பிடித்து ஆட்டிக் கொழுப்படக்கியும்	உண்டு	அமுது செய்து அவளுயிரை மாய்த்தும்
யானை	குவலயாபீட மென்னும் யானையை	வடி பவளம் வாய் தோளி	அழகிய பவளம் போன்றவாயையும் தோளையுமுடையளான
பிடித்து	பற்றிக்கொண்டு		

பின்னைக்கா	நப்பின்னைப் பிராட்டிக்காக	இறுத்து	முறித்தொழித்தும்
வல் ஏறு	கொடிய ரிஷபங்களினுடைய	பின்னும் கோ ஆனான்	தன்னுடைய சேஷித்வத்தை நிலைநிறுத்திக் கொண்டான்.
எருத்து	முசுப்பை		

* * *—எம்பெருமானுக்கு ஏற்கனவே ஈச்வரத்வம் இருந்தாலும் அவதரித்துப் பண்ணின சில ஆனைத் தொழில்களால் அந்த ஈச்வரத்வம் நன்னா நிலைநிறுத்திக் கொள்ளப்பட்டதென்று சில சேஷ்டிதங்களைப் பேசியநுபவிக்கிறார்.

அடிச்சகடம்சாடி-நந்தகோபர் திருமாளிகையில் ஸ்ரீ கிருஷ்ண சிசுவை ஒரு வண்டியின் கீழ்ப்புறத்திலே தொட்டிலிலிட்டுக் கண் வளர்த்தி யசோதை யமுனை நீராடப் போயிருந்த காலத்து, கம்ஸனுலேவப்பட்ட அஸுரனொருவன் அச்சகடத்தில் வந்து ஆவேசித்துத் தன்மேல் விழுந்து தன்னைக் கொல்ல முயன்றதையறிந்த பகவானுன குழந்தை பாலுக்கு அழுகிற பாவனையில் தன் சிறிய திருவடிகளை மேலேதூக்கி யுதைத்து அச்சகடத்தைச் சிந்நபிந்நமாக்கினனென்க.

அரவாட்டி—ஒருநாள் கிருஷ்ணன் கன்றுகளை ஓட்டிக்கொண்டு ஒருவரும் ஸஞ்சரியாத வழியே போகத் தொடங்க, மற்றுள்ள இடைப்பிள்ளைகள் அழைத்து 'க்ருஷ்ண! அவ்வழி நோக்க வேண்டா; அவ்வழியிற் சென்றால் யமுநாநதியில் ஓர் மடுவில் இருந்துகொண்டு அம்மடு முழுவதையும் தன் விஷாக்நியினுற் கொதிப்படைந்த நீருள்ளதாய்ப் பானத்துக்கு அநர்ஹமாம்படி செய்த காளியனென்னுங் கொடிய ஐந்தலை நாகம் குடும்பத்தோடு வாஸஞ்செய்துகொண்டு அணுகினவர்களனைவரையும் பிணமாக்கி விடுதலால் நாங்கள் அஞ்சுகின்றோம்' என்ன, அதைக்கேட்ட கண்ணபிரான் உடனே அக்காளிய நாகத்தைத் தண்டிக்க வேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு அம்மடுவிற்குச் சமீபத்திலுள்ளதொரு கடம்பமரத்தின்மேலேறி அம்மடுவிற் குதித்து, கொடிய அந்நாகத்தின் படங்களின்மேலேறித் துவைத்து நர்த்தனஞ் செய்து நசுக்கி வலியடக்குகையில், மாங்கலிய பிக்ஷையிட்டருள வேண்டுமென்று தன்னை வணங்கிப் பிரார்த்தித்த நாகசன்னிகை

களின் விண்ணப்பத்தின்படி அந்தக் காளியனை உயிரோடு கடலிற் சென்று வாழும்படி விட்டருளினன் என்க. அரவு ஆட்டி எனப் பதம் பிரித்ததுபோல 'அர வாட்டி' எனவும் பிரிக்கலாம்; "குறியதன் கீழ் ஆக்குறுதலும் அதனோடு, உகரமேற்றலும் இயல்வுமாம் தூக்கின்" என்ற நன்னூற் சூத்திரமுணர்க.) அர—காளியநாகத்தை, வாட்டி—வலியடக்கி, என்கை.

யானைபிடித்தொசித்து—வில்விழவுக்கென்று கம்ஸனாலழைக்கப்பட்டு மதுரைக்கு எழுந்தருளின கண்ணபிரான் கம்ஸனரண்மனையை நோக்கிச் செல்லுகையில் அவ்வரண்மனை வாயில்வழியில் தன்னைக் கொல்லும்படி அவனால் ஏவி நிறுத்தப்பட்டிருந்த குவலயாபீடமென்னும் மதயானை சீறிவர, கண்ணபிரான் அதனையெதிர்த்து அதன் தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியை எடுப்பதுபோல எளிதிற்பறித்து அவற்றையே ஆயுதமாகக்கொண்டு அடித்து அவ்யானையையும் யானைப்பாகனையும் உயிர் தொலைத்திட்டனனென்க.

பேய்முலை நஞ்சுண்டு—பூதனை யென்னும் ராக்ஷஸி கம்ஸனேவுதலால் நல்ல பெண்ணுருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்குவந்து அங்குத் தூங்கிக்கொண்டிருந்த கிருஷ்ண சிசுவையெடுத்துத் தனது நஞ்சு தீற்றிய முலையை உண்ணக் கொடுத்துக் கொல்லமுயல, பகவானான குழந்தை அவ்வரக்கியின் தனங்களைக் கைகளால் இறுகப் பிடித்துப் பாலுண்ணுகிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி அவள் பேரிரைச்சலிட்டுக் கதறி உடம்பு நரம்புகளின் கட்டெல்லாம் நீங்கி விழுந்து இறக்கும்படி செய்தனனென்க.

வல்லேற்றெருத்திறுத்து—நப்பின்னைப் பிராட்டியை மணம் புணர்வதற்காக அவள் தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி யார்க்கும் அடங்காத அஸுராவேசம்பெற்ற ஏழெருதுகளையும் கண்ணபிரான் ஏழு திருவுருக்கொண்டு சென்று வலியடக்கி அப்பிராட்டியை மணஞ்செய்து கொண்டனனென்க.

ஆக இப்படிப்பட்ட விரோதி நிரஸநத் தொழில்கள்செய்து தன்னுடைய ஈச்வரத்வத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டா னெம்பெருமான் என்றதாயிற்று. ... . (௩௩)

குறிப்பெனக்குக் கோட்டியூர் மேயானை யேத்த *
குறிப்பெனக்கு நன்மை பயக்க *—வெறுப்பனோ
வேங்கடத்து மேயானை மெய்வினைநோ யெய்தாமல் *
தான்கடத்தும் தன்மையான் தாள். (௬௪)

கோட்டியூர் மேயானை	திருக்கோட்டியூரில் நித்யவாஸம் பண்ணுமவனும்
வேங்கடத்து மேயானை	திருமலையில் நித்ய வாஸம்பண்ணு மவனுமான பெருமானை
ஏத்த	துதிப்பதற்கு
எனக்கு குறிப்பு	எனக்கு ஆசை ;
நன்மை பயக்க	(எம்பெருமானை இடைவிடாது அநுபவிப்பதனாலுண்டாகும்) பெருமையை உண்டாக்கிக் கொள்வதற்கு
எனக்கு குறிப்பு	எனக்குக் குதூஹலம் ;
மெய் வினை	சரீர ஸம்பந்தத்துக்கு அடியான கருமங்களும்
நோய்	வியாதிகளும்
எய்தாமல்	வந்து சேராதபடி
தான் கடத்தும் தன்மையான்	தானே அவற்றைப் போக்கியருளும் ஸ்வபாவத்தை யுடையவனான அப் பெருமானுடைய
தாள்	திருவடிகளை
வெறுப்பனோ	மறந்திருப்பனோ.

* * *—திருக்கோட்டியூர் திருவேங்கடம் முதலான பல திருப்பதிகளிலே எனக்காக வந்து ஸந்நிதிபண்ணி ஸுலபனாயிருக்குமெம்பெருமான் திருவடிகளை மறந்திருக்க என்றால் முடியுமோ வென்கிறார். திருக்கோட்டியூரிலும் திருமலையிலும் சென்று எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடவேண்டுமென்றும் அவனை இடைவிடாது அநுபவித்து ஆத்மாவுக்கு நன்மையை விளைத்துக் கொள்ளவேணுமென்றும் ஆசை கொண்டிருக்கின்றேன். எவ்விதமான கருமங்களும் துக்கங்களும் எனக்கு வந்து கிட்டாதபடி செய்து என்னைக் காத்தருள்கின்ற அப்பெருமானுடைய திருவடிகளை நான் எப்படி உபேக்ஷித்திருக்கமுடியும்—என்றாயிற்று.

மூன்றாமடியில் "வெவ்வினைநோய்" என்றும் பாடமாம்.

தாளா லுலக மளந்தவசவே கோல் *
வாளா கிடந்தருளும் வாய்திறவான் *—நீளோதம்
வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான் *
ஐந்தலைவாய் நாகத் தணை. (௬௫)

நீள் ஓதம்	பெரிய அலைகள்
வந்து அலைக்கும்	கரையிலேவந்து வீசப்பெற்ற
மா மயிலை	மயிலாபுரிக்கு அடுத்த
மா வல்லிக் கேணியான்	திருவல்லிக்கேணியில் நித்யவாஸம் பண்ணுகிற ஸர்வேச்வரன்
ஐ தலை வாய் நாகத்து அணை	ஐந்து தலைகளையும் ஐந்து வாய்களையுமுடையனான திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே
வாளா	வெறுமனே
கிடந்தருளும்	சயனித்திரா நின்றான்;
வாய் திறவான்	வாய்திறந்து ஒன்றுமருளிச்செய்வதில்லை;

(இப்படியிருப்பதற்குக் காரணம்)

தாளால்	திருவடியாலே
உலகம் அளந்த அசவே கொல்	உலகங்களை அளந்ததனாலுண்டான ஆயாஸமோ?.

* * *—திருவல்லிக்கேணியில் ஸ்ரீபார்த்தஸாரதிப் பெருமானாக நின்றதிருக்கோலமாய் ஸேவைஸாதிப்பது தவிர, நாகத்தணைக் கிடந்த பெருமானாக ஸேவைஸாதிக்கிற திருக்கோலமும் உண்டாகையாலே அந்த திவ்யமங்களவிக்ரஹத்தி லீடுபட்டுப் பேசுகிற பாசுரம் இது.

அர்ச்சாவதாரங்களில் எம்பெருமான்கள் நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் ஒருபடிப்பட்டே யிருக்குமேயன்றி ஒருநாளும் மாறமாட்டாதென்பதும் ஒருநாளும் சோதிவாய் திறந்து பேசியருள்வதில்லை யென்பதும் ஆழ்வார்கட்குத் தெரிந்திருக்கச் செய்தேயும் கரைபுரண்ட ப்ரேமத்தின் கனத்தினால் அர்ச்சாவதார ஸமாதியையும் குலைத்துப் பரிமாறப் பார்ப்பர்கள்; நம்மாழ்வார் திருவாய்மொழியில் "கொடியார்மாடக் கோளூரகத்தும் புளிங்குடியும், மடியாதின்னே நீதுயில் மேவி மகிழ்ந்ததுதான், அடியாரல்லல் தவிர்த்தவசவோ? அன்றேல் இப்படிதான் நீண்டுதாவிய அசவோ பணியாயே" (8–3–5) என்றும், "கிடந்தநாள் கிடந்தாய் எத்தனை காலங்கிடத்தி உன் திருவுடம்பசையத், தொடர்ந்து குற்றேவல் செய்து தொல்லடிமைவழிவருந் தொண்டரோர்க்கருளித், தடங்கொள்தாமரைக் கண்விழித்து நீயெழுந்துன் தாமரைமங்கையும் நீயும், இடங்கொள் மூவுலகுந் தொழவிருந்தருளாய் திருப்புளிங்குடிக் கிடந்தானே!" (9–2–3.) என்றும் அழகாகப்பேசினார். இவ்

வாழ்வார்தாமும் திருச்சந்தவிருத்தத்தில் "நடந்தகால்கள் நொந்தவோ?....காவிரிக்கரைக் குடந்தையுள், கிடந்தவாறெழுந்திருந்து பேசுவாழி கேசனே!" என்றார். அப்படியே இப்பாசுரத்திலும்—சோதிவாய்திறந்து ஒருவார்த்தையும் அருளிச்செய்ய மாட்டாமல் நெடுங்காலமாகவே அரவணையின்மேல் ஏகரீதியாக எம்பெருமான் பள்ளி கொண்டிருக்கிறானே!, காடும் மேடும் கல்லும் கரடுமான பூமியை முன்பொருகால் அடியிட்டு அளந்தருளினதாலுண்டான ச்ரமம் இன்னும் ஆறவில்லை போலும்; என்கிறார். பேசாதே வாளா கிடந்தருள்வதும் நீர்க்கரையைப் பற்றிக் கண்வளர்ந்தருள்வதும் ஆயாஸத்தின் மிகுதியினால் என்றிருக்கிறார் போலும்.

'அயர்வு' என்பது 'அசவு' என மருவிற்றென்ப. 'அசைவு' என்பாருமுளர்.

திருவல்லிக்கேணி யென்பது, தொண்டைமான் சக்ரவர்த்தியின் பிரார்த்தனையின்படியே திருவேங்கடமுடையான் கண்ணனாகத் தனது குடும்பத்தோடு ஸேவைஸாதித்த தலம். இத்தலத்துப் புஷ்கரிணி அல்லிப்பூக்கள் நிறையப் பெற்றதனால் கைரவிணி யென்று வடமொழியிலும் திருவல்லிக்கேணி யென்று தென்மொழியிலும் பெயர்பெறும். இந்தப் புண்ணிய தீர்த்தத்தின் பெயரே இத்தலத்திற்குப் பெயராயிற்றென்றுணர்க. இது மயிலையை அடுத்திருக்கிறபடியால் "மாமயிலை மாவல்லிக்கேணி" எனப்பட்டது. ... . (௫௫)

நாகத்தணைக் குடந்தை வெஃகாத் திருவெவ்வுள் *
நாகத்தணை யரங்கம் பேரன்பில் *—நாகத்
தணைப்பாற் கடல்கிடக்கு மாதி நெடுமால் *
அணைப்பார் கருத்த னவான். (௫௬)

நாகத்து அணை	திருவனந்தாழ்வானாகிற படுக்கையின்மேலே	நாகத்து அணை	திருவனந்தாழ்வானாகிற படுக்கையின்மேல்
குடந்தை	திருக்குடந்தையிலும்	அரங்கம்	திருவரங்கத்திலும்
வெஃகா	திருவெஃகாவிலும்	பேர்	திருப்பேர் நகரிலும்
திரு எவ்வுள்	திருவெவ்வுளூரிலும்	அன்பில்	அன்பில் என்னுந் திருப்பதியிலும்
	(அப்படியே)		

(அப்படியே)	
நாகத்து அணை	சேஷசயனத்தின் மீது
பால் கடல்	திருப்பாற்கடலிலும்
ஆதி நெடு மால்	ஜகத்காரணபூதனான ஸர்வேச்வரன்
கிடக்கும்	பள்ளி கொண்டிருக்கின்றான்;
(எதுக்காக வென்னில்)	
அணைப்பார் கருத்தன் ஆவான்	அன்பருடைய நெஞ்சில் புகுந்தவனாக ஆவதற்காக.

* * *—கீழ்ப்பாட்டில் "ஐந்தலைவாய் நாகத்தணை—கிடந்தருளும்" என்று சேஷசயநம் ப்ரஸ்துதமாகையாலே இங்ஙனே திருவனந்தாழ்வான்மீது பள்ளிகொண்டு ஸேவைஸாதிக்கப் பெற்ற திருப்பதிகளுள் சிலவற்றைப் பேசியநுபவிக்கிறார். அன்பருடைய அந்தரங்கத்திலே புகுவதற்கு ஸமயம் எதிர்பார்த்துக் கொண்டு திவ்யதேசங்களிலே தங்கியிருக்கிறானென்பதும் இதில் அநுஸந்திக்கப்படுகிறது.

திருக்குடந்தை, திருவெஃகா, திருவெவ்வுளூர், தென்திருவரங்கம், திருப்பேர்நகர், அன்பில், திருப்பாற்கடல் ஆகிய ஏழு தலங்களில் நாகத்தணையிலே கிடந்தருள்வது அன்பருடைய ஹ்ருதயத்திலே புகுருகைக்கு அவஸர ப்ரதீக்ஷையாலே யென்கை.

வெஃகா—கச்சித்திருப்பதியில் ஸ்ரீயதோக்தகாரிஸந்நிதி. திருஎவ்வுள்=எம்பெருமான் சாலிஹோத்ர மாமுனிவனுக்குப் பிரத்யக்ஷமாகி 'வஸிப்பதற்கு உரிய உள் எவ்வுள்?' என வினவியதனால் இத்தலத்திற்குத் திருவெவ்வுளூர் என்று திருநாமமாயிற்றென்பர். "கிம்க்ருஹம்" என்பது ஸம்ஸ்க்ருதவ்யவஹாரம். பேர்—அப்பக்குடத்தான் ஸந்நிதி. அடிதோறும் 'நாகத்தணை' என்றது போக்யதாதிசயம் தோற்ற.

அணைப்பார் கருத்தனாவான்="தேஷாம் ஸததயுக்தாநாம்" என்று கீதையிற் சொல்லுகிறபடியே எப்போதும் எம்பெருமானோடு அணைந்தேயிருக்கவேணுமென்று ஆசையுடையார் 'அணைப்பார்' எனப்படுவர்; அவர்களுடைய, கருத்தன்—கருத்திலே [திருவுள்ளத்திலே] பொருந்தினவனாக, ஆவான்—ஆவதற்காக என்றபடி.

எம்பெருமானுக்கு, பரமபதம் திருப்பாற்கடல் கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலான உகந்தருளின நிலங்களில்

இருப்பதிற்காட்டிலும் மெய்யடியாருடைய ஹ்ருதயகமலத்திலே வாழ்வதே பரமோத்தேச்யமென்றும், ஸமயம்பார்த்து அன்பருடைய நெஞ்சிலேவந்து சேர்வதற்காகவே மற்றவிடங்களில் எம்பெருமான் தங்குகிறான் என்றும், ஆகவே, திவ்யதேசங்களில் வாஸம் உபாயமாய் பக்தருடைய ஹ்ருதயத்தில்வாஸமே புருஷார்த்தமாயிருக்குமென்றும், இது ஸித்தித்துவிட்டால் எம்பெருமானுக்கு திவ்யதேசவாஸத்தில் ஆதரம் மட்டமாய்விடுமென்றும் ஸ்ரீவசநபூஷணத்தில் பிள்ளையுலகாசிரியர் பரமரஸமாக அருளிச்செய்ததெல்லாம் இப்பாசுரத்தையும் மூலமாகக் கொண்டதாகும். "கல்லுங்கனைகடலும் வைகுந்தவானாடும், புல்லென்றொழிந்தனகொல் ஏபாவம்!—வெல்ல, நெடியான் நிறங்கரியான் உள்புகுந்து நீங்கான், அடியேனதுள்ளத்தகம்" என்று நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் அருளிச்செய்த பாசுரமும் இங்கு ஸ்மரிக்கத்தகும். ... . (ந௬)

வானுலவு தீவளி மாகடல் மாபொருப்பு *
தானுலவு வெங்கதிரும் தண்மதியும் *—மேனிலவு
கொண்டல் பெயரும் திசையெட்டுஞ் சூழ்ச்சியும் *
அண்டந் திருமா லகைப்பு. (ந௭)

வான்	ஆகாசமும்	கொண்டல்	மேகங்களும்
தீ	அக்நியும்	பெயரும்	சேதநவர்க்கமும்
உலவு வளி	உலாவுகின்ற வாயுவும்	திசை எட்டும்	எட்டுத்திசைகளும்
மா கடல்	பெரிய கடலும்	சூழ்ச்சியும்	ஆவரணங்களும்
மா பொருப்பு	பெரிய குலபர்வதங்களும்	அண்டம்	ஆகிய இவையெல்லாவற்றோடுங் கூடின அண்டமும்
உலவு	திரிகின்ற		
வெம் கதிர்தானும்	உஷ்ணகிரணனை ஸூர்யனும்	திருமால்	ஸர்வேச்வரனுடைய
தண் மதியும்	குளிர்ந்த சந்திரனும்	அகைப்பு	ஸங்கல்பத்தினாலாயது.
மேல் நிலவு	மேலே நிலாவுகின்ற		

* * *—பஞ்சபூதங்களும், சந்த்ரஸூர்யர்களும், மேகமண்டலங்களும், ஜீவராசியும், எண்டிசைகளும், ஆவரணங்களும் அண்டமுமெல்லாம் எம்பெருமானுடைய விபூதிகள் என்றாராயிற்று.

முதலடியில், வான் என்று ஆகாசமும், தீ என்று தேஜஸ்ஸும், வளி என்று வாயுவும், கடல் என்றதனாலே ஜலதத்துவமும், பொருப்பு என்றதனாலே பூமிதத்துவமும் ஆகப் பஞ்சபூதங்கள் பகரப்பட்டன.

மூன்றாமடியில் "கொண்டல்பெயரும்" என்றதை ஒரு சொற்செறிவாகக்கொண்டு 'மேகமென்று பெயர் பெற்றவையும்' என்று முரைப்பர்.

அகைப்பாவது—எழுச்சி; திருவுள்ளத்தில் எழுச்சி [முயற்சி] யாகிய ஸங்கல்பத்தைச் சொன்னவாறு. ... ... (௩எ)

அகைப்பில் மனிசரை யாறு சமயம்
புகைத்தான் * பொருகடல் நீர்வண்ணன் *—உகைக்குமேல்
எத்தேவர் வாலாட்டு மெவ்வாறு செய்கையும் *
அப்போ தொழியு மழைப்பு. (௩அ)

அகைப்பு இல் மனிசரை	உஜ்ஜீவிக்கமாட்டாத மனிசர்களை	உகைக்கும் ஏல்	உதாஸீநனா யிருந்துவிடும் பக்ஷத்தில்
ஆறு சமயம்	(நீசங்களான) ஆறு மதங்களில்	அப்போது	அப்போதே
புகைத்தான்	புகும்படி செய்தவனும்	எத் தேவர் வாலாட்டும்	எந்த தேவர்களுடையவும் அஹங்காரமும்
பொரு கடல் நீர் வண்ணன்	அலையெறிகின்ற கடல் நீர்போன்ற திருநிறத்தை யுடையவனுமான ஸர்வேச்வரன்	எவ்வாறு செய்கையும்	எவ்விதமான (யஜ்ஞம் முதலிய) காரியங்களும்
		அழைப்பு	(தேவதைகளின்) ஆஹ்வாநமும்
		ஒழியும்	ஒழிந்து போய்விடும்.

* * *—திருவாய்மொழியில் (1—1—5.) "அவரவர் தமதம தறிவறி வகை வகை, அவரவரிறையவ ரெனவடியடைவர்கள், அவரவரிறையவர் குறைவிலரிறையவர், அவரவர் விதிவழியடைய நின்றனரே" என்ற பாசுரத்தின் பொருளைத் தெரிந்துகொண்ட பின் இப்பாட்டின் பொருள் நன்கு நெஞ்சிற்பதியும். அப்பாசுரத்தின் கருத்தாவது—பலவகைப்பயன்களை விரும்புகின்ற உலகத்தவர்கள் தங்கள் தங்கள் ருசிக்குத்தக்கபடி பிரமன் சிவன் இந்திரன்

என்றுள்ள பலபல தெய்வங்களை ஆச்ரயிக்கின்றனர்; அத்தெய்வங்கள் இவர்கள் விரும்பிய பலன்களைக்கொடுக்கக் குறையில்லை; ஏனென்றால், ஸர்வேச்வரனான ஸ்ரீமந்நாராயணன் அத்தெய்வங்களுக்கு அந்தர்யாமியாயிருப்பதனாலே அந்த மாஹாத்மியத்தினால் அத்தெய்வங்கள் பலன்கொடுக்கும் சக்தியுடையனவாக ஆய்விடுகின்றன என்கை. ஆகவே எம்பெருமானுடைய ஆவேசத்தினால்தான் ஸாமாந்ய தெய்வங்களெல்லாம் தங்களைப்பற்றின அபேக்ஷகர்களுக்கு அந்தந்த ப்ரயோஜனங்களை யளிக்கின்றன வென்றதாயிற்று.

ஒரு அர்த்தத்தை அந்வயமுகத்தால் சொல்லுவதென்றும் வ்யதிரேகமுகத்தால் சொல்லுவதென்றும் இரண்டு படிகளுண்டு. 'அரசன் கொடுத்தால் நாம் உண்ணலாம்' என்றாற்போலே சொல்லுவது அந்வய முகத்தால் சொல்லுவதாம்; 'அரசன் கொடாவிடில் நாம் உண்ணமுடியாது' என்றாற்போலே சொல்லுவது வ்யதிரேக முகத்தாற் சொல்லுவதாம். கீழெடுத்துக்காட்டிய திருவாய்மொழிப் பாசுரத்திற் சொன்ன கட்டளை அந்வயமுகமாகும். இப்பாட்டிற் சொல்லுகிற கட்டளை வ்யதிரேகமுகமாகும். எம்பெருமானுடைய ஆவேசத்தினால்தான் தேவதாந்தரங்கள் பலனளிக்கின்றன என்று திருவாய்மொழிப் பாசுரத்திற்சொல்லிற்று; எம்பெருமான் ஆவேசியாவிடில் ஒரு தெய்வமும் ஒரு பலனையும் அளிக்கவல்லதாகமாட்டாது என்கிறது இப்பாட்டில்.

இப்பாட்டிற்கு ப்ரதாநப்ரமேயம் பின்னடிகளே; முன்னடிகள் விசேஷணமாத்ரம். எம்பெருமான் எப்படிப்பட்டவனென்றால், அகைப்பில் மனிசரை ஆறுசமயம் புகைத்தான்=ஆறுசமயங்களாவன—சாக்யர் உலூக்யர் அக்ஷபாதர் க்ஷபணர் கபிலர் பதஞ்ஜலி என்னும் அறுவரால் ப்ரவர்த்திப்பிக்கப்பட்ட மதங்கள். இவை அவைதிகங்களெனப்படும். உஜ்ஜீவிக்கமாட்டாத மனிசர்களை இந்த பாஹ்ய குத்ருஷ்டி மதங்களில் புகுவித்தானும் எம்பெருமான். இவ்விடத்தில் "போற்றிமற்றோர் தெய்வம் பேணப் புறத்திட்டும்மையின்னே, தேற்றிவைத்தது எல்லீரும் வீடு பெற்றாலுலகில்லை யென்றே" (4—10—6.) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் பொருள் அநுஸந்திக்கத்தகும்.

உகைக்குமேல்—உகைத்தலாவது உபேக்ஷித்தல்; தேவதாந்தரங்களிடத்தில் தான் ஆவேசியாத பக்ஷத்தில் என்றபடி.

எத்தேவர் வாலாட்டும்=பிரமன் உலகங்களைப் படைத்தானென்றும், சிவன் திரிபுரமெரித்தானென்றும், இந்திரன் வ்ருத்ராஸுரவதம் பண்ணினனென்றும் இப்படி பல தெய்வங்களைக் குறித்துப் பேசுவதெல்லாம் தெரியுமே; எம்பெருமான் அநுப்ரவேசித்திராவிடில் ஒரு தெய்வமாவது ஒரு காரியமாவது செய்திருக்கமுடியுமோ? என்றவாறு. ‘வாலாட்டும்’ என்றது உலக வழக்கச்சொல்லின் அநுகாரம் அஹங்காரப்படுகிறவனை ‘வாலாட்டுகிறான்’ என்பது வழக்கம்.

எவ்வாறு செய்கையும்=அந்தணர்கள் யஜ்ஞயாகங்களை அநுஷ்டித்து “இந்த்ராய ஸ்வாஹா, ஸோமாய ஸ்வாஹா” என்றிப்படி சொல்லி ஹவிஸ்ஸை யளிப்பதெல்லாம் அந்தர்யாமித்வேந எம்பெருமானை உத்தேசித்தேயன்றோ; அந்த இந்திரன் முதலிய தெய்வங்களில் எம்பெருமான் உள்ளுறைகின்றிலனாயின் அத்தெய்வங்களை நோக்கி ‘ஸ்வாஹா, ஸ்வாஹா’ என்று சொல்லிச்செய்வது ஒன்றுமில்லையாகும் என்கை.

அழைப்பு—1. “இந்த்ரஸ்ய ஹரிவ ஸோமஸ்ய ஜ்யோதிஷே” என்றும் ‘ப்ரஹ்மாணமாவாஹயாமி, வருணமாவாஹயாமி’ என்றும் சொல்லுகிறபடியே தேவதாந்தரங்களை யழைப்பதும் ஓய்ந்துவிடுமென்கை. .... (நு அ)

அழைப்பன் திருவேங்கடத் தானைக் காண *
இழைப்பன் திருக்கூடல் கூட *—மழைப்பே
ரருவி மணிவரன்றி வந்திழிய * யானை
வெருவி யரவொடுங்கும் வெற்பு.

(நு கூ)

திருவேங் கடத்தானை	திருவேங்கட முடையானை	மழை	மழைபோல் சொரிகின்ற
காண	கண்ணால் ஸேவிக்க	பேர் அருவி	பெரிய அருவிகளானவை
அழைப்பன்	வாய்விட்டுக் கூப்பிடா நின்றேன்;	மணி	(அங்குமிங்குங் கிடக்கிற) ரத்னங்களை

1. தைத்திரீய ஆரண்யகம்—முதல்ப்ரச்நம்.

வாரி வந்து இழிய	திரட்டிக்கொண்டு வந்து இழிய (அந்த ரத்னங்களின் ஒளியைக்கண்டு அக்நிஜ்வாலைகளாக ப்ரமித்து)
யானை	யானைகளானவை
வெருவி	பயப்பட்டு நிற்கவும்
அரவு	மலைப் பாம்புகளானவை
ஒடுங்கும்	(அந்த ரத்னங்களை மின்னலாக மயங்கி) புற்றிலே சென்று மறையவும் பெற்ற
வெற்பு	திருமலையை
கூட	சென்று கூடவேணுமென்று
திருக்கூடல் இழைப்பன்	கூடலிழைக்கின்றேன்.

* * *—உலகத்தவர்கள் எக்கேடு கெடினும் கெடுக; என்னுடைய போதுபோக்கு நல்லதாகவே யிருக்கப்பெற்றேன் என்கிறார். திருவேங்கடமுடையானை ஸேவிக்கப்பெறவேணுமென்றும் திருமலையிலே நித்யவாஸம் பண்ணப்பெறவேணுமென்றும் இதுவே எனக்கு ஆவலாயிருக்கின்றதென்கிறார்.

இழைப்பன் திருக்கூடல்=கூடலிழைத்தலாவது—வட்டமாகக்கோடுகீறி அதற்குள்ளே சுழிசுழியாகச் சுற்றும் சுழித்து இரண்டிரண்டு சுழியாகக்கூட்டிப் பார்க்கும்போது இரட்டைக்கணக்காக முடிவுபெற்றால் கூடுகை, ஒற்றைக்கணக்காக முடிவுபெற்றால் கூடாமை என்று ஒரு ஸங்கேதம் ஏற்படுத்திக்கொண்டு குறி பார்க்கையாம். சகுனம்பார்க்கும் வகைகளில் இஃது ஒருவகை; இது, கூடல், கூடலிழைத்தல், கூடல்வளைத்தல், கூடற்குறி இத்யாதி நாமங்களால் வழங்கப்பெறுமென்ப. நாச்சியார் திருமொழியில் நான்காந்திருமொழியில் [தெள்ளியார் பலர்] ஆண்டாளனுட்டித்ததாமிது. பகவத்ஸம்ச்லேஷத்திலே ஆவலுள்ளபடியைக்கூறும் முறைகளிலே இதுவொருமுறை என்னுமிவ்வளவேஉணரத்தக்கது.

கூடலிழைத்தல் பெண்டிர்க்கே உரியதென்றும், இங்கு "இழைப்பன் திருக்கூடல்" என்று ஆழ்வாரருளிச்செய்தது நாயகீ ஸமாதியில் என்றும் அழகிய மணவாளச்சீயர் அருளிச்செய்வர்.

பின்னடிகட்கு இரண்டுவகையாகக் கருத்துரைக்கலாம்;—மலையருவிகளில் மணிகள் பளபளவென்று ஜ்வலித்துக்கொண்டு உடன் விழுகின்றனவாம்; அவற்றை யானைகள் கண்டு 'இவை கொள்ளிவட்டம்' என்று ப்ரமித்து அஞ்சிச்சிதறுகின்றனவாம்;

பாம்புகளோவென்னில், அந்த ரத்னங்களை மின்னலாக ப்ரமித்து அஞ்சிப் புற்றிலேசென்று ஒடுங்குகின்றனவாம்; ஆக இப்படி அஸ்தாநே பயசங்கை பண்ணுதற்கு இடமான திருமலையைக்கூடக் கூடவிழைப்பன் என்கை. அன்றியே, அருவிகளில் விழுந்த ரத்னங்களைக்கண்ட யானைகள் 'இவை கொள்ளிவட்டம்' என்று ப்ரமித்து ஓடப்புக்கவாறே மலைப்பாம்பின் வாயிலே விழும்படியாயின என்னவுமாம்.

சில மலைப்பாம்புகள் யானையைப்பார்த்து அஞ்சி நடுங்கி ஓடிப் போய்விடுமென்றும், பல மலைப்பாம்புகள் யானையை அணுகி விழுங்கிவிடுமென்றும் தமிழ்நூல்களால் தெரிகின்றது. 'திரையன் பாட்டு' என்ற ஓர் பழையநூலில்—"கடுங்கண்யானை நெடுங்கை சேர்த்தி, திடங்கொண்டறைதல் . திண்ணமென்றஞ்சிப், படங் கொள் பாம்பும் விடரகம்புகூஉம், தடங்கொள் உச்சித்தாழ்வரை படுக்கத்து" என்றதனால் மலைப்பாம்பு யானையைக்கண்டு அஞ்சி யொளிக்குமென்பது தெரிகின்றது.

"ஞால்வாய்க்களிறு பாந்தட்பட்டெனத், துஞ்சாத்துயரத் தஞ்சுபிடிப்பூசல், நெடுவரை விடரகத்தியம்பும், கடுமான் புல்லிய காடிறந்தோரே" என்று சங்கநூல்களுள் ஒன்றான நற்றிணையி லும், "பரியகளிற்றை அரவுவிழுங்கி மழுங்க விருள்கூர்ந்த, கரிய மிடற்றர் செய்யமேனிக் கயிலைமலையாரே" என்று § தேவாரத்தி லும், "இடிகொள் வேழத்தை எயிற்றொடு மெடுத்துடன் விழுங் கும், கடியமாசுணங் கற்றறிந்தவரென வடங்கிச், சடைகொள் சென்னியர் தாழ்விலர் தாமிதித்தேறப், படிகடாமெனத்தாழ்வரை கிடப்பன பாராய்" என்று ‡ கம்பராமாயணத்திலும் உள்ளபாட்டுக் களால் மலைப்பாம்பு யானையை விழுங்குமென்பது தெரிகின்றது. அஞ்சியொளித்தல் சிறுபான்மையும், விழுங்குதல் பெரும்பான் மையுமா யிருக்குமென்ப. யானை வெருவவும், அரவு ஒடுங்கவும் பெற்ற மலை, என்பது முதல் யோஜனையில் பதவுரை. யானையான து வெருவி அரவின்வாயிலே ஒடுங்கப்பெற்ற மலை என்பது இரண்டா வது யோஜனையில் பதவுரை.

---

§ தேவாரம் திருக்கயிலாயம் முதல் திருமுறை 2. ஆம் பாட்டு.

‡ சித்திரகூடப்படலம் 34 ஆம் பாட்டு.

மூன்றாமடியில், "வாண்டி" "வான்றி" என்பன பாட பேதங்கள். ... . (௩௧)

வெற்பேன்று வேங்கடம் பாடினேன் * வீடாக்கி
நிற்கின்றேன் நின்று நினைக்கின்றேன் *—கற்கின்ற
நூல்வலையில் பட்டிருந்த நூலாட்டிகேள்வனார் *
கால்வலையில் பட்டிருந்தேன் காண். (௪௦)

வெற்பு என்று	பலமலைகளையும் சொல்லிவருகிற அடையிலே
வேங்கடம் பாடினேன்	திருமலையையும் சொன்னவனானேன்;
(இந்த உக்தி மாத்திரத்திலே)	
வீடு ஆக்கி நிற்கின்றேன்	'மோக்ஷம் நமக்கு ஸித்தம்' என்னும்படியாக அமைந்தேன்;
நின்று நினைக்கின்றேன்	'நாம் சொன்ன ஒரு சிறிய சொல்லுக்குப் பெரிய பேறு கிடைத்த பாக்கியம் என்னே!' என்று நினைத்து ஸ்தப்தனாயிருக்கின்றேன்;
கற்கின்ற	ஓதப்படுகிற
நூல்	வேதங்களாகிற சாஸ்த்ரங்களில்
வலையில் பட்டிருந்த	வலையினுள் அகப்பட்டிருப்பது போல் நிலைபோராமல் நிற்கின்ற
நூலாட்டி கேள்வனார்	லக்ஷ்மீநாதனான எம்பெருமானுடைய
கால் வலையில் பட்டிருந்தேன்	திருவடிகளாகிற வலையிலகப்பட்டுத் தரித்து நிற்கின்றேன்.

(காண்—முன்னிலையசை.)

* * *—வெற்பேன்று வேங்கடம் பாடினேன்='மலை' என்று வருகிற பெயர்களையெல்லாம் அடுக்காகச் சொல்லுவோமென்று விநோதமாக முயற்சிசெய்து 'பசுமலை, குருவிமலை, பறங்கிமலை' என்று பலவற்றையும் சொல்லிவருகிற அடையிலே என்னையுமறியாமல் 'திருவேங்கடமலை' என்று என்வாயில் வந்துவிட்டது; இவ்வளவையே கொண்டு எம்பெருமான் என்னைத் திருவேங்கடம் பாடினவனாகக் கணக்குசெய்து கொண்டானென்பது இதன் கருத்து.

வீடாக்கி. நிற்கின்றேன்=யாத்ருச்சிகமான இந்த உக்திமாத்திரத்தில் "மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றதுகையதுவே" என்

னும்படியாகப் பரமபதமும் ஸித்தமென்னப் பேறுபெற்றவனுயி னேன் என்கை.

நின்று நினைக்கின்றேன்—நாம் புத்திபூர்வகமாக ஒரு நல்ல சொல்லும் சொல்லாதிருக்கவும் எம்பெருமான்றானே மடிமாங்கா யிட்டுத் திருவுள்ளம் பற்றுகிறவிது என்ன ஆச்சரியம்! என்று இதனையே அநுஸந்தித்து ஈடுபடா நின்றேனென்கை.

கற்கின்ற நூல்வலையிற்பட்டிருந்த நூலாட்டி கேள்வனார் கால் வலையிற் பட்டிருந்தேன்—எம்பெருமான் ஸகலசாஸ்த்ரங்களாலும் பிரதிபாதிக்கப்படுபவனாதலால் அவனுக்கு ‘நூலாளன்’ என்று பெயர்; இப்பெயர்க்குப் பெண்பால் ‘நூலாட்டி’ என்பதாம்; 1. “தேவி! ஶ்ருதிம் பகவதீம் ப்ரயதேவோவாசாம்ஸ: ஸ்வத்ஸ்ருஷ்டவர்ணவ ஜ்ஞீகோசமஹ்யஹம் ஹ்யணஷ்டி தத் தோவாடநவட்ரநிவஹெ திஹாவஸஸஹக்ஷணவ்யூதிவாராணவாரஸ்ராணி.” [பெரிய பிராட்டியாரே!, வேதங்களும் வேதாங்கங்களும் எல்லாங்கூடி உமது திருக்கல்யாண குணங்களையே பிரதிபாதிப்பனவாகப் பெரியோர் கூறுவர்] என்று பட்டர் அருளிச்செய்தபடியே எல்லா நூல்களை யும் தனக்குப் பிரதிபாதகமாகவுடையவள் என்ற காரணத்தினாலும் ‘நூலாட்டி’ என்று பெயர் பெறுவள் பிராட்டி; அவளுடைய கேள்வனார்—எம்பெருமான்; அவன் எப்படிப்பட்டவனென்றால் கற்கின்ற நூல்வலையிற் பட்டிருந்தவன்; (அதாவது) பரம்பரையாக அஸ்மதாதிகளால் ஓதப்பட்டுவருகின்ற சாஸ்த்ரங்களாகிற வலை யிலே பாஹ்யகுத்ருஷ்டிகளால் அசைக்க வொண்ணாதபடி அகப் பட்ட எம்பெருமானுடைய திருவடிகளாகிய வலையிலே நான் சிக் கிக் கொண்டிருக்கின்றேன் என்கை.

மூன்றாமடியில், சாஸ்த்ரங்களை எம்பெருமானுக்கு வலையாக வும், ஈற்றடியில் அவ்வெம்பெருமான் திருவடிகளைத் தமக்கு வலை யாகவும் அருளிச்செய்தார்; எம்பெருமானை சாஸ்த்ரங்களில் நின் றும் எப்படி பிரிக்கமுடியாதோ அப்படியே என்னை அப்பெருமான் திருவடிகளில் நின்றும் பிரிக்கமுடியாது என்றவாறு. எம்பெரு மான் ஒருவலையிலே அகப்பட்டான், நானொருவலையிலே அகப்பட் டேன் என்று சமத்காரமாகச் சொல்லுகிறபடி.

---

1. ஸ்ரீகுணரத்நகோசம்.

நான் அஹ்ருதயமாகச் சொன்ன சொல்லையும் அவன் ஸஹ்ருதயமாகக் கொண்டு மடிமாங்காயிட்டு என்னை விஷயீகரிக்கிறருளுகிறுமையாலே நான் அவனுடைய திருவடிகட்கே அற்றுத் தீர்க்கேனென்றுராயிற்று. ... ... (௪௦)

காண லுறுகின்றேன் கல்லருவி முத்துதிர *
ஓண விழவி லொலியதிர *—பேணி
வருவேங்கடவா என்னுள்ளம் புகுந்தாய் *
திருவேங்கட மதனைச் சென்று. (௪௧)

…ல் அருவி	ஒலிக்கின்ற அருவிகளின் மூலமாக
முத்து உதிர	முத்துக்கள் உதிரப் பெற்றதாய்,
ஓணம் விழவில்	திருவோணத் திருநாளில்
ஒலி அதிர	(திருப்பல்லாண்டு பாடுகை வேத பாராயணம் செய்கை ஆடுகை பாடுகை முதலானவற்றாலுண்டான) த்வநி அதிரப் பெற்றதாய்
பேணி வரு	(பக்தர்கள்) விரும்பி வந்து சேரப் பெற்றதான
வேங்கடவா	திருவேங்கட மலையை இருப்பிடமாக வுடையவனே !
என் உள்ளம் புகுந்தாய்	நீ என் நெஞ்சிலே புகுந்து விட்டாய்;
	(நீ திருமலையைவிட்டு என்னுள்ளத்திலே வந்துவிட்டாலும்)
திரு வேங்கடம் அதனை சென்று காணல் உறுகின்றேன்	நான் அத்திருமலையிற் சென்று ஸேவிக்க விருப்பங்கொண்டிருக்கிறேன்.

* * *—எம்பெருமானே !, நீ திருவேங்கடமலையைவிட்டு என்னுள்ளத்தே குடி கொண்டாயாயினும், நீ இங்குவந்து சேர்வதற்கு ஸாதகமாயிருந்த அந்தத் திருமலைதன்னையும் சென்று ஸேவிக்க வேணுமென்று நான் காதல் கொண்டிருக்கின்றேனென்கிறுர்.

“கல்லருவி முத்துதிர” என்பதும் “ஓணவிழவிலொலியதிர” என்பதும் “வேங்கடவா” என்ற விளியின் ஏகதேசமான வேங்கடத்தில் விசேஷணமாக அந்வயிக்கக்கடவன. ‘உதிர’ ‘அதிர’ என்பவை வினையெச்சங்களாயினும் பெயரிலே அந்வயிக்குமென்க. எப்

போதும் பேரொலி செய்துகொண்டு வீழ்கின்ற அருவிகளிலே முத்துக்கள் உதிரப்பெற்றதும் (திருவேங்கடமுடையானுடைய திருவவதார நக்ஷத்திரமான) திருவோணத் திருவிழவில் மங்களாசாஸந த்வநிகள் மிகப்பெற்றதுமான திருவேங்கடம் என்கை. "பேணி வரு" என்பதும் திருவேங்கடத்திற்கு விசேஷணம்; பல திசைகளில் நின்றும் பலர் விரும்பிவந்து பணியப்பெற்ற தென்கை. இப்படிப்பட்ட திருமலையிலெழுந்தருளி யிருக்கும் பிரானே! நீ அத்திருமலையை விட்டு என்னுள்ளம் புகுந்தாய்; இனி நீ திருமலையில் இல்லையாயினும் 'நீ உகந்து வாழ்ந்தவிடம்' என்கிற காரணத்தினால் அத்திருமலைதன்னைச் சென்று காணவே நான் விரும்புகின்றேனென்றவாறு.

நானோ திருமலையில் வந்து உன்னைக் காணவிரும்பியிருக்கின்றேன்; நீயோ அங்கு நின்றும் என்னுள்ளத்தே வந்து உறைகின்றாய்; இனி நான் என்செய்வேன்! என்கிறாராகவுமாம்.

ஓணம்—'ச்ரோணா' என்ற வடசொல்லின் விகாரம். (சுக)

சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை *
நின்று வினைகெடுக்கும் நீர்மையால் *—என்றும்
கடிக்கமல நான்முகனும் கண்மூன்றத்தானும் *
அடிக்கமல மிட்டேத்து மங்கு. (சஉ)

(அன்பர்காள்!)

சேண் உயர் வேங்கடத்தை	மிகவும் ஓங்கின (சிகரத்தையுடைய) திருமலையை
சென்று வணங்குமின்	சென்று வணங்குங்கோள்;
(அத்திருமலையானது)	
நீர்மையால்	தன் ஸ்வபாவத்தினால்
நின்று வினை கெடுக்கும்	பாவங்களைப் போக்குவதில் நிலை நின்றிருக்கும்;
அங்கு	அத்திருமலையில்,
கடி கமலம் நான்முகனும்	பரிமளம் மிக்க தாமரையிற் பிறந்தவனான பிரமனும்
கண் மூன்றத் தானும்	முக்கண்ணனான சிவபிரானும்
என்றும்	எக்காலத்தும்
அடி	(எம்பெருமானது) திருவடிகளிலே
கமலம்	தாமரைப் புஷ்பங்களை
இட்டு	ஸமர்ப்பித்து
ஏத்தும்	துதித்துக்கொண்டிருப்பர்கள்.

* * *—அன்பர்கட்கு உபதேசிக்கிறார்; சென்னியோங்கு தண் திருவேங்கடத்தைச் சென்று வணங்குங்கள்; அத்திருமலைதானே உங்கள் பாவங்களை யெல்லாம் பாற்றிவிடும்; பிரமன் சிவன் முதலான தேவர்களும் தங்கள் தங்கள் அதிகாரம் பெறுவதற்காக அத்திருமலையிலே சென்று அப்பன் திருவடிகளிலே புஷ்பங்களை யிட்டிறைஞ்சித் துதிபாடிற்பர். ஆகையாலே நீங்களும் அங்கே சென்று வணங்குங்கோள் என்றவாறு.

சேண் உயர்—'சேண்' என்றாலும் உயர்த்தியே பொருள்; மீமிசைச் சொல். மிகவும் உயர்ந்த என்றபடி. **நீர்மையால்**—பாவங்களைப் போக்குவதே திருமலைக்கு ஸ்வபாவம் என்க. 'வேங்கடம்' என்னும் வடசொல்லின் நிருக்தி காண்க: தன்னையடைந்தவர்களது பாவமனைத்தையும் ஒழிப்பதனால் வேங்கடமெனப் பெயர் பெற்றதென்ப. **வேம்**—பாவம்; **கடம்**—எரித்தல் எனப்பொருள் காண்க. "வெங்கொடும் பவங்களெல்லாம் வெந்திடச் செய்வதால் நல், மங்கலம் பொருந்துஞ்சீர் வேங்கடமலையானதென்று" என்ற புராணச் செய்யுளுங் காண்க. .... (௪௨)

மங்குல்தோய் சேன்னி வடவேங்கடத்தானை *
கங்குல் புகுந்தார்கள் காப்பணிவான் *—திங்கள்
சடையேற வைத்தானும் தாமரை மேலானும் *
குடையேறத் தாம்குவித்துக் கோண்டு. (௪௩)

மங்குல் தோய் சென்னி	மேகமண்டலத்தளவுஞ் சென்று கிட்டியிருக்கிற சிகரத்தையுடைத்தான
வட வேங்கடத்தானை	வட திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு
காப்பு அணிவான்	திருவந்திக் காப்பிடுவதற்காக
திங்கள் சடை ஏற வைத்தானும்	சந்திரனைச் சடையிலே ஏற வைத்துக் கொண்டுள்ள சிவனும்
தாமரை மேலானும்	தாமரைப் பூவிற் பிறந்த பிரமனும்
தாம்	ஆகிய இவர்கள்
குடை ஏற குவித்துக் கொண்டு	திருமுத்துக்குடை முதலான உபகரணங்களைச் சேகரித்துக் கொண்டு
கங்குல்	ஸந்த்யா காலந்தோறும்
புகுந்தார்கள்	திருமலைக்குச் செல்லுவார்கள்.

* * *—இப்பாட்டில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ப்ராஹ்மருத்ரர்கள் திருமலையில் ஏதோவொருகால் வந்து ஆச்ரயித்துப் போமவர்களல்லர்; அந்திதோறும் புகுந்து திருவந்திக்காப்பிடுவரென்கிறார். கங்குல் என்ற சொல் இரவுக்கு வாசகமாயினும் இரவின் முகமான அந்திப்பொழுதைச் சொல்லக்கடவதிங்கு.

திங்கள் சடையேற வைத்தானும்=தக்ஷமுனிவனது சாபத்தால் க்ஷயமடைபவனாய்க் கலைகுறைந்து வந்து சரணமடைந்த சந்திரனை முடியின்மீது கொண்டு வரமளித்துப் பாதுகாத்ததனால் சிவன் ‘ தளிர் மதிச் சடையன் ’ என்றும் ‘ சந்த்ரமௌளி ’ என்றும் பெயர் பெற்றனனென்க.

ஈற்றடியில், திருவாராதனத்திற்கு உபகரணமான குடையொன்றைச் சொன்னது—மற்றும் சாமரம் முதலிய உபகரணங்கட்கும் உபலக்ஷணமென்க.

இரண்டாமடியில் ‘ **புகுந்தார்கள்** ’ என்று இறந்தகாலமாகச் சொல்லப்பட்டிருந்தாலும், ‘ நித்யமாகப் புகுந்துகொண்டிருக்கின்றனர் ’ என்று நிகழ்காலப் பொருள் கொள்ளக் குறையில்லை; “ விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும், பிறழவும் பெறூஉ முக் காலமுமேற்புழி ” என்ற நன்னூற் சூத்திரமுணர்க.

அணிவான்—வான்விகுதி பெற்ற வினையெச்சம். .... (௪௩)

கோண்டு குடங்கால்மேல் வைத்த குழவியாய் *
தண்ட வரக்கன்தலை தாளால்—பண்டெண்ணி *
போம்குமரன் நிற்கும் பொழில்வேங்கட மலைக்கே *
போம்குமர ருள்ளீர் புரிந்து. (௪௪)

குமரர் உள்ளீர்	இளவொளி யிளமை கெடாமலிருப்பவர்களே !,
பண்டு	முன்பொருகால்,
குடங்கால் மேல்	மடியிலே
கொண்டு வைத்த குழவி ஆய்	எடுத்து வைக்கும் சிறு குழந்தையாய்க் கொண்டு
தண்டம் அரக்கன்	தண்டிக்கத் தகுந்தவனான இராவணனுடைய
தலை	பத்துத் தலைகளையும்
தாளால்	திருவடியாலே
எண்ணி	கீறி எண்ணிக் காட்டிவிட்டு

போம்	அந்தர்த்தான மடைந்தவனுன	பொழில் வேங்கடம் மலைக்கே	சோலைகள் சூழ்ந்த திருமலைக்கே
குமரன்	நித்யயுவாவான எம்பெருமான்	புரிந்து போம்	ஆசைகொண்டு செல்லுங்கோள்.
நிற்கும்	நிற்குமிடமான		

* * *—இப்பாட்டில் அநுஸந்திக்கப்பட்டிருக்கிற பழங்கதை முதல்திருவந்தாதியில் 'ஆமேயமரர்க்கறிய' என்ற ஐம்பத்தைந்தாம் பாட்டிலும், மூன்றாந் திருவந்தாதியில் "ஆய்ந்தவரு மறையோன்" என்ற எழுபத்தேழாம் பாட்டிலும் பொய்கையாழ்வாராலும் பேயாழ்வாராலும் அநுஸந்திக்கப்பட்டிருக்கிறது. முன்பு இராவணன் தனது பத்துத்தலைகளை மறைத்துக்கொண்டு நான்முகனிடஞ்சென்று வரம் வேண்டிக் கொள்ளுமளவில் எம்பெருமான் ஒரு சிறு குழந்தைவடிவாய் அப்பிரமனுடைய மடியிலே உறங்குவான் போலே கிடந்து 'இவன் பத்துத்தலைகளையுடைய இராவணன் காண்; ஸ்வஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டு உன்னை வந்தித்து வரம் வேண்டிக்கொள்ள வந்திருக்கிறான்; இவனுக்கு நீ வரமளித்தால் பெருந்தீங்காக முடியும்' என்று தெரிவிப்பவன் போன்று தன் திருவடியால் அவ்விராவணனுடைய பத்துத் தலைகளையும் எண்ணிக் காட்டினன்—என்பதாக இவ்வரலாறு விளங்குகின்றது; இக்கதை இதிஹாஸ புராணங்களில் உள்ளவிடம் தெரியவில்லை: பெரியாழ்வார்திருமொழியில் "சேமவிகனவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமாறவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலை கொண்டாய்" (2—7—8.) என்றும், "எல்லியம் போதினி திருத்தலிருந்த் தேரிடவகையில், மல்லிகைமாமாலை கொண்டங்கார்த்ததுமோரடையாளம்" (3—10—2.) என்றும் அருளிச்செய்த கதைகள் வ்யாஸர் வால்மீகி முதலிய முனிவர்களால் ஸாக்ஷாத்கரிக்கப்படாமல் ஆழ்வாரால் மாத்திரம் நிர்ஹேதுக கடாக்ஷமடியாக ஸாக்ஷாத்கரிக்கப் பட்டவை யென்று நம் பூருவாசாரியர்கள் $ நிர்வஹித்திருப்பது போலவே இக்கதையும் ஆழ்வார்களால் மாத்திரம் ஸாக்ஷாத்கரிக்கப் பட்டதென்று பெரியோர் கூறுவர். இனி இதற்கு இதிஹாஸ

$ பெரியாழ்வார் திருமொழி 5—4—6 பாட்டின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் காண்க.

புராணங்களில் ஆகர முண்டேல் கண்டு கொள்க; விரியும் வல்லார் வாய்க் கேட்டுணர்க.

இப்படிப்பட்ட எம்பெருமான் நின்றருளும் திருவேங்கட மலைக்கே விரும்பிச் சென்று சேருங்கள் என்றாராயிற்று. வயது முதிர்ந்த பின்பு * தண்டுகாலா வூன்றி வூன்றித் தள்ளிநடக்கும் முதுமையில் திருமலையை நெஞ்சால் நினைக்கவும் முடியாததலால் கிளரொளியிளமை கெடுவதன் முன்னம் திருமலைக்குப் போகவேணு மென்கிறார் ' **குமரருள்ளீர் !**' என்ற விளியால். .... (சச)

> புரிந்து மலரிட்டுப் புண்டரீகப் பாதம் *
> பரிந்து படுகாடுநிற்ப *—தெரிந்தெங்கும்
> தானோங்கி நிற்கின்றான் தண்ணருவி வேங்கடமே *
> வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு. (சரு)

புண்டரீகம் பாதம்	திருவடித் தாமரைகளில்	தெரிந்து	விளங்கி
புரிந்து	அன்புபூண்டு	தான் ஓங்கி நிற்கின்றான்	குணங்களால் பெருமை பெற்று எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுடையதாய்
மலர் இட்டு	புஷ்பங்களைப் பணிமாறி		
பரிந்து	மங்களாசாஸநம் பண்ணி	தண் அருவி வேங்கடமே	குளிர்ந்த அருவிகளையுடைத்தான திருமலையே
படு காடு நிற்ப	வெட்டி வீழ்த்த மரங்கள் போலே கால்பேராமல் நிற்கும்படியாக	வானோர்க்கும்	நித்யஸூரிகளுக்கும்
		மண்ணோர்க்கும்	நிலத்தேவரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும்
எங்கும்	ஸகல ப்ரதேசங்களிலும்	வைப்பு	நிதியாயிருக்கும்.

* * *—திருமலை இந்நிலத்திலுள்ள ஸம்ஸாரிகளுக்கு மாத்திரம் ப்ராப்யமன்று; வானுலகத்துள்ள நித்யஸூரிகளுக்கும் ப்ராப்யமென்கிறார்.

ஆதரத்துடன் திருவடித்தாமரைகளில் புஷ்பங்களைப் பணிமாறி ' பல்லாண்டு பல்லாண்டு' என்றும் '**ஜிதம் தே புண்டரீகாக்ஷ!**' என்றும் மங்களாசாஸநம் பண்ணி, கால்பெயர்ந்து வெளியில் போக மாட்டாமல் அவ்விடத்திலேயே அன்பர் குடிகொண்டிருக்கும்படியாகக் கடாக்ஷித்தருள்கின்ற ஸ்ரீநிவாஸன் நித்யவாஸம் பண்ணுமிட

மாய், குளிர்ந்த அருவிகள் பாய்ந்து போக்யமான திருவேங்கடங் மலை நித்யஸூரிகளோடு ஸம்ஸாரிகளோடு வாசியற அனைவர்க்கும் புகலிடமா யிருக்கின்றது என்றதாயிற்று.

பரிந்து=பரிவாவது பயசங்கை பண்ணுதற்கு இடமல்லாத விடத்தில் பயசங்கைபண்ணி அன்பு பாராட்டுதல்: காப்பிடுதலைச் சொன்னபடி.

படுகாடுநிற்ப=படுகாடுபோல் நிற்கும்படியாக என்றபடி: உவம வுருபு தொக்கிக்கிடக்கிறது; வெட்டித்தள்ளப்பட்ட மரங்களைப் **படு காடு** என்கிறது. அதுபோல் நிற்கும்படியாக வென்றது—அம்மரங் கள் ஆடாது அசையாது அவ்விடத்திலேயே கிடப்பதுபோல் கிடக் கும்படியாக என்றவாறு. **வைப்பு**-நிதி; பூமிக்குள் புதைத்துவைக்கப் படுவது என்று காரணக்குறி. நிதிபோல் விரும்பத் தகுமென்கை.

வைப்பன் மணிவிளக்கா மாமதியை * மாலுக்கென்
றெப்பொழுதும் கைநீட்டும் யானையை *—எப்பாடும்
வேடுவளைக்கக் குறவர் வில்லெடுக்கும் வேங்கடமே *
நாடுவளைத் தாடுமேல் நன்று. (சசு)

மா மதியை	'சிறந்த (இந்த) சந்திரனை
மாலுக்கு	திருவேங்கட முடையானுக்கு
மணி விளக்கு ஆ	மங்களதீபமாக
வைப்பன் என்று	(திருமுன்பே) வைக்கக்கடவேன்' என்றெண்ணி
(அந்த சந்திரனைப் பிடிப்பதற்காக)	
எப்பொழுதும்	எப்போதும்
கை நீட்டும்	உயரத்தூக்கின கை தூக்கினபடியே யிருக்கிற
யானையை	ஒரு யானையை (ப்பிடிப்பதற்காக)
எப்பாடும்	நாற்புறமும்
வேடு வளைக்க	வேடர் சூழ்ந்து கொள்ள
குறவர்	(அங்குள்ள) குறவர்கள்
வில் எடுக்கும்	(அவ்யானையின் மேல்பிரயோகிக்க) வில்லை எடுத்துக் கொண்டு போகுமிடமான
வேங்கடமே	திருமலையையே
நாடு	நாட்டிலுள்ளா ரனைவரும்
வளைத்து	பிரதக்ஷிணம் பண்ணி
ஆடுதும் எல்	(மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாக) நர்த்தனம்பண்ணப் பெற்றால்
நன்று	நல்லது.

* * *—திருமலையில் நிகழும் ஒரு நிகழ்ச்சியை வருணிக்கின்றது இதில். ஆகாயத்திலே அழகிய விளக்குப்போல் தோன்றும் சந்திரனைக் கண்ட ஒரு யானையானது 'இதனை நமது துதிக்கையினால் பிடித்தெடுத்து ஸ்ரீநிவாஸன் ஸந்நிதியில் நந்தாவிளக்காக வைத்திட்டால் நன்றாயிருக்கும்' என்று கருதி அச்சந்திரனைப் பிடிப்பதற்காக நீட்டின கை நீட்டினபடியே யிருக்கையில் அவ்யானையின் நோக்கமெல்லாம் சந்திரனைப் பிடிப்பதாகிற அக்காரியமொன்றிலேயே ஊன்றியிருந்ததனால் அந்த அநவதானத்தையே பற்றாசாகக்கொண்டு தேவர்கள் மெல்ல அருகில்வந்து வளைத்துக்கொள்ள, குறவர் அம்புதொடுக்கின்றனராம்; ஆகஇப்படிப்பட்ட நிகழ்ச்சிக்கு இடமான திருமலையை நாமெல்லாரும் வலம் வந்து மகிழ்ந்து கூத்தாடுவோமாயின் இதுவே நமக்கு ஸ்வரூபம் என்றதாயிற்று.

திருமலை சந்திரமண்டலத்தை எட்டியிருக்கின்றதென்று அதன் ஓக்கம் வெளியிடப்பட்டதாயிதனால். மலைகளில் சந்திரனை மிக்க ஸமீபத்திலிருப்பதாகக் காணும் மலைப்பிராணிகள் அவனைக் கைக்கொள்ளவிரும்பிப் பல முயற்சிகள் செய்வது இயல்பு; 1. "நஞ்சுமிழ் நாகமெழுந்தணவி நளிர்மாமதியைச், செஞ்சுடர் நாவளைக்குந் திருமாலிருஞ்சோலையதே" என்றதுங்காண்க.

மாமதியை மாலுக்கு மணிவிளக்கா வைப்பன் என்று கை நீட்டும் யானையை என்கிறாரே ஆழ்வார்; யானை சந்திரனைப்பிடிக்க முயற்சிசெய்வது வெளிக்குத் தெரியுமேயன்றி இன்ன காரியத்திற்காக அதனைப்பிடிக்க முயல்கிறது என்பது தெரியமாட்டாதே; திருமலையப்பனுக்கு நந்தாவிளக்காக வைப்பதற்குப் பிடிக்கமுயல்கின்றதென்று ஆழ்வார் எங்ஙனே அறிந்தார்? என்று சிலர் கேட்கக்கூடும்; திருமலையில் பிறக்கப்பெற்ற பெருமையினால் அவ்யானைக்கு இப்படிப்பட்ட நற்கருத்தே இருக்கத்தகும் என்று திருவுள்ளம் பற்றினரென்க. அன்றியும், 2. "வாயுந்திரையுகளும்" என்கிற திருவாய்மொழியிற்படியே பிறர் செய்யும் காரியங்களையெல்லாம் தாம் செய்யுங் காரியங்கள்போல் பகவத்விஷய ப்ராவண்யத்தால் செய்வனவாகவே கொள்வதும் மெய்யன்பர்களின் வழக்கமாகும்.

---

1. பெரியாழ்வார் திருமொழி 4—3—2.
2. திருவாய்மொழி இரண்டாம்பத்தின் முதற்பதிகம்.

ஆழ்வார் சந்திரனைப்பார்க்கும்போது 'இவன் திருவேங்கடமுடையானுக்கு நந்தாவிளக்காக அமையத்தகும்' என்று தோன்றவே, இத்தோற்றமே அவ்விடத்து யானைக்கும் இருந்ததாகக் கொண்டு கூறுதல் பொருந்தியதே.

ஈற்றடியில் "ஆடுதுமேல்" "ஆடுதிரேல்" என்பன பாடபேதங்கள். .... (சசு)

நன்மணி வண்ணனூர் ஆளியும் கோளரியும் *
பொன்மணியும் முத்தமும் பூமரமும் *—பன்மணிநீ
ரோடுபொருதுருளும் கானமும் வானரமும் *
வேடுமுடை வேங்கடம். (சஎ)

ஆளியும்	யாளிகளும்
கோள் அரியும்	வலிமை தங்கிய சிங்கங்களும்
பொன்	பொன்களும்
மணியும்	மாணிக்கங்களும்
முத்தமும்	முத்துக்களும்
பூ மரமும்	பூத்தமரங்களும்
பல் மணி நீரோடு பொருது உருளும் கானமும்	பலவகைப்பட்ட ரத்னங்கள் அருவிகளோடே கலந்து உருண்டு விழப்பெற்ற காடுகளும்

வானரமும்	குரங்குகளும்
வேடும்	வேடச்சாதியுமாகிற இவற்றை
உடை	உடையதான
வேங்கடம்	திருமலையானது
நல் மணி வண்ணன் ஊர்	நல்ல நீலரத்னம் போன்ற வடிவையுடையனை அப்பனுடைய வாஸஸ்தானமாம்.

* * *—திருமலையி லெழுந்தருளியிருக்கின்ற திருவேங்கடமுடையான் தமக்கு எப்படி உத்தேச்யனோ அப்படியே அவ்விடத்துள்ள ஸகல பதார்த்தங்களும் உத்தேச்யம் என்பது வெளிப்பட இப்பாசுர மருளிச்செய்கிறாரென்க.

யாளிகள், சிங்கங்கள், நவரத்னங்கள், புஷ்பவ்ருக்ஷங்கள், நவமணிகளைக் கொழித்துக்கொண்டு வந்து வீழ்கின்ற அருவிகள் பாயப்பெற்ற காடுகள், குரங்குகள், வேடர்கள் ஆகிய இவையெல்லாவற்றையு முடைத்தான திருமலை மணிவண்ணனுடைய திருப்பதி என்கை. .... (சஎ)

12

வேங்கடமே விண்ணோர்தொழுவதுவும் * மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய்தீர்ப்பதுவும் *—வேங்கடமே
தானவரை வீழத் தன்னாழிப்படை தொட்டு *
வானவரைக் காப்பான் மலை. (௪௮)

விண்ணோர்	நித்யஸூரிகளால்	வேங்கடமே	திருமலையே ;
மெய்ம்மையால்	உண்மையான பக்தியுடனே	தானவர் வீழ	அசுரர்கள் மாளும்படி
தொழுவதுவும்	ஆச்ரயிக்கப் படுவதும்	தன் ஆழி படைதொட்டு	தனது சக்ராயுதத்தைப் பிடித்து
வேங்கடமே	திருமலையே ;	வானவரை	தேவர்களை
வினை	பாவங்களையும்	காப்பான்	காத்தருளும் எம்பெருமானுடைய
மெய் நோய்	உடம்பைப் பற்றின நோய்களையும்	மலை	திருமலை
தீர்ப்பதுவும்	போக்கடிக்கவல்லதும்	வேங்கடமே	திருவேங்கடமேயாம்.

* * *—"ஸதா வஶ்யந்தி ஸூரய:" என்கிறபடியே நித்ய ஸூரிகள் பரமபதத்திலே எம்பெருமானை இடைவிடாது அநுபவிக்கப்பெற்றாலும் அங்கே பரத்வத்திற்கு உரிய மேன்மைக்குணங்களை அநுபவிக்கலாயிருக்குமேயன்றி ஸௌலப்யஸௌசீல்யங்களுக்குப்பாங்கான எளிமைக்குணங்களை இந்நிலத்திலே வந்து அநுபவிக்கவேண்டியிருப்பதால் அந்த சீலாதிகுணங்களை யநுபவிப்பதற்காகத் திருமலையில் வந்து தொழும்படியைக் கூறுவது முதலடி.

'**வேங்கடம்**' என்ற திருநாமத்தின் அவயவார்த்தத்தைத் திருவுள்ளம்பற்றி இரண்டாமடி அருளிச்செய்யப்பட்டது. வேங்கட பதத்திற்கு ஸம்ஸ்க்ருதநிருக்தியில் பொருள் விவரிக்குமிடத்து, **வேம்**—பாவம், **கடம்**--எரித்தல்; பாவங்களை எரிப்பதனால் வேங்கடமென்று பெயர் பெற்றது என்று நிருக்தியுள்ளது: "**வெதித்யஶெஷவாவாநி கடதாஹ உஸ்யதெ**" என்றது காண்க. "வெங்கொடும் பவங்களெல்லாம் வெந்திடச்செய்வதால் நல், மங்கலம் பொருந்துஞ் சீர் வேங்கடமலை யானதென்று" என்னும் புராணச் செய்யுளு முணர்க. திருமலையின் மேற்கிலுள்ள நந்தபுரமென்னும் ஊரில் புரந்தரனென்னும் ப்ராஹ்மணோத்தமனது குமாரனாகிய மாதவ

னென்பவன் தன் மனைவியாகிய சந்த்ரரேகையென்பவளோடு பூஞ்சோலையிற் சென்று விளையாடிக்கொண்டிருக்கையில் மாலினி யென்பாளொரு சண்டாள கன்னிகையின் கட்டழகைக்கண்டு காமுற்று அவளைக்கூடி மனையாளைத் துறந்து அப்புலைமங்கையுடனே சென்று புலால்நுகர்ந்தும் கட்குடித்தும் கைப்பொருள் முழுவதை யும் இழந்து பின்பு வழிபறித்தல் உயிர்க்கொலை முதலிய கொடுந் தொழில்புரிந்து பொருள்சேர்த்து அவளுக்குக் கொடுத்துவந்து முடிவில் தரித்ரனாகிப் பலநோய்களையுமடைந்து அவளால் அகற்றப் பட்டவனாய்ப் பல பாவமுந்தொடரப் பித்தன்போல அலைந்து திரிந்து இத்திருமலையை அடைந்தமாத்திரத்தில் தனது தீவினை யெல்லாம் சாம்பலாகப்பெற்று முன்னைய ப்ரஹ்மதேஜஸ்ஸைப் பொருந்தி நல்லறிவுகொண்டு திருமாலைச்சேவித்து வழிபட்டுப் பரமபதமடைந்ததனால் இதற்கு 'வேங்கடாசலம்' என்னும் பெயர் நிகழ்ந்ததென்று வடமொழியில் ப்ரஹ்மாண்ட புராணத்திலும் பவிஷ்யோத்தர புராணத்திலும் கூறப்படுதல் காண்க. இங்ஙனே பல இதிஹாஸங்களுண்டு. திருமலை நோய்தீர்க்கும் விஷயம் இப்போதும் ப்ரத்யக்ஷமாக அனைவருங் காணத்தக்கதாம்.

தேவஜாதிக்கு அஸுரஜாதியால் நேருந் துன்பங்களைத் திரு வாழியால் தொலைத்துக் காத்தருளும்பெம்பெருமான் அப்படியே நம்போன்ற ஆச்ரிதர்களினுடையவும் துன்பங்களைத் தொலைத்தருள எழுந்தருளியிருக்குமிடம் திருமலை என்பன பின்னடிகள்.

தானவர்—வடசொல். ஐ—சாரியை. .... (சஅ)

மலையாமைமேல்வைத்து வாசுகியைச்சுற்றி *
தலையாமை தானொரு கைபற்றி *—அலையாமல்
பீறக்கடைந்த பெருமான் திருநாமம் *
கூறுவதே யாவர்க்கும் கூற்று. (சகூ)

மலை	மந்தரபர்வதத்தை	ஆமைதான்	கூர்மரூபியாகத் திருவவதரித்த தானே
ஆமை மேல் வைத்து	கூர்மரூபியான தன்மேல்வைத்து		
வாசுகியை	வாஸுகிநாகத்தை	ஒரு கை பற்றி	(மலையினுச்சியை) ஒருகையாலே பிடித்தமுக்கி
சுற்றி	(கடை கயிறாகச்) சுற்றி		

அலையாமல்	நீர் வெளியில் புரளாமல்	திருநாமம்	திருநாமங்களை
பீற	(அமுதம்) புறப்படும் படியாக	கூறுவதே	வாய்விட்டுச் சொல்லுவதே
கடைந்த	(கடலைக்) கடைந்தருளின	யாவர்க்கும்	அனைவர்க்கும்
பெருமான்	எம்பெருமானுடைய	கூற்று	வாய்ப்பேச்சாகக் கடவது.

* * *—கீழ்ப்பாட்டில் "வானவரைக் காப்பான்மலை" என்றார்; அப்படி வானவரைக் காத்தருள்வதற்காகச் செய்தருளின செயல்களில் ஒன்றை அருளிச்செய்கிறார் இதில்.

துர்வாஸமாமுனிவர் தேவேந்திரனுக்கு அன்புடன் அளித்திட்ட பூமாலையை அவன் அலக்ஷியஞ் செய்ததுகண்டு 'இப்படி செல்வச்செருக்குற்ற உன்னுடைய செல்வமெல்லாம் கடலில் ஒளிந்து போகக்கடவன' என்று சபிக்கவே, அப்படியே போய்விட, அசுரர் வந்து பொருது அமரை வென்றுவிட்டனர். பிறகு தேவர்களெல்லாரும் திரண்டுவந்து எம்பெருமானைச் சரணமடைய, திருமால் திருவருள்கூர்ந்து கடல்கடைந்து அமுதமளித்து வாழ்வித்தனன் என்பது பிரஸித்தம். அப்போது மந்தரமலையை மத்தாகநாட்டி வாஸுகியென்னும் நாகத்தைக் கடைகயிறாகப் பூட்டிக்கடைந்தனன். மத்தாகிய மந்தரமலை கடலினுள்ளே அழுந்திவிட, தேவர்கள் வேண்டுகோளினால் திருமால் பெரியதோர் ஆமை வடிவமெடுத்து அம்மலையின்கிழே சென்று அதனைத் தனது முதுகின்மீதுகொண்டு தாங்கி அம்மலை கடலில் அழுந்திவிடாமற் கடைதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்தனன் என்பதும் அறியத்தக்கது.

"**தலையாமை தானொருகைபற்றி**" என்ற இரண்டாமடியை 'ஆமை *(யான) தான் ஒருகை தலைபற்றி' என்று அந்வயித்து உரைப்ப. முதலில் கடல் கடையும்போது வாஸுகியின் வாலைப் பிடித்துக்கொண்ட தேவர்களும் தலையைப் பிடித்துக்கொண்ட அசுரர்களும் ஆகிய இருதிறத்தாரும் அதனை வலியப்பிடித்திழுத்துக்கடைய வல்லமையில்லாதவராய்நிற்க, அது நோக்கி அத்திருமால் தான் ஒரு திருமேனியைத்தரித்துத் தேவர்கள் பக்கத்திலும் வேறொரு திருமேனியைத்தரித்து அசுரர்பக்கத்திலும் நின்று

நடந்தருளினமை கூறப்படுகின்றதென்க. மேலே சொன்னதன்றியாத படி மலையினுச்சியை ஒரு கையா லமுக்கினபடியைக் கூறுகின்ற தென்றனுமாம்.

ஆகவிப்படி பரோபகாரமே போதுபோக்கான பெருமா னுடைய திருநாமங்களை வாயாரக் கூறுவதே வாய்படைத்த பலனாகு மென்றாராயிற்று. .... (௪௯)

கூற்றமும்சாரா கொடுவினையும் சாரா * தீ
மாற்றமும் சாராவகையறிந்தேன் *—ஆற்றங்
கரைகிடக்கும் கண்ணன் கடல்கிடக்கும் * மாயன்
உரைகிடக்கு முள்ளத்தெனக்கு. (௫௦)

கடல்	திருப்பாற் கடலிலே	எனக்கு	என்னுடைய
கிடக்கும்	(பிரமன் முதலியோர்க்கு ஆச்ரயணீயனாய்க் கொண்டு) திருக்கண்வளர்ந்தருள்கிற	உள்ளத்து	நெஞ்சிலே
		கிடக்கும்	பதிந்திருக்கின்றது ;
		(ஆனபின்பு)	
மாயன்	ஆச்சரியபூதனாய்	கூற்றமும் சாரா	மிருத்யுபயம் அணுகாமலும்
ஆறு கரை	திருக்காவேரிக் கரையான கபிஸ்தலத்திலே	கொடு வினையும்சாரா	கொடிய பாவங்கள் அணுகாமலும்
கிடக்கும்	திருக்கண் வளர்ந்தருள்கிற	தீ மாற்றமும் சாரா வகை	கெட்ட விஷயங்களொன்றும் அணுகாமலிருக்கத் தக்க உபாயத்தை
கண்ணன்	எம்பெருமானுடைய		
உரை	ஸ்ரீஸூக்தியாகிய சரமச்லோகம்	அறிந்தேன்	அறிந்தவனானேன்.

* * *—"**ஆற்றங்கரை கிடக்குங்கண்ணன்**" என்று திருக்காவேரியின் கரையிலுள்ள **கபிஸ்தல** மென்னுந் திருப்பதியிற் பள்ளிகொண்ட திருக்கோலமான எம்பெருமானை மங்களாசாஸநஞ் செய்வதாகப் பூர்வாசாரியர்கள் அருளிச்செய்வர். அத்திருப்பதிக்குப் பாடலான பாசுரம் நாலாயிரத் திவ்யப்ரபந்தங்களுள் இஃதொன்றேயாம். இப்பாசுரத்தில் **கபிஸ்தல** மென்கிற திருநாமம் ஸ்பஷ்டமாக இல்லையாயினும் ஆழ்வார் திருவுள்ளக்கருத்தைக் கண்டறிந்து கூறும் பேராற்றலுடைய ஸ்ரீமந்நாதமுனிகள் ஆள

வந்தார் எம்பெருமானார் பட்டர் முதலான ஆசாரியர்கள் இத் திருக்கவித்தலத்தை நோக்கின பாசுரமேயாகுமென்று நிர்வஹித்து வந்தார்களென்பது பெரியவாச்சான் பிள்ளைக்கு முற்பட்டவரான பிள்ளைப் பெருமாளையங்காராலும் தமது நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதியினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. "காணியு மில்லமுங் கைப்பொருளுமீன்றோரும், பேணிய வாழ்க்கையும் பேருறவும்—சேணிற், புவித்தலத்தினின்பமும் **போங்கரவமேறிக், கவித்தலத்திற் கண்டுயில்வோன்** கால்" என்கிற செய்யுள் அவ்வந்தாதியிலுள்ளது. * பதின்மருரைத்த பதிபொரு நூற்றெட்டுந் துதிசெய்யப்பிறந்த அவ்வந்தாதியில் கபிஸ்தல விஷயமான இப்பாசுரம் சேர்ந்துள்ளதனால் "**ஆற்றங்கரைகிடக்குங் கண்ணன்**" என்கிற இத்திருமழிசைப்பிரான் பாடல்கொண்டே அது கூறினர் என்பது விளங்கிற்றும்.

பிரமன் முதலிய தேவர்களுக்கு ஆச்ரயணீயனைக்கொண்டு திருப்பாற்கடலில் திருக்கண் வளர்ந்தருள்பவனே திருக்கவித்தலத்தில் ஸந்நிதிபண்ணியிரா நின்றான்; இப்பெருமானே பண்டொருகால் பாரதப்போரில் தேர்த்தட்டில் நின்று அர்ஜுநனை வியாஜமாகக்கொண்டு அனைவர்க்கும் உஜ்ஜீவநமாக "**ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ। அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:.**" என்கிற சரமச்லோகத்தை யருளிச்செய்தனன்; அந்த திவ்யஸூக்தி எனது நெஞ்சிற் பதிந்திருப்பதனால் இனி நான் ஒருவகையான கெடுதலையும் அடைய வழியில்லை என்றாராயிற்று.

கண்ணபிரான் சரமச்லோகத்தில் நியமித்தபடியே ஸர்வ தர்ம பரித்யாக பூர்வகமாய்ச் சரணாகதி பண்ணினவர் பக்கலில் '**ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**' என்கிற தன்னுடைய பிரதிஜ்ஞை தவறமாட்டாதவனாகையாலும், அப்படியே நான் நிவ்ருத்தி தர்ம நிஷ்டனாயிருப்பதாலும் இனி ஒருபாபமும் என்னை யணுகப்ராப்தி யில்லை யென்றவாறு. .... (௫௰)

எனக்காவா ராரொருவரே * எம்பெருமான்
தனக்காவான் தானேமற்றல்லால் *—புனக்காயா
வண்ணனே யுன்னைப் பிறரறியார் * என்மதிக்கு
விண்ணெல்லா முண்டோ விலை. (௫௧)

புனம்	தன்னிலத்திலே வளர்கிற
காயா	காயாம்பூவினுடைய
வண்ணனே	நிறம்போன்ற நிறமுடைய பெருமானே !,
எனக்கு	(உன்னுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்திற்குப்பாத்ர பூதனன) எனக்கு
ஆவார் ஆர் ஒருவரே	ஒப்பாகுபவர் எவரொருவ ரிருக்கின்றனர் ?
[எவருமில்லை ;]	
எம் பெருமான்	ஸர்வேச்வரனாகிய நீயும்

தானே தனக்கு ஆவான் அல்லால்	தனக்குத் தானே ஒப்பா யிருப்பவனே யன்றி
மற்று	எனக்கு ஒப்பாக வல்லையோ ?
உன்னை பிறர் அறியார்	நான் தவிர வேறொருவரும் உன்னை யறிய மாட்டார்கள் ;
என் மதிக்கு	(உன்னை நன்றாக அறிந்திருக்கிற) என்னுடைய புத்திக்கு
விண் எல்லாம் விலை உண்டோ	மேலுலக மெல்லாம் கூடினாலும் ஒப்பாகப் போருமோ ?.

* * *—தேவரீர் சரமச்லோகத்தி லருளிச்செய்தபடி புறம்புண்டான உபாயங்களை ருசிவாஸனைகளோடே விட்டொழிந்து தேவரீரையே உபாயமாகப்பற்றி நிர்ப்பரனாயும் நிர்ப்பயனாயுமிருக்கிற எனக்கு உபயவிபூதியிலும் ஒப்பாவார் ஆருமில்லை யென்கிறார்.

எனக்கு=யானையின்மே லேறவேண்டியவன் அவ்யானையின் காலைப்பற்றியே ஏறவேண்டுவதுபோல உன்னை அடையவேண்டியவன் உன்னையே உபாயமாகப்பற்றித்தான் அடைய வல்லான் என்கிற அநந்யோபாயத்வ அத்யவஸாயமுடையேனான எனக்கு என்கை. **ஆவார் ஆரோருவரே ?**=உலகத்திலுள்ளா ரெல்லாரும் ஸ்வப்ரயத்நங்கொண்டே காரியங்கொள்ளப் பார்ப்பவர்களாதலால் என்னுடைய அத்யவஸாயம் ஆர்க்குமில்லை ; ஆகவே எனக்கு ஒப்பாவார் ஆருமில்லை. **எம்பெருமான் தனக்காவான் தானேமற்றல்லால்**=எம்பெருமானும் ‘ நானே ஸர்வரக்ஷகன் ’ என்றிருப்பதனால் அவனைப்போன்ற ரக்ஷகன் வேறொருவனு மில்லாமையால் ரக்ஷகத்வத்தில் தனக்குத்தானே ஒப்பாகுமவனேயன்றி, சேஷத்வ பாரதந்திரிய காஷ்டையில் நிற்குமெனக்கு ஒப்பாவானல்லன். சேஷியாயிருக்குந் தன்மையிற்காட்டிலும் சேஷபூதனா யிருக்குந்

தன்மை சிறந்ததாதலால் அப்படிப்பட்ட அடிமைச்சுவடு எனக்கே அஸாதாரணமாயிருப்பதால் எம்பெருமானிலும் நான் மேற்பட்டவன் என்றவாறு. இப்படி எம்பெருமானது அடிமையிலீடுபட்டு அதன் மூலமான செருக்கைக் கொள்ளுதல் ¶ அடிக்கழஞ்சு பெறுதலால்தான் "எனக்கினியார் நிகர் நீணிலத்தே" எனறும் "எனக்காரும் நிகரில்லையே" என்றும் மற்றையோரு மருளிச்செய்வது. இவ்வஹங்காரம் ஹேயமன்று; உபாதேயமாம். ஸாத்விகாஹங்காரமெனப்படும்.

புனக்காயா வண்ணனே உன்னைப்பிறரறியார் = உபயவிபூதியிலும் தமக்கு ஒப்பாவாரருமில்லையென்று முன்னடிகளிற் சொன்னதை உபபாதிப்பன பின்னடிகள். தனக்குரிய நிலத்தில் தோன்றிய காயாம்பூவின் நிறம்போன்றழகிய நிறங்கொண்ட பெருமானே! நான் தவிர உன்னை உள்ளபடியறிவாரார்? எல்லாரும் உன்னைக்கொண்டு வேறு புருஷார்த்தங்களை ஸாதித்துக்கொள்ளப் பார்ப்பவர்களேயன்றி உன்னையே ஸகல புருஷார்த்தமுமாகக்கொள்வாராருமில்லையே; உனது வடிவழகிலீடுபடுவாருமில்லையே; உலகத்தாருடைய புத்தியைப் போன்றதோ என்னுடைய புத்தி? மேலுலகத்திலுள்ளார்க்கும் அரிதான புத்தியன்றோ என்னுடையது. இப்படி விலக்ஷணமான புத்தியைப்பெற்ற நான் ஒப்பற்றவன் என்னத்தட்டுண்டோ? என்கை.

இந்நிலத்திலுள்ளவர்கள் உன்னையே பரமப்ரயோஜநமாகக் கொள்ளாமல் அற்பபலன்களை நச்சி அவற்றுக்கு உபாயமாக உன்னைப்பற்றுமவர்களாகையாலே இவர்கள் உன்னுடைய உபேயத்வாகாரத்தை அறிந்திலர்; அங்குள்ள நித்யஸூரிகளோவென்னில் பலன் கைபுகுந்தவர்களாகையாலே உன்னுடைய உபேயத்வாகாரத்தை அறிந்தவர்களேயன்றி உபாயத்வாகாரத்தைச் சிறிதுமறிந்தவர்களல்லர்; நானோவென்னில், உன்னையே பரமபுருஷார்த்தமாகக் கொண்டவனாகையாலும் உன்னைப்பெறுதற்கு உபாயமும் நீயேயென்றிருப்பவனாகையாலும் உன்னுடைய உபாயோபேயத்வாகாரங்களிரண்டையும் நன்கறிந்தவனாகிறேன்; ஆகையாலே எனக்கு உபயவிபூதியிலும் நிகரில்லை—என்றது நன்கு பொருந்தும்.

¶ அடிக்கழஞ்சு பெறுதல்—மிகச்சிறந்ததாயிருத்தல்.

விலைக்காட்படுவர் விசாதியேற்றுண்பர் *
தலைக்காட்பலிதிரிவர் தக்கோர் *—முலைக்கால்
விடமுண்டவேந்தனையே வேறு வேத்தாதார்
கடமுண்டார் கல்லாதவர். (ருஉ)

- தக்கோர் — அறிவு முதலியவற்றால் பெருமை பொருந்தியவராகத் தங்களை அபிமானித்திருக்கும் நீசர்கள்
- விலைக்கு ஆள்படுவர் — ஜீவனத்திற்காகப் பிறர்க்கு அடிமைப்பட்டிருப்பர்கள்;
- விசாதி ஏற்று உண்பர் — (மிருத்யுதானங்கள் வாங்கும் முகத்தால் பிறருடைய) வியாதிகளைத் தாம் வாங்கி அநுபவிப்பர்கள்;
- தலைக்கு ஆள் பலி திரிவர் — ஒருவன் தலைக்காகத் தம் தலையை அறுப்பதாகச் சொல்லி நரபலியாகத் திரிவர்கள்;
- முலைக்கால் விடம் உண்ட வேந்தனையே — (பூதனையின்) முலையிடத் துண்டான விஷத்தை உட்கொண்ட பெருமானையே
- வேறு ஆ எத்தாதார் — விலக்ஷணமாகத் துதிக்கமாட்டாதவர்களாய்
- கல்லாதவர் — அறிவுகெட்டவர்களாய்க்கொண்டு
- கடம் உண்டார் — பாபங்களை யநுபவிப்பவர்களாயிரா நின்றார்கள்.

* * *—இவ்வுலகத்திலுள்ளார் படியை விரித்துரைக்கின்றதில். 'பரமநீசர்கள்' என்னவேண்டிய ஸ்தானத்தில் **தக்கோர்** என்றது இழிவு சிறப்பு; 'க்ஷேபோக்தி' என்பர் வடநூலார். **தக்கோர்**—தங்களை மஹாவ்யாபகர்களாக நினைத்திருக்கின்ற ஸம்ஸாரிகள் என்றவாறு. இவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்கின்றனரென்னில்; **விலைக்கு ஆட்படுவர்**=திருமந்திரத்தில் தேர்ந்த பொருளுக்கு எதிர்த்தடையாக வயிற்றுப்பிழைப்புக்காகப் பிறர்க்கு அடிமைப்பட்டிருப்பர். காசுக்கும் கூறைக்கும் கற்றை நெல்லுக்குமாகத் தங்களை விற்றிருப்பர். **விசாதி ஏற்று உண்பர்**='**வ்யாதி**' என்னும் வடசொல் 'விசாதி' என்று திரிந்து கிடக்கிறது. இயற்கையாகவே தங்களுக்குப் பலநோய்கள் இருக்கச்செய்தேயும் பிறருடைய நோய்களையுங் கொண்டு அநுபவிப்பர்கள். அதாவது—

நோயாளிகள் தங்களுடைய நோய் தீர்வதற்காகச் சில தானங்கள் [எருமைக்கடா தானம்] செய்வார்கள்; நாலுநாளைக்கு வயிறு தள்ளுமே என்ற விருப்பத்தினால் அந்தத் தானங்களைப்பெற்று அவ்வழியால் அவர்களுடைய வியாதிகளை ஏற்று அனுபவிப்பர்க ளென்கை. **தலைக்கு ஆள்பலி திரிவர்**=ஒருத்தன் பிழைத்தால் அவனுக்காகத் தன் தலையையறுத்துக்கொடுப்பதாக க்ஷுத்ர தெய் வங்களுக்குப் பிரார்த்தனை செய்துகொண்டு அப்படியே தலையை அரிந்துகொடுத்தொழிவார் பலர். ஸ்ரீவசநபூஷணம் முதற்பிர கரணத்தில் "அப்ராப்த விஷயங்களிலே ஸக்தனானவன் அது லபிக்கவேணு மென்றிராநின்றால் ப்ராப்தவிஷய ப்ரவணனுக்குச் சொல்லவேண்டாவிறே" என்ற ஸூத்ரத்தின் வியாக்கியானத்தில் மணவாளமாமுனிக ளருளிச்செய்துள்ள ஒரு சிறு கதை இங்கு ஸ்மரிக்கத்தகும்; அதாவது—ஒரு தாஸியினிடத்தில் ஒருவன் மிக்க அன்புடையவனாயிருக்கையில் அவளுக்குக் கடுமையான நோய் விஞ்சினவளவிலே 'இவள் நோய்தீர்ந்து எழுந்தால் நான் என் தலையை அரிந்து தருகிறேன்' என்று ஒரு தேவதைக்குப் பிரார்த் தனை பண்ணிக்கொண்டு பின்பு அப்படியே தன் தலையை அறுத்துக் கொடுத்தானென்பதாம்.

ஆகவிப்படி விலைக்கு ஆட்படுவாராயும் விசாதியேற்று உண்பா ராயும் தலைக்கு ஆள்பலி திரிவாராயு மொழிகின்றவர்கள் யாவரென் னில், எம்பெருமானைத் துதிக்கமாட்டாத பாவிகள் என்கிறார் மூன்றாமடியில். **முலைக்கால் விடமுண்ட** வரலாறு:—ஸ்ரீகிருஷ்ண னைப்பெற்ற தாயான தேவகியினது உடன் பிறந்தவனாய் அக்கண்ண பிரானுக்கு மாமனாகிய கம்ஸன் தன்னைக்கொல்லப்பிறந்த தேவகீ புத்திரன் ஒளித்து வளர்கின்றானென்பதை யறிந்து அக்குழந் தையை நாடியுணர்ந்து கொல்லும்பொருட்டுப் பல அசுரர்களையேவ, அவர்களில் ஒருத்தியான பூதனையென்னும் ராக்ஷஸி நல்ல பெண் ணுருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்குவந்து அங்குத்தூங்கிக் கொண்டிருந்த கிருஷ்ணசிசுவை யெடுத்துத் தனது விஷந்தடவின முலையை உண்ணக்கொடுத்துக் கொல்லமுயல, பகவானான குழந்தை அவ்வரக்கியின் தனங்களைக் கைகளால் இறுகப்பிடித்துப்பாலுண்ணு கிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி அவள் பேரிரைச்ச

விட்டுக்கதறி உடம்பு நரம்புகளின் கட்டெல்லாம் நீங்கி விழுந்து இறக்கும்படி செய்தனன் என்பதாம். இப்படிப்பட்ட விரோதி நிரஸநசீலனை எம்பெருமானை விலக்ஷணமாக ஸ்துதிசெய்ய மாட்டாத அறிவுகேடர்கள் பாபபலன்களை அநுபவிப்பதற்கென்றே ஜன்மமெடுத்தவர்களென்றவாறு.

மூலக்கால்—மூலவழியாக. வேறு—மற்றபேர் துதிப்பதிற் காட்டிலும் சிறந்தவிதமாக என்றபடி. "வேறாக" என்ற பாடம் மறுக்கத்தக்கது; தளை கெடுதலால். .... (௫௨)

கல்லாதவ ரிலங்கை கட்டழித்த * காகுத்த
னல்லாலொரு தெய்வம் யானிலேன் *—பொல்லாத
தேவரைத் தேவரல்லாரை * திருவில்லாத்
தேவரைத் தேறேல்மின் தேவு. (௫௩)

கல்லாதவர் இலங்கை	அறிவுகெட்ட ராக்ஷஸருடையதான இலங்காபுரியை
கட்டு அழித்த	அரணழித்த
காகுத்தன் அல்லால்	இராமபிரானை யல்லது
ஒரு தெய்வம்	வேறொரு தெய்வத்தை
யான் இலேன்	நான் தெய்வமாகக் கொள்வே னல்லேன்;
பொல்லாத தேவரை	கண்கொண்டு காணக்கூடாத தேவதைகளையும்
தேவர் அல்லாரை	(உண்மையில்) தெய்வத் தன்மை யற்றவர்களாயும்
திரு இல்லா தேவரை	பிராட்டியின் ஸம்பந்த மில்லாமலே தேவரென்று பேர் சுமப்பவர் களாயுமுள்ள சிலரை
தேவு	தெய்வங்களாக
தேறேல்மின்	நீங்கள் நினைக்க வேண்டா.

* * *—முன்னடிகளால் தம்முடைய அத்யவஸாயத்தை அருளிச்செய்து, பின்னடிகளால் தேவதாந்தர பக்தியை விலக்கிக் கொள்ளுமாறு பிறர்க்கு உபதேசிக்கிறார். கீழ்க்கழிந்த காலங்களில் நான் பலபல தெய்வங்களை வழிபட்டவனாயினும் முடிவாகத் தேவதாந்தரங்களெல்லாவற்றையும் பற்றறவொழித்து, ஸ்ரீராமபிரானையே பரமதெய்வமாகக் கொண்டவனாயினேன்.

இலங்கையிலிருந்த அரக்கர்களனைவரும் தங்களுடைய கெட்ட நடத்தைகளினாலேயே தமது அறிவின்மையை வெளிப்படுத்திக் கொண்டவர்களாதலால் "**கல்லாதவரிலங்கை**" என்றார். கற்றுணர்ந்த மஹாநுபாவன் ஒருவன் [விபீஷணாழ்வான்] இருந்தானே யென்னில்; அவனை யடித்துத்துரத்தினார்களிறே. **காகுத்தன்**—'**காகாஸுர:**' என்ற வடசொல் விகாரம்.

போல்லாத தேவரை=ச்மசானமே இருப்பிடமாயிருத்தல், எலும்புகளை மாலையாகக்கட்டிப்பணிதல், விரூபாக்ஷனாயிருத்தல் முதலியவற்றால் அமங்களங்களுக்குக் கொள்கலமா யிருப்பவர்களைத் தெய்வமாகக் கொள்ளத்தகுமோ?.

தேவரல்லாரை=உள்ள அமங்களங்களையெல்லாம் ஸஹித்துக் கொண்டு ஆச்ரயித்தாலும் ஸ்வதந்த்ரமாகக் காரியஞ்செய்யவல்லமையற்றிருப்பதனால் தெய்வமென்று சொல்லத்தகாதவர்களை ஆச்ரயிக்கத்தகுமோ?.

திருவில்லாத்தேவரை–"**ஶ்ரியா தேவா தேவத்வமஶ்நுதே**" என்று வேதஞ்சொல்லுகிறபடியே பிராட்டியின் ஸம்பந்தமுள்ளவனுக்கேயன்றோ தேவத்வமுண்டு; லக்ஷ்மீபதியல்லாதாரைத் தேவராகப் பணிதல் தகுமோ?

"காணிலு முருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார், பேணிலும்வரந்தர மிடுக்கிலாததேவரை, ஆணமென்றடைந்து வாழுமாதர்காளெம்மாதிபால், பேணி நும்பிறப்பெனும் பிணக்கறுக்ககிற்றிரே" என்று இவ்வாழ்வார் தாமே யருளிச்செய்த திருச்சந்தவிருத்தத்திற் பாசுரமும் இங்கு நினைக்கத்தகும். .... (ருங)

தேவராய் நிற்குமத்தேவம் * அத்தேவரில்
மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும் *—யாவராய்
நிற்கின்றதெல்லாம் நெடுமாலென் றோராதார்
கற்கின்ற தெல்லாம் கடை. (ருச)

தேவர் ஆய் நிற்கும் அத் தேவும்	(அக்நி இந்திரன் முதலிய) தேவதைகளாய்க் கொண்டு நிற்கிற தெய்வமும்,
அத் தேவரில்	அந்த தேவர்களுக்குள்ளே
மூவர் ஆய் நிற்கும்	த்ரிமூர்த்தியாய் நிற்பதாகிற

முது புணர்ப்பும்	அநாதியான நிலைமையும்	நெடு மால் என்று ஓராதார்	ஸர்வேச்வர ப்ரகாரமே என்று ஆராய்ந்துணர மாட்டாதவர்கள்
யாவர் ஆய் நிற்கின்றது எல்லாம்	மற்றும் மனிதர் முதலியனவாய்க் கொண்டு நிற்கிற ஸகல பதார்த்தங்களும் (ஆகிய எல்லாம்)	கற்கின்றது எல்லாம் கடை	பேசும் பேச்செல்லாம் உபயோகமற்றது.

* * *—ஸகல தெய்வங்களும் ஸகல பதார்த்தங்களும் ஸ்ரீமந் நாராயணனுக்கு சேஷபூதம் என்றறியமாட்டாதவர்கள் எவ்வளவு விரிவாகக் கற்றாலும் அத்தனையும் பயனற்றவை யென்கிறார். தேவராய்நிற்குமத்தேவும் நெடுமால், அத்தேவரில் மூவராய்நிற்கும் முது புணர்ப்பும் நெடுமால், யாவராய்நிற்கின்ற தெல்லாம் நெடுமால் என்று அறியவல்லாருடைய கல்வியே பயன்பெற்றதாம் என்றவாறு.

தேவராய் நிற்குமத்தேவும்=வேதத்தில் கருமகாண்டங்களில் அந்தந்த யாகங்களுக்கு ஆராத்யதேவதையாக அக்நி இந்திரன் வருணன் என்றிப்படி சொல்லப்பட்டுள்ள தேவதைகள் யாவும் "ஸம்ஹாராந்யாந்யதேவதா:" என்கிற சுருதியின்படி எம்பெருமானுக்குச் சரீரபூதங்களாதலால் அத்தேவதைகட்கு அந்தர்யாமியான ஸ்ரீமந்நாராயணனே அந்தந்த தேவதா நாமங்களினால் கூறப்பட்டுளன் என்று உணரவேண்டுவது கல்விக்குப் பயன்.

அத்தேவரில் மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பம்—1. "த்ரய்யா விதிஶிவபொஷிதாவதார: வ்யாபாரிதா தத்த்வதயா" என்கிறபடியே த்ரிமூர்த்தியவதார மெடுத்ததும் திருமாலே. இப்படி பிரித்துப்பிரித்துச் சொல்லுவதேன்? யாவராய் நிற்கின்றதெல்லாம் நெடுமால்: "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்."—"ஸர்வபூதாத்மகே தாத! ஜகந்நாதே ஜகந்மயே" என்று சொன்ன ப்ரஹ்லாதாழ்வானுடைய நிலைமை வாய்ந்தவர்களே கற்றுணர்ந்தவராவர் என்கை. .... (௫௪)

கடைநின்றமரர் கழல்தொழுது * நாளும்
இடைநின்ற வின்பத்தராவர் *—புடைநின்ற
நீரோதமேனி நெடுமாலே * நின்னடியை
யாரோதவல்லா ரவர். (௫௫)

---

1. வரதராஜ பஞ்சாசத். (தேசிகன்.)

	(இவ்வுலகத்தவர்கள்)
அமரர் கடை நின்று	தேவதாந்தரங்களின் வாசல்களைப் பற்றிநின்று
நாளும்	நெடுங்காலம்வரையில்
கழல் தொழுது	(அவர்களுடைய) காலில் விழுந்து
	(பரம புருஷார்த்தம் பெறமாட்டாமல்)
இடை நின்ற இன்பத்தர் ஆவர்	நடுவேகிடக்கிற (சுவர்க்கம் முதலிய) சுகத்தைப் பெற்றொழிவர்கள்;
புடை நின்ற நீர் ஓதம் மேனி நெடுமாலே	(இவ்வுலகத்தைச்) சூழ்ந்து கிடக்கிற கடல்போன்ற திருமேனியையுடைய ஸர்வேச்வரனே!
நின் அடியை	உனது திருவடிகளை
ஓத வல்லாரவர் ஆர்	அநுஸந்திக்க வல்லார் ஆரேனுமுண்டோ? [யாருமில்லையே !.]

* * *—எம்பெருமானே !, பெரும்பாலும் இவ்வுலகத்தவர்கள் தேவதாந்தர பஜனஞ்செய்து சுவையற்ற அற்பபலன்களைப் பெற்று அநர்த்தப்படுகின்றனரே யன்றி உன்னையுணர்ந்து ஆச்ரயித்து உஜ்ஜீவிப்பவர் யாருமில்லையே! என்று வருந்திப் பேசுகிறார்.

கடைநின்றமரர் கழல்தொழுது=அமரர்கடைநின்று கழல் தொழுது என்க. கடையாவது மனைவாசல்; தேவதாந்தரங்களின் மனைவாசலிலே நின்று என்றது—அவர்களை ஆராதித்தமை கூறியவாறு. அன்றியே, தொகுத்தல் விகாரமாகக்கொண்டு "கடைநின்ற+அமரர்" என்று பிரித்து 'தாழ்ந்த தெய்வங்களின் காலிலே விழுந்து' என்பதாகவும் பொருள் கொள்ளலாம்.

இடைநின்ற வின்பத்தராவர்=எம்பெருமானைப் பணிந்தவர்க்குக் கிடைக்கக்கூடிய பரமபதாநுபவமொன்றே சிறந்ததாகையாலும், அதற்குக் கீழ்ப்பட்ட ஸ்வர்க்காநுபவம் முதலிய பலன்களெல்லாம் இடைக்கட்டாதலாலும், தேவதாந்தர பஜனம் பண்ணுவார்க்கு அப்படிப்பட்ட க்ஷுத்ரபலன்களே கிடைக்குமாதலாலும் "இடைநின்ற இன்பத்தராவர்" எனப்பட்டது. இன்பமென்றதும் ப்ரமித்தவர்களின் கருத்தாலேயாம்.

"ஸம்ஸார ஸுகமுமின்றிக்கே நிரதிசயமான மோக்ஷஸுகமு

மின்றிக்கே ஸ்வர்க்கலோகத்தையுடையராவர்" என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தி.

இப்பாட்டில் எழுவாய் வருவித்துக்கொள்க. .... (௫௫)

அவரிவ ரென்றில்லை யனங்கவேள் தாதைக்கு *
எவரு மெதிரில்லை கண்டீர் *—உவரிக்
கடல்நஞ்சமுண்டான் கடனென்று * வாணற்
குடனின்று தோற்றா னொருங்கு. (௫௬)

அவர் இவர் என்று இல்லை	பெரியார் சிறியார் என்று ஒரு வாசியில்லை ;	வாணற்கு	பாணாஸுரனுக்கு
அனங்கவேள் தாதைக்கு	காமனுக்குத் தந்தையான கண்ணபிரானுக்கு	கடன் என்று	'உன்னை ரக்ஷிக்க நான் கடமைப்பட்டவன்' என்று சொல்லி
எவரும்	ஒருவரும்	உடன் நின்று	அவனோடு கூடவே யிருந்து
எதிர் இல்லை கண்டீர்	எதிர் நிற்கவல்லாரில்லைகாண்மின் ;	ஒருங்கு தோற்றான்	குடும்பத்தோடே தோற்று ஓடிப் போனான்.
உவரிக்கடல் நஞ்சம் உண்டான்	கடலில் தோன்றின விஷத்தை உட்கொண்டவனான சிவன்		

* * *—அற்பபலன்களைத் தருமவர்களான ருத்ரன் முதலியோர் தங்களைப்பற்றினவர்களுக்கு ஒரு ஆபத்து வந்தால் அப்போது முதுகுகாட்டி ஓடுமவர்களேயன்றி நிலைநின்று ரக்ஷிக்கவல்ல திறமுடையரல்லர் என்று மூதலித்துக்காட்டுகிறார்.

அவர் இவர் என்றில்லை=அவர் என்று சிறந்தவர்களையும், இவர் என்று தாழ்ந்தவர்களையுங் குறிக்கிறது. தாழ்ந்தவர்களான நம்போலியர் எம்பெருமானுக்கு எப்படி எதிராக முடியாதோ, அப்படியே, உயர்ந்தவர்களென்று கருதப்படுகின்ற ருத்ராதிகளும் எம்பெருமானுக்கு எதிராகமுடியாதென் றுணர்த்தியவாறு.

அனங்கவேள் தாதைக்கு=கண்ணபிரான் மன்மதனுடைய அம்சமாகிய ப்ரத்யும்நனுக்கு ஜநகனாதல் அறிக. மன்மதன் ஒருகால் பரமசிவனது தவநிலையைக் குலைக்கமுயன்றபோது அவனு

டைய நெற்றிக்கண்ணால் கொளுத்தப்பட்டு உடலிழந்ததனால அனங்கனென்று பெயர்பெற்றான். வடசொல்.

கடல்நஞ்சமுண்டான் வாணற்குடனின்று தோற்ற வரலாறு:- பலிசக்ரவர்த்தியின் ஸந்ததியிற் பிறந்த பாணாஸுரனுடைய பெண்ணாகிய உஷையென்பவள், ஒருநாள் ஒரு புருஷனோடு தான்கூடியிருந்ததாகக் கனாக்கண்டு, முன் பார்வதி அருளியிருந்தபடி அவனிடத்தில் மிகுந்த ஆசைபற்றியவளாய்த் தன் உயிர்த்தோழியான சித்திரலேகைக்கு அச்செய்தியைத் தெரிவித்து அவள் மூலமாய் அந்தப்புருஷன் கிருஷ்ணனுடைய பௌத்திரனும் ப்ரத்யும்நனுடைய புத்திரனுமாகிய அநிருத்தனென்று அறிந்துகொண்டு 'அவனைப்பெறுதற்கு உபாயஞ்செய்யவேண்டும்' என்று அத்தோழியையே வேண்ட, அவள் தன் யோகவித்தை மகிமையினால் துவாரகைக்குச்சென்று அநிருத்தனைத் தூக்கிக்கொண்டு வந்து அந்தஃபுரத்திலேவிட, உஷை அவனோடு போகங்களை அநுபவித்துவர, இச்செய்தியைக் காவலாளராலறிந்த அந்தப்பாணன் தன் ஸேனையுடன் அநிருத்தனையெதிர்த்து மாயையினாலே பொருது நாகாஸ்த்ரத்தினால் கட்டிப்போட்டிருக்க, துவாரகையிலே அநிருத்தனைக் காணாமல் யாதவர்களெல்லாருங் கலங்கியிருந்தபோது, நடந்த வரலாறு நாரதமுனிவனால் சொல்லப்பெற்ற ஸ்ரீகிருஷ்ணபகவான், பெரியதிருவடியை நினைத்தருளி, உடனே வந்து நின்ற அக்கருடாழ்வானது தோள்மேலேறிக்கொண்டு பலராமன் முதலானாரோடு கூடப் பாணபுரமாகிய சோணிதபுரத்துக்கு எழுந்தருளும்போதே அப்பட்டணத்தின் ஸமீபத்தில் § காவல் காத்துக்கொண்டிருந்த சிவபிரானது பிரமதகணங்கள் எதிர்த்துவர அவர்களையெல்லாம் அழித்து, பின்பு சிவபெருமானால் ஏவப்பட்டதொரு ஜ்வரதேவதை மூன்றுகால்களும் மூன்று தலைகளுமுள்ளதாய் வந்து பாணனைக்

---

§ ஒருகாலத்தில் பரமசிவன் கூத்தாடுகையில் பாணாஸுரன் அந்த நடனத்தைக்கண்டு அதற்குத் தகுதியாகத் தன் இரண்டு கைகளால் மத்தளம் தட்ட, சிவன் மகிழ்ந்து அவனுக்கு ஆயிரம் கைகளையும் நெருப்புமதிளையும் அளவிறந்த வலிமையையும் மிக்க செல்வத்தையும், தான் ஸபரிவாரனாய்க் கொண்டு அவன் மாளிகை வாசலில் காவல் செய்திருத்தல் முதலிய வரங்களையும் தந்தருளி அப்படியே சிவன் தனது குடும்பத்தோடு அவன் மாளிகை வாசலிற் காத்துக்கொண்டிருந்தனன் என்பது இங்கு அறியத்தக்கது.

காப்பாற்றும்பொருட்டுத் தன்னோடு யுத்தஞ்செய்ய, தானும் ஒரு ஜ்வரத்தையுண்டாக்கி அதன் சக்தியினாலே அதனைத் தாக்கிவிட்ட பின்பு, சிவபிரானது அநுசரர்களாய்ப் பாணாஸுரனது கோட்டையைச்சூழ்ந்துகொண்டு காத்திருந்த அக்நிதேவர் ஐவரும் தன்னோடு எதிர்த்துவர, அவர்களையும் நாசஞ்செய்து பாணாஸுரனோடு போர் செய்யத்தொடங்க, அவனுக்குப் பக்கபலமாகச் சிவபெருமானும் ஸுப்ரஹ்மண்யன் முதலான பரிவாரங்களுடன் வந்து எதிர்த்துப் போரிட, கண்ணன் தான் ஜ்ரும்பணாஸ்த்ரத்தைப் பிரயோகித்துச் சிவன் ஒன்றுஞ் செய்யமாட்டாமல் கொட்டாவி விட்டுக்கொண்டு சோர்வடைந்து போம்படிசெய்து ஸுப்ரஹ்மண்யனையும் கணபதியையும் உங்காரங்களால் ஒறுத்து ஓட்டி, பின்னர், அனேகமாயிரஞ் சூரியர்க்குச்சமமான தனது சக்ராயுதத்தை யெடுத்துப் பிரயோகித்து அப்பாணனது ஆயிரந்தோள்களையும் தாரைதாரையாய் உதிரமொழுக அறுத்து அவனுயிரையும் சிதைப்பதாக விருக்கையில் பரமசிவன் அருகில் வந்து வணங்கிப் பலவாறு பிரார்த்தித்ததனால் அவ்வாணனை நான்கு கைகளோடும் உயிரோடும் விட்டருளி, பின்பு அவன் தன்னைத்தொழுது அநிருத்தனுக்கு உஷையைச் சிறப்பாக மணம்புரிவிக்க, அதன்பின் கண்ணபிரான் துவாரகைக்கு மீண்டெழுந்தருளினன். இவ்வரலாற்றினால், அனங்கவேள்தாதைக்கு எவருமெதிரில்லை யென்னுமிடம் நன்கு விளக்கப்பட்டதாம்.

பாணாஸுரயுத்தத்தில் சிவன் தனது பாரிவாரங்களோடு தோற்றனனாதலால் “ ஒருங்கு தோற்றான் ” என்றார்.

“ திருப்பாற்கடலை உவரிக்கடலென்றது—ஸமுத்ரஸாம்யத்தைப் பற்ற ” என்பது பூருவர்களின் வியாக்கியான வாக்கியம். பாற்கடல் கடையும்போது அதில் நின்றும் விஷம் உண்டாக, அதனை எம்பெருமானுடைய நியமனத்தினால் பரமசிவன் உட்கொண்டனனென்க. .... (௫௬)

ஒருங்கிருந்த நல்வினையும் தீவினையு மாவான் *
பெருங்குருந்தஞ் சாய்த்தவனே பேசில் *—மருங்கிருந்த
வானவர்தாம் தானவர்தாம் தாரகைதான் * என்னெஞ்சம்
ஆனவர்தா மல்லாததென். (௫௭)

பேசில்	உண்மைபேசப் புகுந்தால்
பெரு குருந்தம் சாய்த்தவனை	பெரிய குருந்த மரத்தை வேர் பறியத்தள்ளி முறித்த கண்ணபிரானை
ஒருங்கு இருந்த நல் வினையும் தீ வினையும் ஆவான்	உடனிருக்கும் புண்ய பாபங்களுக்கு நிர்வாஹகன் ;
மருங்கு இருந்த	ஸமீபத்திலுள்ள [அந்தரங்கரான]
வானவர்தாம்	தேவர்களும்,
தானவர்தாம்	அசுரர்களும்
தாரணிதான்	இப்பூமியும்
	(ஆகிய இவையெல்லாம்)
என் நெஞ்சம் ஆனவர்தாம்	என் நெஞ்சினுள் உறைகின்ற ஸர்வேச்வரனேயாம் ;
அல்லாதது என்	அந்த ஸர்வேச்வரனல்லாத வஸ்து என்ன இருக்கிறது?.

* * *—புண்ணியம் பாவம் முதலான ஸகல பதார்த்தங்களும் எம்பெருமானிட்ட வழக்காயிருக்கும்; அவனிட்ட வழக்காகாத வஸ்து ஒன்றுமேயில்லை யென்கிறார். நல்வினையும் தீவினையும் அவனேயாவான் என்கிற விதன் கருத்து யாதெனில்; "ஏஷ ஏவ ஸாது கர்ம காரயதி யமேப்யோ லோகேப்ய உந்நிநீஷதி; ஏஷ ஏவாஸாது கர்ம காரயதி யமதோ நிநீஷதி" என்கிற ச்ருதியின்படியே தன்னுடைய அநுக்ரஹத்துக்கு இலக்காக வேண்டினரைக்கொண்டு நல்வினைகளைச் செய்வித்தும், தன்னுடைய நிக்ரஹத்துக்கு இலக்காக வேண்டினரைக்கொண்டு தீவினைகளைச் செய்வித்தும் போருகிறவன் என்கை.

நல்வினைகளின்பயனாகத் தேவயோநியிற் பிறப்பதும், தீவினைகளின் பயனாக அஸுரயோநியிற் பிறப்பதும் இவ்விருவினைகளினுடையவும் பயனாக இப்பூமியிற் பிறப்பது மெல்லாம் பகவத்ஸங்கல்பாதீன மென்கிறது பின்னடிகளால்.

குருந்தம் சாய்த்த வரலாறு:—கண்ணபிரான் யமுனையில் நீராடும் ஆயர் மங்கைகளின் துகிலையெடுத்துக்கொண்டு அதன் கரையிலுள்ள குருந்தமரத்தின்மேலேறுகிறவழக்கத்தைக் கண்டிருந்தவனும் கம்ஸனுடைய ஏவல்பட்டவனுமான ஓரஸுரன் கண்ணனை நலிவதற்காக அக்குருந்தமரத்தை ஆவேசித்துக்கிடந்தான்; அதையறிந்த கண்ணபிரான் அந்த மரத்தை முறித்தொழித்தனன் என்பதாம்.

தாரகை—'தாரகா' என்ற வடசொல்லின் திரிபு. பூமிக்கு வாசகமாக வடமொழியில் 'தாரகா' என்கிற நாமம் இல்லையாகிலும் 'தரா, தரித்ரீ, தாரணீ:' என்றிருப்பனபோல் இருக்கத் தக்கதே. கீழ் முப்பத்தோராம்பாட்டிலும் "தாரகையுள்" என்று வந்ததும் காண்க.

எம்பெருமானுக்குப் பல திருநாமங்கள் இருப்பதுபோல **'என்னெஞ்சமானவர்'** என்பதும் ஒரு திருநாமம்போலும் ஆழ்வார் திருவுள்ளத்தால். என்னெஞ்சத்திலே ஸத்தை பெற்றிருப்பவர் என்றபடி. அன்றியே அஃறிணையான நெஞ்சையே கௌரவந்தோற்ற 'நெஞ்சினார்' என்பது போல இங்கு 'நெஞ்சமானவர்' என்று சொல்லியிருப்பதாகக்கொண்டு தம் திருவுள்ளத்தையே குறிப்பதாகவும் உரைக்கலாம்; அப்போது, வானவர் தானவர் தாரகை என்னெஞ்சு (ஆகிய எல்லாம்) பெருங்குருந்தம் சாய்த்தவனே என்றவாறும். .... (நிஎ)

என்னெஞ்ச மேயா னிருள்நீக்கி யெம்பிரான் *
மன்னஞ்ச முன்னொருநாள் மண்ணளந்தான் *—என்னெஞ்ச
மேயானை யில்லா விடையேற்றான் * வெவ்வினைதீர்த்
தாயானுக் காக்கினே னன்பு. (நிஅ)

என் நெஞ்சம் மேயான்	என்னுடைய நெஞ்சிலே நித்யவாஸம் செய்பவனும்
இருள் நீக்கி எம்பிரான்	(நெஞ்சிலுள்ள) அஜ்ஞான விருளைப் போக்குமவனை உபகாரகனும்
முன் ஒருநாள்	முன்பொரு காலத்தில்
மன் அஞ்ச	மஹாபலிசக்ரவர்த்தி பயப்படும் படியாக
மண் அளந்தான்	பூமியை அளந்து கொண்டவனும்
என் நெஞ்சம் மேயானை	(அந்த திருக்கோலத்துடனே) என்னெஞ்சை விடாமலிருப்பவனுமான எம்பெருமானை
இல்லா	நெஞ்சில் உடையனாகாத
விடை ஏற்றான்	ரிஷபவாஹநனான ருத்ரனுடைய
வெம் வினை	மஹாபாதகத்தை
தீர்த்து	தொலைத்து
ஆயானுக்கு	(அதனால்) ஸத்தை பெற்றவனான பெருமானுக்கு
அன்பு ஆக்கினேன்	என் அன்பைச் செலுத்தினேன்.

* * *—தம்நெஞ்சில் இருளையறுத்துக்கொண்டு அங்கே நிரந்தரவாஸம் பண்ணுகிற ஆபத்ரக்ஷகனை எம்பெருமான் பக்கலிலே தமக்கு அன்பு விளைந்தமையை அருளிச்செய்கிறார். இப்பாட்டில் "என்னெஞ்சமேயான்" என்பது இரண்டிடத்தில் வந்துள்ளது; பொருள் ஒன்றேயாயினும் கருத்தில் வாசியுண்டு; முதலடியில் **என்னெஞ்சமேயான்** என்றது பொதுவான வ்யாப்தியைச் சொன்னபடி. இரண்டாமடியில் "மண்ணளந்தானென்னெஞ்ச மேயான்" என்றது உலகளந்த திருக்கோலம் தம் நெஞ்சிலே பொலியும்படி காட்சிதந்தருள்கின்றமையைச் சொன்னவாறு. "இருள் **நீக்கி**" என்றது வினையெச்சமன்று, பெயர்ச்சொல்; இருளை நீக்குகின்றவன் என்கை. வினையெச்சமாகக்கொண்டால், இருளை நீங்கச் செய்து அதனால் **எம்பிரான்**—எனக்கு உபகாரகனானவன் என்க.

இப்படிப்பட்ட எம்பெருமானை நெஞ்சிற்கொள்ளமாட்டாத [தூர்மாநியான] ரிஷபவாஹநனாகிய ருத்ரனுடைய வெவ்வினையுண்டு ப்ரஹ்மஹத்யாரூபமான பாபம், அதனைத்தீர்த்து, தன் காரியம் ஆனதுபோல் உவந்தவனான எம்பெருமானுக்கு என்னுடைய அன்பைச்செலுத்தினேன் என்றாராயிற்று. .... (ருஅ)

அன்பாவா யாரமுத மாவாய் * அடியேனுக்
கின்பாவா யெல்லாமும் நீயாவாய் *—பொன்பாவை
கேள்வா கிளரொளி யென்கேசவனே * கேடின்றி
ஆள்வாய்க் கடியேனா னேள். (ருகூ)

அன்பு ஆவாய்	(என் பக்கல்) ப்ரீதியே வடிவெடுத்தவன்போலிருப்பவனே!
ஆர் அமுதம் ஆவாய்	பரமபோக்யனாயிருப்பவனே!
அடியேனுக்கு இன்பு ஆவாய்	(உன்னுடைய அநுபவமாகிற) ஸுகத்தை அடியேனுக்கு உண்டாக்கினவனே!,
எல்லாமும் நீ ஆவாய்	மற்றுமுள்ள ஸுகங்களுமெல்லாம் எனக்கு நீயேயாயிருப்பவனே!
பொன் பாவை கேள்வா	திருமகள் நாதனே!
கிளர் ஒளி	(அத்திருமகளின் சேர்த்தியினால்) கொழுந்து விட்டு வளர்கின்ற காந்தியையுடைய

என் கேசவனே	எம்பெருமானே!	நான் அடியேன்	நான் அடிமைப் பட்டவனாயிருக்கின்றேன்;
கேடு இன்றி	ஒருகுறையுமில்லாமல்		
ஆள்வாய்க்கு	ரக்ஷிக்கவல்லவனுக்கு	ஆள்	(அடியேனைக்) காத்தருள்.

* * *—திருமாலே! உன்னைத் தவிர்த்து மற்ற தெய்வங்களுக்கு ஆட்பட்டால் அவர்கள் ரக்ஷிக்கமாட்டாததோடு கெடுதல்களையும் விளைத்திடுவர்கள்; நீயோ அப்படியல்லாமல் ஒரு கெடுதலுமின்றி ஆளவல்லை; ஆகவே நான் உனக்கு அடிமைப்பட்டவனானேன், காத்தருளாய் என்கிறார்.

அன்பு ஆவாய்='அன்பு' என்பது வேறொன்றாய், அதை நீ உடையவனாயிருக்கின்றாய் என்று சொல்லவேண்டாமல், நீயே அன்புதானாக வடிவெடுத்திருக்கின்றாய் என்கை. என்பக்கல் அளவற்ற அன்புவைத்திருக்கின்றாயென்றவாறு. ஆரமுதமாவாய் இன்பாவாய்=தாய்தந்தையராலுண்டாகுமாநந்தம், மக்களாலுண்டாதுமாநந்தம், மனைவியராலுண்டாகு மானந்தம் முதலிய எல்லா ஆனந்தங்களையும் உன்னநுபவத்தால் நானடைகின்றேனென்கை. இப்படியெல்லாம் நீ ஆநந்தகரனாயிருப்பதற்குக் காரணம் லக்ஷ்மீபதித்வமேயென்கைக்காகப் போன்பாவை கேள்வா! என விளித்தார். பிராட்டியைச்சொல்லும் வேதம் 'ஹிரண்யவர்ணாம்' என்றும் 'ஹிரண்மயீம்'என்றும் சொன்னதற்கேற்பப் போன்பாவையென்றார். பிராட்டியைக் கைப்பிடித்ததனால் ஒரு விலக்ஷணமான தேஜஸ்ஸு விளைகின்றதென்பது தோன்ற "பொன்பாவை கேள்வா ளேரொளி" என்றார். "அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா" என்ற மாரீசவசநமும் காண்க.

ஆள் என்பதை முன்னிலை வினைமுற்றாகக் கொள்ளாமல், அடியேன்நான்—அடியேனாகிய நான், ஆள்—ஆட்பட்டேன் என்பதாகவுங் கொண்டுரைக்கலாம். .... (௩௯)

ஆள்பார்த் துழிதருவாய் கண்டுகொளென்றும் * நின்
தாள்பார்த் துழிதருவேன் தன்மையை *—கேட்பார்க்
கரும்பொருளாய் நின்ற வரங்கனே * உன்னை
விரும்புவதே விள்ளேன் மனம். (௪௦)

கேட்பார்க்கு	ஸ்வயத்நத்தாலே கேட்டறிய விரும்புமவர்களுக்கு
அரு பொருள் ஆய் நின்ற அரங்கனே	அறியவொண்ணாத பரம்பொருளான அரங்கநாதனே !
ஆள் பார்த்து உழிதருவாய்	நமக்கு ஆட்படுமவன் யாரேனுமிடைக்கக்கூடுமோ என்று தேடித் திரிகிறவனே !
நின் தாள் பார்த்து உழிதருவேன்	உனது திருவடிகளின் ஸேவைக்காக அலைந்து திரிகின்ற என்னுடைய

தன்மையை	இந்த ஸ்வபாவத்தை
என்றும் கண்டுகொள்	என்றைக்கும் நிலைத்திருக்கும்படியாகக்கடாக்ஷித்தருளவேணும்;
உன்னை விரும்புவதே	நான் உன்னையே ஆசைப்பட்டிருக்குந் தன்மையை
மனம்	நெஞ்சில்
வின்னேன்	தவிராதவனாயிருக்கின்றேன்.

* * *—எம்பெருமானை நோக்கி "ஆள்பார்த்து உழிதருவாய்!" என்று விளிக்கிற விளியின் அழகை என் சொல்லுவோம். "ஸோந்வேஷ்டவ்யஸ்ஸ விஜிஜ்ஞாஸிதவ்ய:" என்று வேதாந்தங்கள் எம்பெருமானை நாம் தேடிப்பிடிக்கவேணுமென்று ஓதுகின்றன ; அப்படியிருந்தும் எம்பெருமான் நம்மைத் தேடிப்பிடிப்பதற்கு அலைந்து திரிகின்றானென்கிறார் காண்மின். எம்பெருமான் ஸர்வஸ்வாமியென்பதும் சேதநாசேதநங்களடங்கலும் அவனுடைய ஸொத்து என்பதும் தேர்ந்தவிஷயம். ஸொத்து தவறிப்போனால் அதனைத் தேடிப்பெறுதற்கு முயற்சி செய்பவன் ஸ்வாமியேயாதலால், ஸர்வஸ்வாமியான தன்னுடைய திருவடிகளில் நின்றும் தவறிப்போன தன் உடைமையாகிய நம்மைத்தேடிப் பிடித்துக்கொள்ள முயல்வான் தானேயாகையால் இந்த விளி மிகப்பொருந்தும். ஸ்ரீவசநபூஷணத்தில் "ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்குகப்பானுமவனே" என்றருளிச்செய்ததும் இதுபோன்ற அருளிச்செயல்களை அடியொற்றியேயாம். எம்பெருமானார் தாமும் ஸ்ரீபாஷ்யத்தைத் தலைக்கட்டியருளுமிடத்து "ந ச பரமபுருஷஸ்ஸத்யஸங்கல்ப: அத்யர்த்தப்ரியம் ஜ்ஞாநிநம் லப்த்வா கதாசித் ஆவர்த்தயிஷ்யதி" என்ற வாக்யத்தில் "ஜ்ஞாநிநம் லப்த்வா" என்றதனால் இப்பரமார்த்தத்தைத் தெரியவைத்தருளினர்.

ஆள்பார்த்து உழிதருவாய்—'நம்வலையிலே அகப்படுவார் ஆரேனுமுண்டோ' என்று இதுவே கவலையாக இவ்விபூதியில் வந்து திரிந்துழன்று தேடிக்கொண்டிருப்பவனே! என்கை. இப்போது இது சொல்லுகிறது எதுக்காகவென்னில்; நீ இப்படி ஆள் தேடித்திரிகிறவனுகையாலே யாத்ருச்சிகமாக உன்வலையிலே சிக்கிக் கொண்ட என்னை விட்டுவிடலாகாது என்கைக்காக. அதனையே "நின்தாள் பார்த்துழிதருவேன் தன்மையை என்றும் கண்டுகோள்" என்றதனு லருளிச்செய்கிருர். இப்போது நான் உனது திருவடிகளையே நோக்கிக்கொண்டிருப்பது போலவே என்றைக்கும் இருப்பேனும்படி கடாக்ஷித்தருளவேணு மென்கை.

"𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑍋 𑌨 𑌮𑍇𑌧𑌯𑌾 𑌨 𑌬𑌹𑍁𑌨𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨" என்கிற கடவல்லீச்ருதியில் "𑌬𑌹𑍁𑌨𑌾𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨 (𑌕𑍇𑌵𑌲) 𑌨𑌲𑌭𑍍𑌯𑌃" என்றதைத் திருவுள்ளம்பற்றிக் "கேட்பார்க்கு அரும் பொருளாய் நின்ற" எனப்பட்டது. ஆங்காங்கு இதிஹாஸபுராணங்கள் கேட்டாலும் அவனது திருவருளாலேயே அவனை அறியக்கூடுமாதலால் அஃதின்றிக் கேள்விமாத்திரத்தினுல் அறியக்கூடாதவனென்கை.

"உன்னை விரும்புவதே விள்ளேன் மனம்" என்ற ஈற்றடியையும் 'கண்டுகோள்' என்ற வினைமுற்ருேடே கூட்டியுரைத்துக் கொள்ளலாம்; அதாவது—நான் உன்னையே ஆசைப்பட்டிருக்குந் தன்மையை நெஞ்சில் தவிராதவனுயிருக்கும்படியாக நீயே கடாக்ஷித்தருளவேணும் என்பதாம்: இது தாத்பர்ய வ்ருத்தியாகும். (கூ0)

மனக்கேதம் சாரா மதுசூதன் றன்னை *
தனக்கேதான் தஞ்சமாக் கோள்ளில் *—எனக்கேதான்
இன்றேன்றி நின்றுலகை யேழாணை யோட்டினன் *
சேன்றேன்றி நின்ற திரு. (கூக)

மதுசூதன் தன்னை { மதுவென்னும் அசுரனைக் கொன்றொழித்த பெருமானை
தனக்கே தஞ்சம் ஆ தான் கொள்ளில் { தனக்கே ரக்ஷகனென்று ஒருவன் கொண்டால்

மனம் கேதம்	மனவருத்தங்கள்	சென்று	(நிர்ஹேதுகமாக என்னிடம்) வந்து
சாரா	வந்துசேராவாம்	ஒன்றி நின்ற திரு	(என்னிடத்தில்) பொருந்தி நிற்பதாகிற செல்வமானது
ஒன்றி நின்று	பொருந்தி நின்று	எனக்கே தான்	என்னொருவனுக்கொழிய வேறொருவற்குமில்லை.
ஏழ் உலகை	ஸப்தலோகங்களிலும்		
ஆணை ஓட்டினான்	(தன்னுடைய) செங்கோலைச் செலுத்துமவனான எம்பெருமான்		
இன்று	இப்போது		

* * *—எம்பெருமான் நிர்ஹேதுகமாக வந்து விஷயீகரிக்கப் பெறும்படியான பாக்கியம் தமக்கேயுள்ளதென்கிறார். 'மது' என்னுமசுரனைக் கொன்றொழித்த பெருமானே தஞ்சம் என்றிருந்தால் மனத்தில் எவ்விதமான துன்பமும் வந்து சேரமாட்டாது என்றார் முன்னடிகளில். 'அப்படி நீர் மதுசூதனனையே தஞ்சமாகக் கொண்டிருக்கிறீரோ?' என்று சிலர் கேட்க; அப்பெருமானை நான் தஞ்சமாகக்கொள்ளவேண்டும்படி அவன் எனக்கு ஒரு காரியம் வைக்கவில்லை; அவன்றானே என்னெஞ்சில் வந்து குடிகொண்டான்; இப்படிப்பட்ட பாக்கியம் எனக்கே அஸாதாரணமாக அமைந்தது என்றார் பின்னடிகளில்.

மனக்கேதம்—'மந: கேத:' என்ற வடசொல் தொடரின் விகாரமாகக்கொண்டால் 'மனம் கேதம்' என்று பிரியும்: மனவருத்தம் என்றபடி; அன்றியே, 'மனக்கு ஏதம்' என்றும் பிரிக்கலாம். 'மனக்கு' என்றதில் அத்துச்சாரியை வரவில்லையென்க. "மனக்கின்பம்படமேவும்" என்று திருவாய்மொழியிலும் பிரயோகிக்கப்பட்டது: 1. "மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்" என்றனர் பிறரும். **ஏதம்**—குற்றம்.

மூன்றாமடியின் முதற்பதம் '**நின்று**' என்பதாகவே பலரும் ஓதுவர்கள்; பல அச்சுப்பிரதிகளிற் பாடமுமிதுவே: இஃது இடையில் மாறுபட்ட பாடமாகும். "**இன்றொன்றி** நின்றுலகை" என்றே பூர்வவ்யாக்யான பாடம். "ஸமஸ்த லோகத்தையும் விடாதே நின்று தன் ஆஜ்ஞை செல்லும்படி நடத்தினவன் தானே

1. நன்னூல்—55.

வந்து அபிநிவிஷ்டனுன ஸம்பத்து எனக்கேயுள்ளது ; அது தானும் இன்று.'' என்ற பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி காண்மின். மோனையின்பமும் பொருட்பொருத்தமும் இப்பாடத்திற்கே இணங்கும். பாசுரத்தை யெழுதும்போது அடிகளில் நிறுத்தாமல் மேலடியோடு ஸந்திசெய்தே யெழுதுகிற வழக்கப்படி பழைய ஏட்டுப்பிரதிகளில் ''எனக்கேதா னின்றேன் றினின்றுலகை'' என்றெழுதி யிருந்ததன்பயனுக '' நின்றேன்றி நின்றுலகை '' என்றபாடம் நிகழ்ந்தது போலும்.

'' ஏழுலகை ஒன்றிநின்று ஆணையோட்டினன் சென்று ஒன்றி நின்றதிரு இன்று எனக்கேதான் '' என்று அந்வயிப்பது. எவ்வுலகத்தும் தன்னுடைய செங்கோலே செல்லும்படியாகத் தனியரசு புரிகின்ற திருமால் தானே யெழுந்தருளிப்பொருந்தி நெஞ்சிலே வாழும்படியான செல்வம் இன்று எனக்கே வாய்த்தது என்றவாறு.

திருநின்ற பக்கம் திறவிதேன் றேரார் *
கருநின்ற கல்லார்க்குரைப்பர் *—திருவிருந்த
மார்வன் சிரீதரன்றன் வண்டுலவு தண்டுழாய் *
தார்தன்னைச் சூடித் தரித்து. (கூஉ)

திரு இருந்த மார்வன்	பெரிய பிராட்டியார் எழுந்தருளி யிருக்கப்பெற்ற திருமார்வை யுடையனுய் (அதனுலே)
சிரீதரன் தன்	'ஸ்ரீதரன்' என்று திருநாமம் பெற்றவனுன எம்பெருமானுடைய
வண்டு உலவு தண் துழாய் தார் தன்னை	வண்டுகளுலாவப் பெற்ற குளிர்ந்த திருத்துழாய் மாலையை
சூடி	தலைக்கு அலங்காரமாக அணிந்து
தரித்து	அதனுல் ஸத்தை பெற்று,
திரு நின்ற பக்கம் திறவிது என்று ஓரார்	'பிராட்டி பொருந்தி யிருக்கப்பெற்ற வலப்பக்கத்தை யுடைய வஸ்துவே பரதத்துவம்' என்று துணிந்தறியமாட்டாதவர்கள்
கரு நின்ற	(தங்களைப்போலே) கர்ப்பவாஸம் பண்ணிப் பிறக்கின்ற சிலரை
கல்லார்க்கு உரைப்பர்	(பரதெய்வமாக) மூடர்களுக்கு உபதேசிப்பர்கள்.

* * *—இவ்வுலகத்துச் சிலர், தேவிற் சிறந்த தெய்வம் திருமாலேயென்று அறியமாட்டாமல், தங்களைப்போலவே பிறப்பதும் இறப்பதுமான சிலரைப் பரதெய்வமாகத் தாங்கள் கொள்வதல்லாமல் இந்த அநர்த்தமான அர்த்தத்தைப்பிறர்க்கும் உபதேசிக்கின்றார்களே ! என்று வருந்துகின்றார்.

முன்னம் பின்னடிகளை அந்வயித்துக்கொண்டு, பின்னர் முன்னடிகளை அந்வயித்துக்கொள்க. திருமாலின் தேன்மிக்க திருத்துழாய்மாலையை அணிந்து கொள்ளப்பெற்றால் 'லக்ஷ்மீபதியான வஸ்துவே சிறந்த தெய்வம்' என்று அறியலாகும்; அங்ஙனம் * திருவிருந்த மார்வன் சிரீதரன்றன் வண்டுலவு தண்டுழாய்த்தார் தன்னைச்சூடப்பெறுமையினாலே திருநின்றபக்கம் திறவிதென்று உணரப்பெற்றிலர் என்ற கருத்தை உய்த்துணரவேண்டும். "நூல்களைக்கற்று உணராதவர்கள்" என்ற சொல் தொடர்க்கு—நூல்களைக் கற்றிலாதலால் அறிவு பெறாதவர்கள் என்று பொருள் கொள்வது போல இங்குக்கொள்க.

"திருநின்றபக்கம் திறவிது" என்ற இவ்வருளிச்செயலைத் திருவுள்ளம்பற்றியே பட்டர் ஸ்ரீகுணரத்நகோசத்தில் "ஃவாஂஹா ஹஂபாஂஸொ யஃவரி வரஂஹ்ர ததஹஂதெஃ = அபாங்கா பூயாம்ஸோ யதுபரி பரம் ப்ரஹ்ம தததூத்" என்றருளிச் செய்தனரென்னலாம். [பிராட்டியின் நிரம்பிய கடாக்ஷம் பட்ட வஸ்து பரப்ரஹ்மமாய் விட்டது என்பது இதன் கருத்து.]

"கருநின்ற" என்றது பெயரெச்சமன்று; இரண்டாம் வேற்றுமை யுருபு தொக்கிய வினையாலணையும் பெயர்; கருநின்றவர்களை என்றபடி. கர்ப்பப்பையில் தங்கிப் பிறப்பது மிறப்பது மானவர்களை என்கை. இப்படிப்பட்டவர்களைப் பரதெய்வமென்று கற்றுணர்ந்த பெரியோர்களிடத்துக்கூறினால் அவர்கள் முகஞ்சிதறப் புடைப்பர்களாதலால் அன்னவர்களிடத்து வாய் திறவாமல் கல்லார்க்குரைப்பராம்.

கல்லார்—கல்வியிலாத மூடர். ... . (கூஉ)

தரித்திருந்தே னாகவே தாராகணப் போர் *
விரித்துரைத்த வெந்நாகத் துன்னை *—தெரித்தெழுதி
வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் *
பூசித்தும் போக்கினேன் போது. (கூக)

தாராகணம்	நக்ஷத்ரகணங்களினுடைய
போர்	(சுபாசுப நிமித்தமான) ஸஞ்சாரத்தை
விரித்து உரைத்த	(ஜ்யோதிச்சாஸ்த்ர முகத்தாலே) விஸ்தாரமாக வெளியிட்டவனும்
வெம் நாகத்து உன்னை	(பிரதிகூலர்க்குத்) தீக்ஷ்ணனுமான திருவனந்தாழ்வானுக்கு அந்தராத்மாவாகிய உன்னை
தெரித்து	அநுஸந்தித்தும்
எழுதி	எழுதியும்
வாசித்தும்	(எழுதினவற்றைப்) படித்தும்
கேட்டும்	(ஆங்காங்கு) ச்ரவணம் பண்ணியும்
வணங்கி	நமஸ்காரம்பண்ணியும்
வழிபட்டும்	உபசாரங்களைச் செய்தும்
பூசித்தும்	பூஜித்தும்
போது போக்கினேன்	காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றேன் ;
	(இப்படி செய்வது எதுக்காக வென்னில் ;)
தரித்திருந்தேன் ஆகவே	ஸத்தை பெறுவதற்காக.

* * *—தம்முடைய போதுபோக்கைப் பேசுகிறார். எம்பெருமானை அநுஸந்திக்கை, அவனது திருப்புகழ்களைப் புத்தகமாக எழுதுகை, அவற்றை வாசிக்கை, செவித்தினவுகெடச் சொல்லுவார் பக்கல் கேட்கை, வணங்குகை, தம்மாலியன்ற உபசாரங்களைப் பண்ணுகை, அர்ச்சிக்கை முதலிய தொழில்களால் தம்முடைய போதுபோவதாக அருளிச்செய்தாராயிற்று. இப்படி செய்வன வெல்லாம் ஸாதநாநுஷ்டாந ரூபமாக அல்ல ; ஆத்மா ஸத்தை பெறுதற்காக ஸ்வயம் புருஷார்த்தமாய்ச் செய்வன என்பதை வெளியிடுகிறார் " **தரித்திருந்தேனாகவே** " என்பதனால்.

[" **தாராகணப்போர் விரித்துரைத்த வெந்நாகத்துன்னை.** "] இக்காலத்துப் புதிய ஆராய்ச்சிக்காரர் சிலர் வெளியிட்டுள்ள ' ஆழ்வார்கள் காலநிலை ' என்னுமோர் புத்தகத்தில் இப்பாசுரத்தை ஆராய்ச்சிசெய்யப் புகுந்து,

" இதன் முதலிரண்டடிகட்கு-'நக்ஷத்ரகதியாயிருக்கிற ஜ்யோதிஸ்—சாஸ்திரத்தைச்சொன்ன திருவனந்தாழ்வானுக்கு ஆத்மாவாயிருக்கிற உன்னை ' என்பது பூர்வவியாக்கியானம். இதன்படி ' தாராகணப்போர் விரித்துரைத்த ' என்ற விசேடணம் ஆதி

சேடனுக்கு உரியதாகும். ஆனால் அவனை இவ்வாறு விசேடிப்பதற்குரிய நேரான பொருத்தமொன்றுங் காணப்படவில்லை. ஆதிசேடன் செய்த சோதிட நூல் இன்னதென்பதுந் தெரிந்திலது. அதனால், 'வெந்நாகத்துன்னை' என்றுள்ள பாடம் 'விரித்துரைத்த வென்னாகத்துன்னை' என்றிருந்த பழம் பாடத்தினின்றும் மாறியதோ என்று கருத இடந்தருகின்றது. '(சோதிட நூலை) விரித்துரைத்த (என்+ஆகத்து=) எனது நெஞ்சிடமாகவுள்ள, உன்னை'—என்பது இப்பாடப்படி பொருளாகும்............இங்ஙனம் 'தாராகணப்போர் விரித்துரைத்த' என்பது ஆழ்வார்க்குரிய விசேடணமாயின், தம்மாற் செய்யப்பெற்ற சோதிட நூலொன்றைப்பற்றி அவர் குறிப்பிட்டனராவர். அத்தகைய நூல் யாது என்பது ஆராய்ந்து அறிதற்குரியது."

என்று எழுதியுள்ளார். இதனைச் சொல்விற்றுகிறதென்னென்னில், பகவத்கிருபையாலும் ஸதாசார்ய கடாக்ஷத்தாலும் ஆழ்வார்களருளிச்செயல்களின் உண்மைப்பொருள்களை நன்குணர்ந்து அருளிச்செய்தவரும், இற்றைக்குச் சற்றேறக்குறையத் தொள்ளாயிரம் ஆண்டுகட்கு முன்பு ஸர்வஜ்ஞராய்ப் புகழ்பெற்று விளங்கினவருமான பெரியவாச்சான் பிள்ளை பிழையான பாடமொன்றைக் கொண்டனரென்றும், அப்பாடப்படி உரைக்கும் பொருள் பொருத்தமற்றதென்றும் சொல்விற்றுகிறது. "வெம் நாகத்து" என்பது பெரியவாச்சான் பிள்ளை உரைசெய்தருளின பாடம். "என் ஆகத்து" என்பது இப்புதியபுலவர் கற்பிக்கும் பாடம். பழையபாடத்திற் பொருத்தமின்மை கூறப்புகுமவர் தாங்கூறும் பாடத்தில் ஒரு பொருத்தங்காட்டித் தீரவேண்டும். ஆதிசேஷன் செய்த சோதிட நூல் இன்னதென்று தெரியவில்லை யென்னுமிவர் திருமழிசைப்பிரான் செய்த சோதிட நூல் இன்னதென்று தெரிந்து கொண்டவராதல்வேண்டும். "பார்க்கவம் பிருகு சூத்திர முதலிய கணித சோதிட கிரந்தங்கள் உள்ளன; இவைபோன்றதொன்றே பிருகுவமிசத்தவரான ஆழ்வார் அருளிச்செய்ததாக வேண்டும்" என்று அநுமானங் கூறுகின்றார். இத்தகைய அநுமானம் ஆதிசேஷன்பக்கல் கூடாமைக்குக் காரணமறிகின்றிலோம். வேதாங்கங்களுள் ஒன்றான ஜ்யோதிஷத்திற்கு ஆதிசேஷன் ப்ரவர்த்தகன்

என்னுமிடத்தை "பபாஸே ஜ்யௌதிஷீ வித்யா யதுபஜ்ஞா தராதலே। தமநந்தமநந்தஸ்ய தல்பம் ஸங்கல்பயே ஹ்ருதி = பபாஸே ஜ்யௌதிஷீ வித்யா யதுபஜ்ஞா தராதலே, தமநந்தமநந்தஸ்ய தல்பம் ஸங்கல்பயே ஹ்ருதி" இத்யாதிகளான பல பிரமாணங்களினால், நன்கறிந்தே பூருவர்கள் மிகப்பொருத்தமாக வியாக்கியானஞ் செய்தருளினர். இவ்விஷயமாகச் சில வாண்டுகட்கு முன்னர் நாம் பல விடங்களிலும் பல பெரியோர்களை விசாரித்து வருகையில், மலைநாட்டில் திருவனந்தசயனத்தில் மலையாளிச் சோதிட நிபுணரொருவர் எடுத்துரைத்த ச்லோகம் மேற்குறித்தது. புராதநமான சோதிட நூலொன்றின் வியாக்கியானத்தில் மங்களச்லோகமாக அமைந்ததாமிது. இன்னமும் ஊன்றி ஆராயப்புகில் இத்தகைய ஆதாரங்கள் ஆகரத்துடன் பல கிடைக்கக்குறைவில்லை. இதுநிற்க. திருமழிசைப்பிரான் பல மதங்களிலும் புகுந்து அந்தந்த மதங்கட்குச் சார்பாகப் பல நூல்களுமியற்றினரென்னும் ப்ரஸித்தியிருந்தாலும் சோதிட நூல் இயற்றியருளினராக எங்குங்கூறப்படவில்லை. அங்ஙனே ஏதேனுமொரு நூல் தாம் செய்தருளியிருந்தாலும் அதனை இங்கு அநுவதித்தருளிச்செய்தற்கு ப்ரஸக்தியொன்றுமில்லை. இவ்வண்ண மருளிச்செய்யும் வழக்கம் ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்களி லொன்றிலுமில்லை. ஆகவே 'என் ஆகத்து' என்று பாடத்தை மாறுபடுத்தல் பயனற்றது. ஸர்வஜ்ஞர்களான பூர்வாசார்யர்களின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளில் அல்பஜ்ஞரான நாம் குறைகூறுதற்குச் சிறிது 'மதிகாரமுடையோமல்லோம். பூருவர்கள் ப்ரமித்தார்களெனினும் அந்த ப்ரமமே நமக்கும் தஞ்சமாகத்தக்கது. ஸ்ரீமந்நாதமுனிகள் தொடங்கி ஸ்ரீமணவாளமாமுனிகள் வரையிலுள்ள ஸதாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகள் வேதவாக்கினுஞ் சிறந்து பிரமாணமாவனவென்று திண்ணிதாகக் கொள்வாரது திருவடிகளே சரணம். பூருவர்களருளிச்செய்த பொருள்கட்கு முரண்படாமல் விசேஷார்த்தங்களை விவேகித்துக்கூறின் குறையொன்றுமில்லை. இதுவே கலையறக்கற்ற மாந்தர்பணியாம். இன்னமுமிங்கு விரித்துரைக்கவேண்டும் விஷயங்களைத் தனிப்புத்தகத்தில் விரித்துரைத்தோம், கண்டுகொள்க.

தாராகணப்போர் = 'தாராகணம்' என்னும் வடசொல் தொடர்

நக்ஷத்ரஸமூஹமெனப் பொருள்படும். அவற்றின் ஸஞ்சாரத்தை ஜ்யோதிச் சாஸ்த்ரமுகத்தால் விரித்துரைத்தவரான திருவனந்தாழ்வானுக்கு அந்தாரத்மாவாயிருக்கிற வுன்னை. வேதம், பஞ்சராத்ரம், இதிஹாஸ புராணம் முதலிய வேதோபப்ரும்ஹணங்கள் முதலானவற்றை, தன் முகமாகவும் பிரமன் முகமாகவும் சில முனிவர்க்குத் தான் அந்தராத்மாவாயிருந்து அவர்கள் முகமாகவும் வெளியிட்டதுபோல ஆதிசேஷனுக்கு அந்தராத்மாவாயிருந்து ஜ்யோதிஸ் சாஸ்த்ரத்தை வெளியிட்டருளினன் என்னும் உண்மையை வெளியிடுதலே இவ்விசேஷணத்திற்குப் பிரயோஜனமென்க.

நாகம்—வடசொல் திரிபு; ஸர்ப்பம். '**வெம்**' என்ற அடைமொழி இயற்கை பற்றியது. .... (௬௩)

போதான விட்டிறைஞ்சி யேத்துமினோ * பொன்மகரக்
காதானை யாதிப்பெருமானை *—நாதானை
நல்லானை நாரணனை நம்மேழ் பிறப்பறுக்குஞ்
சொல்லானை * சொல்லுவதே சூது. (௬௪)

பொன் மகரம் காதானை — அழகிய மகர குண்டலங்களைத் திருக்காதுகளில் அணிந்துள்ளவனும்
ஆதி — ஜகத்காரண பூதனும்
பெருமானை — பெருமை பொருந்தியவனும்
நாதானை — (அனைவர்க்கும்) நாதனாயிருப்பவனும்
நல்லானை — (ஆச்ரிதர் பக்கல்) வாத்ஸல்யமுடையவனும்
நாரணனை — நாராயணனென்று ப்ரஸித்தி பெற்றவனும்
நம் எழ் பிறப்பு அறுக்கும் சொல்லானை — நம்முடைய ஜன்ம பரம்பரைகளை அறுக்கவல்ல திருநாமங்களையுடையவனுமான ஸர்வேச்வரனைக் குறித்து
போது ஆன இட்டு இறைஞ்சி எத்துமின் — புஷ்பமென்று பேர் பெற்றவற்றை ஸமர்ப்பித்து வணங்கித் துதி செய்யுங்கள்;
சொல்லுவதே — (அவனுடைய திருநாமங்களை வாயாரச்) சொல்லித் துதிப்பதே
சூது — நல்ல வாய்ப்பு.

* * *—தம்முடைய காலக்ஷேபக்ரமத்தை யருளிச்செய்தார் கீழ்ப்பாட்டில். பிறர்க்குக் காலக்ஷேப க்ரமமுபதேசிக்கிறு ரிப்பாட்

டில். எம்பெருமான் திருவடிகளில் புஷ்பங்களைப் பணிமாறுவதும் அவனது திருநாமங்களைச் சொல்லி யேத்தி யிறைஞ்சுவதுமே உங்கட்குப் போதுபோக்காகக் கடவதென்கிருர்.

'போதுகளை யிட்டிறைஞ்சி' என்னுமல் 'போதான விட்டிறைஞ்சி' என்றதன் கருத்து யாதெனில்; எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கவேணுமென்கிற சுத்தபாவத்துடனே கொள்ளுகிற புஷ்பம் எதுவாயினுங் குற்றமில்லை; 'செண்பக மல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சி' என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற புஷ்பங்களாகவே யிருக்கவேணுமென்கிற நியதியில்லை; ஏதேனுமொரு பூவாயிருக்கலாம் என்பதாம். பெரியவாச்சான் பிள்ளையும் இவ்விடத்து வியாக்கியானத்தில்—"இன்ன புஷ்பமென்று நியதியில்லை; பூவானதை யெல்லாவற்றையுங்கொண்டு திருவடிகளிலே ஸமர்ப்பித்து வணங்கி ஸ்தோத்ரம் பண்ணுங்கோள்" என்றருளிச் செய்தது காண்க. இதனுல், இன்ன பூ என்று நிர்ப்பந்த மில்லாமையால் பூவென்று பேர்பெற்றிருக்கு மத்தனையே வேண்டுமென்றதாயிற்று. திருவாய்மொழியில் [1—6—1.] "பரிவதிலீசனைப் பாடி விரிவது மேவலுறுவீர், பிரிவகையின்றி நன்னீர்தூய்ப் புரிவதுவும் புகைபூவே" என்ற பாசுரத்தை ஸ்ரீபட்டர் உபந்யஸிக்கும் போது "புரிவதுவும் புகைபூவே" என்ற சப்த ஸ்வாரஸ்யத்தைத் திருவுள்ளம்பற்றி 'இவ்விடத்தில் அகில்புகையென்ருவது, கருமுகைப்பூ என்ருவது சிறப்பித்துச் சொல்லாமையாலே ஏதேனும் ஒரு புகையும் ஏதேனுமொரு பூவும் எம்பெருமானுக்கு அமையும்; செதுகையிட்டுப் புகைக்கலாம்; கண்ட காலிப்பூவும் சூட்டலாம்' என்று உபந்யஸித்தருளினராம்; அதை நஞ்சியர் கேட்டு "ந கண்டகாரிகா புஷ்பம் தேவாய விநிவேதயேத்" [கண்டகாலிப்பூவை எம்பெருமானுக்குச் சாத்தலாகாது] என்று சாஸ்த்ரம் மறுத்திருக்க, இப்படி அருளிச்செய்யலாமோ? என்று கேட்டார்; அதற்கு பட்டர் அருளிச்செய்த ரஸோக்தி:—'சாஸ்த்ரம் மறுத்தது மெய்தான்; கண்டகாலிப்பூ எம்பெருமானுக்கு ஆகாதென்று மறுக்கவில்லை; அடியார்கள் அப்பூவைப்பறித்தால் கையில் முள்தைக்குமே! என்று பக்தர்கள் பக்கல் தயையினுல் சாஸ்த்ரம் நிஷேதித்ததேயன்றி எம்பெருமானுக்கு ஆகாத பூ எதுவுமில்லை; என்ருர். திரு

வாய்மொழிக்குப் பதினெண்ணாயிரமுரைத்த பரகால ஸ்வாமி இந்த ஸம்வாதத்தைக்கண்டு ரஸியாமல் திரஸ்கரித்துரைத்தது கிடக்க. "ஊத்ருஜஸஷிய-ஹா நாஂ நஸஹஸஂ ரெநவவ கூஃ" [பக்தி எல்லை கடந்தால் நூல்வரம்பில்லை] என்றதையும் அருளிச்செயல் தொடையழகையும் நோக்கி ரஸப்பொருளுரைத்தவற்றில் குதர்க்க வாதஞ்செய்கை விவேகிகட்குப் பணியன்று. **பொன்மகரக் காதானை**=மகரமென்றது மரக்குழைக்கு ஆகுபெயர். சுறுமீன் வடிவமாகச் செய்யப்படுவதோர் காதணி மகரகுண்டல மெனப்படும்.

நாதானை....'நாதனை' என்பதன் நீட்டல். * செய்யுள் வேண்டுழி வந்த விகாரம்.

நம்மேழ்பிறப்பறுக்குஞ் சொல்லானை=ஒன்றின்பின் ஒன்றாக இடையறாது நிகழ்ந்து செல்கின்ற நமது ஜன்மங்களைப் போக்க வல்ல திருநாமங்களையுடையவன் எம்பெருமான். '**ஏழ்பிறப்பு**' என்பதற்குப் பலவகையாகப் பொருள்கூறுவதுண்டு: கர்ப்பவாஸஞ் செய்யும் கஷ்டம், கர்ப்பத்தினின்று வெளிப்படுங் கஷ்டம், பல பிணிகளை யநுபவிக்குங் கஷ்டம், கிழத்தன மநுபவிக்குங்கஷ்டம், மரணவேதனைகள் படுங்கஷ்டம், மரணமடையுங் கஷ்டம், நரகயாதனைகளை யநுபவிக்குங் கஷ்டம் ஆகிய ஏழுவகைக்கஷ்டங்களுக்குக் காரணமாகிய பிறப்பு என்பர் சிலர்; 1. "பெருங்களிற்று வட்டம், பெருமணல் வட்டம், எரியின் வட்டம் புகையின் வட்டம், இருளின் வட்டம் பெருங்கீழ் வட்டம், அரிபடை வட்டமென்றேழுவகை நரகம்" என்னப்பட்ட ஏழு நரகங்களிலும் புகுவதற்கு ஏதுவான பிறப்பு என்பர் சிலர். 'ஏழு' என்றது உபலக்ஷணமாய்ப் பலவகைப் பிறப்புகளென்றபடி என்பர் சிலர். மற்றும் பல வகைகளுங் காண்க. "ஏழுவகைத்தோற்றத் தின்னுப்பிறப்பின்" "ஏழுபிறப்பி லடியவரை யெழுதாப் பெரியபெருமானை" (திருவரங்கக்கலம்பகம்) என்றவையுங் காண்க. சூது-உற்றது. .... (கூச)

சூதாவ தென்னெஞ்சத் தெண்ணினேன் * சொன்மாலை
மாதாய மாலவனை மாதவனை *—யாதானும்
வல்லவா சிந்தித் திருப்பேற்கு * வைகுந்தத்
தில்லையோ சொல்லீ ரிடம். (கூரு)

1. சேந்தன் திவாகரம்—12 ஆவது தொகுதி.

மாது ஆய	அழகுதான் ஒரு வடிவுகொண்டாற் போலே யிருப்பவனும்
மாலவனை	(ஆச்ரிதர் பக்கல்) வ்யாமோஹமுடையவனுமான
மாதவனை	திருமாலைக் குறித்து
சொல் மாலை	இச்சொல் தொடைகளை (ச் சொல்லி)
யாதானும் வல்ல ஆ சிந்தித்து இருப்பேற்கு	ஏதோ சக்தியுள்ள வளவு அநுஸந்தித்திருக்கிற எனக்கு
வைகுந்தத்து இடம் இல்லையோ	ஸ்ரீ வைகுண்டத்தில் இடம் இல்லையோ?
சொல்லீர்	சொல்லுங்கள் :
சூது ஆவது	இதுவே நமக்கு நல்லவாய்ப்பு என்று
என் நெஞ்சத்து எண்ணினேன்	என் மனத்தில் உறுதி கொண்டேன்.

* * *—எம்பெருமான் விஷயமாக இப்படிப்பட்ட சொல்மாலைகளைச்சொல்லிச் சிந்தித்திருப்பதுதான் நமக்கு உற்றது என்று நான் அத்யவஸாயங்கொண்டேன்; இதுவே போதுபோக்காக நானிருந்தால் எனக்குப் பரமபதம் கிடைக்கமாட்டாதோ? கர்ம ஜ்ஞாநபக்திகளென்னு முபாயாந்தரங்களை அனுட்டிப்பதும் கண்ணைப்புதைப்பதும் மூக்கைப் புதைப்பதுமாயிருந்து உடலை வருத்தி அருந்தொழில் புரிந்தால்தான் பரமபதம் கிடைக்குமென்று பாவிகாள்! நீங்கள் நினைத்திருக்கிறீர்களோ? என்றவாறு.

இப்பாசுரத்தின் பின்னடிகளைப் பெரும்பாலு முட்கொண்டே 1. "சிற்றவேண்டா சிந்திப்பேயமையுங் கண்டீர்களந்தோ!.......... குற்றமில் சீர்கற்று வைகல் வாழ்தல் கண்டீர் குணமே." என்று நம்மாழ்வா ரருளிச்செய்தனரென்னலாம். மாதவனைச் சொல்மாலைகள் கொண்டு யாதானும் வல்லவா சிந்தித்திருக்கிற தமக்கே வைகுந்தமுண்டு, மற்றையோர்க்கு இல்லை என்று தாம் விவக்ஷித்த பொருளை வினமுறையில் வைத்துரைத்தனரென்க.

மாதாய='மாது' என்று அழகுக்குப்பெயர்; "தோள் கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமலமன்ன தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கை கண்டாருமஃதே" என்னும்படியாக

1. திருவாய்மொழி 9—1—7.

அழகு தானே வடிவெடுத்தவனென்கை. இனி, 'மாதா' என்னும் வடசொல் மாது எனக் கிடப்பதாகக்கொண்டு தாய்போன்றளிப்பவனென்னவுமாம். 'மாலவனை' என்றும் 'மாயவனை' என்றும் பாடபேதம். .... (௯௫)

இடமாவ தென்னெஞ்ச மின்றெல்லாம் * பண்டு
படநாகணை நெடியமாற்கு *—திடமாக
வையேன் மதிசூடி தன்னோடு அயனைநான் *
வையேனாட் செய்யேன் வலம். (௯௬)

பண்டு — என்னைத் திருத்திப் பணிகொள்வதற்கு முன்பு,
படம் நாக அணை நெடிய மாற்கு — படங்களையுடைய சேஷசயனத்தில் பள்ளிகொண்டருள்பவனாயிருந்த ஸர்வேச்வரனுக்கு
இன்று — இப்போது முதலாக
எல்லாம் — மேலுள்ள காலமெல்லாம்
இடம் ஆவது — வாஸஸ்தானமாவது
என் நெஞ்சம் — எனது நெஞ்சாகும்;
மதி சூடி தன்னோடு — பிறைச்சந்திரனைத் தலையிலே சூடியிருக்கிற ருத்ரனையும்
அயனை — பிரமனையும்
திடம் ஆக — பரம்பொருளாக
வையேன் — மனத்திற்கொள்ள மாட்டேன்;
வையேன் நான் — (தத்துவமின்னதென்று கண்டறியத்தக்க) ஸூக்ஷ்ம புத்தியுடையேனான நான்
ஆள் செய்யேன் — (அந்த தேவதாந்தரங்களுக்குத்) தொண்டு செய்யவும் மாட்டேன்;
(இப்படி நான் சொல்லுவதற்குக் காரணமென்னவெனில்;)
வலம் — (திருமாலின் பரிக்ரஹமாயிருக்கப் பெற்ற) மிடுக்கேயாம்.

* * *—கீழ்ப்பாட்டில் "யாதானும் வல்லவா சிந்தித்திருப்பேற்கு வைகுந்தத்தில்லையோ சொல்லீரிடம்" என்றவாறே, எம்பெருமான், 'நம்முடைய இருப்பிடத்தை இவர் ஆசைப்படுகையாவதென்; இவருடைய நெஞ்சமன்றோ நமக்கு உத்தேச்யம்' என்று கொண்டு இவர்தம் திருவுள்ளத்தே வந்து புகுந்தருளினான்; அதனை யருளிச்செய்கிறார். "சென்றாற் குடையா மிருந்தாற் சிங்கா

சனமாம்" என்கிறபடியே ஸகலவித கைங்கரியங்களுக்கும் உரியவனை திருவனந்தாழ்வான்மேல் திருமால் சாய்ந்தருளினது இற்றைக்கு முன்பே; இன்று முதலாக மேலுள்ள காலமெல்லாம் எனது நெஞ்சையே தனக்கு இடமாக அமைத்துக்கொண்டானாயிற்று: இப்படி அவன்றானே வந்து விரும்பப்பெற்ற பாக்யம் வாய்ந்த அடியேன் களிர்மதிச் சடையனையாவது நான்முகக்கடவுளையாவது நெஞ்சிற் கொள்ளவும் வணங்கிவழிபடவும் இனி ப்ராப்தி ஏது? எம்பெருமானை அண்டைகொண்டமிடுக்கு எனக்குள்ளதன்றோ? என்கிறார்.

நாக + அணை, நாகவணை என்றாகத்தக்கது, 'நாகணை' என மருவிற்று. **மதிசூடி** = தக்ஷமுனிவனது சாபத்தால் க்ஷயமடைபவனைக் கலைகுறைந்து வந்து சரணடைந்த சந்திரனை முடியின்மீது கொண்டு வரமளித்துப் பாதுகாத்தமையால் சிவன் மதிசூடியாயினன். இப்பாட்டில் '**வையேன்**' என்பது இரண்டிடத்து வந்துள்ளது; ஒன்று எதிர்மறை வினைமுற்று; மற்றொன்று உடன்பாட்டு வினையாலணையும் பெயர். **வை**—கூர்மை; கூர்மை தங்கிய மதியுடையேன் என்றவாறு. தேவதாந்தரப் பற்றையொழித்து ஸ்ரீமந் நாராயணனையே பரதெய்வமாகக் கடைப்பிடித்த தமது மதியைத் தாம் சிறப்பித்துக் கூறுதல் ஏற்குமென்க.

ஆட்செய்யேன் வலம் = ஆட்செய்யேன், வலஞ்செய்யேன் என்று யோஜித்து, (அவர்களைப்) பிரதக்ஷிணம் செய்யமாட்டேனென்றுரைக்கவுமாம். .... (௧௬)

வலமாக மாட்டாமை தானாக * வைகல்
குலமாக குற்றந்தா னாக—* நலமாக
நாரணனை நாபதியை ஞானப் பெருமானை *
சீரணனை யேத்துந் திறம். (௧௭)

நாரணனை	ஸ்ரீமந் நாராயணனைய்	சீர் அணனை	நற்குணங்கள் பொருந்தியிருக்கப் பெற்றவனான ஸர்வேச்வரனை
நாபதியை	(என்னுடைய) நாவுக்கு ப்ரவர்த்தகனைய்		
ஞானம் பெருமானை	அறிவிற் பெரியவனைய்		

வைகல் நலம் ஆக எத்தும் திறம் — { எப்போதும் நன்றாகத் துதி செய்கையாகிற இந்த ஸ்வபாவமானது

வலம் ஆக — { நன்மைதருவதாகிலுமாகுக ;

மாட்டாமை தான் ஆக — { நன்மைதரமாட்டாதாகிலுமாகுக ;

குலம் ஆக — { நற்குலத்தைத் தருவதாகிலுமாகுக ;

குற்றம் தான் ஆக — { கெடுதலையுண்டாக்குவதாகிலுமாகுக;

[ஏத்துவதை நான் தவிரமாட்டேன்.]

* * *—ஸ்ரீமந்நாராயணனைத் துதிசெய்வதே தொழிலாக நானிருப்பது எனக்கு நன்மையைத்தரவல்லது என்றும் நற்குலத்தை விளக்கவல்லது என்றும் நான் நினைத்திருக்கிறேன் ; இந்த என்னினைவின்படியே ஆகிலுமாகுக ; இதற்கு விபரீதமாகக் கெடுதலை விளக்கவல்லதாகிலுமாகுக: இதில் எனக்கொரு விவக்ஷையில்லை: எம்பெருமானை ஏத்துகையே எனக்கு உத்தேச்யம் என்கிறார்.

வலமாக—எம்பெருமானைத் துதிப்பதானது என்னுடைய கொள்கையின்படி பலத்தைக் கொடுப்பதாகவுமாம் ; மாட்டாமை தானாக—எம்பெருமானது வைபவமறியாத உங்களுடைய கருத்தின்படி தத்விபரீதமாகவுமாம். எப்படியானாலெனக்கென்ன ? நானொரு பலனை விரும்பினவனல்லேன் ; ஸ்வயம் புருஷார்த்தமாக எம்பெருமானைத் துதிப்பேன் நான் என்றவாறு. “வலமாக—குலமாக ” என்றவற்றுக்குச் சார்பாக “ குலந்தருஞ் செல்வந்தந்திடும் ....வலந்தரும்மற்றும் தந்திடும்.......நாராயணாவென்னும் நாமம் ” என்ற திருமங்கையார் பாசுரம் அநுஸந்திக்கத்தகும். .... (கூஎ)

திறம்பேன்மின் கண்டீர் திருவடிதன் நாமம் *
மறந்தும் புறந்தொழா மாந்தர் *—இறைஞ்சியும்
சாதுவராய்ப் போதுமின்க ளென்றான் * நமனுந்தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு. (கூஅ)

நமனும் — யமனும்

தன் தூதுவரை — தனது சேவகர்களை

கூவி — அழைத்து

செவிக்கு — { (அவர்களுடைய) காதில்

(என்ன சொன்னானென்றால்)

திறம்பேல்மின் கண்டீர் — { ‘(ஓ சேவகர்களே!) (இப்போது நான் உங்களுக்கு இடும் ஆணையைத்) தவறவேண்டா ;

திருவடி தன்	ஸர்வேச்வரனுடைய	இறைஞ்சி	வணங்கி
நாமம்	திருநாமத்தை		
மறந்தும்	மறந்தொழிந்தாலும்	சாதுவர் ஆய்	(கொடுமை தவிர்ந்து) ஸாதுக்களாய்
புறம் தொழா மாந்தர்	தேவதாந்தர பஜநம் பண்ணாத மனிசர்களை (க் கண்டால்)	போதுமின்கள் என்றான்	வர்த்திக்கக்கடவீர்கள்' என்று சொன்னான்.

* * *—ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் [3—7—14] "𑌸𑍍𑌵𑌪𑍁𑌰𑍁𑌷
𑌮𑌭𑌿𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌪𑌾𑌶𑌹𑌸𑍍𑌤𑌂 𑌵𑌦𑌤𑌿 𑌯𑌮𑌃 𑌕𑌿𑌲 𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌣𑌮𑍂𑌲𑍇 ।
𑌪𑌰𑌿𑌹𑌰 𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑌹𑌮𑌨𑍍𑌯𑌨𑍃𑌣𑌾𑌂 𑌨
𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌨𑌾𑌂 — ஸ்வபுருஷ மபிவீக்ஷ்ய பாசஹஸ்தம் வததி யம: கில தஸ்ய கர்ணமூலே—பரிஹர மதுஸூதநப்ரபந்நாந் ப்ரபுரஹ மந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம்" என்கிற ச்லோகத்தைத் தழுவி இப்பாசுர மருளிச்செய்யப்பட்டது. அந்த ச்லோகத்தின் கருத்தும் இந்தப் பாசுரத்தின் கருத்தும் ஒன்றேயென்க.

யமனுடைய தூதர்கள் பாசங்களைக் கையிற்கொண்டு தங்கள் கடமையைச்செலுத்தப் புறப்படும்போது யமன் அத்தூதர்களை யழைத்து, ரஹஸ்யங்கள் சொல்லுமாபோலே காதோடே ஒரு வார்த்தை சொன்னான்; அஃதென்னென்னில்; 'ஓ தூதர்களே! நீங்கள் பாகவதர்களிடத்தில் சிறிதும் அதிகாரஞ் செலுத்த வேண்டா; அவர்களருகில் நீங்கள் செல்லவேகூடாது; ஒருகால் அவர்கள் நேர்பட்டால் வணங்கி வலஞ்செய்து பரமஸாத்விகர்களாய் விலகுங்கோள்' என்றானாம். இதனால் பாகவதர்கட்கு யமபய ப்ரஸக்தியே யில்லையென்றதாம். "அவன்தம ரெவ்வினையராகிலும் எங்கோனவன் தமரே யென்றொழிவதல்லால்—நமன்தமரால் ஆராயப் பட்டறியார்கண்டீர் அரவணைமேற் பேராயற் காட்பட்டார்பேர்" என்றார் பொய்கையாழ்வார்; "கெடுமிடராயவெல்லாம் கேசவா வென்ன நாளுங்கொடுவினை செய்யுங் கூற்றின்தமர்களுங் குறுக கில்லார்" என்றார் நம்மாழ்வார். "மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வ! நின்னாமங்கற்ற, ஆவலிப்புடைமைகண்டாய்—நாவலிட்டுழிதர்கின்றோம் நமன்றமர் தலைகள்மீதே" என்றார் தொண்டரடிப்பொடி யாழ்வார். "எத்தியுன் சேவடி யெண்ணியிருப்பாரைப், பார்த்திருந்தங்கு நமன்றமர் பற்றாமல், சோத்தம் நாமஞ்சுதுமென்று தொடாமை நீ, காத்திபோய்க் கண்ணபுரத்துறை யம்மானே!"

என்றார் திருமங்கையாழ்வார். யமன் தன் தூதர்க்குச் சொல்லத் தொடங்கும்போதே 'திறம்பேல்மின் கண்டீர்' என்கையாலே, ஒருகால் அத்தூதர் ஞாபகப்பிசகினால் பாகவதர்களிடத்தில் தம் அதிகாரத்தைச்செலுத்தினால் தனக்கு மஹத்தான அநர்த்தம் விளைந்திடுமென்கிற அச்சமுள்ளமை வெளிப்படும். **கண்டீர்**—முன்னிலையசை. **திருவடி தன்னாமம் மறந்தும் புறந்தொழா மாந்தர்**= 'அடி' என்றும், 'அடிகள்' என்றும் 'திருவடி' என்றும் ஸ்வாமிக்கு வாசகம். ஸர்வஸ்வாமியான எம்பெருமானுடைய திருநாமத்தை........என்றபடி. "மறந்தும் புறந்தொழா மாந்தர்" என்னுமிந்த ஸ்ரீஸூக்தியின் போக்யதை ஆழ்ந்து அநுபவிக்கத்தக்கது. எம்பெருமானுக்கு அடிமைப்பட்டிருந்தாலு மிருக்கலாம், இல்லாமற் போனாலும் போகலாம்; தேவதாந்தரங்களிடத்தில் பற்றில்லாமையே முக்கியம்; ஒருத்தி தன் கணவனிடத்தில் அன்புகொள்ளாதிருக்கினு மிருக்கலாம்; நாளடைவில் ஆநுகூல்ய மேற்படக்கூடும்; வேறு புருஷனிடத்தில் அன்புகொண்டால் அவத்யமாகுமே; அதுபோலவென்க. முமுக்ஷுப்படியில் உகாரார்த்தம் விவரிக்குமிடத்து "அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதாநம்; தேவர்களுக்கு சேஷமான புரோடாசத்தை நாய்க்கிடுமாபோலே ஈச்வரசேஷமான ஆத்மவஸ்துவை ஸம்ஸாரிகளுக்கு சேஷமாக்குகை. பகவத் சேஷத்வத்திலும் அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதாநம்; 'மறந்தும் புறந்தொழா மாந்தர்' என்கையாலே." என்றருளிச்செய்த ஸ்ரீஸூக்திகள் இங்குக் குறிக்கொள்ளத்தக்கன.

"மாந்தரை" என்று சிலர் ஓதுவர்களேனும் அது பாடமன்று; வெண்டளையும் பிறழும். **சாதுவர்**—வடசொல் விகாரம்; **ஸாயவஃ.** **"என்றான்........கூவிச்சேவிக்கு"** என்றும் **"வத³தி யஃ கிஞ்சித் கர்ணேஜப்யம்"** என்றும் காதோடே ரஹஸ்யமாகக் கட்டளையிடுவானேன்? நாடுநகரமும் நன்கறியப் பேரிரைச்சலிட்டு இங்ஙனே கட்டளையிடலாகதோ? என்னில்; ஆகாது; 'ராஜமஹிஷியிடத்தில் காமங்கொள்ளாதே' என்று ஒருவன் ஒருவனுக்குக் கட்டளையிட வேணுமானால் இது யுக்தமான வார்த்தையேயாகிலும் இவ்வார்த்தையைப் § பிறர் செவிப்படச் சொல்லலாகாதன்றே; அதுபோல.

§ "ராஜதாரவ்யவஹார நிஷேதமும் பிறரறியிற் பொல்லாதிறே" என்பது பூருவர்களின் ஸ்ரீஸூக்தி.

அந்த வார்த்தையைத்தான் பலரறிய என் சொல்லலாகாதென்னில்; கேண்மின்; 'ராஜமஹிஷியினிடத்தில் காமங்கொள்ளாதே' என்னும் போது ("ஶ்ருஷ்கெஹெஸ்யவஹி ஶ்ருதிஷெஷய:—நஹ்யஶ்ருஷ்கும் ஶ்ருதிஷிஷ்யதெ" என்கிற நியாயத்தாலே) எதிராளி ராஜமஹிஷியினிடத்தில் காமங்கொண்டது வெளிப்படையாகுமே; அது அரசனுக்கு எட்டினால் தலைபோமே. .... (சுஅ)

சேவிக்கின்ப மாவதுவும் செங்கண்மால் நாமம் *
புவிக்கும் புவியதுவே கண்டீர்*—கவிக்கு
நிறைபொருளாய் நின்றானை நேர்பட்டேன் * பார்க்கில்
மறைபொருளு மத்தனையே தான். (சுகூ)

செவிக்கு இன்பம் ஆவதுவும்	கர்ணாம்ருதமாயிருப்பதும்	கவிக்கு நிறை பொருள் ஆய் நின்றானை	பாசுரத்திற்கு நிறைந்த பொருளாயிருக்குமெம்பெருமானை
செம் கண் மால் நாமம்	புண்டரீகாக்ஷனான எம்பெருமானுடைய திருநாமமே;	நேர்பட்டேன்	தைவாதீனமாக அடையப் பெற்றேன்;
புவிக்கு	பூமியிலுள்ளாரெல்லார்க்கும்	பார்க்கில்	ஆராய்ந்து பார்த்தால்
புவியும் அதுவே	(நிழல்பெற ஒதுங்குவதற்கு) இடமாவதும் அத்திருநாமமே;	மறை பொருளும் அத்தனையே தான் *	வேதங்களில் தேர்ந்த பொருளும் அவ்வளவே.

* * *—எம்பெருமானுடைய திருநாமம் யமவச்யதையைத் தவிர்க்குமென்றது கீழ்ப்பாட்டில்; அதனால் திருநாமத்தின் பாவநத்வம் [தூய்மை] சொல்லப்பட்டதாயிற்று; அப்படி பாவநமாயிருப்பதோடு மிகவும் போக்யமுமாயிருக்குமென்கிறது இப்பாட்டில். 1. "தோளாத மாமணியைத் தொண்டர்க்கினியானைக், கேளாச்செவிகள் செவியல்ல கேட்டாமே" என்றும், 2. "ஶ்ராவ்யாத கதா: ஶ்ரோத்ரத்வய! த்வம் ஶ்ருணு" என்றுஞ் சொல்லுகிறபடியே எம்பெருமானுடைய திருக்குண சேஷ்டிதங்களையும் அவற்றுக்கு வாசகமான திருநாமங்களையும் கேட்பதே காதுக்கு இன்பம் என்பது முதலடி.

1. பெரியதிருமொழி 11—7—2. 2. முகுந்தமாலை.

புவிக்கும் புவி அதுவே கண்டீர்=இப்பூலோகத்திலுள்ளாரனைவரும் ஸம்ஸாரதாபந்தீர நிழலுக்கொதுங்கி வாழவேண்டுமிடம் அந்த பகவந்நாமமே என்கை. ‘பூ:’ என்னும் வடசொல்லோ ‘பூமி:’ என்னும் வடசொல்லோ **புவி**யெனத்திரிந்தது. அது இலக்கணையால், பூமியிலுள்ளாரைக் குறித்தது **புவிக்கும்** என்றவிடத்து. அதற்குமேலுள்ள **புவி**யென்னுஞ்சொல் ஸ்தாநமென்னும் பொருளது.

“செவிக்கின்பமாவதுவுஞ் செங்கண்மால் நாமம்” என்று நீர் திருநாமத்தின் போக்யதையில் ஈடுபடும்படியாக எங்ஙனே பெற்றீர்? என்று கேட்பார்க்குப் பின்னடிகளால் விடையளிக்கிறார் போலும். **கவிக்கு நிறைபொருளாய் நின்றானை நேர்பட்டேன்**=எம்பெருமானை நான் யாத்ருச்சிகமாகக் கிட்டப்பெற்றேன் என்கை. நானாக ஒரு க்ருஷிபண்ணி பகவத்விஷயத்தில் ஈடுபட்டேனல்லேன்; விதிவசமாக நேர்ந்தது என்றவாறு. **பார்க்கில் மறைபொருளுமத்தனையே தான்**=எனக்கு யாத்ருச்சிகமாக நேர்பட்டதென்பது இருக்கட்டும்; உண்மையில் வேதாந்த ரஹஸ்யப்பொருளை ஆராயுமிடத்து முன்னடிகளிற் சொன்ன அர்த்தமே ஸகல வேதஸாரப்பொருளாயிருக்கும் என்றபடி.

கவிக்கு நிறைபொருளாய் நின்றானை=எம்பெருமானுக்கு உரிய விசேஷணங்களெல்லாவற்றினும் இவ்விசேஷணம் மிகச் சிறந்ததாகும்: எம்பெருமானைத் தவிர்த்து மற்றையோரைக் கவிபாட நினைத்தால் சொற்களையும் பொருள்களையும் திருடித்திருடிக் கவிபாடவேண்டும்; அங்ஙனன்றிக்கே எம்பெருமான் கவிக்கு நிறைந்த பொருளாயிருப்பன்; * ஏற்கும் பெரும்புகழ் வானவரீசனாகையாலே. “[illegible]” என்ற ஸ்ரீரங்கராஜஸ்தவ ஸூக்தி இங்கு ஸ்மரிக்கத்தகும்.

ஈற்றடியில் “மறைப்பொருளும்” எனப் பகரவொற்று வரவேண்டுமிடத்து வராதது முன்னடிக்குச்சேர. .... (௬௯)

தானொருவனாகித் தரணி யிடந்தெடுத்து *
ஏனொருவனா யெயிற்றில் தாங்கியதும் *—யானொருவன்
இன்று வறிகின்றே னல்லேன் * இருநிலத்தைச்
சென்றாங் கடிப்படுத்த சேய். (௭௰)

தான் ஒருவன் ஆகி	(விஷ்ணுவாகிய) தான் ஒப்பற்ற ஸர்வேச்வரனாயிருந்து
சென்று	(மஹாபலியினிடத்தில் யாசகனாய்ச்) சென்று
ஆங்கு	அந்த மாவலியின் யாக பூமியிலே
இரு நிலத்தை	விசாலமான இந்நிலத்தை
அடிப்படுத்த	திருவடியினளவாக ஆக்கிக் கொண்ட [அளந்து கொண்ட]
சேய்	சிறுபிள்ளையானவன்
ஏன் ஒருவன் ஆய்	விலக்ஷண வராஹ ரூபியாய்
	(பிரளயப் பெருங்கடலினுள் முழுகி)
தரணி	பூமியை
இடந்து எடுத்து	(அண்டபித்தியில் நின்றும்) ஒட்டுவிடுவித்தெடுத்து
எயிற்றில்	(தனது) கோரைப் பல்லின்மீது
தாங்கியது	தரித்தமையை
யான் ஒருவன்	நானொருவன் மாத்திரம்
இன்று	இன்றாக
அறிகின்றேன் அல்லேன்	அறிகிறேனில்லை. [நெடுநாளாகவே அனைவருமறிவர்.]

* * *—எம்பெருமான் வாமநமூர்த்தியாகி மாவலிபக்கலிற் சென்று மூவடியிரந்துபெற்று மூவுலகளந்ததும், பிரளயப் பெரு வெள்ளத்தில் மூழ்கி அண்டபித்தியில் ஒட்டிக்கிடந்த பூமியை மஹாவராஹமூர்த்தியாகி உத்தரித்ததும் ஆகிய இப்படிப்பட்ட பெருமைகள் ஸர்வலோக ப்ரஸித்தமென்கிறார்.

" தானொருவனாகி " என்பதை மேல் மூன்றுமடியோடு கூட்டியுரைக்க. 'தானொருவனாகி இருநிலத்தைச் சென்றங்கடிப்படுத்த சேய் ஏனொருவனாய்த் தரணி இடந்தெடுத்து எயிற்றில் தாங்கியதும் யானொருவன் இன்றறிகின்றேனல்லேன்' என இயையும்.

'யானொருவ னறிகின்றேனல்லேன்' என்கையாலே உலகமெல்லாமறியும் என்பதும், 'இன்று வறிகின்றேனல்லேன்' என்கையாலே இது புராதநம் என்பதும் வெளியாம். .... (எ௦)

சேய னணியன் சிறியன் மிகப்பெரியன் *
ஆயன் துவரைக்கோனாய்நின்ற—மாயன் * அன்
றோதிய வாக்கதனைக் கல்லார் * உலகத்தில்
ஏதிலராம் மெய்ஞ்ஞான மில். (எக)

சிறியன்	(ஸ்ரீகிருஷ்ணனென்கிற) சிறு பிள்ளையாய்க் கொண்டு
அணியன்	ஸுலபனையும்
மிக பெரியன்	(அந்நிலையிலேயே) மிகவும் பெரியவனாய்க்கொண்டு
சேயன்	எட்டாதவனையும்
	(இவ்விரண்டு படிகளுக்கும் உதாரணமாக)
ஆயன் ஆய் நின்ற	இடைப்பிள்ளையாய்ப் பிறந்த சிறுமையையுடையனையும்
துவரை கோன் ஆய் நின்ற	த்வாரகாபுரிக்குத் தலைவனாய் நின்ற பெருமேன்மையையுடையவனுமிருந்த
மாயன்	எம்பெருமான்
அன்று	(பாரதயுத்தம்நடந்த) அக்காலத்தில்
ஓதிய	(திருத்தேர்த்தட்டில் அர்ஜுநனைக் குறித்து) அருளிச்செய்த
வாக்கு அதனை	(சரமச்லோகமாகிய) அந்தத் திருவாக்கை
உலகத்தில்	இவ்வுலகத்தில்
கல்லார்	அதிகரிக்கப் பெறாதவர்கள்
மெய் ஞானம் இல்	தத்துவவுணர்ச்சியற்ற
எதிலர் ஆம்	பகவத் விரோதிகளாவர்.

* * *—கண்ணபிரான் அர்ஜுநனை வியாஜமாகக்கொண்டு அருளிச்செய்த பகவத்கீதையில் ஸாரமான சரமச்லோகம் இங்கு **'துவரைக்கோனாய் நின்றமாயன் அன்றோதிய வாக்கு'** என்பதனால் குறிக்கப்படுகிறது. அதன் பொருளை யறியப்பெறாதவர்கள் தத்துவஞானம் பெறார்கள்; தத்துவஞானம் பெற்றவர்களே எம்பெருமான்றனக்கு அன்பராகவும் மற்றையோர் விரோதிகளாகவுங்கொள்ளப்படுதலால் சரமச்லோகப் பொருளுணராதவர்கள் எம்பெருமானுக்குப் பகைவராவர் என்கிறது.

பாரதயுத்தத்து முதனாட்போரில் "உற்றாரையெல்லாம் உடன்கொன்று அரசாளப், பெற்றாலும் வேண்டேன் பெருஞ்செல்வம்" என்றெண்ணி, ஸ்வதர்மத்தில் அதர்மபுத்தியால் போர்புரியேனென்று காண்டீவம் கைநெகிழத் தேர்த்தட்டின்மீதே திகைத்து நின்ற அர்ஜுநனுக்கு ஸ்ரீகிருஷ்ணன் தத்வோபதேசஞ் செய்து அவனது கலக்கத்தைப்போக்க உபதேசித்ததாதலால் கீதை சிறந்தது. அதில் முதலிலே அர்ஜுநனுக்கு தேஹாத்மவிவேகத்தைப்

போதித்து அதன் மூலமாகக் கர்மயோகம் புருஷோத்தமவித்யை அவதார ரஹஸ்யஜ்ஞானம் முதலியவற்றை உபதேசிக்க, அர்ஜுநன் அந்த எம்பெருமான் உபதேசித்த உபாய விசேஷங்களைக்கேட்டு அவை செயற்கரியனவென்றும் ஸ்வரூப விரோதிகளென்றும் நினைத்துக் கலக்கமடைய, அவனுடைய கலக்கந்தீருமாறு எல்லா வுபாயங்களினும் மேம்பட்ட பிரபத்தியுபாயத்தை யுபதேசித்து "𑌅𑌹𑌂 𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌾 𑌶𑍁𑌚𑌃" [நீ என்னையே சரணமாகப்பற்றினால் நான் உன்னை எல்லாப்பாபங் களினின்றும் விடுவிப்பேன், கலங்கவேண்டா] என்று அவனது கலக்கத்தைப் போக்கினது சரமச்லோகத்திலென்க. 1. "அறிவினுற் குறைவில்லா அகல்ஞாலத்தவரறிய, நெறியெல்லா மெடுத் துரைத்த நிறைஞானத்தொருமூர்த்தி" என்கிறபடியே ஸர்வஜ்ஞனை ஸர்வேச்வரன் தனது திருவாக்கினின்று உலகத்தார் நற்கதி பெறவேணுமென்ற கருத்தோடு உபநிஷத்துக்களின் ஸாரமாக வெளியிட்டதாதலின் தத்துவஞானத்திற்கு இதுவே சிறந்த ஸாதனமாகும். இதனையறியாதவர்கள் 'மெய்ஞ்ஞானமில் ஏதிலராம்' என்னத் தட்டில்லை.

இப்பாட்டில், **சேயன்** என்பது மிகப்பெரியன் என்பதோடு அந்வயிக்கும்; **அணியன்** என்பது **சிறியன்** என்பதோடு அந்வயிக் கும். எம்பெருமான் எளியனுமு மிருப்பன் அரியனுமு மிருப்பன்; என்றவாறு.

'ஏதலர்' என்றாலும் 'ஏதிலர்' என்றாலும் பகைவர்; ஏது இலர்—யாதொரு ஸம்பந்தமு மில்லாதவர் என்கை. ஆகவே பகை வரைக் குறிக்கும். பகவத்கீதையில் [16—19.] "𑌤𑌾𑌨𑌹𑌂 𑌦𑍍𑌵𑌿𑌷𑌤𑌃 𑌕𑍍𑌰𑍂𑌰𑌾𑌨𑍍 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇𑌷𑍁 𑌨𑌰𑌾𑌧𑌮𑌾𑌨𑍍। 𑌕𑍍𑌷𑌿𑌪𑌾𑌮𑍍𑌯𑌜𑌸𑍍𑌰𑌮𑌶𑍁𑌭𑌾𑌨𑌾𑌸𑍁𑌰𑍀𑌷𑍍𑌵𑍇𑌵 𑌯𑍋𑌨𑌿𑌷𑍁." என்ற ச்லோகத்தில் '**த்விஷத:**' என்று அப்பெருமான்றானே சொன்னதைத் திருவுள் ளம்பற்றி இங்கு '**ஏதிலராம்**' என்றனரென்னலாம். .... (எக)

இல்லற மில்லேல் துறவற மில்லென்னும் *
சொல்லற மல்லனவும் சொல்லல்ல *—நல்லற
மாவனவும் நால்வேத மாத்தவமும் * நாரணனே
யாவ தீதன்றென்பா ரார். (எஉ)

---

1. திருவாய்மொழி 4—8—6.

(முக்திமார்க்கம் தெரியாமல் ஸம்ஸாரத்தில் உழல்கின்ற ஆத்மாக்களுக்கு)

இல்லறம் என்னும் சொல்லும்	க்ருஹஸ்த தர்மமாக சாஸ்த்ரவிஹித்மான கர்ம யோகம் தஞ்சமென்று சொல்லுகிற ப்ரமாணங்களும்
சொல் அல்ல	ப்ரமாணமல்ல;
இல்லேல்	அங்ஙனன்றிக்கே,
துறவறம் என்னும் சொல்லும்	ஜ்ஞாநயோகம் தஞ்சமென்று சொல்லுகிற ப்ரமாணங்களும்
சொல் அல்ல	ப்ரமாணமல்ல;
இல்லேல்	அங்ஙனுமன்றிக்கே,
அல்லன அறம் என்னும் சொல்லும்	(பக்தியோகம் தேசவாஸம் திருநாம ஸங்கீர்த்தனம் முதலான) மற்ற உபாயங்கள் தஞ்சமென்று சொல்லுகிற ப்ரமாணங்களும்
சொல் அல்ல	ப்ரமாணமல்ல;
நல் அறம் ஆவனவும்	நல்ல தருமங்களாகிய திருநாம ஸங்கீர்த்தநாதிகளும்
நால் வேதம் மா தவமும்	நான்கு வேதங்களிலும் ப்ரதிபாதிக்கப்பட்ட பெரிய கருமங்களுமெல்லாம்
நாரணனே ஆவது	ஸ்ரீமந்நாராயணனுடைய அநுக்ரஹத்தாலே பயனளிப்பனவாகின்றன;
ஈது	இவ்வுண்மையை
அன்று என்பார் ஆர்	மறுப்பாருண்டோ? [இவ்வுண்மை அனைவராலும் அங்கீகரிக்கத் தக்கது.]

* * *—இப்பாட்டின் அந்வயக்ரமம் சிறிது வருத்தப்படுத்தும்; நன்கு ஊன்றி அந்வயித்துப் பொருளுணர்க. இப்பாட்டின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்திற்கு அரும்பதவுரையிட்டாரொருவர் "இப்பாட்டுக்குத் தெரியாது; பதந்தோறும் தெரிந்தால் கண்டுகொள்வது" என்று கையொழிந்தார்; அவர்தாம் மதியின்பரிச்ரமம் ஸஹியாதவர் போலும். நிற்க.

'இல்லறம் என்னும் சொல்லும் சொல் அல்ல; இல்லேல் துறவறம் என்னும் சொல்லும் சொல் அல்ல; இல்லேல் அல்லன அறம் என்னும் சொல்லும் சொல் அல்ல' என்று இங்ஙனே மூன்று

வாக்யார்த்தமாக முன்னடிகளை அந்வயித்துக்கொள்க. 'அல்லனவும்' என்ற விடத்துள்ள உம்மை இரண்டாமடியின் முதலிலுள்ள 'சொல்' என்ற சொல்லோடு கூட்டிக்கொள்ளப்பட்டது. கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம் ஒன்றும் தஞ்சமல்ல என்பன முன்னடிகள். எந்த யோகமும் எம்பெருமானடியாகவே பயன்தருவனவாதலால் ஸாக்ஷாத்தாக அவனையே உபாயமாகக்கொள்ளுதல் சிறக்கும் என்பன பின்னடிகள்.

இல்லறம் என்னும் சொல்லும் சொல் அல்ல=க்ருஹஸ்தனாயிருந்துகொண்டு அநுஷ்டிக்கவுரிய தருமங்களாகிய யஜ்ஞதாநதபஃப்ரப்ருதிகளான கர்மயோகம் இங்கு இல்லற மெனப்படுகிறது. "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" இத்யாதி சரமச்லோகாதிகாரிக்குக் கர்மயோக விதாயகங்களான சாஸ்த்ரங்கள் தஞ்சமல்ல என்கை.

இல்லேல் துறவறம் என்னுஞ் சொல்லும் சொல்லல்ல= 'துறவறம்' என்று ஸந்ந்யாஸத்தைச் சொல்வது ப்ரஸித்தம்; கீதையில் ஸந்ந்யாஸ சப்தத்தால் ஜ்ஞாநயோகத்தை வ்யவஹரிப்பது காண்க. [ஐந்தாவது அத்யாயத்தில் ஒன்று, இரண்டு, ஆறு முதலிய ச்லோகங்களிற் காணலாம்.] கர்மத்தைவிட்டே பற்ற வேண்டியதான ஞானயோகம் ஸந்ந்யாஸமென்றும் துறவறமென்றும் பெயர் பெறத்தகும். "ஜ்ஞாநாம்ருதேந த்ருப்தஸ்ய க்ருதக்ருத்யஸ்ய யோகிந:" என்றதுணர்க. சரமச்லோகாதிகாரிக்கு இந்த ஜ்ஞாநயோக விதாயக சாஸ்த்ரங்களும் தஞ்சமல்ல என்கை.

அல்லன அறம் என்னும் சொல்லும் சொல் அல்ல=கீழ்ச்சொன்ன கர்மயோக ஜ்ஞாநயோகங்களையொழிந்த பக்தியோகமும், அவதாரரஹஸ்யஜ்ஞாநம் புருஷோத்தம வித்யை தேசவாஸம் திருநாமஸங்கீர்த்தநம் திருவிளக்கெரிக்கை திருமாலையெடுக்கை முதலான (உபாயபுத்தியோடு செய்யுமவை) வையும் இங்கு 'அல்லன அறம்' என்றதனால் கொள்ளத்தக்கன. ஆக இவை யொன்றும் தஞ்சமல்ல என்கையாலே எம்பெருமானையே உபாயமாக வரிப்பதாகிற ப்ரபத்தி யோகமே தஞ்சமென்னுமிடம் பெறப்பட்டதாகும். "ந தர்மநிஷ்டோஸ்மி ந சாத்மவேதீ ந பக்திமாந் த்வச்சரணாரவிந்தே। அகிஞ்சநோ நந்யகதிஶ்ஶரண்ய! த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே." என்ற ஆளவந்தார் ஸ்தோத்ரஸூக்தி இதற்குச்சார்பாக இங்கு அநுஸந்

தேயம். பின்னடிகட்குச்சார்பாக "ஸகெளடெணஃ வெஸ ஶ்ரீவெதஃ ஸ்வெஷ நாக ஹஜஞி யெ கவா கயி ஹத்தி தாயவா। கரிஶ! தெஷாஞெவி தாவகீ உயா தயாகவக்ஷ தவதா ஒஃ ஶவுஞ உதஃ" என்கிற (வரதராஜஸ்தவம்-93) ஆழ்வான் ஸ்ரீஸூக்தி அநுஸந்தேயம். எந்த யோகத்தைப்பற்றினலும் முடிவில் அந்தந்த யோகங்களினல் திருவுள்ளமுவக்கும் எம்பெருமானே பலன்பெறுவிக்கவல்லவனுதலால் அவனது திருவருளேயே தஞ்சமாகக் கொள்ளுதல் ஏற்குமென்றவாறு.

ஈது அன்று என்பாரார்?—இவ்வர்த்தம் ஸகல சாஸ்த்ரங்களிலும் பொதிந்து கிடக்கையாலே இது ஸர்வஸம்மதமாகவற்று என்கை. .... (எ௨)

ஆரே யறிவா ரனைத்துலகு முண்டுமிழ்ந்த *
பேராழியான்தன் பெருமையை *—கார்செறிந்த
கண்டத்தா னெண்கண்ணன் காணன் * அவன்வைத்த
பண்டைத்தானத்தின் பதி. (எ௩)

அனைத்து உலகும் { எல்லா வுலகங்களையும்

உண்டு உமிழ்ந்த { (பிரளயத்தில்) உண்பதும் (பிறகு) உமிழ்வதும் செய்தவனும்

பேர் ஆழியான் தன் { பெருமைதங்கிய திருவாழியாழ்வானைத் திருக்கையிலுடையவனுமான எம்பெருமானுடைய

பெருமையை மஹிமையை

அறிவார் ஆரே { அறியக்கூடியவர் யார்? [ஒருவருமில்லை.]

அவன் வைத்த { அப்பெருமான் (முன்பே) ஸாதித்து வைத்த

பண்டைத் தானத்தின் பதி { பரமபதமார்க்கமென்னத் தகுந்த சரமச்லோகத்தை

கார் செறிந்த கண்டத்தான் { நீலகண்டனான சிவனும்

எண் கண்ணன் நான்முகனும்

காணன் அறியமாட்டார்கள்.

[அவர்களே அறியமாட்டாதபோது மற்றபேர்கள் அறியமாட்டார்களென்பது சொல்லவேணுமோ?.]

* * *—எம்பெருமானுடைய பெருமையைப் பரமசிவன் பிரமன் முதலான பெருந்தகையாளர்களே அறியாதபோது மற்றையோர் அறிகைக்கு என்ன ப்ரஸக்தியென்கிறர். அனைத்துலகு

முண்டுமிழ்ந்த பேராழியானுடைய பெருமையாவது யாதெனில்? 'அவன் உபாயமாகுமிடத்து வேறொரு உபாயத்தையும் எதிர்பாராமல் தானே பூர்ணோபாயமாயிருந்துகொண்டு காரியம் தலைக்கட்ட வல்லவனாகும் பெருமை' என்று பட்டர் அருளிச்செய்வராம். அனைத்துலகையும் உண்டபோதும் உமிழ்ந்தபோதும் இதர நிரபேக்ஷனாயிருந்தனனாகையாலே அன்னவனுடைய பெருமையென்றது நிரபேக்ஷோபாயத்வமே யாகுமென்க. ஸாமாந்யர் நாமுஞ் சில உபாயாநுஷ்டானம் செய்தாலன்றிக் காரியமாகாதுஎன்றிருப்பர்களேயன்றி, நம் காரியத்தைத் தன்காரியமாக நினைத்துச் செய்பவன் அவனே என்று உறுதி கொள்வார் ஆருமில்லை யென்றவாறு.

இவ்வர்த்தத்தையே பின்னடிகளில் விசேஷவ்யக்திகளில் ஏறிட்டுக் காட்டுகிறார். சிவன் விஷத்தையு முட்கொள்ளும்படியான பெருமை வாய்ந்தவனென்றாலும் பேராழியான்றன் பெருமையை யறிவானோ? நான்முகன் எட்டுக்கண்கள் படைத்தவனாயினும் பேராழியான்றன் பெருமையை யறிவானோ?

அவன் வைத்த பண்டைத்தானத்தின் பதி காணான்=பதி யென்றசொல் வடமொழியில் ('வழி' என்று ரூபம் பெறுகிற) **வயிநு** சப்தத்தின் விகாரமாகும். மார்க்கம் என்று பொருள். 'அவன் வைத்த' என்ற அடைமொழி பதியில் அந்வயிக்கும். பண்டைத்தானமாவது நித்யவிபூதி. கண்ணபிரான் உபதேசித்தருளின சரமச்லோகத்தின்படி ஸர்வதர்ம பரித்யாக பூர்வகமாக அவனையே உபாயமாகப் பற்றினவர்கட்கே பரமபதம் ஸுலபமாதலால் அந்த சரமச்லோகத்தைப் பரமபதத்திற்கு மார்க்கமாகத் திருவுள்ளம் பற்றுகிறார். சிவனும் பிரமனும் சரமச்லோகத்தையறியார்கள் என்றதற்குக் கருத்துயாதெனில்; புறம்புண்டானவற்றை விட்டு அவனையே தஞ்சமாகப் பற்றுகைக் குடலான ஸ்வரூபவுண்மையை உணரார்கள் என்பதாம். .... (எ௩)

பதிபகைஞற் காற்றுது பாய்திரைநீர்ப் பாழி *
மதித்தடைந்த வாளரவந் தன்னை *—மதித்தவன்றன்
வல்லாகத் தேற்றிய மாமேனி மாயவனை *
அல்லாதோன் றேத்தாதென் னா. (எச)

பதி பகைஞற்கு ஆற்றாது	ஸஹஜ சத்ருவான பெரிய திருவடிக்கு அஞ்சி,
பாய் திரை நீர் பாழி	பரம்பின அலைகளோடே கூடின நீரையுடைத்தான கடல்போலே குளிர்ந்த திருப்படுக்கையை
மதித்து	புகலிடமாக நம்பி
அடைந்த	வந்துபற்றின
வாள் அரவம் தன்னை	ஒளிபொருந்திய ஸர்ப்பமாகிய ஸுமுகனை
மதித்து	ஆதரித்து
அவன் தன்	அந்த (சத்ருவான) கருடனுடைய
வல் ஆகத்து ஏற்றிய	வலிமைதங்கிய சரீரத்திலே ஏறவிட்டவனும்
மா மேனி மாயவனை அல்லாது	சிறந்த திவ்ய மங்கள விக்ரஹத்தை யுடையவனுமான ஸர்வேச்வரனை யன்றி
ஒன்று	வேறொன்றை
என் நா	எனது நாவானது
ஏத்தாது	தோத்திரம் செய்யாது.

* * *—ஆச்ரிதரக்ஷணம் பண்ணுவதில் வல்லவனான எம்பெருமானைத் தவிர்த்து மற்றையோர்க்கு அடிமைப்படலாகா தென்கிறார். அஞ்சிவந்து அடிபணிந்த ஸுமுகனுக்கு அபய மளித்த வரலாற்றை இப்பாட்டிலருளிச் செய்கிறார். தேவேந்திரனுக்குப் பரம ஆப்தனும் ஸாரதியுமான மாதலியென்பவன் தனது புத்திரியான குணகேசி யென்னுங் கன்னிகைக்குத் தகுந்த வரனைத் தேட நாரத மஹர்ஷியோடு புறப்பட்டுப் பலவுலகங்களிலுஞ் சென்று கடைசியாகப் பாதாளலோகத்தில் போகவதி யென்னுஞ் சிறந்த நகரத்தையடைந்து **ஸுமுக** னென்னும் நாககுமாரனைக் கண்டு அவனது அழகு குணம் முதலியவற்றிலீடுபட்டு அவனுக்குத் தன்மகளை மணம் புரிவிக்க வுத்தேசித்து அவனது பிதாமஹனான ஆர்யகனைக் கண்டு தன் உத்தேசத்தைத் தெரிவிக்க, ஆர்யகன் ஆநந்தத்தையும் ஸங்கடத்தையும் ஏககாலத்தில் கொண்டவனாகி 'இவனது தந்தையைக் கருடன் பக்ஷித்து இவனையும் ஒருமாதத்திற்குள் பக்ஷிப்பேனென்று சொல்லியிருக்கிறானாதலால் இவனுக்குஇப்போதுவிவாஹம் நடத்துவது உசிதமன்று' என்று தெரிவித்தான். அதற்கு மாதலி 'இவன் என்னோடு வந்து தேவேந்திரனைக் காணட்டும்; இவனுக்கு ஆயுளைத் தந்து கருடனால் கேடுவாராமல் தடுக்க முயல்வேன்' என்று சொல்லி அச்சுமுகனை உடனழைத்துக்கொண்டு சென்று உபேந்திர

மூர்த்தியோடிருந்த தேவேந்திரனைக் கண்டு காரியமூலமாகச் செய்தியைத் தெரிவிக்க, அதுகேட்ட உபேந்திரனான ஸ்ரீமஹா விஷ்ணு 'இவனுக்கு அம்ருதத்தைத் தாரோம்; ஆதலால் இஷ்ட ஸித்தி உண்டாகும்' என்று சொல்ல, இந்திரன் கருடனுடைய பராக்ரமத்தை நினைந்து சிறிது அச்சத்துடனே அம்ருதமுண்பியாமல் அந்த ஸுமுகனுக்கு நீண்ட ஆயுளை மாத்திரம் வரமாக அளிக்க, உடனே மாதலி அச்சுமுகனுக்குத் தன் மகளை மணஞ்செய்வித்தான்: இச்செய்தியைக் கேள்வியுற்ற கருடன் இந்திரனோடு மாறுபட்டுத்தன் இரையைத் தடுத்ததற்காக நிஷ்டூரமாகப் பேசுகையில், ஸுமுகன் தான் நீண்ட ஆயுளை வரம் பெற்றிருந்தாலும், கருடனுடைய கறுவுதலைக் கண்டஞ்சிப் பாம்புவடிவமாய்த் திருமாலினருகிற் சேர்ந்து அப் பெருமானது கட்டிலின் காலைக் கட்டிக்கொண்டு சரண்புக, பின்பு கருடன் திருமாலை நோக்கி 'ஸகலதேவர்களினுள்ளும் மஹா பலசாலியான வுன்னைச் சிறிதும் சிரமமின்றி இறகுமுனையால் சுமக்கின்ற என்னைவிட வலிமையுடையார் யார்? இதனைச் சற்று ஆலோசியும்' என்று கருவங்கொண்டு பேச, கடூரமான அந்த வார்த்தையைக் கேட்ட எம்பெருமான் கருடனை நோக்கி 'மிகவும் துர்ப்பலனான நீ தன்னை மஹாபலசாலியாக எண்ணி என்முன்னே ஆத்மஸ்துதி செய்து கொண்டது போதும்; மூன்று லோகமும் எனது உடம்பை வஹிக்க முடியாதே; யானே எனது சக்தியால் என்னையும் வஹித்துக் கொண்டு உன்னையுமல்லவோ வஹிக்கிறேன்; எனது இந்த வலக்கையொன்றை மாத்திரமாவது நீ தாங்குவையா?' என்று சொல்லித் தமது வலக்கையைக் கருடனது தோளில் வைத்த மாத்திரத்தில் அவன் அந்தத் திருக்கையின் அதிபாரத்தைத் தாங்கமாட்டாமல் வருந்தி வலியழிந்து மூர்ச்சித்து விழுந்து பின்பு அரிதில் தெளிந்து எம்பெருமானை வணங்கித் துதித்து அபராத க்ஷாமணஞ்செய்து கொள்ள, திருமால் திருவுள்ளமிரங்கி அவனுக்கு ஸமாதானஞ் சொல்லித் தனது திருவடியின் பெருவிரலால் ஸுமுகனென்ற நாகத்தை யெடுத்துக் கருடன் தோளிலிட்டு 'இவனை நீ உனது அடைக்கலமாகக்கொண்டு பாதுகாக்கக் கடவை' என்று குறிப்பிக்க, அது முதலாக ஸுமுகனோடு கருடன் ஸ்நேஹங் கொண்டு அவனைத் தோளில் தரிக்க, அவனும் அச்சமின்றி 'கருடா!

ஸுமுகமா?' என்று க்ஷேமம் விசாரிப்பவனாயினன் என்ற உபாக்கியானம் இங்கு அறியத்தக்கது. முதல் திருவந்தாதியில் "அடுத்த கடும் பகைஞற்கு" என்ற பாட்டிலும், பெரிய திருமொழியில் (5—8—4) "நஞ்சு சோர்வதோர் வெஞ்சினவரவம்" என்றபாட்டிலும் இந்த இதிஹாஸம் அருளிச்செய்யப்பட்டமையுங் காண்க.

"எனது அடியாரின் எதிரிகளை ஒருகாலும் க்ஷமிக்கமாட்டேன்" என்றும், "என்னைச் சரணம் புக்கவரை எவ்விதத்திலும் கைவிடேன்" என்றும் எம்பெருமான் கொண்டுள்ள ஸங்கல்பமிரண்டும் மாறுபடாமல் நிறைவேறுமாறு, அப்பெருமான் தன்னைச் சரணமடைந்த ஸுமுகனைத் தான் நேரில் ரக்ஷியாமல் அவனுக்குப் பகையான கருடன்கையிலேயே காட்டிக் கொடுத்து அவனைக் கொண்டே பாதுகாத்தருளிய அருமைத் திறத்தைப் பாராட்டி "அவன்றன் வல்லாகத் தேற்றிய மாமேனி மாயவனுக்கு" என்றார். முன்பு தமக்குள் பகைமையிருந்தாலும் எம்பெருமானைச் சரணமடைந்தாற் பின்பு அப்பகைமை தவிர்ந்து நண்பராவரென்ற உண்மை இங்குப் புலனாம்.

பாய்திரை நீர்ப்பாழி = இந்த உபாக்கியானம் ஸ்ரீமஹாபாரதத்தில் உத்யோகபர்வத்தில் நூறாவது அத்யாயந் தொடங்கி ஐந்து அத்யாயங்களில் பரக்கக் கூறப்பட்டுள்ளது. ஸுமுகன் எம்பெருமானைச் சரணமடைந்தது இந்திரனருகில் என்பதாக அங்குக் கூறப்பட்டுள்ளதனால் 'பாய்திரை நீர்ப்பாழி' என்றவிதற்கு 'கடல்போலே குளிர்ந்த திருப்படுக்கை' எனப் பொருளுரைக்கப்பட்டது. இனி, பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில்—"ஓரோயுகத்திலே ஓரோவிடங்களிலே எல்லாம் பிறக்கக் கூடுகையாலே. திருப்பாற்கடல் தன்னிலேயாகவுமாம்" என்று இரண்டாவது நிர்வாஹமாக அருளிச் செய்துள்ளபடி திருபாற்கடலையே பொருளாகக் கொள்ளவுமாம். கல்பபேதத்தாலே இது கூடுமென்க. .... (எச)

நாக்கொண்டு மானிடம் பாடேன் * நலமாகத்
தீக்கொண்ட செஞ்சடையான் சென்று * என்றும்-பூக்கொண்டு
வல்லவா றேத்த மகிழாத * வைகுந்தச்
செல்வனார் சேவடிமேல் பாட்டு. (எரு)

தீக்கொண்ட செம் சடையான்	நெருப்புப்போலே சிவந்த சடையை யுடையனான ருத்ரன்	மகிழாத	(இதைத்தனக்கொரு பெருமையாக நினைத்து) மேனாணிப்புக் கொள்ளாத
லம் ஆக	தகுதியாக	வைகுந்தம் செல்வனார்	ஸ்ரீவைகுண்ட நாதனுடைய
ன்றும்	எந்நாளும்		
க் கொண்டு	புஷ்பங்களைக் கையிற்கொண்டு	சே அடி மேல் பாட்டு	திருவடிகளுக்கு உரிய பாசுரங்களை (ச் சொல்ல வல்ல)
பின் சென்று	அநுஸரித்து		
வல்ல ஆறு	தன் சக்தியுள்ள வளவும்	நாக் கொண்டு	நாவினால்
த்த	துதிக்க	மானிடம்	மனிதர்களை
		பாடேன்	பாடமாட்டேன்.

* * *—எம்பெருமானொருவனையே துதிப்பதற்கென்று படைக்கப்பட்ட நாவைக் கொண்டு அற்பமனிதர்களைக் கவிபாடமாட்டேனென்று தமது உறுதியை வெளியிடுகின்றார். சடைமுடியனான சிவன் தனது அஹங்காரத்தை விட்டொழிந்து புஷ்பம் முதலியவற்றைக் கொண்டு ஆராதித்து அநுவர்த்தித்தாலும் நித்யஸூரி ஸேவ்யனான தனக்கு இது ஒரு பெருமையன்றாகையாலே இதனால் சிறிதும் மகிழ்ச்சி கொள்ளாத ஸ்ரீவைகுண்ட நாதனுடைய திருவடிகள் மேல் கவிபாடுதற்கே ஏற்ற நாவைக் கொண்டு மானிசரைப் பாடுதல் தகாது என்றதாயிற்று.

இவ்வாழ்வார் காலத்தில் வாழ்ந்த அரசன் இவரது சிஷ்யரான கணிகண்ணன் வாக்கினால் தான் ஒருபாடல் பெறக்கருதிப் பெருமுயற்சி செய்தும் பெற்றிலனென்பது இவ்வாழ்வார்வைபவத்தில் விரியும். சிஷ்யருடைய உறுதியே அங்ஙனிருக்கும்போது ஆசாரியரான இவரது உறுதியைப் பற்றிச் சொல்லவேணுமோ ?. (எடு)

பாட்டும் முறையும் படுகதையும் பல்பொருளும் *
ஈட்டிய தீயு மிருவிசும்பும் *—கேட்ட
மனுவும் சுருதி மறைநான்கும் * மாயன்
தனமாயையில் பட்ட தற்பு. (எசு)

பாட்டும் முறையும்	இயலும் இசையும்
படு கதையும்	பழைய சரிதங்களைக் கூறவந்த இதிஹாஸங்களும்
பல் பொருளும்	பல அர்த்தங்களை யறிவிக்கிற புராணங்களும்
ஈட்டிய தீயும்	(பஞ்சீகரணத்தாலே பலகுணங்களும் தன்னிலே அமையும்படி) சேர்க்கப்பட்ட அக்நியும்
இரு விசும்பும்	பரந்த ஆகாசமும் (முதலான பஞ்ச பூதங்களும்)
கேட்ட மனுவும்	வேதத்திலும் ஓதப்பட்ட மநு மஹர்ஷியின் தர்ம சாஸ்த்ரமும்

சுருதி	அநாதியாக உச்சாரண அநுச்சாரண க்ரமத்தாலே ஓதப்பட்டு வருகிற
மறை நான்கும்	நான்கு வேதங்களும் (ஆகிய இவையெல்லாம்)
மாயன் தன	ஆச்சர்ய சக்தி யுக்தனான எம்பெருமானுடைய
மாயையில் பட்ட	ஸங்கல்பத்தினாலுண்டான
தற்பு	தத்துவங்களாம்.

* * *—கீழ்ப்பாட்டில் "வைகுந்தச்செல்வனார் சேவடிமேல் பாட்டு—நாக்கொண்டு மானிடம்பாடேன்" என்றார்; எம்பெருமானொருவனையே கவிபாடும்படியான உறுதி தமக்கு உண்டானபடியெங்ஙனேயென்ன; உலகத்திலுள்ள வாச்யங்கள் வாசகங்கள் எல்லாம் அப்பெருமானுடைய திவ்யஸங்கல்பத்தாலே உண்டாயினவென்று இப்பாட்டால் அருளிச்செய்யும் முகத்தால் தமது உறுதிக்கு அடிகூறினாராயிற்று.

கேட்டமனுவும்=தைத்திரீய யஜுஸ்ஸம்ஹிதையில் இரண்டாவது காண்டத்தில் இரண்டாவது ப்ரச்நத்தில்—"யலெ௨ கிஞ ௦நு௰வக௯தஷெஷஜ௱" [மநுமஹர்ஷி சொல்லிற்றெல்லாம் மருந்தாயிருக்கும்.] என்றுள்ள வாக்கியம் இங்கு உட்கொள்ளப்பட்டதாகும். சுருதி= "வ௱லெவ௱ வ௱லெவ௱ஹ்யா வவ வண௲ தஉ௱லவ௱:" என்று காடக ச்ருதியில் ஓதப்படுகிற வாக்கியம் இங்கு விவக்ஷிதம்.

மாயையிற்பட்ட தற்பு="ஶாயா வயுநஂஜ்ஞாநஂ" என்கிற ஆர்ஷநிகண்டின்படி 'மாயா' என்னும் வடசொல் ஸங்கல்பரூபமான

ஜ்ஞாநத்தைச் சொல்லுகிறது. "ஸம்ஹவாஜ்ஞாயயா" என்ற கீதையுங் காண்க. தத்வ என்னும் வடசொல் 'தற்பு' என விகாரப் பட்டது. உண்மைப்பொருள் என்கை. .... (எசு)

தற்பேன்னைத் தானறியா னேலும் * தடங்கடலைக்
கற்கோண்டு தூர்த்த கடல்வண்ணன் *—எற்கோண்ட
வேவ்வினையும் நீங்க விலங்கா மனம்வைத்தான் *
எவ்வினையும் மாயுமால் கண்டு. (எஎ)

தட கடலை	பாந்த தெற்கு சமுத்ரத்தை	நீங்க	என்னை விட்டு நீங்கும்படியாக
கல் கொண்டு	மலைகளினால்	கண்டு	அழகிய திருக்கண்க ளாலே குளிரக் கடாக்ஷித்து
தூர்த்த	அணைசெய்து அடைத்தவனும்	மனம்	தனது திருவுள்ளத்தை
கடல் வண்ணன் தான்	கடல்போன்ற கரு நிற முடையனு மான எம்பெருமான்	விலங்கா	வேறு எங்கும் விலகிப் போகாதபடி
என்னை	(தோஷமே வடி வெடுத்தவனான) என்னை	வைத்தான்	(என்மீதே ஒரு மடைப்படுத்தி) வைத்தருளினன்;
தற்பு	உள்ளபடியே		(ஆகையாலே)
அறியான் எலும்	அறிந்திலனாயினும்,	எ வினையும்	பாபமென்று பேர்பெற்றவை யடங்கலும்
என் கொண்ட	என்னைக் கொள்ளை கொண்டிருக்கிற	மாயும்	உருவழிந்துபோம்.
வெம் வினையும்	கொடிய பாவங்கள் யாவும்		

* * *—என்னுடைய குற்றமிகுதியை நோக்கி எம்பெருமான் என்னை இகழாமல், என்னுடைய ஸமஸ்த கருமங்களும் உருமாய்ந்து போம்படியாகத் தன் திருவுள்ளத்தை என்பக்கலிலே வைத்தரு ளினனென்கிறார்.

கடல்வண்ணன் தான் என்னைத் தற்பு அறியானேலும்= ஆழ்வாராகிய தம்மை எம்பெருமான் உள்ளபடி யறிந்திலனென்கிற இதன் கருத்து யாதெனில்; 'இவர் குற்றங்களுக்குக் கொள்கலமா

யிருப்பவர்; இவரிடத்தில் ஒருவகைக்குணமும் கிடையாது' என்று அறிந்துகொள்ள வேண்டியிருக்க அப்படியறிந்து கொண்டிலன் என்கிறார் நைச்யாநுஸந்தாந நிஷ்டையினால்.

(எம்பெருமானை நாம் உள்ளபடி அறிகையாவது—'ஒருவகைக் குற்றங்குறையுமற்ற குணநிதி' என்று அறிவதாம். அப்பெருமான் நம்மை உள்ளபடியறிகையாவது 'ஒருவகைக்குணமுமற்ற தோஷ நிதி' என்று அறிவதாம். அவனை நாம் உள்ளபடியறியப்பெற்றால் அவனிடத்தில் நமக்கு அன்பு கரைபுரளும்; நம்மை அவன் உள்ள படியறிந்துகொண்டால் நம்மிடத்தில் அவனுக்கு இகழ்ச்சியுண்டாகும்.) இங்கு ஆழ்வார்தம்மிடத்தில் எம்பெருமானுக்கு இகழ்ச்சி பிறவாமல் விருப்பமே பெருகிச் செல்கின்றமைக்குக் காரணம் இவருடைய ஞானபக்தி முதலிய குணங்களைக்கண்டே; அப்படியிருந்தும் ஆழ்வார் நைச்யாநுஸந்தான வுறைப்பினால் 'என் குற்றங் குறைகளை எம்பெருமான் தெரிந்துகொள்ளாமையினால் மேல்விழுகிறான்' என்கிறார்.

தடங்கடலைக் கற்கொண்டு தூர்த்தது ஸ்ரீராமாவதாரத்தில்.

என் + கொண்ட, எற்கொண்ட.

மூன்றாமடியின் முதலில் 'எவ்வினையும்' என்றுமெடுக்கலாம்; 'வெவ்வினையும்' என்றெடுப்பது மோனையின்பத்துக்கு ஒக்கும்.

கண்டு வணங்கினார்க் கென்னுங்கொல் * காமனுடல்
கொண்ட தவத்தாற் குமையுணர்த்த *—வண்டலம்பும்
தாரலங்கல் நீண்முடியான் றன்பெயரே கேட்டிருந்து * அங்
காரலங்க லானமையா லாய்ந்து. (எ௮)

காமன்	மன்மதனுடைய
உடல்	சரீரத்தை
கொண்ட	நீறாக்கின
தவத்தாற்கு	தபஸ்வியான பாம சிவனுக்கு
உமை	(மனைவியான) பார்வதி யானவள்
உணர்த்த	தெரிவிக்க,

வண்டு அலம்பும் தார் அலங்கல் நீள் முடியான் தன் பெயர் கேட்டிருந்தே	வண்டுகள் ஒலிக்கப் பெற்ற பூமாலையை நீண்ட திருவபிஷேகத்திலுடையனான எம்பெருமானுடைய திருநாமங்களைக் கேட்ட மாத்திரத்திலேயே

அங்கு	அப்போதே	கண்டு வணங்கி ஞர்க்கு	நேரே கண்டு வணங்குமவர்கட்கு
ஆர் அலங்கல் ஆனமை	மிகவும் அசைந்து போனமையை	என் ஆம் கொல்	எப்படிப்பட்ட விகாரமுண்டாகுமோ (என்பது சொல்ல முடியாது)
ஆய்ந்தால்	ஆராய்ந்து பார்க்கில்,		

* * *—எம்பெருமானுடைய திருநாமத்தை யாத்ருச்சிகமாகக் கேட்கப்பெற்ற பரமசிவன் விகாரமடைந்ததே வாசாமகோசர மென்றால் எம்பெருமானை ஸாக்ஷாத்தாக ஸேவிக்கப்பெறுமவர்கள் படும்பாடு சொல்லக்கூடியதோ ? என்கிறார்.

திருவாய்மொழியில், (6—7—3.) * உண்ணுஞ்சோறு பருகு நீரில் மூன்றும்பாட்டில் "கோவைவாய்துடிப்ப மழைக்கண்ணொடு என்செய்புங்கொலோ" என்றவிடத்து ஈடுமுப்பத்தாறுயிரப்படி திவ்யஸூக்திகள் உற்று நோக்கத்தக்கன ; (அவற்றை இங்கு அநுவதிப்போம்.) "[என்செய்யுங்கோலோ.] சொல்லமாட்டாள், தவிரமாட்டாள், அழாதொழியமாட்டாள், எங்ஙனே படுகிறாளோ!. நம்மையும் பிறரையும்விட்டு அவன் திருநாமங்களை யநுபவிக்கிற போதையழகு காணப்பெற்றோம் ; அவன்றன்னையே கண்டு அநுபவிக்கிறபோதையழகு காணப்பெற்றிலோமே !. அநுஸந்தான வேளையிற்போலன்றிறே கண்டால் பிறக்கும் விகாரங்கள்: 'காமனுடல்கொண்ட தவத்தாற்கு உமைபுணர்த்த வண்டலம்புந் தாரலங்கல் நீண்முடியான்றன் பெயரே கேட்டிருந்து அங்காரலங்கலானமையால்—கண்டு வணங்கினார்க்கு என்னாங்கொல்' என்றிறே யிருப்பது."

பரமசிவனுக்குப் பார்வதி பகவந்நாமத்தை யுணர்த்தினவிதம் அவ்விடத்து அடையவளைந்தா னரும்பதவுரையிற் காணப்படுகின்றது;—ஒருகால் ருத்ரன் த்யாநபரனாயிருக்கக்கண்ட பார்வதியானவள் 'எல்லாரும் உம்மை உபாஸனைபண்ணுகிற்க நீர் யாரை உபாஸிக்கின்றீர் ? உமக்கும் உபாஸ்ய விஷயம் ஒன்றுண்டோ ?' [𑌕𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑌸𑍇 𑌦𑍇𑌵! 𑌕𑌿𑌂 𑌦𑍈𑌵𑌤𑌮𑌧𑌿𑌕𑌂 𑌤𑌵। 𑌜𑌪𑌹𑍋𑌮𑌨𑌮𑌸𑍍𑌕𑌾𑌰𑍈𑌃 𑌤𑌂 𑌵𑌦𑌸𑍍𑌵 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰."] என்று கேட்டாளாம் ; இப்படி இவள் கேட்டதற்குப் பரமசிவன் "ஸ்ரீமந்நாராயணனை உபாஸிக்கிறேன்" என்று மறுமொழி கூறவேண்டி அத்திருநா

மத்தை ஸ்மரித்தமாத்திரத்திலேயே ‘காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்’ என்றும் ‘உள்ளெலாமுருகிக் குரல்தழுத்தொழிந்தே னுடம்பெலாங் கண்ணநீர்சோர’ என்றுஞ் சொல்லலாம்படி விகார மடைந்தானும்.

உமை உணர்த்த—‘நீர் யாரை உபாஸிக்கிறீர்?’ என்கிற கேள்விவியாஜத்தாலே பகவந்நாமங்களைச் சிவபிரானுக்குப் பார்வதி உணர்த்தினளென்க. இந்த ப்ரஸங்கத்தால் பகவந்நாமங்களை ஸ்மரிக்கப்பெற்ற சிவபிரான் செங்கண்மால் நாமங்களைச் செவிக்கின்பமாகக்கேட்கவிரும்பி அப்பார்வதியையே பாடச்சொல்ல, அப்படியே அவள்பாட, தென்றலும் சிறுதுளியும் பட்டாற்போலே இனிதாகக் கேட்டுக்கொண்டிருந்து உள்குழைந்தானென்ப.

உமை—‘உமா’ என்னும் வடசொல் ஐயீறுபெற்று. **ஆர் அலங்கல் ஆனமை**—‘அலங்கல்’ என்று மாலைக்கும் அசைவுக்கும் பெயர். முடித்துவாடின பூமாலைபோலே துவண்டு விழுந்தான் சிவன் என்க. ‘ஆனமையால்’ என்றவிடத்துள்ள ‘ஆல்’ என்பதை ‘ஆய்ந்து’ என்றதோடு கூட்டி ‘ஆய்ந்தால்’ என்றுக்கியுரைக்கப்பட்டது. உள்ளபடியே உரைக்கவுமாம். .... (எஅ)

ஆய்ந்துகோண் டாதிப்பெருமானை * அன்பினால்
வாய்ந்த மனத்திருத்த வல்லார்கள் *—ஏய்ந்ததம்
மெய்குந்தமாக விரும்புவரே * தாமும்தம்
வைகுந்தம் காண்பார் விரைந்து. (எகூ)

ஆதி	ஜகத்காரணபூதனை
பெருமானை	ஸர்வேச்வரனை
அன்பினால்	ப்ரேமத்துடன்
ஆய்ந்து கொண்டு	அநுஸந்தித்துக் கொண்டு
வாய்ந்த மனத்து	(தமது) பாங்கான நெஞ்சிலே
இருத்த வல்லார்கள் தாமும்	நிலை நிறுத்திக் கொள்ள சக்தரானவர்கள்
தம் வைகுந்தம்	தங்களுக்கென்று ஏற்பட்டுள்ள பரமபதத்தை
விரைந்து	சீக்கிரமாக
காண்பார்	காண விருப்ப முடையராய்
ஏய்ந்த	ஆத்மாவோடு செறிந்த
தம் மெய்	தங்களுடைய உடம்பை
குந்தம் ஆக	வியாதியாக
விரும்புவர்	எண்ணுவர்.

* * *—பகவத்விஷயத்தில் ருசியுடையவர்கள் எம்பெருமானை யநுபவிப்பதற்கு ஏகாந்தமான பரமபதத்தை யடையவேணுமென்னும் விரைவினால் தத்விரோதியான தங்கள் சரீரத்தை வியாதியாகக் கருதுவர்களென்கிறார். ஆதிப்பெருமானை அன்பினால் ஆய்ந்து கொண்டு தங்களுடைய வாய்ந்தமனத்திலே அவனை இருத்தவேணுமென்னும் விருப்பமுடையவர்கள், தங்களுக்கென்றே ஏற்பட்டிருக்கிற ஸ்ரீவைகுண்டத்தை 'பெற்றபோது பெறுகிறோம்' என்று ஆறியிருக்கையன்றியே 'கூவிக்கொள்ளுங் காலமின்னங்குறுகாதோ' என்று விரைந்தவராய்க்கொண்டு, 'அதற்கு இடையூறாயிருக்கின்ற இவ்வுடல் என்றைக்குத் தொலையப்போகிறது!' என்று வியாதியைக் கழிக்க விரும்பிக்கிடப்பாரைப்போலே கிடப்பர்கள் என்றாராயிற்று.

"வடுகபாஷையில் **குந்த**மென்று வியாதிக்குப்பெயர்" என்பது பூருவர்களின் வியாக்கியான வாக்கியம். .... (எக)

**விரைந்தடைமின் மேலொருநாள் வெள்ளம் பரக்க *
கரந்துலகம் காத்தளித்த கண்ணன் *—பரந்துலகம்
பாடின ஆடினகேட்டு * படுநரகம்
வீடின வாசற் கதவு.** (௨௰)

உலகம்	சிறந்த பாகவதர்கள்
பரந்து	எங்குந் திரிந்து
பாடின	பாடின பாடல்களையும்
ஆடின	ஆடின ஆட்டங்களையும்
கேட்டு	கேட்டதனால்
படு நரகம் வாசல்	க்ரூரமான நரகங்களின் வாசல்களிலிருந்த
கதவு	கதவுகள்
வீடின	விட்டொழிந்தன ;

[நரக வாசல்கள் பாழாய்ப் போயின.]

(ஆனபின்பு,)

மேல் ஒருநாள்	முன்னொரு காலத்தில்
வெள்ளம் பரக்க	பிரளய வெள்ளம் பரவினபோது
உலகம்	உலகங்களையெல்லாம்
கரந்து	(திருவயிற்றில்) மறைத்துவைத்து
காத்து அளித்த	துன்பங்களைப் போக்கி ரக்ஷித்த
கண்ணன்	கண்ணபிரானை
விரைந்து அடைமின்	சீக்கிரமாகச் சென்று பணியுங்கோள்.

* * *—முன்பு பிரளயம் வருகிறதென்று உலகங்களையெல்லாம் திருவயிற்றிலே வைத்து, பிரளயப்பெருவெள்ளம் தேடிவந்தா

லும் அத்தனைபோதும் தெரியாதபடி மறைத்துக் காத்து ரக்ஷித்தருளின கண்ணபிரானை விரைந்து அடையுங்கோள் என்கிறார் முன்னடிகளால். இப்படி பகவத் பஜநம் பண்ணினால் நரகவாசற்கதவுகள் வேர்பறியுண்டு நரகமே ஒழிந்துபோம் என்று எதிர்கால நிகழ்ச்சி கூறவேண்டுமிடத்து, தேற்றத்தினால் இறந்தகால நிகழ்ச்சியாகவே பின்னடிகளிற் கூறுகின்றார்.

ஒருவனை 'இங்கேவா' என்றழைக்க, அதற்கு அவன் இருந்தவிடத்திலிருந்து கொண்டே 'வந்துவிட்டேன்' என விடையளித்தால் 'உடனே (காலதாமதமின்றி) வந்துவிடுவேன்' எனப் பொருள்படுதல்போல, இங்கும் 'படுநரகவாசற்கதவு வீடின' என்று இறந்தகாலமாகச் சொல்லப்பட்டுள்ளது எதிர்காலமாகப் பொருள்படலாம். அன்றியே, இதுவரையில் பல பாகவத ச்ரேஷ்டர்கள் பகவத்பஜநம்பண்ணி மகிழ்ச்சிக்குப் போக்குவீடாக ஆட்டமும் பாட்டமும் செய்ததனால் நரகவாசல் புல்மூடிப் போயிற்று என்னும்படியாக அவர்கள் நற்கதி பெற்றார்களாதலால் அப்படி நீங்களும் நற்கதி பெறுமாறு கண்ணனை விரைந்தடையுங்கள் என்பதாகவும் உரைக்கலாம்.

'உலகமென்பது உயர்ந்தோர்மாட்டே' என்ற தொல்காப்பியத்தை யடியொற்றி இங்கு 'உலகம்' என்பதற்கு 'சிறந்த பாகவதர்கள்' என்று பொருள் கொள்ளப்பட்டது.

'பாடின' என்பதும் 'ஆடின' என்பதும் இரண்டனுருபு தொக்க வினையாலணையும் பெயர்கள். "அறிவிலாமனிசரெல்லா மரங்கமென்றழைப்பராகில், பொறியில் வாழ்நரகமெல்லாம் புல்லெழுந்தொழியு மன்றே" என்ற திருமாலைப் பாசுரம் பின்னடிகட்குச் சார்பாக அநுஸந்திக்கத்தகும். .... (௮௦)

கதவு மனமென்றும் காணலா மென்றும் *
குதையும் வினையாவி தீர்ந்தேன் *—விதையாக
நற்றமிழை வித்தி யென்னுள்ளத்தை நீவிளைத்தாய் *
கற்றமொழி யாகிக் கலந்து. (௮௧)

நீ	(ஞானம் சக்திமுதலியவற்றால் குறைவற்றவனான) நீ	மனம்	‘மனமானது
கற்ற மொழி ஆகி	நான் கற்ற சொற்களுக்குப் பொருளாக இருந்து கொண்டு	கதவு என்றும்	எம்பெருமானை யடைவதற்குப் பிரதிபந்தகம்’ என்று (சில ஸமயங்களில்) நினைத்தும்
கலந்து	என்னோடு ஒரு நீராகக் கலந்து		
நல் தமிழை	சிறந்த தமிழ்ப் பாஷையினாலாகிய இப் பிரபந்தத்தை	(மனம்) காணல் ஆம் என்றும்	‘(மனமானது) எம் பெருமானைக் காண்பதற்கு உறுப்பாகும்’ என்று (சில சமயங்களில்) நினைத்தும்
விதை ஆக வித்தி	(பக்தியாகிற பயிர்க்கு) விதையாக விதைத்து		
என் உள்ளத்தை	எனது ஹ்ருதயத்தை	குதையும் வினை ஆவி தீர்ந்தேன்	(ஆகவிப்படி ஒரு நிலை நில்லாமல் மாறி மாறி) பிரமிப்பதையே தொழிலாக வுடைத்தான நெஞ்சைத் தவிர்ந்தேன்.
விளைத்தாய்	விளையும்படி க்ருஷி பண்ணினாய்; (அதனால்)		

* * *—சாஸ்த்ரங்களில் “𑌮𑌨 𑌏𑌵 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌬𑌨𑍍𑌧𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑍋𑌃—மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:” என்று சொல்லப்பட்டுள்ளது. அதாவது—ஸம்ஸார பந்தங்களைப் பூண்கட்டிக் கொண்டு எம்பெருமானை மறந்தொழிவதற்கும் மனமே காரணம்; வீண்பாசங்களை விட்டொழிந்து அப்பெருமானைக் கண்டு களிக்கப் பெறுதற்கும் மனமே காரணம் என்கை. இவ்விரண்டு வகையான ஸங்கதியும் ஸம்ஸாரிகளின் அநுபவத்தில் மாறிமாறி வந்துகொண்டே யிருக்கும்; ஊழ்வினையின் கனத்தால் விஷய ப்ராவண்யம் மேலிடுகிறகாலங்களில் மனமானது ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணம் என்று அறுதியிடப்பெறும்; பகவத் பாகவத கடாக்ஷலேசத்தால் பகவத்விஷயத்தில் பற்று உண்டாகுங் காலங்களில் மனமானது மோக்ஷத்திற்குக் காரணம் என்று அறுதியிடப் பெறும் ஆகவே, இவ்விபூதியிலுள்ள நம்போல்வார்க்கு விஷயாந்தரப் பற்றும் நிலைத்திராது, பகவத் விஷயப் பற்றும் நிலைத்திராது; இரண்டும் மாறிமாறி வந்துகொண்டே யிருக்குமாதலால்

ஒரு ஸமயத்தில் 'மனம் பந்தஹேது' என்கிற உணர்ச்சியும் பின்னு மோர்ஸமயத்தில் 'மனம் மோக்ஷஹேது' என்கிற உணர்ச்சியுமா யிருக்கும். நம்மைப் போலன்றிக்கே ஆழ்வார் எப்போதும் எம் பெருமானையே அநுபவிக்கும்படியான உறைப்புப் பெற்றவராதலால் 'மனம் பந்தஹேதுவோ மோக்ஷஹேதுவோ' என்கிற குழப்பம் இவர்க்கு நேர ப்ரஸக்தியில்லை; 'மனம் மோக்ஷஹேதுதான்' என்கிற நிச்சய வுணர்ச்சியே இவர்க்குள்ளது; இதைத்தான் இப்பாட்டில் அருளிச் செய்கிறார்.

கதவுமனமென்றும் காணலாமென்றும் குதையும் வினையாவி தீர்ந்தேன்—ஒரு வாசலுக்குக் கதவு இட்டிருந்தால் உள்ளே புகுவதற்கு அது தடையாயிருக்குமாதலாலே கதவு என்கிற சொல் பிரதிபந்தகத்தைச் சொல்லுகிறது இங்கு; மனம் (பகவத்ப்ராப்திக்குப்) பிரதிபந்தகமோ அல்லது (பகவானைக்) காண்கைக்கு உறுப்போ என்று அலைபாய்வது தவிர்ந்தேன் என்றவாறு. தவிர்ந்தமைக்குக் காரணங் கூறுவன பின்னடிகள்.

நெஞ்சினால் நினைக்கவும் முடியாத ஜ்ஞாநசக்திகளையுடையனான நீ என்னுடைய வாக்கில் வரும் சொற்களுக்குப் பொருளாயிருந்து கொண்டு என்னுடைய நெஞ்சமாகிற நிலத்திலே தமிழாகிற விதையை விதைத்துப் பக்தியாகிறபயிர் செழித்து விளையும்படி செய்தாயாகையாலே நிலை நின்ற நெஞ்சுடையேனாயினேன் என்றாராயிற்று. .... (அக)

கலந்தானேன் னுள்ளத்துக் காமவேள் தாதை *
நலந்தானு மீதொப்ப துண்டோ *—அலர்ந்தலர்கள்
இட்டேத்து மீசனும் நான்முகனு மென்றிவர்கள் *
விட்டேத்த மாட்டாத வேந்து. (அஉ)

காம வேள் தாதை — மன்மதனுக்குத் தந்தையானவனும்
அலர்ந்த அலர்கள் இட்டு எத்தும் ஈசனும் — மலர்ந்த பூக்களை ஸமர்ப்பித்துத் துதி செய்கின்ற சிவபிரானென்ன
நான்முகனும் — பிரமனென்ன
என்ற இவர்கள் — என்கிற (சிறந்த) தேவர்களும்
விட்டு எத்த மாட்டாத — நன்றாய்த் துதித்து முடிக்க முடியாதவனுமான

வேந்து	தேவாதிதேவன்	ஈது ஒப்பது நலம் தானும் உண்டோ	இந்த நன்மையோடொத்த நன்மை வேறுண்டோ? [இல்லை.]
என்னுள்ளத்து	எனது நெஞ்சிலே		
கலந்தான்	சேர்ந்து கொண்டான்,		

* * *—நான்பெற்ற நன்மை வேறுயாரும் பெறமுடியாது; இதுவரையில் நான்பெற்ற நன்மைகளுள் இப்போது பெற்ற நன்மைக்கு ஈடானதும் வேறொன்றில்லை; அரன் அயன் என்னும்படியான மேம்பட்ட தெய்வங்களாலும் துதித்துத் தலைக்கட்டப் போகாத பெரும்புகழ்படைத்த பெருமான் என் உள்ளத்தோடு ஒருநீராகக் கலந்து கொண்டானே! இஃது என்ன நன்மை! என வியக்கிறார்.

காமவேள் தாதை=மன்மதனுடைய அம்ஸமாகிய பிரத்யும்நனுக்குக் கண்ணபிரான் தந்தையாதல் அறிக. 'காமன்' என்பது வட சொல்; 'வேள்' என்பது தமிழ்ச் சொல்; இரண்டையும் சேரப் பிரயோகித்த விடத்து ஒரு சொல்லை விசேஷணமாகவும் மற்றொன்றை விசேஷ்யமாகவுங் கொள்ளலாம்; ஆசையை விளைக்குமவனை மன்மதன் என்க. **தாதை**—தாதः. அலர்ந்த + அலர்கள், அலர்ந்தலர்கள்; தொகுத்தல். 'என்றிவர்கள்' என்றவிடத்து மிதுவே.

வேந்தராய் விண்ணவராய் விண்ணாகித் தண்ணளியாய் *
மாந்தராய் மாதாய் மற்றெல்லாமாய் *—சார்ந்தவர்க்குத்
தன்னாற்றான் நேமியான் மால்வண்ணன் தான்கொடுக்கும் *
பின்னால் தான்செய்யும் பிதிர். (௩௫)

நேமியான்	திருவாழியாழ்வானையுடையவனும்	விண்ணவர் ஆய்	தேவர்கள் செய்யும் நன்மைகளைச் செய்யுமவனாய்
மால் வண்ணன்	வியாமோஹமே வடிவெடுத்தவனுமான எம்பெருமான்	விண் ஆகி	ஸ்வர்க்க போகத்தைக் கொடுக்குமவனாய்
சார்ந்தவர்க்கு	தன்னையடைந்தவர்கள் விஷயத்தில்	தண்ணளி ஆய்	அருள் செய்பவனாய்
வேந்தர் ஆய்	அரசர்கள் செய்யும் நன்மைகளைச் செய்யுமவனாய்	மாந்தர் ஆய்	மனிசர்களான உறவினர் செய்யும் நன்மைகளைச் செய்பவனாய்

மாது ஆய்	தாய் செய்யும் நன்மைகளைச் செய்பவனாய்
மற்று எல்லாம் ஆய்	மற்றுமுள்ள எல்லாவகை நன்மைகளையும் செய்பவனாய்
(எவ்வளவு நன்மைகள் செய்தாலும்)	
ஆற்றான்	ஆறுதல் இல்லாதவனாய்க்கொண்டு

	[த்ருப்தி பெறுதவனாய்]
பின்னால்	இவ்வளவுக்குமேலும்
தன் கொடுக்கும்	தன்னை (முற்றாட்டாகக்) கொடுத்தருள்வன்;
தான் செய்யும் பிதிர்	(இவை) எம்பெருமான் செய்யும் அதிசயங்களாம்.

* * *—ஆச்ரிதர் விஷயத்தில் எம்பெருமான் செய்தருளும் உபகார பரம்பரைகளையும் எத்தனை உபகாரங்கள் செய்தாலும் அவன்றான் த்ருப்தியடைவது மில்லையென்கிற திருவுள்ளத்தினகலத்தையும் அருளிச் செய்கிறார்.

வேந்தராய்=சிறியவனைப் பெரியவன் நலியாதபடி நோக்குகின்ற அரசர்களாயிருந்து கொண்டு ரக்ஷிப்பவன் எம்பெருமானே என்றவாறு. **"நாவிஷ்ணுః ப்ருதிவீபதிః"** [விஷ்ணுவின் அம்சமன்றி அரசனாகயிருக்கமுடியாது] என்றது காண்க. 1. "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்" என்ற திருவாய் மொழியின் கருத்து முணர்க.

விண்ணவராய் = நாம் இம்மண்ணுலகில் வாழும்வரையில் நமக்கு இன்றியமையாத உணவுப் பொருள்கட்கு வேண்டிய மழை முதலியவற்றை யளிக்கும் வருணன் முதலிய தேவர்களாயிருந்து கொண்டு காத்தருள்பவனும் எம்பெருமானே என்றவாறு.

விண் ஆகி=இந்நிலத்திலிருந்துகொண்டு அநுஷ்டித்த புண்ணியங்களுக்குப் பலனான ஸ்வர்க்காநுபவங்களை யளிப்பவனும் தானே என்றவாறு. தண்ணளியாவது கிருபை. எல்லாவுபகாரங்களுக்கும் பொதுவானது. பின்னடிகளின் அந்வயக்ரமம் வேறு வகையாகவும் அமையும்; கருத்து பதவுரையில் விரிந்ததே. .... (அ௩)

பிதிருமனமிலேன் பிஞ்ஞகன் றன்னோடு *
எதிர்வனவ னெனக்கு நேரான் *—அதிரும்
கழற்கால மன்னனையே கண்ணனையே * நாளும்
தொழக்காதல் பூண்டேன் தொழில். (அச)

1. திருவாய்மொழி 4—4—8.

அதிரும் கழல் கால	ஒலிக்கின்ற வீரக்கழலைத் திருவடிகளிலே அணிந்துள்ள
மன்னனை	ராஜாதிராஜனை
கண்ணனையே	கண்ணபிரானையே
நாளும்	எந்நாளும்
தொழ	தொழும்படியாக
காதல்	ஆசைப்படுவதையே
தொழில்	நித்ய கருமமாக
பூண்டேன்	ஏற்றுக்கொண்டிருக்கிற நான்

பிதிரும் மனம் இலேன்	(விஷயாந்தரங்களிற் புகுந்து) விகாரப்படும் நெஞ்சுடையேனல்லேன் ;
பிஞ்ஞகன் தன்னோடு எதிர்வன்	(ஞானத்தில்) பரமசிவனோடு ஒத்திருப்பேன்
	(என்னலாமாயினும்)
அவன் எனக்கு நேரான்	அந்த ருத்ரன் (நித்ய தாஸனான) என்னோடு ஒவ்வான்.

* * *—கண்ணபிரான் திருவடிகளை யாச்ரயித்து அநுபவிப்பதையே நித்யாநுஷ்டாநமாகக் கொண்டிருக்கிற எனக்கு, ஜ்ஞாநாதிகனாக ப்ரஸித்தனாயிருக்கிற ருத்ரனும் ஒப்பாக மாட்டானென்கிறார். தமக்கு ருத்ரன் ஒப்பாவதற்கு ப்ரஸக்தியிருந்தாலன்றோ 'அவன் எனக்கு நேரான்' என்னலாம்; அப்ரஸக்த ப்ரதிஷேதம் பண்ணவொண்ணாதே என்று சிலர் சங்கிப்பார்கள்; சாஸ்த்ரங்களில் "ஜ்ஞாநம் மஹேச்வராதிச்சேத்" [சிவனிடத்திலிருந்து அறிவைப் பெற்றுக் கொள்க] என்று விதித்திருக்கையாலே உலகுக்கெல்லாம் உணர்வையளிக்கவல்லனும்படி மஹாஜ்ஞாநியாக ருத்ரன் ப்ரஸித்தி பெற்றிருப்பதனால் அங்ஙனே மஹாஜ்ஞாதாவான ஆழ்வாரோடு அவனுக்கு ஒப்புச் சொல்ல ப்ரஸக்தியுண்டு; ப்ரஸக்தமான அது கழிக்கப்படுகிறது இரண்டாமடிமுதலாக. ருத்ரன் ஸத்வகுணம் தலையெடுத்தபோது 'எம்பெருமானே ரக்ஷகன்' என்றிருப்பதும், ரஜஸ்தமோகுணங்கள் தலையெடுத்தபோது 'நானே ஈச்வரன்' என்று மார்பு நெறித்திருப்பதுமாயிருக்கையாலே, ஸர்வகாலத்திலும் பகவத்ப்ராவண்யமே யாத்ரையாயிருக்குமிவர்க்கு ஒப்பாக மாட்டானென்க. .... (அச)

தொழிலெனக்குத் தொல்லைமால் தன்னாமமேத்த *
பொழுதெனக்கு மற்றதுவே போதும் *—கழிசினத்த
வல்லாளன் வானரக்கோன் வாலி மதனழித்த *
வில்லாளன் நெஞ்சத் துளன். (அரு)

கழி சினத்த	மிக்ககோபத்தை யுடையவனும்	எனக்கு	(அந்த இராமபிரானுடைய திருக்குணங்களில் அகப்பட்ட) எனக்கு
வல்லாளன்	மிக்க வலிமை யுடையவனும்	தொழில்	நித்யகருமம்
வானரர் கோன்	குரங்குகட்கு அரசனுமாகிய	தொல்லை மால் தன் நாமம் ஏத்த	புராணனான அந்த ஸர்வேச்வரனுடைய திருநாமங்களை வாயாரப் புகழ்வதாம்;
வாலி	வாலியினுடைய		
மதன்	மதத்தை [கொழுப்பை]		
அழித்த	தொலைத்த		
வில் ஆளன்	சார்ங்கவில்லை ஆள்பவனான இராமபிரான்	எனக்கு	(உலகத்தாரில் வேறுபட்டவனான) எனக்கு
நெஞ்சத்து	எனது நெஞ்சிடத்து	மற்றதுவே	கீழ்ச்சொன்ன ஸ்ரீராமநாம ஸங்கீர்த்தனத்திலேயே
உளன்	எழுந்தருளியிருக்கின்றான்;	பொழுது போதும்	போதுபோகும்.
(ஆகையாலே)			

* * *—சூது சதுரங்கமாடியே போதைப் போக்கும் சில லௌகிகர்கள் 'ஆழ்வாரே! எங்களோடே ஒருகை ஆடவருவீரோ?' என்றழைக்க, அவர்கட்கு மறுமொழிகூறும் பாசுரமிது என்று விநோதமாகப் பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்வது காண்மின்;—"எதிரிகள் சதுரங்கம் பொரப் போருவீரோ என்றழைக்க இவர் சொல்லும்படி." என்று.

எம்பெருமானுடைய திருநாமங்களை ஸங்கீர்த்தநம் பண்ணுவதே எனக்கு நித்யகர்மாநுஷ்டாநம்; என்போதெல்லாம் அதிலே போகின்றது; அதற்கே போது போராதிருக்க வேறொன்றுக்குப் போதுகிடைக்குமோ? வேறொன்றிலே நெஞ்சைச் செலுத்தவுமொட்டாதபடி எம்பெருமான் என்னெஞ்சினுள் உறைகின்றான் காண்மின் என்றாராயிற்று.

வானரர் + கோன், வானரக்கோன். மதன்—மதம், மகரனகரப்போலி. வெள்ளிமலை பறித்த பெருவீரனான இராவணனையும் வாலிலே கொண்டு திரிந்தவனான வாலிக்கு 'கழிசினத்த, வல்லா

ளன்' என்ற அடைமொழிகள் பொருந்தும். (வாலிமதனழித்த வரலாறு, கீழ் இருபத்தெட்டாம் பாட்டினுரையிற் காண்க.)

இராமபிரான் வாலியைக் கொன்றவிதனில் ஸாமாந்யர் சில ஆக்ஷேபங்கள் கூறுவதுண்டு; அவையும் அவற்றுக்கு ஸமாதானங்களும் வருமாறு:—'இராவணவதத்திற்கு உதவிதேடுகிற இராமன் இராவணனை எளிதில் வெல்லவல்ல வாலியைக் கொன்றுவிட்டு, பயங்கொள்ளியான ஸுக்ரீவனை உதவிசெய்து கொண்டது என்ன புத்திசாலித்தனம்!' என்பர் சிலர்; கேண்மின்:-வாலிமுன்னமே இராவணனுடன் அக்நிஸாக்ஷிகமாக ஸ்நேஹங் கொண்டிருந்தமைபற்றி அவனைத்தான் உதவிகொண்டால் இராவணன் முதலிய துஷ்டர்களைத் தொலைக்க வகையில்லாமையால் இராமன் ஸுக்ரீவனை நண்பனாகக் கொண்டு அவன் வேண்டுகோளின்படி வாலியைவதைத்திட்டனன். இனிச் செய்யவேண்டிய ராவணஸம்ஹாரமாகிற தேவகாரியத்திற்கு இவ்வாலிவதம் அங்கமெனக் கருதத்தக்கது; எவ்வகைப் பெருந்தீங்கு செய்திருந்தாலும் சரணமடைந்தால் அவர்களைப் பாதுகாப்பதென்ற சிறந்ததருமத்தை மேற்கொண்டு நடப்பவனான இராமபிரான், அத்தருமத்தை முழுதும் விட்டவனும் ஸுக்ரீவன் சரணமடைந்தபின்னரும் அவனை மிக வருந்திக் கொல்லத்தொடங்கி அந்தத் தருமத்திற்கு எதிரானவனுமான வாலியைக் கொன்றது பொருந்தும். அன்றியும், பிறர்மனைவியைக் காதலித்துக் கவர்தலும், தம்பியிடம் பகைபாராட்டுதலும், வலியழிந்து முதுகுகாட்டி ஓடுகின்றவனைத் துரத்தித்துரத்திக் கொல்லத் தொடங்குதலும் முதலிய தீச்செயல்கள் வாலியினிடம் இருந்ததனாலும் பரமதார்மிகனான இராமன் வாலியை அழிக்கலானான். இராமபிரான்றான் ஏகபத்நீவிரதமுடையனாய், தம்பியரைத் தன்னுயிர்போலக் கொள்பவனாய், வலியிழந்த பகைவனை 'இன்றுபோய் நாளைவா' என்று அன்போடு சொல்லிவிடுத்தருளும் மஹாவீரனுவான்.

இஃதெல்லாமிருக்கட்டும்; மறைந்து நின்று அம்பு எய்தது கூடுமோ? எனின்; இது அரசர் கொடியவிலங்குகளைப் பதுங்கிநின்று அழிக்கும் வேட்டைமுறையா லென்பர். "யதா ம்ருகம் ம்ருக யாவந்ந்ருபாவயேந ஹந்தோ ஜவந்ந நதா ஶத்ருவஷாஹிதா

வ்யாஜ:। தத்ராக்ஷேவ தவ ராகவவம்ஶஜஸ்ய திரஷ்டா வை வஹ்நி விபக்ஷதயைவ வாலீ:." என்று அதிமாநுஷஸ்தவத்தில் ஆழ்வானருளிச்செய்ததுங்காண்க. வேறுவகையான ஸமாதானங்களுமுள்ளன ;—முதலில் சரணமடைந்த ஸுக்ரீவனுக்கு அபயமளித்து வாலியைக் கொல்வதாக வாக்குதத்தஞ் செய்துவிட்ட பெருமாள் பின்னர் வாலியினெதிரில் நின்று போர்செய்தால் இப்பெருமானது திறத்தைக் கண்டு அஞ்சி வாலியும் இவனைச் சரணமடைந்திடுவனாயின் தஞ்சமடைந்தவனைக் கொலை செய்யக்கூடாமை பற்றி அவனைக் கொல்லாதுவிட நேர்ந்தால் முன்னைய வாக்கு [ஸுக்ரீவனுக்கு அளித்தவாக்கு]த் தவறிவிடுமேயென்ற நோக்கம் முக்கிய காரணமாம். அன்றியும், எதிர்ந்தார் வலிமையிற் பாதி தன்னிடம் வந்து கூடும்படி வாலி சிவபிரானிடத்துப் பெற்றிருக்கின்ற வரம் பழுதுபடாமலிருக்குமாறு மறைந்து நின்று அம்பெய்தனன் என்றது மொன்று. அவரவர்கள் தேவதாந்தரங்களிடத்துப் பெற்ற வரங்கள் பழுதுபடாதபடியன்றோ எம்பெருமான் காரியஞ்செய்வது. இங்ஙனம் பல காரணங்களுள. இங்கு விரிப்பிற் பெருகும். ஸ்ரீராமாயணம் அதன் வியாக்கியானங்கள் வல்லார்வாய்க் கேட்டுணர்க. கடவுளரது நியாயம் நுட்பமானதும் அறிதற்கு அரியதுமாதலால் அது மனிதர்து நியாயத்தோடு ஒப்பு நோக்கி ஆராய்தற்கு உரியதன்றென்பது உணரத் தக்கது. நிற்க. .... (அரு)

உளன்கண்டாய் நன்னெஞ்சே யுத்தம னென்றும்
உளன்கண்டாய் * உள்ளுவாருள்ளத்—துளன்கண்டாய் *
தன்னொப்பான் தானா யுளன்காண் தமியேற்கு *
என்னொப்பார்க் கீச னிமை. (அசு)

நல் நெஞ்சே	எனக்குப் பாங்கான மனமே!,	என்றும் உளன் கண்டாய்	எக்காலத்திலும் (நம்மை ரக்ஷிப்பதிலே தீக்ஷை கொண்டு) இருக்கிறான் காண்;
உத்தமன்	புருஷோத்தமனான எம்பெருமான்	உள்ளுவார் உள்ளத்து	ஆஸ்திகர்களுடைய மனத்திலே
உளன் கண்டாய்	(நம்மை ரக்ஷிப்பதனாலே) ஸத்தை பெற்றிருப்பவன் காண்;	உளன் கண்டாய்	நித்யவாஸம் பண்ணுமவன் காண்;

தன்ஒப்பான்	(தனக்குப் பிறரொருவரும் ஒப்பில்லாமையாலே) தனக்குத்தானே ஒத்திருப்பவனான அந்த எம்பெருமான்	என் ஒப்பார்க்கு	என்னைப்போலே உபாய சூந்யராயிருப்பவர்கட்கும்
		தான் ஈசன் ஆய் உளன் காண்	தானே நிர்வாஹகனாயிருக்கிறான் காண் ;
தமியேற்கு	ஒரு கைம்முதலு மற்றவனான எனக்கும்	இமை	இதனை அறி.

* * *—ஆழ்வார் தம்முடைய ஆஸ்திகத்வத்தின் உறைப்பை நன்கு வெளியிடும் பாசுரம் இது.

தன் ஒப்பான்=‘ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே’ என்ற சுருதியின்படி ஒத்தாரும் மிக்காருமிலனாதலால் தனக்குத்தானே ஒப்பாமவன். இங்ஙனங் கூறுதலை அநந்வயாலங்காரமென்பர். தமியேற்கு=தமியன் என்றால் தனிப்பட்டவன் என்று பொருள். அகிஞ்சனனான எனக்கு என்கை. ‘நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்’ என்கிறபடியே ஒரு கைம்முதலுமில்லாதவர்க்கு எல்லாக் கைம்முதலும் எம்பெருமான்தானேயாயிருப்பனென்க. என்னொப்பார்க்கு–மற்றுள்ள ஆழ்வார்களையுங் கூட்டிக் கொள்ளுகிறபடி.

இமயப் பெருமலைபோ லிந்திரனார்க்கிட்ட *
சமய விருந்துண்டார் காப்பார் *—சமயங்கள்
கண்டா னவைகாப்பான் கார்க்கண்டன் நான்முகனோடு *
உண்டா னுலகோ டுயிர். (௮௭)

இமயம் பெருமலைபோல்	பெரிய இமயமலைபோன்றிருக்கும்படி	ஆர் காப்பார்	காப்பாற்றினதுயார்?
		சமயங்கள்	வைதிக மதங்களை
இந்திரனார்க்கு இட்ட	இந்திரனுக்காகச் சமைத்து வைத்த	கண்டான்	பிரவர்த்திப்பித்தவன்
		ஆர்	யார் ?
சமயம் விருந்து	வழக்கமான ஆராதனையை	அவை காப்பான்	அவற்றை (நிலைகுலையாதபடி) ரக்ஷிப்பவன்
உண்டு	உட்கொண்டபோது		
(நேர்ந்த கல்மழையாலாகிய ஆபத்தில் நின்றும்)		ஆர்	யார் ?

கார்க்கண்டன் நான்முகனோடு காப்பான் ஆர்	சிவனையும் பிரமனையும் (பெரிய ஆபத்துக்களில் நின்றும்) ரக்ஷிப்பவன் யார்?	உலகோடு உயிர் உண்டான் ஆர்	உலகங்களையும் (உலகங்களிலுள்ள ஜீவராசிகளையும் (பிரளயத்தில்) உண்டு ரக்ஷித்தவன் யார்?

[எல்லாம் எம்பெருமானே யன்றோ.]

* * *—ஸர்வரக்ஷகன் எம்பெருமானே யென்பதை மூதலிக்கிறார். பண்டு திருவாய்ப்பாடியில் கண்ணபிரானுடைய அதிமாநுஷ சீலவ்ருத்த வேஷங்களைக் கண்டு ஆயர்களனைவரும் ‘இவனே நம் குலக்கொழுந்து, இவன் கட்டளைப்படியே நாம் நடக்கவேண்டும்’ என்று நிச்சயித்திருந்தனர்; இங்ஙனமிருக்கையில் சரத்காலம் வந்தது; அப்போது இடையர்கள் வருஷந்தோறும் நடத்துவதுபோல் வழக்கப்படி இந்திரனுக்குப் பூஜைசெய்யப் பற்பல வண்டிகளில் சோறும் தயிரும் நெய்யும் காய்கறிகளும் மற்றுமுள்ள பூஜாத்ரவ்யங்களுமாகிய இவற்றைச் சேகரிப்பதைக் கண்டு கிருஷ்ணன் ‘ஓ பெரியோர்களே! நாமும் நம்முடைய பசுக்களும் எதனால் ஜீவிக்கிறோமோ அதற்குப் பூஜை செய்வதன்றோ தகுதி; இக்கோவர்த்தனகிரியே பசுக்களுக்குப் புல்லும் தண்ணீரும் கொடுத்துக் காப்பாற்றுகின்றது; இந்திரனால் நமக்கு என்னபயனுண்டு? ஒன்றுமில்லை: ஆகையால் நீங்கள் இப்பூசனையனைத்தையும் இம்மலைக்கே இடுங்கள்’ என்ன, இடையர்கள் இதைக்கேட்டு அங்ஙனமே செய்ய, கண்ணபிரான்தானே ஒரு தேவதாரூபங்கொண்டு அவற்றைமுற்றும் அமுது செய்தருள, அவ்விந்திரன் மிக்ககோபத்தோடு புஷ்கலாவர்த்தம் முதலிய பல மேகங்களை ஏவி, கண்ணன் விரும்பிமேய்க்கிற கன்றுகட்கும் பசுக்கட்கும் இடையர்க்கும் இடைச்சியர்க்கும் தீங்குதரும்படி கல்மழையை ஏழுநாள் இடைவிடாது பெய்வித்தபொழுது, கண்ணபிரான் கோவர்த்தனமலையை யெடுத்துக் குடையாகப் பிடித்து மழையைத் தடுத்து எல்லாவுயிர்களைங் காத்தருளினன் என்ற வரலாறு முன்னடிகட்கு அறியத்தக்கது.

இடையர் இந்திரனுக்கு இட்ட பூஜை “அட்டுக்குவி சோற்றுப் **பருப்பதமும்** தயிர்வாவியும் நெய்யளறும்” என்னும்படியாகப் பெரியமலைபோன்றிருந்ததனால் ‘**இமயப் பெருமலைபோல்**’ என்றார்.

சமயவிருந்து—'ஸமயம்' என்னும் வடசொல்லுக்குள்ள பல பொருள்களில் 'ஸங்கேதம்' என்கிற பொருள் இங்கு விவக்ஷிதம்: வழக்கத்தைச் சொன்னபடி. இரண்டாமடியிலுள்ள '**ஆர்**' என்னும் வினச்சுட்டு மேல் ஒவ்வொரு வினையிலும் அந்வயிக்கவுரியது. வைதிகமதங்களை ஏற்படுத்தினவன் யார்? பாஹ்யகுத்ருஷ்டி மதங்களாலே அவற்றுக்குக் குலைதல் வாராதபடி அவற்றைப் பரிபாலனம் செய்தருள்பவன் யார்? சிவனுக்கு நேர்ந்திருந்த பிரமஹத்தியாகிற ஆபத்தை நீக்கிக் காத்தவன் யார்? வேதங்களை அசுரர்க்குப் பறிகொடுத்துக் கண்கெட்டு நின்று தவித்த பிரமன் துயரைத் தீர்த்தது யார்? உலகங்களைப் பிரளயங்கொள்ளாதபடி திருவயிற்றிலே வைத்து நோக்கினவன் யார்?. எல்லாவகை ரக்ஷணங்களுஞ் செய்தவன் எம்பெருமானே யென்று தெளிவித்தபடி. ஆளவந்தார் இப்பாசுரத்தையே திருவுள்ளம்பற்றி ஸ்தோத்ரரத்நத்தில் "**கஃ ஶ்ரீஃ ஶ்ரியஃ, வேதாபஹார, கஸ்யோதரே**" என்ற மூன்று ச்லோகங்களருளிச் செய்தன ரென்னலாம்.

'கார்க்கண்டன் நான்முகனோடு உலகோடு உயிர் உண்டான் ஆர்' என்னுமளவும் ஒருவாக்கியமாக யோஜித்து உரைக்கவுமாம். "அன்றெல்லாருமறியாரோ எம்பெருமானுண்டுமிழ்ந்த எச்சில் தேவர்" (பெரிய திருமொழி 11–6–2.) என்கை. .... (அஎ)

உயிர்கொண் டுடலொழிய வோடும்போ தோடி *
அயர்வென்ற தீர்ப்பான் பேர்பாடி *—செயல்தீரச்
சிந்தித்து வாழ்வாரே வாழ்வார் * சிறுசமயப்
பந்தனையார் வாழ்வேல் பழுது. (அஅ)

உடல் ஒழிய	சரீரத்தைப் போட்டு விட்டு	அயர்வு என்ற	கஷ்டமென்று சொல்லப் படுகிற எல்லாவற்றையும்
உயிர் கொண்டு	ஆத்மாவைப் பிடித்துக்கொண்டு	தீர்ப்பான்	தீர்க்குமவனான எம்பெருமானுடைய
ஓடும்போது	(யமபடர்கள்) ஓடும்போது	பேர்	திருநாமங்களை
ஓடி	(எம்பெருமானாகிய தானே) ஓடிச் சென்று	பாடி	வாய்விட்டுப் பாடி

செயல் தீர	பேற்றுக்காக நாம் செய்ய வேண்டிய செயல் [ப்ரவ்ருத்தி] ஒன்றுமில்லையென்று	சிறு சமயம் பந்தனையார்	அற்பங்களாய் பல நியமங்களோடு கூடினவையாய் ஸம்ஸாரபந்தத்திற்கே காரணமாகவுள்ளவையான உபாயங்களைப் பற்றினவர்களுடைய
சிந்தித்து	ஸ்வரூபத்தையுணர்ந்து		
வாழ்வாரே	வாழநினைப்பவர்களே	வாழ்வு எல்	வாழ்ச்சியோ வென்றால்
வாழ்வார்	வாழ்ச்சி பெறுவர் ;	பழுது	உபயோகமற்றது.

* * *—ப்ரவ்ருத்திதர்மநிஷ்டரென்றும் நிவ்ருத்திதர்ம நிஷ்டரென்றும் இருவகை யதிகாரிகளுண்டு ; ஆயாஸப்பட்டுச் செய்யும் ஸ்வப்ரவ்ருத்திகளாலன்றிப் பலன்பெற முடியாதென்றெண்ணி விரிவாக உபாயங்களை அநுஷ்டிக்குமவர்கள் ப்ரவ்ருத்தி தர்மநிஷ்டரெனப் படுவர் ; (ஸ்வரூபோசிதங்களான) திருவிளக்கெரிக்கை திருமாலையெடுக்கை முதலான ப்ரவ்ருத்திதர்மங்களையும் உபாயபுத்தியின்றியே ஸ்வயம் புருஷார்த்தபுத்தியுடன் அநுஷ்டித்து, எம்பெருமானுடைய நிர்ஹேதுகக்ருபையன்றிப் பேற்றுக்கு உபாயமாவது வேறொன்றுமில்லை ; நம்முடைய உபாயப்ரவ்ருத்திகளெல்லாம் எம்பெருமான் தானே செய்யும் ரக்ஷணத்துக்கு விலக்கடியாகும் என்று துணிந்து 1. "காம்பறத் தலை சிரைத்து உன்கடைத் தலையிருந்து **வாழுஞ்சோம்பர்**" என்கிறபடியே அகிஞ்சநராயிருக்குமவர்கள் நிவ்ருத்தி தர்மநிஷ்டரெனப் படுவர். [**ஹஹவதவ்ருத்தி விரோயிஷ்வஷு வ்ருத்திநிவ்ருத்திநிஷ்டர்** என்றபடி.] இவ்விருவகை யதிகாரிகளுள், செயல் தீரச்சிந்தித்து வாழ்பவரான நிவ்ருத்தி தர்மநிஷ்டர்களே உண்மையாக வாழ்வரென்றும், அநர்த்தகரங்களான காற்கட்டுகளைப் பூண்டுகொள்ளும் ப்ரவ்ருத்தி தர்மநிஷ்டர்கள் இப்படி வாழ்வது அரிது என்றும் இப்பாட்டால் அருளிச்செய்யப்படுகிறது.

[**உயிர்கோண்டு இத்யாதி.**] யமபடர்கள் வந்து ஆத்மாக்களைச் சரீரங்களில் நின்றும் இழுத்துக்கொண்டு காலபாசத்தாற்கட்டி நலியக் கொண்டுபோனால் தானே நேரில் ஓடிச் சென்று அயர்வுகளைத்

1. திருமாலை.

தீர்ப்பவனை எம்பெருமானுடைய திருநாமங்களை மகிழ்ந்துபாடி, தம்முடைய பாரதந்திரிய ஸ்வரூபத்தை உற்றுநோக்கி உபாய ப்ரவ்ருத்திகளை யொழித்திருப்பவர்களுடைய வாழ்வே வாழ்வு; மற்றையோருடைய வாழ்வு தாழ்வுதான் என்றாயிற்று.

அயர்வென்ற = இரண்டனுருபுதொக்க வினையாலணையும் பெயர். “தீர்ப்பான் பெயர்பாடி” என்றபுதியபாடத்தில் வெண்டளை பிறழும்; ‘பேர்பாடி’ என்ற பிராசீநபாடமே கொள்க.

பந்தனையார் = ‘வாஸநா’ என்றவடசொல் பந்தனை யெனத் திரிந்தது; அதனையுடையார் பந்தனையார். காற்கட்டுகளை யுடையார் என்றவாறு. சிறு, சமயம் என்ற விசேஷணங்கள் பந்தனையில் அந்வயிக்கும். .... (அஅ)

பழுதாகா தொன்றறிந்தேன் பாற்கடலான்பாதம் *
வழுவா வகைநினைந்து வைகல்—தொழுவாரை *
கண்டிறைஞ்சி வாழ்வார் கலந்த வினைகெடுத்து *
விண்டிறந்து வீற்றிருப்பார் மிக்கு. (அக)

பழுது ஆகாது ஒன்று { பழுதுபடாத [சிறந்த] ஒருபாயத்தை
அறிந்தேன் { தெரிந்து கொண்டேன்;
(அது என்னவென்றால், கேண்மின்:)
பால் கடலான் பாதம் { க்ஷீராப்தி நாதனுடைய திருவடிகளை
வழுவா வகை நினைந்து { தப்பாதபடி அநுஸந்தித்து
வைகல் தொழுவாரை { எப்போதும் வணங்குமவர்களை

கண்டு இறைஞ்சி } கண்டு வணங்கி
வாழ்வார் { வாழ்பவர்கள் [பாகவத பக்தர்கள்],
கலந்த வினை கெடுத்து { ஆத்மாவோடுசேர்ந்த தீவினைகளைத் தொலைத்து
விண் திறந்து { பரமபதவாசலைத் திறந்து
மிக்கு சிறப்புடனே
வீற்றிருப்பார் { எழுந்தருளியிருக்கப் பெறுவர்.

* * *—எம்பெருமானை நேரே ஆச்ரயிப்பதிற்காட்டிலும் பாகவதர்களைப் பணிதல் பாங்கு என்கிற பரமரஹஸ்யார்த்தத்தை வெளியிடும்பாசுரம்இது. இவ்வர்த்தத்தைக் கீழ் “மாறுபட்டானவனை”

என்ற பதினெட்டாம்பாட்டிலும் காட்டியருளினர். அடுத்த மேற் பாட்டிலுங்காட்டுவர். "ஸித்திர்பவதி வா நேதி ஸம்ஸயோச்யுதஸேவிநாம்। ந ஸம்ஸயோஸ்தி தத்பக்தபரிசர்யாரதாத்மநாம்=ஸித்திர்ப் பவதி வா நேதி ஸம்சயோச்யுதஸேவிநாம், ந ஸம்சயோஸ்தி தத்பக்தபரிசர்யாரதாத்மநாம்" [எம்பெருமானைப் பற்றினவர்களுக்குப் பேற்றில் ஸந்தேஹமுண்டு; பாகவதர்களைப் பற்றினவர்கள் ஸந்தேஹப்படாமல் மார்வில் கைவைத்து உறங்கலாம்] என்கிறபடியே, கருமங்களுக்கிணங்க ஸம்ஸாரியாக்கவும் அருளுக்கிணங்க ஸம்ஸாரநிவ்ருத்தியைப் பண்ணித் திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளவும் வல்ல ஸ்வதந்த்ரனான ஈச்வரனைப் பற்றுகையானது ஸம்ஸாரபந்தத்திற்கும் மோக்ஷப்ராப்திக்கும் பொதுவாயிருக்கும்; அங்ஙனன்றியே பாகவதரைப் பற்றுகை ஸம்ஸாரபந்தத்திற்கு ஒருகாலும் ஹேதுவாகாதே மோக்ஷப்ராப்திக்கே உறுப்பாயிருக்குமென்று தேர்ந்தவராகையாலே பாட்டுத் தொடங்கும்போதே 'பழுதாகா தொன்றறிந்தேன்' என்று கம்பீரமாக அருளிச் செய்கிறார்.

ஸ்ரீவசநபூஷணத்தின் முடிவில்—"பழுதாகா தொன்றறிந்தேனென்கிறபாட்டைப் பூர்வோபாயத்துக்கு ப்ரமாணமாக அநுஸந்திப்பது. நல்லவென்தோழி, மாறுயதானவனை என்கிற பாட்டுக்களை........இதுக்கு ப்ரமாணமாக அநுஸந்திப்பது" என்றருளிச் செய்துள்ள இரண்டு ஸூத்ரங்களை நோக்குமிடத்து, கீழ்ப் பதினெட்டாம் பாசுரத்திற்கும் இப்பாசுரத்திற்கும் விஷயபேதம் விளங்கும். அந்த நுட்பமான விஷயங்களை ரஹஸ்ய ப்ரஸ்தாநங்களிலே ஆராய்ந்து கொள்வது நன்று.

பாற்கடலான் பாதத்தைக் கண்டிறைஞ்சுகையன்றியே பாற்கடலான் பாதந்தொழுவாரைக் கண்டிறைஞ்சுமவர் நல்வாழ்ச்சி பெறுவர் என்றதாயிற்று. .... (௮௯)

வீற்றிருந்து விண்ணாள வேண்டுவார் * வேங்கடத்தான்
பால்திருந்த வைத்தாரே பன்மலர்கள் *—மேல்திருந்த
வாழ்வார் வருமதிபார்த் தன்பினராய் * மற்றவர்க்கே
தாழ்வா யிருப்பார் தமர்.

(௯௦)

விண்	பரமபதத்தில்
வீற்றிருந்து	பெருமை பொலிய இருந்து
ஆள வேண்டுவார்	ஆட்சிசெய்ய விரும்பி அப்படியே பேறு பெற்றவர்கள்
வேங்கடத்தான் பால்	திருவேங்கட முடையான் பக்கலில்
பல் மலர்கள்	பலவகைப்பட்ட மலர்களை
திருந்த	நன்றாக
வைத்தாரே	ஸமர்ப்பித்தவர்களே யாவர்;

[பகவானை ஆராதித்தவர்களே விண் ஆள்வர் என்கை:]

வரும் மதி பார்த்து	(எம்பெருமானுடைய திருவுள்ளத்தில்) ஓடுகின்ற கருத்தை யறிந்து
அன்பினர் ஆய்	பக்தியை யுடையவர்களாய்
மற்றவற்கே	அந்த எம்பெருமானுக்கே
தாழ்வு ஆய் இருப்பார்	அடிமைப்பட்டிருப்பவர்களுக்கு
தமர்	அடிமைப் பட்டவர்கள்
மேல் திருந்த வாழ்வார்	முன்னடிகளிற் சொல்லப்பட்டவர்களிற் காட்டிலும் விலக்ஷணராக வாழ்பவராம்.

* * *—பாகவதராலே அங்கீகரிக்கப் பெறுமவர்கள் எல்லாரினும் மேற்பட்டவர்களென்கிறார். எம்பெருமான் திருவடிகளில் மலர்களைத் தூவி அடிமை செய்தவர்களே விண்ணுள்பவர்; ஆயினும், எம்பெருமானுக்கு அடிமையாயிருக்கின்ற பாகவதர்களால் 'இவர்கள் நம்முடையவர்கள்' என்று அங்கீகரிக்கப்படுமவர்கள் முன்னடிகளிற் சொல்லப்பட்ட அதிகாரிகளிற் காட்டிலும் சிறந்து வாழ்வர் என்றாராயிற்று.

இரண்டாமடியின் முதலிலும் முடிவிலும் 'திருந்த' என்னாதே 'திருந்து' என்றே ஓதிவருமவர்களின் பாடம் மறுக்கத்தக்கது. வரும் மதிபார்த்து அன்பினராய்=எம்பெருமானுடைய திருவுள்ளக் கருத்தைப் பின் சென்று அன்பு கொண்டிருப்பவர்களென்கை. (௯௦)

தமராவார் யாவர்க்கும் தாமரை மேலாற்கும் *
அமரர்க்கும் ஆடரவார்த்தாற்கும்—*அமரர்கள்
தாள்தாமரை மலர்களிட்டிறைஞ்சி * மாலவண்ணன்
தாள் தாமரை யடைவோ மென்று. (௯௧)

மால் வண்ணன்	கரியமேனியனான எம்பெருமானுடைய
தாள் தாமரை	திருவடித் தாமரைகளில்
மலர்கள் இட்டு	புஷ்பங்களை ஸமர்ப்பித்து
இறைஞ்சி	வணங்கி
தாள் தாமரை அடைவோம் என்று	அத்திருவடித் தாமரைகளை யடைவோமென்று
தமர் ஆவார்	பக்தராயிருக்குமவர்கள்
தாமரை மேலாற்கும்	திருநாபிக் கமலத்திற் பிறந்த பிரமனுக்கும்
ஆடு அரவு ஆர்த்தாற்கும்	ஆடுகின்ற ஸர்ப்பங்களை (ஆபரணமாக உடம்பிலே) கட்டிக் கொண்டிருக்கும் சிவனுக்கும்
அமரர்க்கும்	நித்யஸூரிகளுக்கும்
யாவர்க்கும்	மற்றுமெல்லார்க்கும்
அமரர்கள்	மேற்பட்டவராவர்.

* * *—எம்பெருமான் திருவடிகளே உபாயோபேயங்களென்று உறுதிகொண்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் உபயவிபூதியிலுள்ளார்க்கும் நிர்வாஹகராம் படியான பெருமையை யுடையவர்களென்கிறார்.

'ஆடரவத்தாற்கும்' என்றும் ஓதுவர். சிவபெருமான் அரவம் பூண்ட வரலாறு:-ஒருகாலத்தில் சிவபிரான் தன்னைமதியாத தாருகவனத்து முனிவர்களுடைய கருவத்தைப் பங்கஞ்செய்யவும் அவர்களின் மனைவிமார்களது கற்புநிலையைப் பரிசோதிக்கவுங் கருதித் தான் ஒரு காமுகபுருஷவடிவங் கொண்டு அவரில்லந்தோறுஞ் சென்று பிக்ஷாடனஞ் செய்து தன்னை நோக்கிக் காதல் கொண்ட அம்முநிபத்நிகளின் கற்புநிலையைக் கெடச் செய்ய, அதுகண்டு பொறுமற் கோபம்மூண்ட அம்முனிவர்கள் அபிசாரயாகமொன்று செய்து அவ்வோமத் தீயினின்று எழுந்த நாகங்கள் பூதங்கள் மான் புலி முயலகன் வெண்டலை முதலியவற்றைச் சிவனைக் கொன்று வரும்படியேவ, சிவபெருமான் தன்மேற் பொங்கிவந்த **நாகங்களை ஆபரணங்களாகவும்** பூதங்களைத் தனது கணங்களாகவுங் கொண்டு, மானைக் கையிலேந்திப் புலியைத்தோலையுரித்து உடுத்து முயலகனை முதுகிற்காலால் ஊன்றி வெண்டலையைக் கையாற்பற்றிச் சிரமேலணிந்து இங்ஙனமே அவற்றையெல்லாம் பயனிலவாகச் செய்துவிட்டன னென்பதாம். .... (௬௧)

என்று மறந்தறியேன் என்னெஞ்சத்தே வைத்து *
நின்று மிருந்தும் நெடுமாலை *—என்றும்
திருவிருந்த மார்பன் சீரிதரனுக் காளாய் *
கருவிருந்த நாள்முதலாக் காப்பு. (கூ௨)

கரு இருந்த நாள் முதலா	(நான்) கர்ப்பத்திலிருந்த நாள் தொடங்கி
காப்பு	(எம்பெருமானாலே) ரக்ஷைபெற்றவனாகையாலே
திரு என்றும் இருந்த மார்வன் சிரீதரனுக்கு	பிராட்டி நித்யவாஸம் பண்ணப்பெற்ற திருமார்வையுடைய அந்தத்திருமாலுக்கு
ஆள் ஆய்	ஆட்பட்டவனாய்

நெடு மாலை	(அந்த) ஸர்வேச்வரனை
என் நெஞ்சத்து	என்னுடைய ஹ்ருதயத்திலே
வைத்து	ஸ்தாபித்து
நின்றும் இருந்தும் என்றும்	நிற்றல் இருத்தல் முதலிய எல்லா நிலைமைகளிலும்
மறந்தறியேன்	மறவாமல் (அவனையே) சிந்திப்பவனாயிருக்கின்றேன்.

* * *—நான் கர்ப்பவாஸம் பண்ணும்போதே தொடங்கி எம்பெருமான் என்னை ரக்ஷித்துக் கொண்டு வருகையாலே ஒருகாலும் நான் அவனை மறந்தறியேனென்கிறார்.

இவ்வாழ்வார் கீழ்க்கழிந்த காலங்களில் பல சமயங்களிலும் புகுந்து பல தெய்வங்களையும் வழிப்பட்டவரா யிருந்துவைத்து, திருமாலை ஒருநாளும் மறந்தறியேனென்று சொல்வது பொருந்துமோ? என்று சங்கிப்பர் சிலர்; உண்மை கேண்மின்; எம்பெருமானுக்கு ஆட்பட்டிருக்குந் தன்மையானது ஸகல ஆத்மாக்களுக்கும் இயற்கையாகவே யுள்ளது; ஊழ்வினையின் பயனாக அவ்வடிமையை இடையில் இழந்திருந்து ஒரு காலவிசேஷத்தில் ஏற்றுக் கொண்டாலும் 1. "அல்வழக் கொன்றுமில்லா அணிகோட்டியர்கோ னபிமானதுங்கன் செல்வனைப்போலத் திருமாலே! நானுமுனக்குப் பழவடியேன்" என்றாற்போலே அடிமை அநாதியாகவே உள்ளதாக அநுஸந்திக்கக் குறையில்லை. மாணிக்கத்தின் ஒளி அழுக்கினால் மழுங்கியிருந்து ஒரு நாளளவில் அழுக்கு நீங்கி விளங்கினாலும் அவ்வொளி இயற்கையென்னத் தட்டில்லையே.

1. திருப்பல்லாண்டு—11.

இடையில் அடிமையை இழந்திருந்ததற்கு வயிறெரிந்து "பழுதே பல பகலும் போயினவென்றஞ்சியழுதேன்" என்றும் "பாவியேனுணராதெத்தனைபகலும் பழுதுபோயொழிந்தன நாள்கள்" என்றும் பேசுவர்கள். இவ்வாழ்வார்தாமே திருச்சந்தவிருத்தத்தில் "அன்றுநான் பிறந்திலேன்" என்றார்.

நின்றுமிருந்தும் என்றது எல்லாநிலைகளிலு மென்றபடி. "நிற்கும்போது மிருக்கும்போதும் நடக்கும் போதும் படுக்கும் போதும் நாராயணா! என்றால் உங்கள்தலையில் இடிவிழுமோ?" என்றானும் ப்ரஹ்லாதன். .... (௯௨)

காப்பு மறந்தறியேன் கண்ணனே யென்றிருப்பன் *
ஆப்பங் கொழியவும் பல்லுயிர்க்கும் *— ஆக்கை
கொடுத்தளித்த கோனே குணப்பரனே * உன்னை
விடத்துணியார் மெய்தெளிந்தார் தாம். (௯௩)

அங்கு { அந்தப்பிரளய காலத்தில்

பல் உயிர்க்கும் { எல்லா ஆத்மாக்களுக்கும்

ஆப்பு ஒழியவும் { சரீரங்கள் அழிந்து போயிருந்தாலும் (மறுபடியும்)

ஆக்கை கொடுத்து { சரீரங்களைக் கொடுத்து

அளித்த — அருள்செய்த

கோனே — ஸ்வாமிந்!,

காப்பு { (நீ செய்தருளும்) ரக்ஷையை

மறந்தறியேன் { ஒருநாளும் மறக்கமாட்டேன்;

கண்ணனே என்று இருப்பன் { எல்லாம் கண்ணனே என்று உறுதி கொண்டிருப்பேன்;

குணம் — திருக்குணங்களினால்

பரனே — சிறந்த பெருமானே!

மெய் தெளிந்தார் தாம் { உள்ளபடி (ஸ்வரூபத்தைத்) தெளிவாக அறிந்தவர்கள்

உன்னை விட துணியார் { உன்னை விட மாட்டார்கள்.

* * *—காப்புமறந்தறியேன் என்றதற்கு இருவகையாகப் பொருள் கொள்ள இடமுண்டு. எம்பெருமான் என்னைக் காத்தருளினதை மறக்கமாட்டேன் என்றும், நான் எம்பெருமானுக்குக் காப்பிடுவதை [மங்களாசாஸநம் பண்ணுவதை] மறக்கமாட்டேன் என்றும்.

ஆப்பங்கொழியவும் பல்லுயிர்க்குமாக்கை கொடுத்தளித்த

கோனே=பிரளய தசையில் இறகொடிந்த பறவைபோலே கரண களேபரங்களையிழந்து தடுமாறுகின்ற ஆத்மாக்களுக்கு மறுபடியும் கரணகளேபரங்களைக் கொடுத்தமை சொல்லுகிறது. "அவிதவிலெ ஷிதாநு வ்யஸநிநி ஸம்ஸாரதஃ கரணகளேபரைர்கடயிதும் தயமாநமநாஃ" என்ற ஸ்ரீரங்கராஜஸ்தவமுங் காண்க.

இவ்வாழ்வார் வாழ்ந்தகாலத்தில் **குணபரன்** என்னுமோரரசன் இருந்ததாகவும், எம்பெருமானுக்கே ஏற்றிருக்கத்தக்கதான அந்த நாமத்தை அவ்வரசன் தரித்திருப்பது பொருந்தாதென்று அதில் வெறுப்புக்கொண்டு, 'அஃது அனந்தகல்யாண குண பரிபூர்ணனை எம்பெருமானுக்கே உரியதாம்' என்ற திருவுள்ளத்தை வெளியிட வேண்டி இப்பாசுரத்தில் '**கோனே குணபரனே**' என்று எம்பெருமானை இவர் அழைத்திருப்பதாகவும் இக்காலத்துச் சில ஆராய்ச்சிக்காரர் கூறுகின்றனர். இக்கூற்றின் பொருத்தமின்மையைத் தனிப் புத்தகத்தில் விரித்துரைப்போம். நிற்க.

மெய்தெளிந்தார்தாம் உன்னை விடத்துணியார்=உன்னோடுண்டான உறவையும் உனது அரிய பெரிய திருக்குணங்களையும் உள்ளபடி உணருமவர்கள் உன்னை விடமாட்டார்களென்றவிதனால் தாம் எம்பெருமானை விடமாட்டாமையைத் தெரிவித்தாராவர். .... (கூங.)

மெய்தெளிந்தா ரென்செய்யார் வேறானார் நீறாக *
கைதெளிந்து காட்டிக் களப்படுத்து *—பைதெளிந்த
பாம்பினணையா யருளா யடியேற்கு *
வேம்புங் கறியாகுமேன்று. (கூச)

வேறு ஆனார்	வேறுபட்டவர்களான [பகைவர்களான] துரியோதநாதிகள்	கை காட்டி	(பாண்டவர்களுக்கு) வேண்டிய உதவிகளைச் செய்து
நீறு ஆக	சாம்பலாய் ஒழிந்துபோம்படியாக	களம் படுத்து	(அந்த எதிரிகளைப்) போர்க்களத்தில் கொன்றொழித்து
தெளிந்து	(ஆச்ரித விரோதிகளைக் கொல்லுதல் தருமமே என்று) தேறி	(இவ்வகையாலே மண்ணின்பாரம் நீக்கி)	

தெளிந்த வை பாம்பு இன் அணையாய்	விளங்குகின்ற படங்களை யுடைய ஆதிசேஷனாகிற இனிமையான படுக்கையைச் சென்று சேர்ந்த பிரானே!		வேம்பும் கறி ஆகும்	வேப்பிலையும் கறியாகச் சமைத்துக் கொள்ளக் கூடியதே;
அடியேற்கு	அடியேனுக்கு		மெய் தெளிந்தார்	உள்ளதை உள்ளபடி யறியுமவர்கள்
அருளாய்	அருள்புரிய வேணும்;		என் செய்யார்	எதுதான் செய்ய முடியாதவர்கள் [எது நினைத்தாலும் செய்யக் கூடியவர்களே].
என்று	வேணுமென்று விரும்பினன்			

* * *—அடியேன் சீலமில்லாச்சிறியேனாயினும் அடியேன் பக்கல் அருள்செய்யவேணும்; குற்றமேவடிவாகவுள்ளவர்களை இகழ்ந்தொழிய வேண்டுமேயன்றிக் கைக்கொள்வது தகாது என்று திருவுள்ளம்பற்றலாகாது; வேப்பிலை கைக்குமென்றாலும் இதைக் கறியாகச் சமைத்து உட்கொள்ள வேணுமென்னும் விருப்புடையார்க்கு அது கறியாகின்றதன்றோ; அப்படியே குற்றவாளரைக் கைக்கொள்வதே சீரியது என்று தெளிந்தவர்கள் என்போல்வாரை ஏன் அங்கீகரிக்கமாட்டார்கள்? அங்கீகரித்துத்தீருவர்கள். ஸ்வாமிந்! அடியேனுடைய குற்றங்களை நற்றமாகவே கொண்டோ அல்லது அவற்றில் திருக்கண் செலுத்தாமலோ அடியேனை விஷயீகரித்தருளவேணும் என்றாராயிற்று.

வேறானர்—அடியவர்களான பாண்டவர்களோடு வேறுபட்ட துரியோதனாதியரைச் சொல்லுகிறது. ஆச்ரிதவிரோதிகளென்ற காரணத்தினால் எம்பெருமான்றனக்கே விரோதிகளென்க. (௬௪)

ஏன்றேனடிமை யிழிந்தேன் பிறப்பிடும்பை *
ஆன்றே னமரர்க் கமராமை *—ஆன்றேன்
கடனாடும் மண்ணாடுங் கைவிட்டு * மேலை
யிடநாடு காண வினி.

(௬௫)

அடிமை	அடிமையை	மண் நாடும்	இப்பூலோகத்தையும்
என்றேன்	ஏற்றுக் கொண்டேன்;	கை விட்டு	உபேக்ஷித்து
பிறப்பு இடும்பை	ஸம்ஸாரதுக்கங்களில் நின்றும்	மேலை	எல்லாவற்றுக்கும் மேற்பட்டுள்ளதாய்
இழிந்தேன்	நீங்கினேன்;		
அமரர்க்கு	பிரமன் முதலிய தேவர்களுக்கும்	இடம்	(அடியார்கள் குழாங்களுக்குத் தகுதியாக) இடமுடைத்தான
அமராமை	என் அருகு நாடவொண்ணாதபடி	நாடு	திருநாட்டை
ஆன்றேன்	(ஞானம் பக்தி முதலியவற்றால்) நிரம்பினேன்;	காண	கண்டு அநுபவிக்கலாம்படி
		இனி	இப்போது
கடன் நாடும்	ஸ்வர்க்கம் முதலிய லோகங்களையும்	ஆன்றேன்	(பரமபக்தி) நிரம்பப் பெற்றேன்.

* * *—இப்பாட்டும் மேற்பாட்டும் சாத்துப்பாசுரங்கள்.

என்றேனடிமை=அடிமையென்றால் மருந்துபோலே முகம்சுளிக்கும்படியிராதே "**அஹம் ஸர்வம் கரிஷ்யாமி**" என்ற இளையபெருமாளைப்போலே உத்ஸாஹங் கொண்டு பாரிப்பவனாயினேன் என்கை. இப்படியாகவே, அடிமைக்கு விரோதியாயிருந்த தாபத்ரயத்தில் நின்றும் விட்டுநீங்கப்பெற்றேனென்கிறார் **இழிந்தேன்பிறப்பிடும்பை** என்பதனால். "மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றது கையதுவே" என்றாற்போலே பரமபதம் ஸித்தம் என்கிற உறுதியினால் இங்ஙனே யருளிச்செய்கிறார். அன்றியே, "வைகுந்தமாகும் தம் மூரெல்லாம்" என்றாற்போலே தாமிருக்குமிடத்தையே பரமபதமாக அத்யவஸித்து அருளிச்செய்கிறாராகவுமாம்.

அமரர்க்கு அமராமை ஆன்றேன்=பிரமன் முதலிய தேவர்களும் என்னைக் கண்டால் கூசி அகலவேண்டும்படி பெரும்பதம் பெற்றேனென்கை.

[**கடனுமித்யாதி.**] கடன்பட்டதானது எப்படி அவசியம் தீர்த்தேயாகவேண்டுமோ அப்படி பண்ணின புண்ணியங்களுக்கு அவசியம் பலன் அநுபவித்தே தீரவேண்டுமிடமான ஸ்வர்க்க

லோகம் 'கடன்நாடு' எனப்படுகிறது. புண்யபலன்களை யநுபவிக்குமிடமான சுவர்க்கத்தையும் புண்ணியம் திரட்டுமிடமான பூலோகத்தையும் வெறுத்து அனைத்துக்கும் மேற்பட்ட இடமாகிய திருநாட்டைச் சேர்வதற்குப் பாங்காகப் பரமபக்தி நிரம்பப்பெற்றேனென்றாராயிற்று. .... (௯௫)

இனியறிந்தே னீசற்கும் நான்முகற்குந்தெய்வம் *
இனியறிந்தே னெம்பெருமா னுன்னை *—இனியறிந்தேன்
காரணன்நீ கற்றவைநீ கற்பவைநீ * நற்கிரிசை
நாரணன்நீ நன்கறிந்தேன் நான். (௯௬)

எம்பெருமான்	எம்பெருமானே !,
உன்னை	உன்னை
ஈசற்கும்	ருத்ரனுக்கும்
நான்முகற்கும்	பிரமனுக்கும்
தெய்வம்	தெய்வமாக
இனி அறிந்தேன் இனி அறிந்தேன்	இப்போது திடமாகத் தெரிந்து கொண்டேன் ;
காரணன் நீ	ஸகலஜகத்துக்கும் காரணபூதன் நீ ;
கற்றவை நீ	இதற்கு முன்பு அறியப்பட்ட பொருள்களெல்லாம் நீ ;
கற்பவை நீ	இனிமேலறியப் படும் பொருள்களும் நீ ; (என்கிற இதனையும்)
இனி அறிந்தேன்—;	
நல் கிரிசை	நிர்ஹேதுகரக்ஷணமாகிற நல்ல வ்யாபாரத்தையுடையனான
நாரணன் நீ	நாராயணன் நீ ;
நான் நன்கு அறிந்தேன்	நான் நன்றாகத் தெரிந்து கொண்டேன்.

* * *—மஹோபநிஷத்தில் ஓதினகட்டளையிலே, பிரமன் சிவன் முதலான ஸகலப்ரபஞ்சங்கட்கும் காரணனான நாராயணனே பரதெய்வமென்று இப்பிரபந்தத்தின் முதற்பாட்டில் பிரதிஜ்ஞை பண்ணி, ச்ருதிஸ்ம்ருதி இதிஹாஸம் முதலியவற்றாலும் தக்க நியாயங்களாலும் ச்ரியःபதித்வம் முதலிய சின்னங்களாலும் அதை நெடுக உபபாதித்துக் கொண்டுவந்து, அடியில்பண்ணின பிரதிஜ்ஞைக்குத் தகுதியாக ஸ்ரீமந்நாராயண பரத்வத்தை நாட்டித்தலைக்

கட்டுகிறார். ஆகவே, தேவதாந்தரங்களினிடத்து உண்டாகக்கூடிய பரத்வப்ரமத்தைத் தவிர்த்து ஸ்ரீமந்நாராயண னிடத்திலேயே பரத்வத்தை ஸ்தாபிப்பதே இப்பிரபந்தத்தின் முழுநோக்கு என்று அறியப்பட்டதாகும். .... (கூகூ)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிச்செய்த
திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையில்
நான்முகன் திருவந்தாதி உரை
முற்றுப்பெற்றது.

1. நான் தேருங்கால் பாலி லாறுசடை, தொகுத்த
வறியா ரின்று விலைதுணை, குறைகொண்
டாங்காரவார வாழ்த்துகவாய்.

2. வாழ்த்துக மதித்தாய் வீடாக்கு நாராயணன்,
பலதேவர் நிலைமன்னு மாலநிழல் மாறுய,
தவநான்முகனுல் நீயே இவையா.

3. இவையா அழகியான் வித்தும் நிகழ்ந்தாய்,
வகையால் மதியாது மற்றுத்தொழு மால்தான்,
இதுவிலங்குகப்புரு அவனென்னை மேல்நான்.

4. மேல்நான் கதைப்பொரு எடிச்சகடம் குறிப்பென,
தாளுலக நாகத்து வானுல வகைப்பில்,
அழைப்பன் திருவேம் வெற்பென்றேன் காணல்.

5. காணலுறு சென்றுவண மங்குல்தோய் கொண்டுகுடம்,
புரிந்துமலர் வைப்பன் நன்மணி வேங்கடமே,
மலையாமை கூற்றமும் எனக்காவார்வண்ணனே.

6. எனக்கு விலைக்காட் கல்லாத தேவராய்,
கடைநின் றவரிவர் ஒருங்கிருந்தென்னெஞ்சிருள்,
அன்பாவா யாள்பார்த்துழி மனக்கேதம்.

7. மனத் திருநின்ற தரித்திருந்தேன் போதான,
சூதிடமாவது வலமாகத் திறம்பேல், செவிக்கினபம்
தாமொருவனுகிச் சேயன்.

8. சேய னில்லற மாரேயறிவார்,
பதிப்பகை நாக்கொண்டு பாட்டும் தற்பென்னை,
கண்டுவணங்காய்ந்துகொண்டு விரைந்தடைமின் கதவுமனம்.

9. கதவு கலந்தான் வேந்தராய் பிதிரும்,
தொழிலெனக் குளன்தன் இமய உயிர்கொண்டு,
பழுதாகாதொன்று வீற்றிருந்து தமராவார்.

10. தம ரென்றுமறந்தறி காப்புமறந்தறி,
மெய்தெளிந் தேன்றே னினியறி நான்முகன்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானுர் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

உரைகாரர் விண்ணப்பம்.

முதலாழ்வார்களும் திருமழிசைப்பிரானு மருளிச்செய்த திருவந்தாதிப் பிரபந்தங்கள் நான்குக்கும் ஒருவாறு உரையெழுதி முடிக்கப்பட்டது. திவ்யப்ரபந்தங்கட்கெல்லாம் எஞ்சாமை வியாக்கியான மருளிய பெரியவாச்சான்பிள்ளை இயற்பாவியாக்கியானத்தைத் மிகவும் சுருக்கியருளினர். அதுதன்னிலும், திருவந்தாதிகளின் வியாக்கியானம் மிக்க சுருக்கம்.

பெரியவாச்சான்பிள்ளை மற்ற மூவாயிரங்கட்கும் வியாக்கியான மருளிச்செய்தபின் இயற்பாவுக்கு அருளிச்செய்யத் தொடங்கினரென்றும், அப்போது அசக்தியின் மிகையினால் தாம் ஸாரமாகச் சுருக்கியருளிச்செய்ததை அந்தரங்க சிஷ்யரொருவர் பட்டோலை கொண்டருளினரென்றும் பெரியோர் பகரக் கேட்டிருக்கை. ஆகவே, அதிஸங்க்ரஹமான அந்தவியாக்கியானத்தைக்கொண்டு திருவந்தாதிகளின் பொருளையும் கருத்தையும் கண்டறிதல் அடியேனைப்போன்ற மந்தமதிகளுக்குக் கஷ்டஸாத்யமேயாகும். அந்த வியாக்கியானம் ஸங்க்ரஹமாயினும் நுண்ணறிவினர்க்கு அது கண்ணாடிபோன்றிருக்கும். நுண்ணறிவினர்தாமும் மிகப் பிரயாஸப்பட்டு ஆழ்ந்து நோக்கி ஆராய்ந்தே அந்த வியாக்கியானத்தினின்று அரும்பெரும் பொருள்களைக் கண்டறிய வல்லராவர்.

ஸ்ரீமணவாளமாமுனிகளின் திருவடிகளுள் ஒருவரான அப்பிள்ளையென்பவர் இத்திருவந்தாதிகட்கு ஓர் ஊரை இட்டருளியிருப்பதும் ஸங்க்ரஹமே. பல ஆண்டுகட்கு முன்னர் அவ்வுரையைத் தெலுங்கு லிபியில் பதிப்பித்திருக்கின்றனர். பதிப்பித்தவர்கள் அவ்வுரையை மிகவும் ரஸாபாஸப்படுத்திவிட்டனர். எங்ஙனே யென்னில்; பதமும் உரையுமாகப் பதிப்பித்திருக்கிறார்கள். ஆனால் அப்பிள்ளையருளிச்செய்தது பதவுரையாக அல்ல. பதங்களையும் அந்வயக்ரமங்களையும் திருவுள்ளத்திற்கொண்டு பொருளைமாத்திரம் நெடுக அருளிச்செய்திருந்தனர். இதனை அச்சிடுவிக்குமவர்கள் படிப்பவர்கட்கு ஸௌகரியமுண்டாக்கக்கருதிப் பதமும் உரையுமாகப் பதிப்பித்தனர். அங்ஙனே பதிப்பிக்கும்போது தங்களுடைய ஸ்வாதந்திரியத்தையே அதிகமாக மேற்கொண்டு வ்யாக்க்யாதாவின் திருவுள்ளத்திற்கு விருத்தமாகப் பதங்களைப் பிரித்தும் அந்வயங்கள் காட்டியும் சுவைக்கேடாக்கினர்.

அடியேன் பல ஆண்டுகட்கு முன்பு, மேற்குறித்த இரண்டு

வியாக்கியானங்களையும் ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு பரிசோதிக்கத் தொடங்கினதில், அச்சுப்பிரதிகளில் $ ப்ரக்ஷேபஉத்க்ஷேபங்கள் மிகவாகக்காணப்பட்டன. பலபாசுரங்கட்குப் பொருளும் கருத்தும் புலப்படவும் பெற்றிலேன். இப்படியிருக்கையில், **திவ்யார்த்த தீபிகை** யென்னும் பெயரால் முதலாயிரவுரையை அடியேனெழுதி வெளியிடப்புக்கதையறிந்த ஸ்ரீமத். உ. வே. வித்வான் திருக்கண்ணபுரம் பட்டப்பாஸ்வாமிகள் 'இயற்பாவுக்கு உரையிட்டால் லோகோபகாரமாகும்; மற்ற திவ்யப்ரபந்தங்கட்கு உரை பிறகு வெளிவரலாம்; திருவந்தாதிகளின் பொருளுங் கருத்து முணர்வது மிகப் பரிச்ரமமாயிருக்கின்றது' என்று சோதிவாய் திறந்து நியமித்தருளினர். ஆயினும் அப்போது இயற்பாவில் கைவைக்க அடியேனுக்குச் சிறிதும் துணிவு பிறக்கவில்லை. இப்போது ஒருவாறு உரையெழுதி வெளியிடலாயினேன்.

ஆசாரியர்கள் திருவடிகளில் குனிந்து கேட்டவற்றையே கைம்முதலாகக்கொண்டு பெரியவாச்சான் பிள்ளையின் ஆழ்ந்த திருவுள்ளத்தைக் கூடுமானவரை கண்டறிந்து பெரியார்க்கும் சிறியார்க்கும் ஒருங்கே பயன்படுமாறு இவ்வுரை வரையப்பட்டது. சிலவிடங்களில் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானப்படி பொருளுரைத்தால் அதனை மந்தமதிகள் க்ரஹித்துக்கொள்வது அருமைப்படுமென்றெண்ணி ஸுலபமான வேறு வகையில் பொருளுரைத்துள்ளேன். அப்படிப்பட்ட இடங்கள் மிகவும் ஸ்வல்பங்களேயாம். மற்றுஞ் சிலவிடங்களில் பெரியவாச்சான்பிள்ளையின் ஆழ்ந்த திருவுள்ளம் அடியேனுக்கு எட்டாமையாலும் பலபெரியோர்களை அடிபணிந்து கேட்டு முணரப்பெறாமையாலும் ஆங்கும் ஸ்வதந்த்ரமாக எழுதியுள்ளேன். இவற்றைக் குறையாகவேனும் குற்றமாகவேனும் பெரியோர் கருதலாகாது. பூருவாசாரியர்களின் திருவுள்ளத்தையே சேமவைப்பாகக் கொள்பவனடியேன்.

இவ்வுரையில் திருத்தங்கள் செய்ய வேண்டியவற்றை அறிவிற்சிறந்த அன்பர் அறிவித்தருள்வரேல் * தலையல்லாற் கைம்மாறிலேன். மறுபதிப்பில் திருத்தவும் பெறும்.

இங்ஙனம்:

ஸ்ரீவைஷ்ணவதாஸன்,

ப்ர. அ.

$ ப்ரக்ஷேபம்— இல்லாத வாக்கியங்களை நுழைத்தல்; உத்க்ஷேபம்— உள்ளவாக்கியங்களை விட்டிடுதல்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நான்கு திருவந்தாதிகளிலும்

ஆழ்வார் அநுஸந்தித்தருளின

இதிஹாஸ புராண கதைகளின் அடைவும், அக்கதைகள் அமைந்த பாசுரங்களின் தலைப்பும்.

[கதைகள்.]	[பாசுரக்குறிப்பு.]
1. திருமால் மீனாய்த் திருவவதரித்தது.	அழகியான் தானே.
2. ஆமையாய்த் திருவவதரித்தும் கடல் கடைந்ததும். விவரணப்பக்கம். 2—60.	திசையுந் திசையுறு. ஆளமர்வென்றி. வலிமிக்கவாளெயிறு. ஆரேதுயருழந்தார். மலையாமைமேல்வைத்து. மலைமுகடு மேல்வைத்து. இசைந்தவரவமும்.
3. பன்றியாகிப் பாரகங் கீண்டது. வி—ப. 1—39.	பொருகோட்டோரேனம். உரைமேற் கொண்டு. இடந்ததுபூமி. பிரானுன் பெருமை. ஊனக்குரம்பையின். நீயன் றுலகளந்தாய். தாளால்சகடமுதைத்து. தானொருவனாகி.
4. நரசிங்கவுருக் கொண்டதும் இரணியனகலம் பிளந்ததும்.	அடியும்படிகடப்ப. தழும்பிருந்தசார்ங்க. புரியொருகைபற்றி. முரணைவலிதொலை தற்கு. ஏற்றான்புள்ளூர்ந்தான். வாத்தால் வலிநினைந்து. வயிறழலவாளுருவி. கொண்டதுலகம். மாலையரியுருவன். வரங்கருதித்தன்னை. என்னெஞ்ச மேயானென்சென்னி. இவையாபிலவாய் இவையவன்கோயில். கோவலனா யாநிரைகள். செற்றதுவும்சேரா. அங்கற்கிடரின்றி. புகுந்திலங்குமந்தி. தொகுத்தவரத்தனாய். மாறாயதானவனை.

5. மாவலிபக்கல் மண்ணிரந்தளந்தது.	பாரளவுமோரடி. பொருகோட்டோரேன மாய். அடியும்படிகடப்ப. பெற்றார் தளைகழல. நின்றுநிலமங்கை. கழலொன் றெடுத்து. புணர்மருதினூடு. கொண்டானை யல்லால். ஓரடியுஞ்சாடுதைத்த. அடிமூன்றிலிவ்வுலகம். பேர்த்தனைமா சகடம். கொண்டதுலகம். நீயன்றுல களந்தாய். வகையாலவனியிரந்து. நின்றதோர்பாதம். இடங்கைவலம்புரி. தவஞ்செய்துநான்முகனே. இன்று வறிகின்றேனல்லேன். கதவிக்கதஞ்சிறந்த. பின்னாலருநரகம். இறையெம்பெருமான். அழகன்றேயாழியாற்கு. கண்ணுங்கமலம். படிவட்டத்தாமரை. வாய்மொழிந்துவாமனனாய். முன்னுலக முண்டுமிழ். விரும்பிவிண்மண்ணளந்த. அன்றிவ்வுலகமளந்த. மன்னுமணிமுடி நீண்டு. நின்றபெருமானேநீரேற்று. நீயன்றேநீரேற்று. செற்றதுவும்சேரா. எய்தான்மராமரம். இனியவன்மாயன். சிலம்புஞ்செறிகழலும். பலதேவரேத்த. வகையால்மதியாதுமண். தாளாலுலக மளந்த. என்னெஞ்சமேயானிருள். தானொருவனாகித்தரணி.
6. நமுசியை வானில் சுழற்றியது. வி—ப. 1—123.	கழலொன்றெடுத்து.
7. ஈசனை வென்ற சிலையைப் பரசுராம னிடத்தில் நின்றும் வாங்கிக் கொண்டது. வி—ப. 4—21.	இலைதுணைமற்றென்.
8. மாயமானைப் பின் சென்று மாய்த்தது.	திரிந்ததுவெஞ்சமத்து. படையாரும்வாள்கண்ணார். எய்தான்மராமரம்.
9. மராமரமே ழெய்தது. வி—ப. 3—71.	மலையால்குடைகவித்து. எய்தான்மராமரம்.
10. வாலியைக் கொன்றது. வி—ப. 4—59.	இதுவிலங்கையீடழிய. தொழிலெனக்கு.

11. கடலில் அணை கட்டினது. வி—ப. 2—61.	நீயன்றுலகளந்தாய். இதுவிலங்கையீடழிய. தற்பென்னைத்தானறியான்.
12. இலங்கையைப் பாழாளாக்கினது.	அடைந்தவருவினையோடு. சென்றதிலங்கைமேல். தோளிரண்டெட்டேழும். எய்தான்மராமரம். இலைதுணைமற்றென். இதுவிலங்கையீடழிய. கல்லாதவரிலங்கை.
13. கும்பகரணனைக் கொன்றது.	உகப்புருவன்தானே.
14. தந்தை காலில் விலங்கறத் திருவவதரித்தது. வி—ப. 1—62.	பெற்றார்தளைகழல.
15. பேய்ச்சியின் முலையைச் சுவைத்துயிருண்டது. வி—ப. 4—68.	பாரளவுமோரடி. நான்றமுலைத்தலை. என்றொருவர்மெய். அரவமடல்வேழம். உகந்துன்னைவாங்கி. மலையேழும்மாநிலங்கள். பேய்ச்சிபாலுண்ட. பெற்றம்பிணைமருதம். நலமேவலிதுகொல். மண்ணுண்டும்பேய்ச்சி. அடிச்சகடஞ்சாடி. விலைக்காட்படுவர்.
16. தாளை நிமிர்த்துச் சகடு முறித்தது. வி—ப. 1—68.	தழும்பிருந்தசார்ங்கநாண் ஓரடியுஞ்சாடுதைத்த. பேர்த்தனைமாசகடம். வழக்கன்றுகண்டாய். தாளால்சகடம். பெற்றம்பிணைமருதம். அடிச்சகடஞ்சாடி.
17. மருதம் முறித்தது. வி—ப. 1—58.	நான்றமுலைத்தலை. புணர்மருதினூடு. நீயன்றேநீரேற்று. அவனேயருவரையால். தாளால்சகடமுதைத்து. பெற்றம்பிணைமருதம்.
18. குருந்தொசித்தது. வி—ப. 1—76.	மலையால்குடைகவித்து. அரவமடல்வேழம். புணர்மருதினூடுபோய். பாற்கடலும்வேங்கடமும். ஒருங்கிருந்தநல்வினையும்.

19. காளியமர்த்தனம். வி—ப. 4—67.	அரவமடல்வேழம். அடிச்சகடஞ்சாடி.
20. தாம்பினால் கட்டுண்டது. வி—ப. 1—70.	அறியுமுலகெல்லாம். விரலோடுவாய்தோய்ந்த. மண்ணுண்டும்பேய்ச்சி.
21. கொக்கின்வாயைக் கிழித்தெறிந்தது. வி—ப. 1—58.	நான்றமுலைத்தலை, அரவமடல்வேழம்.
22. குடக் கூத்தாடினது.	அரவமடல்வேழம். கொண்டுவளர்க்க. இடம்வலமேழ்பூண்ட.
23. குரவை கோத்தது.	அரவமடல்வேழம்.
24. கேசியைக் கொன்றது. வி—ப. 1—76.	மலையால்குடைகவித்து. மனத்துள்ளான் வேங்கடத்தான். கடிதுகொடுநரகம். கோவலனாயாநிரைகள். நின்றபெருமானே. நீயன்றேநீரேற்று. இமஞ்சூழ்மலையும்.
25. கன்றெறிந்து விளங்கனி வீழ்த்தது. வி—ப. 1—182.	இனியார்புகுவார். வழக்கன்றுகண்டாய். தாழ்ந்துவரங்கொண்டு. மாலே நெடியோனே. பெற்றம்பிணைமருதம். பார்த்தகடுவன்சுனைநீர். களிறுமுகில்குத்த.
26. ஏழ்விடைசெற்றது. வி—ப. 4—50.	புணர்மருதினூடுபோய். வரைகுடைதோள். பேரொன்று முன்னறியேன். ஏறேழும் வென்று. தொழுதால்பழுதுண்டே. செற்றதுவும்சேரா. கவியினார்கைபுனைந்து. வித்துமிடவேண்டும். அடிச்சகடஞ்சாடி.
27. குன்றெடுத்துக் கோநிரைகாத்தது. வி—ப. 4—	மலையால்குடைகவித்து. இடந்ததுபூமி. அரவமடல்வேழம். பாலன்தனதுருவாய். வரைகுடைதோள்காம்பாக. நீயுந்திருமகளும். மன்னுமணிமுடிநீண்டு. இமயப்பெருமலைபோல்.
28. குவலயாபீடத்தைக் கொன்றொழித்தது. வி—ப. 1—57.	நான்றமுலைத்தலை. மலையால்குடைகவித்து. அரவமடல் வேழம். வலிமிக்க வாளெயிறு. கதவிக்கதஞ்சிறந்த. சினமாமதகளிற்றின். தாளால் சகட முதைத்து. அங்கற்கிடரின்றி. அடிச்சகடஞ்சாடி
29. மல்லர்களை மடித்தது.	அரவமடல் வேழம். வெற்பென்றுவேங்கடம்பாடும்.
30. கம்ஸனைக் கொன்றது. வி—பு. 2—154.	இடந்ததுபூமி. கதவிக்கதஞ்சிறந்த. அடியால்முன்கஞ்சனை. அன்றிவ்வுலகமளந்த.

31. முரனைக் கொன்றது. வி—ப. 3—110.	அரணும்நமக்கென்றும்.
32. வக்கரனை வதைத்தது. வி—ப. 3—36.	பேசுவாரெவ்வளவு.
33. பார்த்தன்தேரில் பாகனாயிருந்தது.	திரிந்ததுவெஞ்சமத்து.
34. ஆழியாலிரவியை மறைத்தது. வி—ப. 1—36.	மயங்கவலம்புரி. நிலைமன்னுமென்னெஞ்சம்.
35. ஸுமுகனுக்கு அபயமளித்தது. வி—ப. 1—170.	அடுத்தகடும்பகைஞற்கு. பதிபகைஞற்காற்றாது.
36. சந்திரனிடரைத் தீர்த்தது.	மதித்தாய்போய்நான்கின்.
37. மார்க்கண்டேயனுக்கு அருள்புரிந்தது. வி—ப. 4—32.	செற்றெழுந்து தீவிழித்து. பலதேவரேத்த.
38. வாணன் திண்டோள் துணித்தது. வி—ப. 3—113.	நின்றெதிராய. மகனொருவர்க்கல்லாத.
39. மதுகைடபர்களைக் கொன்றது. வி—ப. 3—91.	காய்ந்திருளை மாற்றி. நிகழ்ந்தாய்பால்பொன்.
40. பிரமனிடம் மறைந்து வந்த இராவணனைக் காட்டிக் கொடுத்தது. வி—ப. 1—118.	ஆமேயமரர்க்கு. ஆய்ந்தவருமறையோன். கொண்டுகுடங்கால்.
41. கஜேந்திரனைக் காத்தது. வி—ப. 3—138.	இறையும்நிலனும். வாரிசுருக்கிமதக்களிறு. இடரார்படுவார். பிடிசேர்களிறளித்த. தொடரெடுத்தமால்யானை. அரிய தெளிதாகும். ஆய்ந்துரைப்பனாயிரம். சூழ்ந்ததுழாயலங்கல். தொட்டபடை யெட்டும். மதித்தாய்போய்நான்கின்.

42. அரனது சாபத்தை அகற்றினது. வி—ப. 1—120.	பண்புரிந்தநான்மறையோன். ஏறேழும் வென்று. மேல்நான்முகன். என்னெஞ்சமேயானிருள்.
43. சிவனுக்குத் திருமேனியில் கூறு கொடுத்தது. வி—ப. 1—79	கையவலம்புரியும். பொன்திகழுமேனி, இவையவன்கோயில்.
44. உலகமுண்டதும். ஆலிலைத்துயின்றதும்.	மண்ணும் மலையும். மாலுங்கருங்கடலே, என்னொருவர்மெய்யென்பர். பாலன்றனதுருவாய். கொண்டுவளர்க்க. அருளாதொழியுமே, பாலகனாயாலிலைமேல். முயன்றுதொழுநெஞ்சே. கிளைத்தலகிலார்தெளிவார். விரைந்தடைமின்மேல்.
45. முதலாழ்வார்கட்குத் திருக்கோவலிடை கழியில் காட்சி தந்தது.	நீயுந்திருமகளுமன்றுயால்.
(சிவன் திரிபுரமெரித்தது.) வி—ப. 1—78.	கையவலம்புரியும்.
(சிவன் கங்கையைச் சடைமேல் தாங்கியது)	பிடிசேர்களிறு. ஆறுசடைக்கரந்தான்.
(சிவன் நால்வர்க்கு உபதேசித்தது.)	நெறிவாசல்தானேயாய். ஆலநிழற்கீழ்.
(பாணாஸுர யுத்தத்தில் சிவன் குடும்பத்தோடு தோற்றது.)	அவரிவரொன்றில்லையனங்கவேள்.
(பிரமன் திருமால் திருவடியைவிளக்கியது.)	குறைகொண்டுநான்முகன்.

கதைக்குறிப்பு முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நான்கு திருவந்தாதிகளின் செய்யுளகராதி.

செய்யுள்.	திருவந்தாதி.	பாசுர லக்கம்.	செய்யுள்.	திருவந்தாதி.	பாசுர லக்கம்.
அகைப்பில்	4	38	அழகியான்	4	22
அங்கற்கிடர்	3	65	அழைப்பன்திருமாலை	2	50
அடிச்சகடம்	4	33	அழைப்பன்திருவேங்	4	39
அடிமூன்றில்	2	5	அறிந்தைந்தும்	2	6
அடியால்முன்	2	92	அறியார்சமணர்	4	6
அடியும்படிகடப்ப	1	17	அறியுமுலகெல்லாம்	1	22
அடிவண்ணம்	3	5	அறிவென்னும்	3	12
அடுத்தகடும்பகை	1	80	அன்பாவாய்	4	59
அடைந்ததரவணை	3	28	அன்பாழியானை	1	72
அடைந்தவருவினை	1	59	அன்பேதகளியா	2	1
அத்தியூரான்	2	96	அன்றதுகண்டு	2	9
அதுநன்று	3	88	அன்றிவ்வுலகம்	3	34
அமுதென்றும்	2	85	ஆங்காரவாரம்	4	10
அயனின்ற	1	57	ஆங்குமலரும்	3	67
அரணாம்நமக்கு	3	78	ஆட்பார்த்துஉழி	4	60
அரன்நாரணன்	1	5	ஆமேயமரர்க்கு	1	45
அரவமடல்	1	54	ஆய்ந்தவருமறை	3	77
அரியபுலன்	1	50	ஆய்ந்துகொண்டாதி	4	79
அரியதெளிது	2	22	ஆய்ந்துரைப்பன்	2	73
அருளாதொழியுமே	2	59	ஆரேதுயருழந்தார்	3	27
அருள்புரிந்த	3	19	ஆரேயறிவார்	4	73
அலரெடுத்த	3	97	ஆலநிழற்கீழ்	4	17
அவரவர்தாந்தாம்	1	14	ஆளமர்வென்றி	1	81
அவரிவரென்று	2	12	ஆறியவன்பில்	1	35
அவரிவரென்றில்லை	4	56	ஆறுசடை	4	4
அவற்கடிமை	3	37	இசைந்தவாமும்	3	64
அவனென்னையாளி	4	30	இடங்கைவலம்புரி	2	71
அவனேயருவரை	3	51	இடந்ததுபூமி	1	39
அவன்கண்டாய்	2	24	இடமாவது	4	66
அவன்தமர்	1	55	இடம்வலமேழ்	3	73
அழகன்றே	3	6	இடரார்படுவார்	1	78

செய்யுள்.	திருவந்தாதி.	பாசுராங்கம்.	செய்யுள்.	திருவந்தாதி.	பாசுராங்கம்.
இதுகண்டாய்	2	66	ஊரும்வரியரவம்	1	38
இதுவிலங்கை	4	28	ஊனக்குரம்பை	1	91
இமஞ்சூழ்மலையும்	3	98	எங்கள்பெருமான்	2	97
இமயப்பெருமலை	4	87	எண்மர்பதினொருவர்	1	52
இமையாதகண்ணால்	1	32	எமக்கென்று	2	38
இயல்வாக	1	13	எய்தான்மராமரம்	3	52
இருந்தண்கமல	2	37	எழில்கொண்டு	3	86
இலைதுணை	4	8	எழுவார்விடைகொள்	1	26
இல்லறமில்லேல்	4	72	எளிதிலிரண்டடியும்	1	51
இவையவன்கோயில்	3	31	எனக்காவார்	1	89
இவையாபிலவாய்	4	21	எனக்காவார்	4	51
இறையாய்நிலனாகி	3	39	என்றுகடல்கடைந்தது	1	2
இறையும்நிலனும்	1	29	என்றுமறந்தறியேன்	4	92
இறையெம்பெருமான்	2	99	என்றுமறந்தறியே னேழ்பிற	2	55
இனிதென்பர்	2	35	என்னொருவர்	1	34
இனியவன்மாயன்	3	83	என்னெஞ்சமேஇருள்	4	58
இனியறிந்தேன்	4	96	என்னெஞ்சமேயானென்	2	95
இனியார்புகுவார்	1	87	ஏறேழும்வென்றடர்த்த	2	63
இன்றாகநாளையே	4	7	ஏற்றான்புள்ளூர்ந்தான்	1	74
இன்றாவறிகின்றேன்	2	87	ஏற்றேனடிமை	4	95
இன்றேகழல்	3	2	ஒருங்கிருந்த	4	57
உகந்துன்னை	2	8	ஒன்றுமறந்தறியேன்	1	6
உகப்புருவன்	4	29	ஓத்தின்பொருள்	2	39
உணர்வாரார்	1	68	ஓரடியும்சாடுதைத்த	1	100
உணரிலுணர்வரியன்	3	82	ஒருருவனல்லை	2	60
உணர்ந்தாய்	2	48	ஓர்த்தமனத்தராய்	3	79
உயிர்கொண்டு	4	88	கடிதுகொடுநரகம்	2	93
உய்த்துணர்வு	3	94	கடைநின்றமரர்	2	11
உரைமேல்கொண்டு	1	25	கடைநின்றமரர்	4	55
உலகுமுலகிறந்த	1	61	கண்டுவணங்கினார்க்கு	4	78
உலகமுமூழியும்	3	44	கண்டேன்திருமேனி	2	67
உளதென்று	2	45	கண்ணும்கமலம்	3	9
உளனாயநான்மறை	3	84	கதவிக்கதம்	2	89
உளன்கண்டாய்	1	99	கதவுமனம்	4	81
உளன்கண்டாய்	3	40	கதைப்பொருள்	4	32
உளன்கண்டாய்	4	86	கதையும்பெரும்பொருள்	2	64
உறுங்கண்டாய்	2	77	கலந்தானென்னுள்ளத்து	4	82
உற்றுவணங்கி	2	94			

செய்யுள்.	திருவந் தாதி.	பாசுர லக்கம்.	செய்யுள்.	திருவந் தாதி.	பாசுர லக்கம்.
வரைச்சந்தனம்	2	76	விரும்பிவிண்மண்	3	23
வலமாகமாட்டாமை	4	63	விரைந்தடைமின்	4	80
வலிமிக்கவாளெயிற்று	2	68	விலைக்காட்படுவர்	4	52
வழக்கன்றுகண்டாய்	2	19	வினையாலடர்ப்படார்	1	65
வழிநின்றுநின்னை	1	76	வீடாக்கும்பெற்றி	4	13
வாயவனையல்லது	1	11	வீற்றிருந்து	4	90
வாய்மொழிந்து	3	18	வெற்பென்றிருஞ்	2	54
வாரிசுருக்கி	1	47	வெற்பென்று வேங்—னேன்	4	40
வாழும்வகை	3	59			
வாழ்த்திய	3	96	வெற்பென்று வேங்கடம் பாடும்	3	69
வாழ்த்துகவாய்	4	11			
வானுகித்தீயாய்	1	92	வேங்கடமும்	1	77
வானுலவுதீவளி	4	37	வேங்கடமே	4	48
விண்ணகரம்வெஃகா	3	62	வேந்தராய்	4	83
வித்துமிடவேண்டுங்	4	23	வைப்பன்	4	46
விரலோடுவாய்	1	24	வையந்தகளியா	1	1

செய்யுளகராதி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவந்தாதிகள் நான்குக்கு பாசுரங்கள்—௩௱௯௰௬.

ஜீயர் திருவடிகளே சரணம்.